
பிரசங்கிகளும்
பிரசங்கமும்
பிரசங்கம் செய்வதற்கு அவசியமான அனைத்து
ஆலோசனைகளையும் தரும் பிரசங்க இறையியல் நூல்
ஆர். பாலா

# பிரசங்கிகளும் பிரசங்கமும்

ஆர். பாலா

சென்னை

பிரசங்கிகளும் பிரசங்கமும்

ஆசிரியர்:
ஆர். பாலா

நூல் வடிவமைப்பு:
M. ஜேம்ஸ்

நூல் வடிவமைப்பு விவரங்கள்:
எழுத்து: 11/14 வள்ளுவன்;
நூல்: 5.6'' x 8.6''; பக்கங்கள்: 208

முதல் பதிப்பு: 2011

ஆசிரியரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி
இப்புத்தகத்தையோ அல்லது இதன் பகுதிகளையோ
வெளியிடக் கூடாது

கிடைக்குமிடம்:
6/87 காமராஜர் தெரு,
திருவள்ளுவர் நகர், அயனாவரம்,
சென்னை 600023, தமிழ்நாடு, இந்தியா.
தொலைப்பேசி: +91 9444347829

Available at:
6/87 Kamarajar Street,
Thiruvalluvar Nagar, Ayanavaram,
Chennai 600023, Tamilnadu, India.
Mobile: +91 9444347829.

©J.R. PRINTECH, Ch - 102. Ph: 26631643, 26631996, Cell : 9841077931

பிரசங்க ஊழியத்தில் வழிகாட்டியாக இருந்து

அப்பணியில் நான் வளரத் துணை நின்ற

அத்தனை பிரசங்கிகளுக்கும்

இந்நூலை காணிக்கையாக வழங்குகிறேன்.

- *ஆர். பாலா*

# ஒரு வார்த்தை . . .

பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப் படுவார்கள்? என்று ரோமர் பத்தாம் அதிகாரத்தில் பவுல் அப்போஸ்தலன் ஆணித்தரமாகக் கேள்வி கேட்டு, மனிதன் கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு அவசியமான சுவிசேஷத்தைக் கேட்பதற்கு பிரசங்கிக்கிறவன் இல்லாமல் வழியில்லை என்பதைத் தெளிவாக விளக்குகிறார். பிரசங்கத்தின் அவசியத்தை புதிய ஏற்பாடு பல பகுதிகளில் விளக்குகிறது. சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் பிரசங்கத்தை செய்யும்படி தீமோத்தேயுவுக்கு பவுல் வலியுறுத்தியிருக்கிறார். அவிசுவாசி சுவிசேஷத்தைக் கேட்கவும், விசுவாசிகள் சத்தியத்தைக் கேட்டு அதைப் பயன்படுத்தி கிறிஸ்தவ வாழ்க்கையில் வளரவும் பிரசங்கத்தைக் கர்த்தர் நமக்குத் தந்திருக்கிறார். பிரசங்கம் அத்தனை அவசியமானது.

இருந்தபோதும் நம் தேசத்தில் பிரசங்கம் பிரசங்கமாகக் கொடுக்கப்படுவதில்லை. அநேகர் அதை மிகச் சாதாரண மானதாகக் கருதி செய்து வருகிறார்கள். பிரசங்கத்தின் உயர்ந்த தன்மையை அறியாமலும், அதைச் செய்வதற்கு அதிகம் உழைக்க வேண்டும் என்ற உணர்வு இல்லாமலும் ஏனோதானோவென்று பிரசங்கத்தை செய்துவருகிறவர்களே நம் தேசம் முழுவதும் பெருகிக் காணப்படுகிறார்கள். பிரசங்கம் மிகவும் மோசமான நிலையில் இருப்பதற்கு வேதபூர்வமான திருச்சபைகள் நம் தேசத்தில் இல்லாமலிருப்பதும் ஒரு பெரிய காரணம். இதெல்லாம் நாம் புதிதாகத் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மைகளல்ல. பொதுவாகவே இவை நமக்குத் தெரிந்த உண்மைகள்தான். இத்தகைய நிலைமை தொடர்வது நல்லதல்ல. நம் தேச மக்கள் சத்தியத்தைக் கேட்கவும், சத்தியத்தில் வளரவும் துணை செய்ய வேண்டிய ஊடகமான

பிரசங்கம் கீழான நிலையில் இருப்பது வளர்ச்சிக்கோ, எழுச்சிக்கோ அடையாளமல்ல.

இந்நிலை தொடரக்கூடாது என்பதற்காகத்தான் பிரசங்க ஊழியத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் சிந்தித்து, ஆராய்ந்து, உழைத்துத் தயாரித்து பிரசங்கங்களை அளிப்பதற்கு துணை செய்யும் வகையில் இந்த நூலை வெளியிட்டிருக்கிறேன். பிரசங்க ஊழியம் பற்றியும், அதன் பல்வேறு அம்சங்கள் பற்றியும் கூடுமான வரையில் ஆராய்ந்து விளக்கியும், பிரசங்கத்தை நல்ல முறையில் அளிப்பதற்கு செய்ய வேண்டிய பணிகள் என்ன என்பதைத் தெளிவாக விளக்கியும், பிரசங்கத்தின் வகைகளை எடுத்துக்காட்டியும், பிரசங்கத்தின் வேறு பல அம்சங்களை சுட்டிக்காட்டியும், பிரசங்கங்கள் பற்றிய பலவேறு உதாரணங்களையும் இந்நூலில் தந்திருக்கிறேன். இவையெல்லாம் நான் ஆசிரியராக இருந்து வெளியிடுகின்ற திருமறைத்தீபம் பத்திரிகையில் வெளிவந்தும் இருக்கின்றன. பிரசங்கம் பற்றியும், பிரசங்க ஊழியம் பற்றியும் முடிவான கருத்துக்களைக் கொண்ட ஒரு நூலாக இதனை நான் கருதவில்லை. கடல் போன்று விரிந்து, பரந்து காணப்படும் இப்பெரும் தேவ பணியைப் பற்றி முடிந்தளவுக்கு விளக்கியிருக்கிறேன். பிரசங்க ஊழியமான மகா சமுத்திரத்தில் நீந்திப்பார்த்து விளக்கியிருக்கும் ஓர் அனுபவமாகத்தான் இந்நூலை நான் பார்க்கிறேன். அதில் வாழ்நாள் முழுதும் நீந்தினாலும் பூரணமாக அதுபற்றி விளக்கி என்னால் எழுத முடியுமா என்பது சந்தேகமே.

இந்த நூலை வெளியிட பல்வேறு வகையில் துணை புரிந்திருக்கிறவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்காமல் இருக்க முடியாது. இந்நூலை கணினியில் வடிவமைத்து, அச்சிடுவதற்கான சகல பணிகளையும் செய்து உதவிய சகோதரன் ஜேம்ஸுக்கு நான் என்றும் நன்றியுள்ளவன். பிரசங்க ஊழியத்தை தொடர்ந்து செய்துவர என்னை ஊக்குவித்து உறுதுணையாக இருந்து வரும் என் மனைவிக்கும், என் பிரசங்கத்தைத் தொடர்ந்து கேட்டு அதன் மூலம் வளர்ந்தும், என் ஊழியப்பணிகளுக்கு ஆதரவாகவும் இருந்து வரும் என் திருச்சபை மக்களுக்கும் நான் நன்றியுள்ளவன். இந்நூலில் நான் தெரிவித்துள்ள எத்தனையோ கருத்துக்கள் பிரசங்க ஊழியத்தில் நான் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றவை. அதையெல்லாம் நான் கற்றுக்கொண்ட, கர்த்தர் வரலாற்றில் பயன்படுத்திய

சீர்திருத்தவாத பிரசங்கிகளுக்கு நான் நன்றியுள்ளவன். எல்லாவற்றிற்கும் மேலாக முப்பது வருடங்களுக்கு முன் பிரசங்க ஊழியத்திற்கு என்னை அழைத்து தொடர்ந்து ஆசீர்வதித்து வரும் கர்த்தருக்கு சகல மகிமையும் போய்ச் சேர வேண்டும்.

"... ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு" என்ற பவுல் அப்போஸ்தலனின் வார்த்தைகளை மனதில் வைத்து இந்நூலைக் கருத்தோடு வாசியுங்கள். பிரசங்க ஊழியத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் வேதபூர்வமாக அதைச் செய்து ஆத்துமாக்களுக்கு உறுதுணையாக இருக்க இந்நூல் உதவுமானால் அதுவே இந்நூலை வெளியிட்டதற்கான பெரும் பலனாகக் கருதுவேன்.

**ஆர் பாலா,**

**போதகர்,**
**சவரின் கிறேஸ் சபை (சீர்திருத்த பாப்திஸ்து)**
**ஆக்லாந்து, நியூசிலாந்து**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஊழிய அழைப்பு! | 11 |
| 2. | பிரசங்கப் பஞ்சம் | 33 |
| 3. | ஏன் பிரசங்கம்? | 35 |
| 4. | எது பிரசங்கம்? | 51 |
| 5. | பிரசங்கம் தயாரித்தல் 1 | 65 |
| 6. | பிரசங்கம் தயாரித்தல் 2 | 85 |
| 7. | பிரசங்கம் தயாரித்தல் 3 | 97 |
| 8. | பிரசங்கத்தில் பயன்பாடுகள் | 105 |
| 9. | பிரசங்கத்தில் அறிமுகம் | 121 |
| 10. | பிரசங்கத்தில் உதாரணங்கள் | 129 |
| 11. | பிரசங்கத்தில் கோட்பாடுகள் | 139 |
| 12. | பிரசங்கிக்கும்போது . . . | 149 |
| 13. | பிரசங்கப் பேச்சுநடை | 159 |
| 14. | பிரசங்கமும் பரிசுத்த ஆவியும் | 169 |
| 15. | போதகனின் கடமை | 185 |
| 16. | பிரசங்கத்தில் சில தவறுகள்! | 201 |

# ஊழிய அழைப்பு!

கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபடுபவர்கள் அவரது அழைப்பைப் பெற்றிருக்க வேண்டும் என்பது திருமறையின் தெளிவான போதனை. பழைய ஏற்பாட்டிலும் சரி புதிய ஏற்பாட்டிலும் சரி இவ்வாறாக கர்த்தரால் அவரது ஊழியத்திற்காக அழைக்கப்பட்ட பலருடைய உதாரணங்களைக் காணலாம்.

## ஊழிய அழைப்பு என்பது என்ன?

ஊழியத்திற்கான அழைப்பைக் குறித்து பேசுபவர்கள் பொதுவாகக் கொண்டிருக்கும் எண்ணங்களுக்கும் வேதம் அதைக்குறித்து போதிக்கும் போதனைகளுக்கும் பெரும் வித்தியாசமுண்டு. வேதத்தைப் படித்துக் கொண்டிருக்கும்போது ஒரு வசனத்தால் உந்தப்பட்டு கர்த்தர் தம்மை ஊழியத்திற்கு அவ்வசனத்தின் மூலம் அழைக்கிறார் என்று உணர்ச்சிவசப் பட்டு ஊழியத்திற்குப் போனவர்கள் அநேகர். அறையில் தனிமையில் இருக்கும்போது கர்த்தர் தன்னோடு பேசி அழைத்ததாகவோ அல்லது ஊழியப்பணிக்குத் தான் போகத்தான் வேண்டும் என்று கர்த்தர் அழைப்பது தனக்குப் புலப்பட்டதாகவும் கூறி ஊழியம் செய்யப் போனவர்களின் தொகை எண்ணிலடங்காது.

ஊழிய அழைப்பை ஒருவர் உணர முடியாது என்று நான் வாதிடவில்லை. ஆனால் ஊழிய அழைப்பு என்பது வெறும் உணர்ச்சிகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. அது கர்த்தருடைய வார்த்தையைப் போதிக்க வேண்டும் என்று கர்த்தரால் நமக்குள் ஏற்படுத்தப்படும் உள்ளார்ந்த நம்பிக்கை. ஆனால் இத்தகைய நம்பிக்கையை கடவுள் ஒருவருக்குள் எவ்வாறு ஏற்படுத்துகிறார்? ஒருவரது உள்ளத்தில் ஊழிய

வாஞ்சையை ஆழமாக விதைப்பதன் மூலமும், ஏனைய சகோதரர்களின் உள்ளத்திலும் அதைப் பதியவைப்பதன மூலமும், வேதம் போதிக்கும் ஊழியத்திற்கான அடையாளங் களையெல்லாம் கொண்டிருக்கும் அவரை சபையாரின் சோதனையில் தேர்ச்சிபெற வைப்பதன் மூலமும், கடவுள் ஒருவரை ஊழியத்திற்கு அழைக்கிறார். இவற்றில் சபையாரின் அங்கீகாரத்தை ஒருவர் பெறுவது மிக அவசியம். ஏனெனில் சுயநல நோக்கத்தோடு, பொருளாசையுடன் ஊழியத்தில் ஈடுபட முனைபவர்களை இதன் மூலம் தடை செய்யலாம். அத்தோடு, ஆணவம், தன்னலமுள்ள சுய நம்பிக்கை, பிறரின் பாராட்டை நாடும் மனப்பாங்கு, பிரசங்க ஊழியம் பற்றிய தவறான, குழந்தைத்தனமான எண்ணங்கள் ஆகியவற்றைக் கொண்டிருப்பவர்களையும் தவிர்க்கலாம். சபையில் முதிர்ச்சி யும் அனுபவமும் கொண்ட சகோதரர்களின் சோதனைக்குத் தம்மை ஒப்புக்கொடுக்க மறுப்பவர்கள் பிரசங்க ஊழியத்திற்கு தகுதியற்றவர்கள் என்றே கூற வேண்டும்.

## பிரசங்க ஊழியத்திற்கான தகுதிகள்

புதிய ஏற்பாட்டின் இரண்டு முக்கிய வேதப்பகுதிகள் *(1 தீமோ. 3:1-7; தீத்து 1:6-10)* இவ்வூழியத்திற்கான அடையாளங் களை விபரிக்கின்றன. ஊழியத்தை நாடுபவர்கள் இவ்விரண்டு பகுதிகளையும் கவனத்தோடு படிக்க வேண்டும். ஊழியத்தை நாடுபவர் சபையாரோடு சேர்ந்து இவ்வடையாளங்கள் தன்னில் காணப்படுகின்றனவா என்று மனச்சுத்தத்துடன் ஆராய்ந்து பார்த்தல் அவசியம். இது இலகுவான காரியமல்ல. உதாரணமாக ஊழியத்திற்கு பெரு மதிப்புக் கொடுக்கும் ஒருவர் தகுதிகள் இருந்தும் அதற்குத் தன்னை ஒப்புக்கொடுக்கத் தயங்கலாம். ஊழியப் பணிக்குத் தான் தகுதியானவனல்ல என்று எண்ணிப் பின்வாங்கலாம். இச்சந்தர்ப்பத்தில் முதிர்ச்சியுள்ள சபையாரின் எண்ணங்களுக்கு, மேலான மதிப்புக் கொடுத்து பின்வாங்குபவர்கள் ஊக்கப்படுத்தப்படல் அவசியம். கடவுள் நமக்குக் கொடுத்திராதவைகளைக் கொண் டிருப்பதாகப் பெருமை பாராட்டுவது எவ்வளவு தவறோ அதேபோல், கர்த்தர் நமக்கு உண்மையில் கொடுத்துள்ள கிருபைகளையும் வரங்களையும் அங்கீகரிக்க மறுப்பதும் போலித் தாழ்மையாகும்.

கர்த்தருடைய சபை ஊழியங்கள் அனைத்திற்கும் அவசியமான இலக்கணங்களை வகுத்துக்கூறும் வேத பகுதிகள் *1* தீமோத்தேயு, தீத்து ஆகிய நிருபங்களில் அடங்கியுள்ளன. சிலர் இவை சபை கண்காணிகளுக்கும், உதவிக்காரர்களுக்கும் மட்டுமே உரித்தான இலக்கணங்களை எடுத்துக் கூறுவதாக எண்ணலாம். திருச்சபையில் இன்று காணப்படும் நிரந்தர மான ஊழியங்கள் இவை இரண்டு மட்டுமே. ஆனால் இவ் விலக்கணங்கள் அனைத்து ஊழியங்களுக்கும் உரித்தானவை. அந்நோக்கத்துடனேயே பவுல் இவற்றை இங்கு தந்துள்ளார்.

*1* தீமோத்தேயு *3:1-7;* தீத்து *1:6-9* ஆகிய வேதப்பகுதிகள் ஊழியப்பணிக்கான இருபதுவகையான இலக்கணங்களை விபரிக்கின்றன. இவற்றில் பதினேழு இலக்கணங்கள் ஒருவரது நடத்தைக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஏனெனில் ஒருவரது திறமையும் கிருபை வரங்களும் அவசியமானதாக இருந்தாலும், அவரது நன்நடத்தையும் ஊழியத்திற்கு மிக முக்கியமானதாகும்.

இவ்விரு வேத பகுதிகளும் ஊழியப்பணிக்கான இலக் கணங்களை விளக்க ஆரம்பிக்கும்போது முக்கியமான ஒரு விஷயத்தைக்கூறி ஆரம்பிப்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது *(1* தீமோ. *3:2;* தீத்து *1:9).* இவ்விரு பகுதிகளும் ஊழியத்திற்கு வருபவர்கள் அனைவரும் இவ்விலக்கணங்களைத் 'தவறாது' கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகின்றன. கிரேக்க மொழியில் 'dei' என்று அழைக்கப்படும் இவ்வார்த்தை ஆங்கிலத்தில் 'must' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தை இவ்விலக்கணங்களின் தவிர்க்க முடியாத அவசியத்தை நமக்கு வலியுறுத்திக் காட்டுகின்றன. இவ் விலக்கணங்கள் ஒவ்வொன்றையும் விபரமாகப் பார்ப்போம்.

### 1. குற்றஞ்சாட்டப்படாதவனாக இருக்க வேண்டும் (1 தீமோ. 3:2; தீத்து 1:6,7)

இது ஓர் ஊழியக்காரரின் வாழ்க்கையில் பொதுவாக எதிர்பார்க்கப்படும் குணாதிசயம். அவரது வாழ்க்கை எக்குற்றச் சாட்டுகளுக்கும் அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அவலட்சணமான காரியங்களுக்கோ, அட்டூழியங்களுக்கோ இடமிருக்கக்கூடாது.

## 2. ஒரே பெண்ணை மனைவியாகக் கொண்டிருக்க வேண்டும் (1 தீமோ. 3:2; தீத்து 1:6)

இப்பகுதி ஓர் ஊழியக்காரர் திருமணம் செய்தவராகவோ அல்லது ஒருமுறை மட்டுமே திருமணம் செய்தவராகவோ இருக்க வேண்டும் என்பதைவிட அவர் தம் மணவாழ்வில் உண்மையுள்ளவராக இருக்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறது. இன்று திருச்சபைப் பிரசங்கிகளையும் தலைவர்களையும் பெரிதாகப் பாதித்து வரும் தீங்கு, முறையற்ற பெண் தொடர்பாகவே இருக்கின்றது. சபை சரித்திரத்தை ஆராய்ந்தால் போலிப் போதனைகளுக்கு அடுத்தபடியாக திருச்சபையின் சாட்சியையும் திருச்சபை மக்களையும் அதிகமாகப் பாதித்துள்ள கேடு சபைத் தலைவர்களுடைய முறையற்ற பெண் தொடர்பாகவே இருந்துள்ளது. போதகர்களும், சபைத் தலைவர்களும் தங்களுடைய மணவாழ்க்கையில் அதிக கவனம் செலுத்தி தம் மனைவிமார்களுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அநேக போதகர்களும், ஊழியக்காரர்களும் ஊழியத்தைப் பெரிதாகக் கருதி தங்களுடைய குடும்ப வாழ்க்கையில் இன்று அக்கறை செலுத்துவதில்லை. மணம் வீசும் மண வாழ்க்கைக் கொண்டவர்கள் மற்ற பெண்களை நாட மாட்டார்கள்.

## 3. தம் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனாயிருக்க வேண்டும் (1 தீமோ. 3:4,5; தீத்து 1:6)

அதாவது குடும்பத் தலைவனாகயிருந்து தன் மனைவி மக்களைக் கர்த்தரின் வார்த்தையின்படி வழிநடத்துகிறவனாயிருக்க வேண்டும். அவர்களது தேவைகளை அன்போடு கவனித்து, பராமரித்து வருபவனாக இருக்க வேண்டும். ஊழியக்காரர்களின் பிள்ளைகள் கீழ்ப்படிவுள்ளவர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். குடும்பத் தலைவர்கள் நேரத்திற்கு மதிப்புக் கொடுத்து தங்கள் மனைவி பிள்ளைகள் வீட்டிலும், சபையிலும் நேரப்படி காரியங்கள் செய்து மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். போதகர்கள், சபைத் தலைவர்கள் இதில் ஏனையோருக்கு வழிகாட்ட வேண்டும் என்று வேதம் எதிர்பார்க்கின்றது. குடும்பத்தில் ஒழுங்கையும்,

கட்டுப்பாட்டையும் கொண்டுவர இயலாதவர்கள் சபை நடத்தவோ பிரசங்கிக்கவோ தகுதியற்றவர்கள்.

### 4. தம் இஷ்டப்படி நடக்காதவனாக இருக்க வேண்டும் (தீத்து 1:7)

ஊழியக்காரர்கள் கர்த்தரால் அழைக்கப்பட்டு கர்த்தரின் மக்களை ஆவிக்குரிய செயல்களில் வழிநடத்தி அவர்களுக்குப் பாதுகாவலர்களாக இருக்க வேண்டியவர்கள். ஊழியக்காரர்கள் தன்னைத் தானே தெரிவு செய்துகொள்ளவோ, தன்னைத் தானே சிபாரிசு செய்துகொள்ளவோ கூடாது. தன் இஷ்டப்படி அதிகாரம் செலுத்தி தனது ஊழியத்தைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. தனது சுய இச்சைப்படியல்லாது கர்த்தருடைய வார்த்தையின்படி அவரது சித்தத்தை எப்போதும் செய்பவர் களாக இருக்க வேண்டும். ஊழியக்காரர்கள் கர்த்தரின் பிரதி நிதிகளாக இருந்து சேவை செய்ய வேண்டுமே தவிர சபையை ஆட்டிப்படைக்க முனையக்கூடாது.

### 5. முற்கோபமுடையவனாகவும், சண்டைக்காரனாகவும் இருக்கக்கூடாது (1 தீமோ. 3:3; தீத்து 1:7)

வெகு சீக்கிரம் ஆத்திரமடைந்து, வம்புச் சண்டையிலிறங்கு கிறவன் ஊழியத்திற்குத் தகுதியற்றவன். இது வாய்ச் சண்டை யாக இருந்தாலும், கைச்சண்டையாக இருந்தாலும் போதக, பிரசங்க ஊழியத்திற்கு ஏற்றதல்ல. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில், கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாக இல்லாமல், எல்லாரிடத்திலும் சாந்த முள்ளவனும், போதக சமர்த்தனும் தீமையை சகிக்கிறவனுமா யிருக்க வேண்டும் என்று கூறுவதைப் பார்க்கலாம்.

### 6. மதுபானப்பிரியனாக இருக்கக்கூடாது (1 தீமோ. 3:3; தீத்து 1:7)

இவ்வசனத்தின் மூல வார்த்தை மதுபானத்தின் பக்கத்தி லேயே காலத்தைக் கழிக்கும் ஒருவனைப் படம் பிடித்துக் காட்டுகிறது. மதுபானத்தைத் தனது நண்பனாகக் கொண்டு அதற்குத் தன்னை அர்ப்பணித்துக்கொள்கிறவன் ஊழியக்கார னாக இருக்க முடியாது. மதுபானத்தில் சுகத்தையும், தமது ஊழியத்திற்கான பலத்தையும் அடைய முயற்சிக்கிறவர்கள் கிறிஸ்தவர்களை வழி நடத்தத் தகுதியற்றவர்கள். இன்று

கிறிஸ்தவ சுதந்திரத்தின் பெயரில் சில ஊழியக்காரர்கள் மதுபானத்தில் சுகம் காண முயற்சிக்கிறார்கள். இவர்களால் திருச்சபைக்கு ஆபத்து!

## 7. அடிக்கிறவனாக இருக்கக்கூடாது (1 தீமோ. 3:3; தீத்து 1:7)

சுலபமாக கைநீட்டுவதை வழக்கமாகக் கொண்டவன் கர்த்தரின் சபையை ஆட்டிவைக்கமுனையும் சண்டைக்காரன். ஆனால், கர்த்தரின் ஊழியக்காரன் பொறுமையுள்ளவனாய் எச்சந்தர்ப்பத்திலும் நிதானத்தை இழக்காது எக்காரியத்தையும் முறையாய்த் தீர்த்து வைக்க முனைவான்.

## 8. பணஆசை உள்ளவனாய், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாய் இருக்கக்கூடாது (1 தீமோ. 3:3; தீத்து 1:7)

இன்று கிறிஸ்தவ ஊழியத்தைப் பலரும் நையாண்டி செய்யும் நிலைக்கு கொண்டுவந்து, வீழ்ந்திருக்கும் பல ஊழியக்காரர்களின் நிலைக்கு அவர்களுடைய பணஆசையே காரணம். மேலைத்தேய வாழ்க்கைத்தரத்தால் பாதிக்கப்பட்டு தன் நிலைமையை மீறி, தான் ஊழியம் செய்யும் மக்களின் நிலைமையையும் மீறி வாழ்ந்து அநேகர் ஊழியத்தில் தவறிழைத் திருக்கிறார்கள். ஊழியத்தின் மூலம் எவ்வளவு பணம் சேர்க்கலாம் என்ற நோக்கம் கொண்டவர்கள் ஊழியத்தை நாடக்கூடாது. ஒருவன் பணத்திற்காக எதையும் செய்பவனாகத் தென்படுகிறானா? எந்நேரமும் பணத்திலேயே குறியாக இருக்கிறானா? தன் நிலைமையையும், தான் ஊழியம் செய்யும் மக்களின் நிலைமையையும் மீறி வாழ முயற்சிக்கிறானா? அடிக்கடி பணத்தைப்பற்றியே பேசுகிறானா? என்று ஊழியத்தை நாடுபவர்களை ஆராய்ந்து பார்ப்பது அவசியம். பணத்தை கடவுளாகக் கருதும் ஒருவன் கர்த்தரைத் துதிக்கும் மக்களை வழிநடத்த முடியாது.

## 9. புதிய விசுவாசியாக இருக்கக்கூடாது (1 தீமோ. 3:6)

ஒரு புதிய கிறிஸ்தவன் வளருமுன் அவனுக்குப் பெரும் பொறுப்புக்களைக் கொடுப்பதால் அவனுக்குத் தன்னைப்பற்றி மேலான எண்ணம் ஏற்பட்டு ஆணவமுள்ளவனாக மாறிவிடும் ஆபத்து உண்டு. அதாவது புதிதாக விதைக்கப்பட்ட விதையாக

இருக்கக் கூடாது. புதிதாக விதைக்கப்பட்ட விதை சரியாக நிலத்தில் பதிந்து துளிர்விட காலமெடுக்கும். அதேவேளை பலவிதமான ஆபத்துகளைத் தாங்கக்கூடிய வல்லமையும் அதற்கு இல்லை. பொறுப்புக்களைக் காலம் வருமுன் ஒருவருக்குக் கொடுப்பதால் அவரை அழித்துவிடக் கூடிய ஆபத்து உண்டு. முறையான ஊழியத்திற்கு தாழ்மை பெரிதும் அவசியம். திருமறையின்படி, இதுவே கிறிஸ்தவ ஊழியத்தின் மிக விசேஷமான அம்சமாகக் கருதப்படுகிறது (மாற்கு 10:35-45). இத்தகைய தாழ்மை வளர புதிய கிறிஸ்தவனுக்கு காலமும், கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்ச்சியும் மட்டுமே துணை புரிய முடியும். அதற்குமுன் பெரும் பொறுப்புக்களை அவன் மேல் திணிப்பது அவனுக்கோ அல்லது ஊழியத்திற்கோ நன்மை பயக்காது.

இதுவரை நாம் பார்த்த இலக்கணங்கள் எதிர்மறையானவை. அதாவது ஒருவன் எதைச் செய்யக் கூடாது? எப்படி இருக்கக் கூடாது? என்று இவை எடுத்துக் கூறுகின்றன. ஊழியத்தை நாடுபவர்கள் சுத்த மனச்சாட்சியுடன் மனந்திறந்து இவ் விலக்கணங்கள் தனக்குப் பொருந்தி வருகிறதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

- கர்த்தருடைய சித்தத்தின்படி வாழ்வதை மட்டுமே நான் நோக்கமாகக் கொண்டிருக்கின்றேனா?
- எனக்கு சுலபமாக கோபம் வருகிறதா?
- மதுபானத்தில் எனக்கு ஆசை உண்டா?
- மற்றவர்கள் என்னை நாடிவரப் பயப்படுகிறார்களா?
- எனக்குப் பண ஆசை உண்டா?
- மற்றவர்களை வழி நடத்துமளவுக்கு எனக்கு முதிர்ச்சி உண்டா?

## 11. அந்நியரை உபசரிக்கிறவனாக இருக்க வேண்டும் (1 தீமோ. 3:2; தீத்து 1:8)

ஊழியக்காரர்களின் வீடு எப்போதும் மற்றவர்களுக்குத் திறந்திருக்க வேண்டும். நம்மிடம் இருப்பதை நம்மை அறியாத பிறருடன் பகிர்ந்துகொள்வதையே விருந்தோம்பல் முக்கிய

மாக வலியுறுத்துகிறது. அன்பே இங்கு பிரதானமானது. நற்செய்தியை எடுத்துக்கூறும் மேலான தகுதியைப் பெற்றிருக்கும் ஊழியக்காரன் தன்னிடம் வருபவர்களை அன்போடு உபசரித்து அவர்களது தேவைகளைக் கவனிப்பவனாக இருக்க வேண்டும்.

## 12. நல்லவற்றையே எப்போதும் நாடுபவனாக இருக்க வேண்டும் (தீத்து 1:8)

தமிழ் வேதத்தில் இதன் மொழிபெயர்ப்பு நல்லோர் மேல் பிரியமுள்ளவன் என்று காணப்படுகிறது. ஆனால் மூல பாஷையில் "நல்லவை" என்றே இருப்பதை நாம் கவனிக்க வேண்டும். பவுல், பிலிப்பியர் 4:8 வசனத்தில் கூறுவது போல் ஊழியத்திற்கு தகுதியுள்ள எவரும் உண்மையுள்ளவைகளையும், ஒழுக்கமுள்ளவைகளையும், நீதியுள்ளவைகளையும், கற்புள்ளவைகளையும், அன்புள்ளவைகளையும், நற்கீர்த்தியுள்ளவைகளையும் நாடுபவர்களாக இருப்பார்கள். பிரசங்கிக்கிறவன் கேள்விக்குறியுள்ள காரியங்களில் நேரத்தை செலவிடமாட்டான். ஒரு பிரசங்கி தெளிவான சத்தியத்தை அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டி அதை மட்டுமே நாடி நிற்பான். கண்டதையும் படித்து தனது மனதைக் குழப்பிக் கொள்பவர்கள் தேவனுடைய சத்தியத்தைப் போதிக்கும் தகுதியில்லாதவர்கள். இன்றைய ஊழியக்காரர்களில் அநேகர் இதை சிந்தித்துப் பார்ப்பது நல்லது. நல்லவற்றை நாடி சத்தியத்தில் நல்லறிவு பெறாமல் தாம் ஊழியம் செய்யும் மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தால் நியாயத்தீர்ப்பு நாளில் கர்த்தரின் கண்டனத்துக்கே உள்ளாக நேரிடும். அதுமட்டுமல்லாமல் நல்லதையும் நாடி நிற்காமல், சத்தியத்திலும் தெளிவில்லாமல் ஆத்துமாக்களுக்கு தொடர்ந்து எதை யெதையோ போதிப்பதைப் போன்ற கொடுமை வேறெதுவும் இருக்க முடியாது.

## 13. தெளிந்த புத்தியுள்ளவனாக இருக்க வேண்டும் (1 தீமோ. 3:2; தீத்து 1:8)

ஊழியக்காரர்கள் வேத அடிப்படையில் எதையும் பகுத்தறிந்து நல்ல தீர்மானம் எடுக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும். நிலை தடுமாறுபவர்களாகவும், காற்றில் திசை

தெரியாமல் பறக்கும் இலைகளைப்போல எதையெதையோ பின்பற்றுபவர்களும் ஊழியத்திற்கு தகுதியற்றவர்கள். சிலர் மதில் மேல் பூனைபோல் ஊழியம் செய்ய முற்படுகிறார்கள். செல்வாக்கை இழந்துவிடும் பயத்திலும், மற்றவர்களைப் பகைக்கக்கூடாது என்ற எண்ணத்திலும் போலி நடுநிலை வகிக்க முனைகிறார்கள். இது தெளிந்த புத்தியைக் கொண்டிருப்பதற்கு அடையாளமல்ல. இது சந்தர்ப்பவாதிக்குரிய இலட்சணம். உண்மையான ஊழியக்காரன் மற்றவர்கள் இருமனமுள்ளவர்களாக செயல்படும்போது தெளிவான எண்ணத்தோடு, சீரான முடிவுகளை எடுத்து செயல்படுபவனாக இருப்பான்.

### 14. நீதியும், பரிசுத்தமும் உள்ளவனாக இருக்க வேண்டும் (தீத்து 1:8)

இவ்வசனத்தில் இவ்விரு குணாதிசயங்களையும் விளக்கும் ஒரே கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஊழியக்காரன் அநீதிக்கு இடம் கொடுக்காமல் நீதியின் பக்கத்தில் நிற்பவனாக இருக்க வேண்டும். மற்றவர்களின் காரியங்களில் பாரபட்சம் காட்டாதவனாக நீதியைக் கடைப்பிடிப்பவனாக இருக்க வேண்டும்.

### 15. பரிசுத்தமானவனாக இருக்க வேண்டும் (தீத்து 1:8)

இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை ஊழியக்காரன் பரிசுத்தமானவனாக இருப்பதாக கடவுளுக்கு முன் தீர்மானம் எடுத்திருப்பவனாகக் காட்டுகின்றது. சபைத் தலைவர்களான போதகர்களும், ஊழியக்காரர்களும் வேதத்திற்குக் கீழ்ப்படிந்து பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதை வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டிருக்க வேண்டும்.

### 16. இச்சையடக்கமுள்ளவனாக இருக்க வேண்டும் (1 தீமோ. 3:2; தீத்து 1:8)

பவுல் அப்போஸ்தலன் தன்னை ஒரு மல்யுத்தக்காரனுடனும், விளையாட்டு வீரனுடனும் ஒப்பிடுகிறார். ஏனெனில் அவர்கள் விளையாட்டில் வெற்றிபெற கடுமையான பயிற்சியில் ஈடுபட வேண்டும். ஊழியக்காரர்கள் தங்களது நேரத்தை வீணாக்காது முறையாகப் பயன்படுத்தி

மற்றவர்களுக்கு உதாரணமாக இருக்க வேண்டும். ஊழியக் காரர்கள் சோம்பேறித்தனமான வாழ்க்கை நடத்துவது ஊழியத்திற்கு உதவாது. நேரம் தவறாமை, எடுத்த காரியத்தை நேரத்துடன் முடித்தல், கடமைப்பாடு ஆகியவற்றில் மற்ற எல்லோருக்கும் உதாரணமாக இருக்க வேண்டும். இவற்றில் பயிற்சி பெற்று மற்றவர்கள் கவனிக்கத்தக்க விதத்தில் வாழ்க்கை நடத்தாதவர்கள் ஊழியத்திற்குத் தகுதியற்றவர்கள்.

## 17. யோக்கியதையுள்ளவனாக இருக்க வேண்டும் (1 தீமோ. 3:2)

மற்றவர்கள் மதிக்கும்படியான குணங்களைக் கொண் டிருக்க வேண்டும். நன்னடத்தை, பொது இடங்களில் முறை யாகப் பேசுதல், மற்றவர் மனங்கோணாதவிதத்தில் நடத்தல் என்பவற்றையே இது குறிக்கின்றது. மற்றவர்கள் நம்மோடு பேசப் பயப்படும் விதத்தில் நடத்தல், மனம் புண்படும்படிப் பேசுதல் என்பவை ஊழியக்காரனுக்குத் தகாது. இளம் போதகர்கள், ஊழியக்காரர்கள் தீமோத்தேயுவைப் போல இதில் அதிக கவனம் செலுத்தி யோக்கியதை உள்ளவர்களாக வளர வேண்டும்.

## 18. புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாக இருக்க வேண்டும் (1 தீமோ. 3:7)

கிறிஸ்தவன் என்பதால் மற்றவர்கள் தூற்றுவதைத் தவிர்த்த வேறு எந்தக் காரணத்திற்கும் ஊழியக்காரர்கள் மற்றவர்களிடம் கெட்ட பெயர் எடுக்கக்கூடாது. வியாபாரத்திலும், வேலைத் தளத்திலும் நற்சாட்சி பெறாதவர்களும், பக்கத்து வீட்டுக்காரர் களின் மரியாதையைப் பெறாதவர்களும் சபைக்கு எவ்வளவு தேவையானவர்களாக இருந்தபோதும் ஊழியத்தை எட்டியும் பார்க்கக்கூடாது (1 பே. 4:4-16). நற்செய்தி நமது நல்ல காரியங் களால் அலங்கரிக்கப்பட வேண்டுமே தவிர, கெட்ட காரியங் களால் நிராகரிக்கப்படக்கூடாது (மத். 5:16; ரோ. 2:24).

நாம் இதுவரை பார்த்த இலக்கணங்கள் அனைத்தும் ஒருவரின் நன்னடத்தையைக் குறித்ததாக இருப்பதைக் கவனிக்கத் தவறக்கூடாது. ஏனெனில் நமது ஏனைய திறமைகள் ஊழியத்திற்கு அவசியமாக இருந்தபோதும் இவ்வத்தியா வசியமான நற்குணங்கள் நிரம்பியவர்களாக நாமில்லாவிட்டால்

ஊழியத்திற்கும் நமக்கும் எந்தச் சம்பந்தமும் இருக்க முடியாது. "கடவுள் அழைப்புக் கொடுத்தார்" என்று கூறிக் காளான்கள் போல் தங்களைத் தாங்களே ஊழியக்காரர்களாக நியமித்துக்கொள்ளும் பலர் நிறைந்த இன்றைய தமிழ்க் கிறிஸ்தவ சமுதாயத்தில், அத்தகையோரை இனங்கண்டுகொள்ளக் கிறிஸ்தவர்கள் வேதம் போதிக்கும் இவ்விலக்கணங்களைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## 19. வசனத்தில் நல்ல போதனையைப் பெற்றுக்கொண்டவனாக இருக்க வேண்டும் (தீத்து 1:9)

ஒரு போதகனுடைய முதலாவது கடமை வசனத்தில் தேர்ச்சியடைவதே. அதாவது முழு வேதத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதற்காக வேதாகமக் கல்லூரிக்குப் போயிருக்க வேண்டும், டிகிரி/டிப்ளோமாக்கள் பெற்றிருக்க வேண்டும் என்று கூற வரவில்லை. ஏனெனில் வேதாகமக் கல்லூரிகளுக்குப் போய் "லிபரல்" போதனைகளையும் "புதிய சுவிசேஷக் கோட்பாடுகளையும்" பின்பற்றுபவர்களாக திரும்பி வந்துள்ள அநேகரை எனக்குத் தெரியும். ஆகவே, வேதாகமக் கல்லூரிகளில் மட்டும்தான் வசனத்தில் தேர்ச்சி பெற முடியும் என்று எண்ணுவதைப் போன்ற கோமாளித் தனம் வேறிருக்க முடியாது. இதற்காக வேதாகமக் கல்லூரிகளை நான் நிராகரிக்கவில்லை. தமிழ் சமுதாயத்தில் சத்தியத்தை சத்தியமாகப் போதிக்கும் கல்லூரிகளை இன்று காண்பதரிது. ஆகவே, வசனத்தில் தேர்ச்சிபெற வேறு வழிகளை நாட வேண்டும். திருச்சபைகள் ஏதாவதொரு வேதாகமக் கல்லூரிக்குப் போய்வந்த போதகர்களை மட்டும் நாடும் வழக்கத்தைக் கைவிட வேண்டும். வசனத்தில் நமது மக்கள் தேர்ச்சி பெறக்கூடிய வேறு வழிகளைக் குறித்து சபைகள் சிந்தித்து அதற்கான வகுப்புகளைத் தங்களுடைய சபைகளில் நடத்த முன்வர வேண்டும். இதைச் செய்ய முடியாத சபைப் போதகர்கள் தகுதியுள்ள, சத்தியத்தை மட்டும் போதிக்கும் வேறு போதகர்களுடன் இணைந்து ஊழியக்காரர்களுக்கான போதனைகளை அளிக்க வேண்டும். இதனால் மட்டுமே இன்று சபைகள் சத்தியத்தை பாதுகாக்கவும் சத்தியத்தில் உறுதியாகத் தரித்திருக்கவும் முடியும்.

முறையாக வசனத்தில் தேர்ச்சி பெறாமல், "கர்த்தர் அழைத்

தார்" என்று கூறிக் கொண்டு பிரசங்க மேடையில் தாவியேற முயல்வது தகாத காரியம். வேதத்தில் தேர்ச்சி பெறுவதென்பது வெறுமனே அதன் வரலாற்றையும், அமைப்பையும் பற்றி மட்டும் அறிந்திருப்பதல்ல. சிலர் அதைப் பயன்படுத்தி காதுக்கினிய கதைகளைக் கூற மட்டுமே வல்லவர்களாக இருக்கிறார்கள். ஆனால், வேதத்தின் இறையியலில் நல்ல அறிவு இருக்க வேண்டும். வசனங்களை வேதத்தின் இறையியலின் அடிப்படையில் விளக்கிப் போதிக்கும் திறமையைப் பெற வேண்டும். வேதத்தின் இறையியலில் அக்கறைகாட்டாதவர்கள் இலக்கியத்தில் அக்கறையில்லாத இலக்கிய ஆசிரியருக்கு ஒப்பானவர்கள். சபையைப் போதனையின் மூலம் மட்டுமே கட்டியெழுப்ப கிறிஸ்து ஊழியக்காரர்களை நியமித்திருப்பதால் வசனத்தில் அக்கறையுடன் தேர்ச்சி பெற, ஊழியத்தை நாடுபவர்கள் வைராக்கியம் கொண்டிருக்க வேண்டும்.

## 20. ஆரோக்கியமான உபதேசத்தைப் பின்பற்றுபவனாக இருக்க வேண்டும் (தீத்து 1:9)

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில் நீ என்னிடம் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி என்று கூறுவதைப் பார்க்கிறோம் *(2 தீமோ. 2:2)*. ஆகவே போதிக்கும் ஊழியத்தைக் கொண்டிருக்கிறவர்கள் உண்மையுள்ளவர்களாக இருப்பதோடு உண்மையான சத்தியத்தை மட்டுமே போதிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். இங்கே உண்மைக்கும், நேர்மைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். தான் காதால் கேட்கும் போதனையையெல்லாம் ஆராயாது கண்மூடித்தனமாகப் பின்பற்றுபவர்களும், அவசியமற்ற இறையியல் சச்சரவுகளில் நாட்டமுள்ளவர்களும் போதக ஊழியத்திற்குத் தகுதியற்றவர்கள்.

## 21. போதக சமர்த்தனாக இருக்க வேண்டும் (1 தீமோ. 3:2; தீத்து 1:9)

இன்று நம்மத்தியில் அநேகர் பேச்சில் வல்லவர்களாக இருக்கிறார்கள். அது தமிழர்களைப் பிடித்த வியாதியாய் இருக்கிறது. பேச்சும் பாட்டும் கிறிஸ்தவ ஊழியத்தையே இன்று தலை கீழாக மாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் வெறும்

பேச்சால் எந்தப் பயனுமில்லை. வேதம், ஒருவன் சிறந்த பேச்சாளியாய் இருக்க வேண்டுமென்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இருதயத்திற்கும் மனதிற்கும் பலனளிக்காத வேத ஆதாரமற்ற போதனையை அளிக்கும் பேச்சில் வல்லவர்கள் சாத்தானின் ஊழியர்கள். இவர்கள் அலங்கார மாக பேசலாம், ஆனால் ஆவிக்குரிய உணவை இவர்களால் அளிக்க முடியாது (1 கொரி. 14:12).

போதிக்கும் வல்லமையை பேசும் வல்லமையோடு ஒப்பிட்டுக் குழப்பக்கூடாது. பேச்சில் வல்லவன் கூட்டத்தை மயக்கலாம் ஆனால் போதக சமர்த்தனாக இருக்க முடியாது. சத்தியத்தை சாதாரண மனிதர்களும் புரிந்துகொள்ளும் விதத்தில் எடுத்து விளக்கும் வல்லமையே போதனையாகும். உண்மையான போதனை, கேட்பவர்களைத் தேவனுடைய வார்த்தையால் கட்டியெழுப்பக்கூடியதாக இருக்கும். அதற்குக் கேட்பவர்களை மயக்கக்கூடிய கவர்ச்சி இருக்காது, ஆனால் ஆத்துமாக்களை உயிர்ப்பித்து கிறிஸ்துவில் கட்டியெழுப்பக் கூடிய வல்லமை அதில் இருக்கும். அத்தோடு, ஒரு போதகன் சாதகமான போதனைகளை மட்டும் அளிக்கக்கூடாது. அவரது போதனையில் எச்சரிப்பும், கண்டிப்பும் கலந்து காணப்பட வேண்டும். ஆடுகளை ஓநாய்களிடமிருந்து காக்கும் வல்லமை யுள்ள போதகர்களாக உண்மையான ஊழியக்காரர்கள் இருப்பார்கள் (தீத்து 1:10).

ஊழியத்தை நாடுபவர்கள் பதிலளிக்க வேண்டிய சில கேள்விகள்:

1. மற்றவர்களுக்கு போதிக்குமளவுக்கு சத்தியத்தை முறையாகக் கற்றிருக்கிறேனா?
2. வேதபூர்வமான சத்தியத்தை மட்டும் கற்று அதனை உடும்புப்பிடியாக தொடர்ந்து பின்பற்றுகிறேனா?
3. சாதகமாகவும், அதேவேளை எச்சரித்தும், கண்டித்தும் போதிக்கும் வல்லமை எனக்கிருக்கிறதா?

ஊழியக்காரர்களும், ஊழியத்தை நாடுபவர்களை வழி நடத்து பவர்களும், ஊழியத்தை நாடுபவர்களும் இக்கேள்விகளுக்கு கொடுக்கும் பதில்களே அவர்களது ஊழியத்திற்கான தகுதியை

நிர்ணயிக்கக்கூடியவையாக உள்ளன. இக்கேள்விகளுக்கு நேர்மையுடனும் இருதய சுத்தத்துடனும் பதிலளிக்க முடியாதவர்கள் பிரசங்க மேடையை நாடாமலிருப்பது நல்லது. அதேவேளை இதை வாசிக்கும் உங்கள் இருதயத்தில் குற்றவுணர்வு தலைகாட்டியிருந்தால் இப்போதே கர்த்தரின் மன்னிப்பை நாடி, உங்கள் வழிகளைக் கர்த்தரின் துணையோடு திருத்திக் கொண்டு ஊழியத்தைக் கர்த்தருக்காக, கர்த்தரின் மக்கள் சத்தியத்தால் கட்டியெழுப்பப்படுவதற்காக மட்டும் நடத்துங்கள்.

•

## போதக ஊழியம் புனிதமானது!

உலகத்தில் உயர்ந்த, புனிதமான ஊழியமாகக் கருதப்படுவது போதக ஊழியம். போதக ஊழியம் என்று நான் குறிப்பிடுவது வேத இலக்கணங்களுக்குப் பொருந்தி வந்து திருச்சபையால் தெரிவு செய்யப்பட்டு திருச்சபையின் ஆத்துமாக்களுக்குப் போதித்தும், அவர்களுடைய ஆத்மீகத் தேவைகளைக் குறிப்பறிந்து தீர்த்தும் வைக்கிற ஊழியக்காரரின் பணியையே குறிக்கும். வேறெதையும் நாம் போதக ஊழியமாகக் கருதுவதற்கு வேதம் இடம் தரவில்லை. இதனை ஆங்கிலத்தில் Pastoral Ministry என்று குறிப்பிடுவார்கள். இப்பணி புரிபவர்களை வேதம் ஒன்றுக்கு மேற்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தி அழைக்கிறது. போதகர் (Pastor), மூப்பர் (Elder), கண்காணி (Overseer), உபதேசியார் (Teacher) போன்ற பல வார்த்தைகள் போதக ஊழியத்திலிருப்பவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழினத்தில் இந்த ஊழியம் இன்றைக்கு தள்ளாடும் நிலையிலிருக்கிறதை அவிசுவாசிகளும் அறிவர். வாழ்க்கையில் செட்டில் ஆகிவிடுகிற ஒரு பதவியாகவும், ஆத்துமாக்கள் மேல் அதிகாரம் செலுத்தக்கூடிய ஓர் அதிகாரப் பதவியாகவும், குடும்பத்தை வளர்த்துக்கொள்ள வசதியான ஒரு தொழிலாகவுந்தான் பெரும்பாலும் போதக ஊழியம் இன்றைக்கு திருச்சபைகளில் இருந்து வருகிறது. இதற்கு ஓரிரு விதிவிலக்குகள் நம்மத்தியில் நிச்சயம் இருக்கலாம்.

### 1. இது பகட்டான பணியல்ல

போதக ஊழியத்தில் ஈடுபட்டிருக்கின்ற அநேகர் அதை ஒரு பகட்டான பதவியாகக் கருதி வருகின்றனர். உண்மையில்

ஆத்துமாக்கள் போதகர்களுக்கு மரியாதை தந்து அவர்களை நாடி வந்து ஆத்தும காரியங்களில் உதவி கேட்பதை வேதம் எதிர்பார்க்கிறது. இப்படி ஆத்துமாக்கள் தங்களை நாடி வருகிறார்கள் என்ற எண்ணமே அநேக போதகர்களுக்கு இருதயத்தில் ஆணவத்தை ஏற்படுத்திவிடுகிறது. ஆத்துமாக்கள் தங்களுக்கு மரியாதை செலுத்துகிறார்கள் என்பது அவர் களுடைய மனதைக் குளிர வைக்கிறது. இத்தகைய மரியாதையை அவர்கள் எப்போதும் நாடுபவர்களாக மாறிவிடுகிறார்கள். ஆத்துமாக்களின் பாராட்டையும், அவர்களிடம் பேர் வாங்குவதையும், அவர்களுக்குமுன் தங்களுடைய பதவிப் பெருமையைக் காட்டுவதிலும் பலர் சிந்தை குளிர்ந்து போகிறார்கள். நான் ஒரு பாஸ்டர் என்று சொல்லிக்கொள்வ திலும், மற்றவர்கள் தங்களைப் பாஸ்டர் என்று அழைப்பதிலும் அவர்களுக்கு கொள்ளை ஆசை. அந்தப் பெயரைச் சொல்லி பாஸ்டர்கள் அழைக்கப்படுவது நியாயமே. இருந்தாலும் அப்படி ஆத்துமாக்கள் அழைப்பதைக் கேட்டு உச்சி குளிர்ந்து அதே நினைவாக தங்கள் பதவியின் பெருமையை எண்ணி வாழ்ந்து வருகிறவர்கள் நல்ல போதகர்களாக இருக்க முடியாது.

## 2. இது உலக ரீதியான பணியல்ல

உலகத்தில் எத்தனையோ பதவிகள், தொழில்கள் இருக் கின்றன. அவற்றில் நேர்மையானவையும், நியாயமானவையும் அநேகம். இருந்தபோதும் உலகத்திலிருக்கும் அநேக பதவி களுக்கும் போதக ஊழியத்துக்கும் இடையில் பெரும் வித்தியாசம் உண்டு. உலகத்துத் தொழில்களைப் போல போதக ஊழியத்தைக் கருத முடியாது. உலகத்துத் தொழில்களை அந்தந்தத் தொழில்களுக்கு தகுதியிருக்கும் எவரும் செய்து விடலாம். உலகத்துத் தொழில்களுக்கு போட்டியிருக்கும். அத்தொழில்களைச் செய்ய விண்ணப்பிப்பவர்கள் தங்களுக்குக் கிடைக்கப் போகும் சம்பளத் தொகையைப் பார்த்துக்கூட அந்தத் தொழிலைச் செய்ய ஆசைப்படுவார்கள், இல்லாவிட்டால் வேறு தொழிலை நாடுவார்கள். இந்த எண்ணங்களுக்கெல்லாம் போதக ஊழியத்தில் இடமில்லை. போதக ஊழியத்தில் எவருமே பொருளாதார நிச்சயத்தையும், நிரந்தர பாது காப்பையும் எதிர்பார்க்க முடியாது. கர்த்தர் நம்மோடிருக்கும் வரைதான் அந்தப் பணியை நாம் செய்ய முடியும். உலக

ரீதியான எண்ணங்களோடு போதக ஊழியத்துக்கு வருகிறவர் களால் ஆத்துமாக்களின் இருதயத்துக்குத்தான் பேராபத்து.

## 3. இது உங்களை வளர்த்துக்கொள்வதற்கான பணியல்ல

போதக ஊழியத்துக்கு வருகிற அநேகர் வேறு தொழில்களைச் செய்ய விரும்பாமல், பெயர் பெறுவதற்கும், தங்களை வளர்த்துக்கொள்வதற்கும் இந்தப் பணியை நாடி வருகிறார்கள். அதுவும் எந்தச் சபையிலும் வாழாது, எந்தச் சபையையும் கலந்தாலோசிக்காது, தாமே தங்களை போதகர்களாக அறிவித்துக் கொண்டு ஊழியம் செய்கிறவர்கள் தமிழினம் முழுவதும் கருவேலச் செடிபோல் பரவிப் படர்ந்திருக்கிறார்கள். தேவனுக்கடுத்த உயர்ந்த நோக்கங்களைக் கொண்டிராமல் இப்படியாக குறுக்கு வழியில் போதகப் பணியைப் பலர் நாடுவதற்குக் காரணம் சமுதாயப் படிக்கட்டில் தங்களை உயர்த்திக்கொள்வதற்காகவே. அப்பணியை வைத்து எதை யாவது செய்து நாலு பேர் மதிக்கும்படி உயர்ந்துவிட்டால் வாழ்க்கையில் குடும்பத்தோடு செட்டில் ஆகிவிடலாம் என்பது இவர்களுடைய எண்ணம். இவர்களுக்கு துணைபோவதற் காகவே பணம் வாங்காமலேயே பட்டங்களைக் கொடுக்கும் இறையியல் கல்லூரிகளும் நூற்றுக்கணக்கில் புற்றீசல்கள் போல் பரவியிருக்கின்றன. போதகப் பணியை இந்தளவுக்கு தெருவரைக் கொண்டு வந்திருக்கும் இவர்களால் கர்த்தரின் புனிதமான ஊழியம் அவிசுவாசிகளாலும் இன்று மதிக்கப் படாத நிலையை அடைந்திருக்கிறது.

## 4. இது பணம் தேடுவதற்கான பணியல்ல

பணம் சம்பாதிப்பதற்கு தங்க முட்டையிடும் வாத்தைப் போல போதகப் பணியைப் பயன்படுத்திக்கொள்கிறவர்கள் தமிழினத்தில் அதிகம் என்பது மிகைப்படுத்திச் சொல்லும் வார்த்தையல்ல என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. காணிக்கை கொடுப்பதை மட்டுமே கருத்தோடு பேசிக் காரியத்தை முடித்துக்கொள்கிற நூற்றுக்கணக்கான ஊழியக் காரர்களால் தமிழினத்தில் கிறிஸ்தவம் இன்று தலைகுனிந்து நிற்கிறது. பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்பார்கள். பணம் என்றால் பிணமாகவும் தயாராக இருக்கும் ஊழியக்காரர்களை நம்மினம் தாங்க வேண்டிய துர்ப்பாக்கிய

நிலை இன்று. முழு நேர ஜெபக்கூட்டம், எழுப்புதல் கூட்டம், ஐக்கியக் கூட்டம், பிணி தீர்க்கும் கூட்டம், ஆத்துமவிருத்திக் கூட்டம் என்று வைக்கிற கூட்டங்கள் அனைத்திலும் காணிக்கை எடுப்பதே முக்கியப் பணியாகவும், அதுவும் ஒரே கூட்டத்தில் பல தடவைகள் காணிக்கை எடுப்பதை வழக்க மாகவும் இந்த ஊழியக்காரர்கள் கொண்டிருக்கிறார்கள். இதையும் விட இன்று டிவி சேனல்களிலும் தோன்றிப் பணம் கேட்பவர்களாக அநேகர் மாறியிருக்கிறார்கள். ஏமாறு கிறவர்கள் இருக்கிறவரை ஏமாற்றுகிறவர்களுக்கு கொண் டாட்டந்தான் என்பதற்கிணங்க சத்தியம் தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கானவர்களை இவர்கள் தங்கள் பேச்சால் மயக்கிப் பணம் சம்பாதித்துவிடுகிறார்கள். ஆத்து மாக்களுக்கு ஆவிக்குரிய உணவு வழங்க வேண்டிய புனிதமான போதகப் பணியை பணம்பண்ணுவதற்கு பயன்படுத்து கிறவர்கள் கொடுமைக்காரர்களே.

## 5. இது தகுதி இல்லாதவர்களுக்கான பணியல்ல

புனிதமான போதக ஊழியத்தை நாடுகிறவர்களுக்கென்று கர்த்தர் கட்டளையாக பல தகுதிகளை பவுல் தீமோத்தேயு வுக்கும், தீத்துவுக்கும் எழுதிய நிருபத்தில் விளக்கியிருக் கிறார். அந்தத் தகுதிகளைக் கொண்டிருக்காத எவரும், சபைக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து, சபையால் சோதிக்கப் பட்டு, சபையால் அங்கீகரிக்கப்படாத எவரும் போதக ஊழியத்துக்கு வரக்கூடாது. தகுதியில்லாதவர்களால் ஆத்து மாக்களுக்கு பேராபத்து. இந்தத் தகுதிகளை உதாசீனம் செய்துவிடுகிறபடியால்தான் திருச்சபைகளில் மோசமான மனிதர்கள் போதகப் பணிக்குள் நுழைந்துவிடுகிற நிலை ஏற்படுகிறது. போதகர்களுக்கும், உதவிக்காரர்களுக்கும் அவசியமான, அவர்களில் காணப்பட வேண்டிய தகுதிகளை வேதம் கோடிட்டுக் காட்டுகிறதென்ற உணர்வே இல்லாமல் தகுதியற்றவர்களை, அவர்கள் சபையில் நெடுங்காலமாக இருந்திருக்கிறார்கள் என்பதற்காகவும், தலை நரைத்திருக்கிற தென்பதற்காகவும், போதகருக்கு உறவுக்காரர் என்பதற்காகவும், சபைக்கு காணிக்கை அதிகமாகக் கொடுக்கிறார் என்பதற் காகவும், இப்படி இன்னும் அநேக உலகரீதியான காரணங் களுக்காக கர்த்தர் இருக்கிறார் என்ற பயமேயில்லாமல்

தவறான நபர்களைப் போதக ஊழியத்தில் அமர்த்தியிருக்கிற சபைகள் நம்மினத்தில் ஏராளம். இத்தனையையும் செய்து விட்டு சபை ஆத்தும விருத்தி அடைந்து வருகிறது என்று ஆணவத்தோடு சொல்லி ஆராதனை நடத்தி வருகிறார்கள் இவர்கள். போதகப் பணியை இந்தளவுக்கு மோசமாக வைத்திருக்கும் நம்மினத்தில் கிறிஸ்தவம் வளராமலும், சத்திய வாஞ்சை இல்லாமலும் இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

## 6. இது அதிகமாகப் படித்துப் போதிக்காதவர்களுக்கான பணியல்ல

போதகப் பணியின் பிரதான ஆயுதம் பிரசங்க ஊழியம். அதற்கடுத்த படியானது சபை ஆத்துமாக்களின் வாழ்க்கையில் அக்கறைகாட்டி அருகே இருந்து அவர்களை வளர்ப்பது. வேதத்தை ஆயுதமாகப் பயன்படுத்தி அதை ஆராய்ந்து படித்து அதிலுள்ளதை உள்ளவாறு அருமையான பிரசங்கங்களின் மூலம் பிரசங்கித்து ஆத்துமாக்களுடைய ஆத்தும தாகத்தைத் தீர்க்க வேண்டியது போதகனின் பெருங்கடமை. இதைப் பற்றி வேதம் தெளிவாகப் பல இடங்களில் போதிக்கிறது. கல்வி யறிவற்றவர்கள் போதக ஊழியம் செய்ய முடியாது. கிராம வாசிக்கு சுவிசேஷம் சொல்லக்கூட கல்வித்திறன் அவசியம். இங்கே கல்வியறிவு என்று நான் சொல்வது எழுதப் படிக்கவும், சீராக சிந்திக்கவும் தெரிந்திருந்து தாழ்மையோடு கற்றுக் கொள்ளும் மனப்பான்மையைக் கொண்டிருப்பதைத்தான். அத்தோடு, உலக நடப்புகளில் அக்கறை காட்டவும், சமூக இங்கிதங்கள் (Social behaviour) தெரிந்திருக்கவும் வேண்டும். மொத்தத்தில் சொல்லப்போனால் ஒரு போதகன் உலகந் தெரியாத முட்டாளாக இருக்கக் கூடாது. காலேஜ் 'டிகிரிகள்' வைத்திருப்பவர்களையெல்லாம் கல்வித் திறன் கொண்டவர் களாக உடனடியாகக் கணித்துவிட முடியாது. காலேஜ் 'டிகிரி' இருந்தாலும் கூடவே மனத்தாழ்மை இருக்க வேண்டும். மனத்தாழ்மையுள்ளவர்கள் மட்டுமே கற்றுக்கொள்ளும் மனப்பான்மையைக் கொண்டிருப்பார்கள். அவர்கள், எல்லாம் தெரிந்தது போல் நடிக்கும் அதிகப் பிரசங்கிகளாக இருக்க மாட்டார்கள். "கற்றது கையளவு கல்லாதது உலகளவு" என்று எண்ணுபவனே மனத்தாழ்மையுள்ளவன். எத்தனை அறிவிருந்தும் மனத்தாழ்மை இல்லாவிட்டால் பிரயோஜன

மில்லை. இன்னும் சொல்லுவதானால் இவை எல்லாவற்றோடும் தொடர்ந்து கற்றுக்கொள்ளுகிறவனாகவும் இருக்க வேண்டும். வேத அறிவில் வளரவேண்டும் என்ற தீவிர வாஞ்சை இருக்க வேண்டும். அத்தகைய வாஞ்சை இருப்பவர்களே நேரத்தைப் பயன்படுத்தி தங்களுடைய சொந்த ஆத்தும விருத்திக்காகவும், ஆத்துமாக்களுக்கு உணவளிப்பதற்காகவும் கஷ்டப்பட்டுப் படிப்பார்கள். அக்கறையோடு வேதத்தை ஆராய்ந்து படித்துப் பிரசங்கிக்காதவர்களின் சபை ஒரு நாளும் ஆத்தும விருத்தி அடைய முடியாது.

பழைய, புதிய ஏற்பாடு நூல்களில் அறிவற்றவர்களும், பிரசங்கிக்கும் வல்லமையற்றவர்களும் பெருகியிருப்பதாலேயே இன்றைக்கு சத்தியத்தின் அடிப்படையில் அமையாது கிறிஸ்தவ ஊழியங்கள் என்ற பெயரில் அநேக போலி ஊழியங்கள் கிறிஸ்தவத்தின் பெயரில் நம்மத்தியில் காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கின்றன. வேதப்பகுதிகளை ஆராய்ந்து படிக்காது மேலெழுந்தவாரியாக நுனிப்புல் மேய்ந்துவிட்டு வெறும் தியானச் செய்திகளையும், வாக்குத்தத்த வசனங்களையும் மட்டும் வாரித்தந்து கொண்டிருக்கும் போதகர்களை இவை வளர்த்து வாழ்வளித்துக் கொண்டிருக்கின்றன. இவர்களை போதகர்களாக நம்பியிருக்கும் ஆத்துமாக்களும் வேத அறிவில்லாது, ஆத்தும பெலமில்லாது, விசுவாச நிச்சயமும் இல்லாது காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கின்றன. இது இன்றைய தமிழினத்தைப் பிடித்துள்ள பெரும் வியாதி.

## 7. இது ஆத்துமாக்களில் அக்கறை இல்லாதவர்களுக்குரிய பணியல்ல

போதக ஊழியத்துக்கான அடிப்படைத் தகுதியே ஆத்துமாக்களின் மீது இருக்க வேண்டிய ஆத்மீகக் கரிசனையும், அன்பும் தான். இன்றைக்கு ஆத்துமாக்களின் மீது எந்தவிதமான அக்கறையும் காட்டாதவர்கள் போதகர்களாக இருந்து வருகிறார்கள். ரிமோட் கண்ட்ரோல் மூலம் போதக ஊழியம் செய்துவிட முடியாது. மந்தை மேய்க்கிறவன் ஆடுகளுக்கு பக்கத்தில் இருப்பான்; அவற்றின் தேவைகளை அறிந்திருப்பான்; தேவையான நேரங்களிலெல்லாம் தண்ணீரையும், மேய்வதற்கான வசதிகளையும் செய்து கொடுப்பான். அவற்றைச் செய்யாதவன்

மேய்ப்பனே அல்ல. ஆத்துமாக்களை நெருங்காமல் தூரத்தில் இருந்து மட்டும் பார்த்து, ஓய்வுநாளில் மட்டும் பிரசங்கத்தை செய்துவிட்டுப் போகிறவர்கள் போதகர்களே அல்ல. அதைச் செய்வதற்கு நேரமில்லை என்று சொல்லுகிற மனிதன் போதக ஊழியத்தில் இருக்க ஒருபோதும் தகுதியில்லாதவன்.

உண்மையில், போதக ஊழியத்தைப் பற்றி அதிகம் தெரியாத வர்களாக தமிழினத்தில் அநேகர் இருந்து வருகிறார்கள். பிரசங்கம் செய்வதும், யாருக்காவது உடம்பு சரியில்லாவிட்டால் வீடுகளுக்குப் போய் ஜெபித்துவிட்டு வருவதையும் மட்டுமே போதக ஊழியமாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். கலாச்சாரம், பண்பாடு என்று சாக்குப்போக்குச் சொல்லி சபையாரைப் பற்றிய எந்த விஷயத்திலும் அக்கறை காட்டாதிருக்கிறார்கள். சபைக்கு ஒருவர் வருவது குறைந்தால் மட்டும் ஏன் என்று கேட்டுவிட்டு அத்தோடு நிறுத்திக்கொள்வது அநேகருடைய வழக்கமாக இருக்கிறது. சபை ஆத்துமாக்களின் வாழ்க்கை பற்றிய விபரங்களைத் தெரிந்துகொள்ளாது, அவர்களுடைய வாழ்க்கையில் அக்கறை காட்டாமல் இருக்கிறவன் போதகனே அல்ல. சபையின் விசுவாசிகளே ஒருவருக்கொருவர் அந்நியோன்னியமாக இருந்து, ஒருவர் வாழ்க்கையில் மற்றவர் அக்கறை காட்டி, ஒருவர் பிரச்சனைக்காக மற்றவர் ஜெபித்து, ஒருவரையொருவர் தாங்கவேண்டுமென்று வேதம் போதிக்குமானால், அதைவிட எந்தளவுக்கு அதிகமாக ஒரு போதகன் தன் சபை மக்களின் வாழ்க்கையில் அக்கறை காட்ட வேண்டும்? அதைச் செய்யாதவர்கள் போதக ஊழியத்திற்கே தகுதியற்றவர்கள்.

ஆத்மீகப் பிரச்சனைகளையும், வாழ்க்கைப் பிரச்சனைகளையும் வெளியே சொல்ல முடியாமல், அவற்றைத் தீர்த்துக்கொள்ளவும் வழிதெரியாமல், "இதைப் போதகரிடம் சொல்ல முடியாது ஐயா, அவருக்கு எங்களைப் பார்க்கவே நேரமில்லை" அப்படியே சொன்னாலும் "எங்களைத் தவறாக நினைத்து விடுவார்" என்று சொல்லி மீள வழி தெரியாது கண்ணீரோடு காலத்தைக் கழித்து வரும் ஆத்துமாக்கள் இன்று சபை சபையாக இருக்கின்றன. "போதகருக்கு எங்களைக் கண்டாலே பிடிக்காது" என்று சொல்லி மனதுக்குள் குமைந்து தங்களுடைய பிரச்சனைகளை எவரோடும் பகிர்ந்துகொள்ள வழிதெரியாது தவிக்கும் வாலிபர்கள் சபை சபையாக

இருக்கிறார்கள். ஆடுகளின் தேவைகளையே அறிந்திராது 'போதகன்' என்ற போர்வைக்குள் ஒளிந்துகொண்டு ஆடுகளை உதாசீனப்படுத்தும் மனிதர்கள் போதகர்களல்ல. மெய்ப் போதகன் ஆத்துமாக்களுக்கு அருகில் இருப்பான்; அவர்களின் தேவைகளை அறிந்திருப்பான்; அவர்களுக்கு நல்ல ஆலோசனைகளைத் தந்து, அவர்களுடைய ஆத்தும விருத்திக்கு பெருந்துணையாக இருப்பான். பெரியவர்கள், வாலிபர்கள் என்ற பேதத்தை எல்லாம் உதறிவிட்டு, பாரம்பரியம், கலாச்சாரம் என்ற சாக்கடைகளைத் தூர எறிந்துவிட்டு, ஆத்துமாக்களின் ஆத்தும விருத்தி ஒன்றையே இலட்சியமாகக் கொண்டு பணிபுரிகிறவனே போதக ஊழியத்தின் புனிதத்தைக் காக்கிறவன்.

# பிரசங்கப் பஞ்சம்

திருச்சபைகளில் இன்று பிரசங்கப் பஞ்சம் நிலவுகிறது என்பதை சிந்திக்கக்கூடிய கிறிஸ்தவர்கள் உணர்வார்கள். நம்மை இப்பஞ்சம் வாட்டிக்கொண்டிருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தி லிருந்தே இறையியல் பஞ்சம் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் நிலவி வந்துள்ளது. சத்தான இறைபோதனை எதுவும் இல்லாமல், சொந்த அனுபவங்களை மட்டும் அள்ளித் தெளிக்கும் சுவிசேஷப் பிரசங்கங்கள் என்ற பெயரில் கொடுக்கப்படும் பேச்சுக்களையே ஆத்துமாக்கள் கேட்டு வாழ வேண்டிய நிலை இருந்துவந்துள்ளது. வேதபோதனைகளைப் பெற்று வளர்ந்திராத நம்மவர்கள் உணர்ச்சியூட்டும் இந்தப் பேச்சுகளையே பிரசங்கமாகக் கேட்டு வளர்ந்திருக்கிறார்கள். சொந்த ஊழியங்கள் என்ற பெயரில் பெருமளவில் தனி நபர்களின் சுவிசேஷ வியாபார ஊழியங்கள் பெருகியபின் கொஞ்ச நஞ்சமிருந்த பிரசங்கமும் இல்லாமல் போய் இன்று பிரசங்கப் பஞ்சத்தால் தமிழ் சமுதாயம் வாடிக் கொண்டிருக் கின்றது. இதை அநேகர் உணருகிறதாக இல்லை.

நமது மக்களின் கலாச்சார சமுதாயப் பின்னணி இப் பிரசங்கப் பஞ்சம் நீங்காமல் இருப்பதற்கு பெருங்காரணமாக இருக்கின்றன. தமிழை மூன்று பிரிவாக இயல், இசை, நாடகம் என்று பிரிப்பார்கள். அதில் இசையும், நாடகமுமே நமது சமுதாயத்தில் அதிகம் வளர்ந்து இயற்தமிழுக்கு இடமே இல்லாமல் போயிருக்கிறது. இதை இன்று நம்மக்களைப் பிடித்திருக்கும் சினிமா மோகத்திலிருந்தும், மெல்லிசையின் மேலிருக்கும் நாட்டத்திலிருந்தும் புரிந்துகொள்ளலாம். திருமண வீடு, மரண ஊர்வலம், பிறந்த நாள் நிகழ்ச்சி, சுவிசேஷக் கூட்டம் என்று எங்கு பார்த்தாலும் இசைக்கும், காட்சிக்கும்

தான் முதலிடம். இதற்கும் கிறிஸ்தவ பிரசங்கப் பஞ்சத்திற்கும் என்ன தொடர்பு? என்று நீங்கள் கேட்கலாம். தமிழ் கிறிஸ்தவர்கள் இன்று இசையையும், கூத்தையும், நாடகத்தையும் வில்லுப்பாட்டையும் மட்டுமே ஆவலோடு நாடிப்போவதற்கு இப்பின்னணியே காரணம், இசையும், கூத்தும், நாடகமும் மனிதனை சிந்திக்க வைக்காது. அவனது உணர்ச்சிகளையே அதிகளவில் தூண்டும். உணர்ச்சிப்பிழம்பான நம்மக்கள் இவற்றை அதிகம் நாடிப்போவதில் ஆச்சரியமில்லை. நமது மக்களுடைய கலாச்சார சமுதாயப் பின்னணி அப்படி. அதனால்தான் உணர்ச்சிகளுக்கு மட்டும் தீனிபோடும் இசைக்கு முதலிடம் தரும் கூட்டங்களுக்கும், சுகமளிக்கும் கூத்துக்கள் நடக்கும் கூட்டங்களுக்கும் நம் மக்கள் பெருந் தொகையில் போய்க்கொண்டிருக்கிறார்கள். இக்கூட்டங்களில், சிந்திக்கவைக்கக்கூடிய சத்தான வேத பிரசங்கங்களுக்கு எப்போதுமே இடமிருக்காது.

இந்நிலைமை மாற வேண்டும், மேலைத்தேய சமுதாய மக்களைப் போல முதலில் நாம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு சிந்திக்கப் பழக வேண்டும். உணர்ச்சி களுக்கு மட்டும் இடம் கொடுப்பதை அடியோடு நிறுத்த வேண்டும். வாசிக்காதவன் சிந்திக்க மாட்டான். சிந்திக்க முடியாதவர்களுக்கு பிரசங்கம் தேவையாயிருக்காது. வேதத்தையும் நல்ல நூல்களையும் வாசித்து சிந்தித்து ஆராய்ந்து பார்க்கின்ற ஆத்துமாக்கள் நம்மத்தியில் பெருகும்வரை பிரசங்கப் பஞ்சம் இந்த சமுதாயத்தில் தொடர்ந்து இருக்கத் தான் போகின்றது. நம்மக்கள் மாறுவார்களா? கர்த்தர்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்.

# ஏன் பிரசங்கம்?

ஏன் பிரசங்கம்? என்ற கேள்வி உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம். இன்று பிரசங்கத்தில் அநேகருக்கு ஆர்வம் குன்றியிருக்கிறது. கிறிஸ்தவ சபைகளில் பிரசங்கத்திற்கு அதிக மதிப்புக்கொடுத்து ஆர்வத்துடன் உழைத்து பிரசங்கத்தைத் தயாரிக்கும் போதகர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். இன்று பிரசங்கிகள் பிரசங்கிப்பதைவிட ஜெபக் கூட்டங்களை யும், சுகமளிப்புக் கூட்டங்களையும், மனித உணர்வுகளுக்குத் தீனிபோடும் இன்னிசைக் கச்சேரிகளையுமே அதிகமாக நடத்தி வருகிறார்கள். அத்தோடு பிரசங்கம் என்ற பெயரில் உளறிக்கொட்டிக் கொண்டிருப்பவர்களே தமிழ் சபைகளில் அதிகம். இதனால் பிரசங்கத்தைக் கேட்டு வளர வேண்டும் என்ற ஆர்வத்தோடு பிரசங்கத்தைக் கேட்கத்துடிக்கும் ஆத்துமாக்களுடைய தொகையும் குறைந்து வருகின்றது. இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் முக்கியமாக பிரசங்கத்தைப்பற்றிய வேதபூர்வமான சிந்தனைகள் இல்லாததும், அதன் காரணமாக ஏற்பட்டுள்ள பிரசங்கத்தைக் குறித்த அவநம்பிக்கையுமே முக்கிய காரணங்கள் என்று கூற வேண்டும். அநேக காலத்துக்கு முன்பு வாழ்ந்த ஒரு பழம் போதகர் வேதபூர்வமான பிரசங்கிகளின் அவசியத்தைப் பற்றிப் பேசும்போது, “பரலோகத்தின் அனுபவத்தைத் தன்னோடு பிரசங்க மேடைக்குக் கொண்டுவந்து, இன்னொரு உலகத்தின் எல்லைக் கோட்டுக்குள் இருந்து பேசுகிறவனைப் போன்ற தேவ மனிதர்களே இன்று நமக்குத் தேவை” என்று கூறியிருக்கிறார். ஆத்துமாக்களின் இருதயத்தைப் பிளந்து அவர்களைக் கர்த்தரின் சந்நிதானத்திற்குக் கொண்டுவரக்கூடிய வல்லமை வாய்ந்த வேதபூர்வமான பிரசங்கத்தைப்பற்றி இனி பார்ப்போம்.

## பிரசங்கம் கர்த்தரால் தெரிவுசெய்யப்பட்ட தெய்வீக வழிமுறை (Divine method)

பிரசங்கம் கர்த்தரால் தெரிவு செய்யப்பட்ட தெய்வீக வழி முறையாகும். அதனால்தான் வேறு எதையும்விட பிரசங்கத்திற்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இதை வேதமே தெளிவாக விளக்குகிறது. பழைய ஏற்பாட்டில் ஏனோக்கைப் பாருங்கள் (யூதா 1:14). அவர் கர்த்தருடைய செய்தியை முன்னறிவித்தார், அதாவது தீர்க்கதரிசனமாக பிரசங்கித்தார். இதேபோல்தான் நோவாவும் நீதியின் பிரசங்கியாக இருந்தார் (2 பே. 2:5). ஆபிரகாமை நாம் மறக்க முடியுமா? கர்த்தர் தன்னுடைய மக்களை வழிநடத்தும்படியாக அவரைத் தெரிந்து கொண்டார் (ஆதி. 18:19). ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கித்து ஆத்துமாக்களை வழிநடத்தினார். மோசே, நாம் பார்க்கும் அடுத்த பிரசங்கி. மோசேயின் பிரசங்கங்களை நாம் பழைய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். மோசே, கர்த்தரிடமிருந்து நீதிச் சட்டங்களைப் பெற்று இஸ்ரவேலர் மத்தியில் பிரசங்கித்தார். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் அனைவரும் பிரசங்கிகளாகவே இருந்திருக்கிறார்கள். ஏசாயா, எரேமியா, எசேக்கியல், யோனா, ஆமோஸ், ஆகாய், மல்கியா எல்லோருமே கர்த்தருடைய செய்தியை அவருடைய மக்கள் மத்தியிலும், ஏனைய நாடுகளிலும் பிரசங்கித்திருக்கிறார்கள். கர்த்தருடைய சித்தத்தை பிரசங்கத்தின் மூலமாகவே தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலருக்கு அறிவித்திருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டிலும் நாம் இதைத்தான் பார்க்கிறோம். மனந்திரும்பி ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று யோவான்ஸ்நானன் தன் வாழ்நாள் முழுவதும் பிரசங்கித்தார். யோவானை ஒரு பிரசங்கியாகவே புதிய ஏற்பாட்டில் பார்க்கிறோம். இயேசு கிறிஸ்து தன்னுடைய பிதாவின் கட்டளைகளை இவ்வுலகில் நிறைவேற்ற வந்தபோது பிரசங்கிகளிலெல்லாம் சிறந்த பிரசங்கியாகவே வந்தார். போதிப்பதும், பிரசங்கிப்பதும் அவருடைய வாழ்நாளில் முக்கிய பணிகளாக இருந்தன. பெந்தகொஸ்தே கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களையே பெரிதுபடுத்துவார்கள். அவர்கள் கிறிஸ்து தன் பிரசங்கத்தின்

மூலமாகவும், போதனையின் மூலமாகவும் மட்டுமே ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பை அளித்தார் என்ற உண்மையை வேதத்தில் பார்க்க மறுக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள், அந்த மனுஷன் பேசுகிறதுபோல் ஒருவரும் ஒருக்காலும் பேசினதில்லை (பிரசங்கித்ததில்லை) என்றார்கள் (யோ. 7:46).

இயேசு கிறிஸ்து பயிற்சியளித்து, சபையை நிறுவுவதற்காக அனுப்பிய அப்போஸ்தலர்களும் சிறந்த பிரசங்கிகளாகவே இருந்தனர். இயேசு, அப்போஸ்தலர்களை பிரசங்கம் பண்ணும் படியாக அனுப்பினார் என்று மாற்கு 3:14 சொல்லுகிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:14 வசனத்தில், பேதுரு தன்னுடைய குரலை உயர்த்திப் பிரசங்கித்தான் என்று வாசிக்கிறோம். பரிசுத்த ஆவியின் வல்லமையுடன் அவன் பிரசங்கித்தபோது மூவாயிரம் பேர் அன்று கர்த்தரிடமிருந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டார்கள் என்று அப்போஸ் தலருடைய நடபடிகள் சொல்லுகிறது. அப்போஸ்தலர்களுடைய பிரசங்கத்தால் சபை தொடர்ந்து வளர்ச்சியடைந்தது என்று அப்போஸ்தலருடைய நடபடிகள் 6:7 வசனத்தில் வாசிக்கிறோம். பவுல் எபேசு சபை மூப்பர்களுக்கு பிரியாவிடை அளித்துப் பேசிய பிரசங்கத்தில் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் பிரசங்கிப்பதிலும், போதிப்பதிலுமே செலவழித்திருப்பதாகக் கூறியிருப்பதைப் பார்க்கிறோம் (அப். 20:18-21).

திருச்சபையின் வரலாற்றைப் பார்த்தாலும் பிரசங்கம் செய்வதே திருச்சபைத் தலைவர்களின் முதன்மையான பணியாக இருந்திருக்கின்றது. வல்லமையான பிரசங்கத்தின் மூலமாகவே திருச்சபையிலும், நாடுகளிலும் எழுப்புதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கு உதாரணமாக வேல்ஸ் நாட்டில் டேனியல் ரோலன்ட் (Daniel Rowland), ஹொவல் ஹெரிஸ் (Howel Harris), வில்லியம் வில்லியம்ஸ் (Wlliam Williams), இங்கிலாந்தில் ஜோர்ஜ் விட்பீலட் (George Whitefield), அமெரிக்காவில் ஜொனத்தன் எட்வர்ட்ஸ் (Jonathan Edwards) ஆகியோரின் பிரசங்க ஊழியங்களைக் குறிப்பிடலாம். சபைகள் வளர்ச்சியடைந்து சீர்திருத்தவாதம் தலைதூக்கியிருந்த காலங்களிலெல்லாம் பிரசங்கம் உன்னத நிலையில் இருந்திருக் கின்றது. உலகின் தலைசிறந்த சபைத் தலைவர்களாக இருந்துள்ள மார்டின் லூதர் (Martin Luther), ஜோண் கல்வின் (John Calvin),

சார்ள்ஸ் ஸ்பர்ஜன் (Charles Spurgeon), மார்டின் லொயிட் ஜோன்ஸ் (Martin Lloyd Jones) போன்றோரெல்லாம் பிரசங்கத் திற்கே தங்களுடைய சபை ஊழியங்களில் அதி உயர்ந்த இடத்தைக் கொடுத்துவந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே சிறந்த பிரசங்கிகள் என்பதை உலகம் அறிந்திருக்கின்றது. பிரசங்கத்திற்கு மதிப்பிருக்காத காலப் பகுதிகளிலெல்லாம் திருச்சபை வளர்ச்சியடையவில்லை, நல்ல பிரசங்கிகளையும் நாடறிந்திருக்கவில்லை.

திருச்சபையை எழுப்பவும், அதை வளர்க்கவும் கர்த்தர் பிரசங்கத்திற்கே அதிஉன்னத இடத்தை அளித்துள்ளார் என்பதை வேதமும், திருச்சபை வரலாறும் தெளிவாக விளக்குகின்றன. கர்த்தரின் தெய்வீக வழிமுறையான பிரசங்கம் மறுபடியும் உயர்நிலையை அடையும்போதே இன்றைய கிறிஸ்தவம் மறுமலர்ச்சியடையும்.

## பிரசங்கம் மட்டுமே கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்தப் பயன்படும் சிறந்த செய்திப் பரிமாற்றல் முறை (Communication Channel)

இந்த உண்மையை மிகத் தெளிவாக விளக்கும் வேத பகுதி ரோமர் 10:13-15. இந்த வசனங்களில் பவுல் பிரசங்கத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்குகிறார். கர்த்தரை ஆத்துமாக்கள் தொழுதுகொள்ள வேண்டுமானால் அவர்கள் பிரசங்கத்தைக் கேட்டே கர்த்தரை விசுவாசிக்க வேண்டும் என்ற உண்மையை இப்பகுதி ஆணித்தரமாக விளக்குகிறது. பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படு வார்கள்? என்று பவுல் கேட்கிறார். அப்படிப் பிரசங்கிப்பதற்கு பிரசங்கிகள் அனுப்பப்பட வேண்டும் என்றும் பவுல் கூறு கிறார். ஆகவே நற்செய்தியை ஆத்துமாக்கள் கேட்பதற்கு கர்த்தர் ஏற்படுத்தி இருக்கும் செய்திப் பரிமாற்றல் வழிமுறைதான் பிரசங்கம் என்பதை இந்த வசனங்கள் விளக்குகின்றன. வேறு முறைகளைப் பயன்படுத்தக் கூடாது என்று வேதம் சொல்லவில்லையே என்று சிலர் இன்று வாதாடுகிறார்கள். சுவிசேஷத்தை விளக்குவதற்கு கர்த்தரே ஒரு செய்திப் பரிமாற்ற வழிமுறையைத் தெரிவு செய்து அதை வேதத்தின் மூலம் விளக்கியிருக்கிறபோது வேறு வழிகளில் என்ன தவறு? என்று

கேட்கிறவர்களின் சிந்தனையில் நிச்சயம் கோளாறுதான். வேறு வழிகள் சிறப்பான வழிகளாக இருந்திருந்தால் கர்த்தர் பிரசங்கத்தை மட்டும் தெரிவு செய்து குறிப்பிட்டு பவுல் மூலம் பேசி இருக்கமாட்டார். கர்த்தரைப் பொறுத்தவரையில் பிரசங்கமே சுவிசேஷத்தை விளக்குவதற்கான சிறப்பான வழிமுறை. இப்பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள பிரசங்கம் என்ற வார்த்தை (kerusso), அதிகாரத்துடன் தேவ செய்தியை தேவ மனிதன் பிரசங்கிப்பதை விளக்குவதாக இருக்கிறது. ஏனைய எல்லா செய்திப் பரிமாற்றல் முறைகளில் இருந்தும் பிரசங்கத்தைப் பிரித்துக்காட்ட கிரேக்க மொழியில் இருந்து ஒரு சிறப்பான வார்த்தையை வேதம் இங்கு பயன்படுத்தியுள்ளது.

பைத்தியமாகத் தோன்றுகின்ற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று என்று 1 கொரிந்தியர் 1:21 வசனத்தில் பவுல் கூறுகிறார். 17 ஆம் வசனத்தில், "சுவிசேஷத்தை பிரசங்கிக்கவே (கர்த்தர்) என்னை அனுப்பினார் . . . சாதூரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே என்னை அனுப்பினார்" என்கிறார் பவுல். 23 ஆம் வசனத்தில், "நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிக்கிறோம்" என்று சொல்லுகிறார். இங்கே பிரசங்கம் என்ற வார்த்தையே எல்லா இடங்களிலும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. சுவிசேஷ ஊழியத்திற்கு வேறு சாதனங்கள் அவசியமாக இருக்குமானால் பிரசங்கத்தைக் குறித்து வேதம் இந்தவகையில் பேசாது. இதே பவுல், போதகனான தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில், "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு" என்று சொல்லுகிறார் (2 தீமோ. 4:2). இந்தளவுக்கு சுவிசேஷம் சொல்லவும், போதிக்கவும் கர்த்தர் தெரிந்து கொண்டிருக்கிற செய்திப் பரிமாற்றல் முறையாக பிரசங்கம் இருக்கிறபோது அதை உதாசீனம் செய்துவிட்டு வேறு முறைகளைப் பயன்படுத்துவது சபை வளர்ச்சிக்கு உதவாது.

மனிதனுடைய இருதயம் எதைக் கேட்கிறதோ அதைக் கொடுப்பதையே அடிப்படையாகக் கொண்டு ஊழியம் செய்து வருகிறவர்கள், இன்று பிரசங்கத்தை அகற்றிவிட்டு, இசை, வில்லுப்பாட்டு, நாடகம், நடனம், சினிமாப் படம் என்றெல்லாம் சமுதாயத்தில் காணப்படும் வேறு செய்திப்

பரிமாற்றல் முறைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஒரு மணி நேரத்துக்கு அமைதியாக இருந்து யாரால் பிரசங்கத்தைக் கேட்க முடியும்? மனிதனால் அவ்வளவு நேரம் பொறுமையாக இருக்க முடியாது என்று இவர்கள் அங்கலாய்க்கிறார்கள். அதிகாரத்தோடு பேசப்படும் பேச்செல்லாம் இன்றைய சமுதாயத்துக்கு ஒத்துப்போகாது, ஆத்துமாக்களுடைய இருதயத்தை அமைதிப்படுத்தும் வழிமுறைகளே பயன்தரும் என்கிறார்கள். ஆகமொத்தத்தில், மனிதனுடைய இருதயத்தை வேத பிரசங்கத்தின் மூலம் தொட்டு, அவனை சிந்திக்க வைப்பதில் இவர்களுக்கு அக்கறையில்லை. அவன் சந்தோஷப் ப்டும்படி எதையாவது செய்வதை மட்டுமே இவர்கள் நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இப்படிச் சிந்திப்பவர்கள் மனிதநலவாதிகள் (Humanists). இவர்களுக்கு கர்த்தருடைய வழிமுறைகளில் நம்பிக்கையில்லை. மனிதனுக்கு எது பிடிக் கிறது? என்பதை வைத்தே இவர்களுடைய ஊழியங்கள் அமைகின்றன. இதிலிருந்து பிரசங்கத்திற்கு இன்று முக்கியத் துவம் இல்லாமல் போயிருப்பதற்கான காரணத்தை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறதல்லவா?

## வேத வசனங்களை விளக்கிப் போதிப்பதற்கு பிரசங்கத்தைப் போல வேறு எதுவும் பயன்படாது

கர்த்தர் தன்னுடைய சித்தத்தை மனிதனுக்கு வெளிப்படுத்த பிரசங்கத்தைத் தெரிவு செய்ததற்கு தத்துவ ரீதியான (Logical) முக்கியமான காரணமொன்று உண்டு. அந்தக் காரணத்தை நாம் இப்போது விளக்கமாக பார்ப்பது அவசியம். கர்த்தர் தம்முடைய சித்தத்தை நாம் அறிந்துகொள்ளும்படியாக எழுத்தில் விளக்கமாகக் கொடுத்திருக்கிறார். எழுத்தில் இருக்கும் வேதத்தை பரிசுத்த ஆவியின் துணையோடு மட்டுமே எவரும் விளங்கிக்கொள்ள முடியும். எல்லா விசுவாசிகளும் வேதத்தைத் தங்களுடைய சொந்த மொழியில் வாசித்து அதன் பொதுவான செய்தியை விளங்கிக்கொள்ள முடிந்தாலும், அது போதிக்கும் இறையியல் பற்றிய மேலான அறிவைப் பெற்றுக்கொள்ள வேதத்தை ஆராய்ந்து படித்து, அதில் அதிக அறிவைப் பெற்றுக்கொண்டிருப்பவர்களின் உதவியையும் நாட வேண்டியிருக்கிறது. அதற்காகவே கர்த்தர் திருச்சபையில் போதகர்களை நியமித்திருக்கிறார். போதகர்கள் வேதத்தை

நல்ல முறையில் படித்து "ஜாக்கிரதையாய்" பிரசங்கம்பண்ண வேண்டிய பொறுப்பைக் கொண்டிருக்கிறார்கள் (2 தீமோ. 4:2). வேதத்தின் மூலமொழிகளான எபிரெயம், கிரேக்கம் ஆகிய மொழிகளைப் பயன்படுத்தி வேத வசனங்களை நித்தமும் ஆராய்ந்து அதில் காணப்படும் பல்வேறு இறையியல் போதனைகளையும் தகுந்த முறையில், தங்களுடைய சொந்த மொழியில் ஆத்துமாக்களுக்குப் புரியும்படியாக விளக்கிச் சொல்ல போதகர்களுக்கு உதவக்கூடிய ஒரே முறை, தகுந்த முறை பிரசங்கம் மட்டுமே. வேறு எதனாலும் அதைச் செய்ய முடியாது.

வேதத்தின் ஒவ்வொரு நூலையும் வசனப்பிரகாரமாக வாராவாரம் சபையில் விளக்கிச் சொல்லி, கர்த்தர் ஆத்து மாக்களிடம் எதை எதிர்பார்க்கிறார் என்று அறிவிப்பது போதகனின் கடமை. கர்த்தரின் சித்தத்தை மக்கள் அறிந்து கொள்ள வேண்டுமானால் முதலில் அவ்வசனம் இலக்கண, இலக்கிய, வரலாற்றுப்பிரகாரமாக விளக்கப்படுத்தப்பட வேண்டும். இதைப் பிரசங்கத்தைத் தவிர வேறு எந்த கருவி யின் மூலமாகவும் செய்ய முடியாது. நாடகம், இசை, பாட்டு, கூத்து, சினிமா எதுவுமே இதற்கு உதவாது. லூயிஸ் டெப்னி (Lewis Dabney) என்னும் இறையியல் அறிஞர், "இசை, நாடகம் போன்றவை நமக்கு சுவையூட்டுவதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. நம்முடைய ஆவியின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்புவதே அவற்றின் உடனடி இலட்சியமாக இருக்கின்றது. ஆனால், நடைமுறை வாழ்க்கையில் ஆத்துமாக்கள் பலனுள்ள செயல்களைச் செய்யும்படிச் செய்வதே பிரசங்கத்தின் உடனடி நோக்கமாக இருக்கின்றது" என்று சொல்லி யிருக்கிறார். இதிலிருந்து பிரசங்கத்திற்கும் ஏனைய செய்திப் பரிமாற்றல் முறைகளுக்குமுள்ள தொடர்பை விளங்கிக்கொள்ளலாம். வசனத்தை ஆராய்ந்து, அது போதிக்கும் உண்மையைத் தெளிவாக கேட்பவர்களுக்கு உள்ளதை உள்ளதுபோல விளக்கிப் போதிக்க கர்த்தர் பிரசங்கத்தைத் தெரிந்தெடுத்திருக்கிறார். "வேத வசனங்களை ஆராய்ந்து இலக்கண பூர்வமாக விளக்கிப் பிரசங்கிப்பதை பிரசங்கிகளிடம் இன்று காண முடியாதிருக்கின்றது. அநேக இறையியல் கல்லூரிகள் மூல மொழிகளைக் கற்றுக்கொடுப்பதை விட்டுவிட்டன. மூல மொழிகளில் வேத வசனங்கள் எந்த

முறையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தொடர்ந்து ஆராய்ந்து படிக்கும் போதகர்கள் இன்று குறைவு. இது மிகவும் கொடுமை!" என்று கூறும் போதகர் அல்பர்ட என். மார்டின் (Albert N. Martin), மார்டின் லூதர் (Martin Luther) சொன்னதை நினைவுபடுத்துகிறார், "மொழிகளை ஆராய்ந்து படிப்பதைத் தொடருங்கள், ஆவியின் பட்டயமான வேதம் இலக்கணமாகிய உறையிலேயே தங்கியிருக்கின்றது."

இலக்கணம், வரலாறு, இலக்கியம் ஆகியவற்றின் அடிப்படையில் வேதத்தை ஆராய்ந்து விளக்கிப் போதிக்கும் கலையை இறையியல் கல்லூரிகள் இறையியல் மாணவர்களுக்கு இன்று கற்றுக்கொடுப்பதில்லை. இன்று, இறையியல் கல்லூரிகளுக்குப் போய் வருபவர்கள் நல்ல பிரசங்கிகளாக இல்லாமலிருப்பதற்கு இது ஒரு முக்கிய காரணம். வேத விளக்க விதிகளின் அடிப்படையில் வேத நூல்கள் ஒவ்வொன்றும் இக்கல்லூரிகளில் ஆராய்ந்து விளக்கப்படுத்தப்படுவதில்லை. இக்கல்லூரிகளில் இருந்து வெளிவந்து போதகர்களாக சபைகளில் இருப்பவர்களுக்கு வேத நூல்களுக்கு தகுந்த விளக்கம் கொடுக்க முடிவதில்லை. பிரசங்கம் செய்வதற்கு வேத ஞானம் தேவை. அது இல்லாததால் போதகர்கள் இன்று வேறு வழிமுறைகளை நாடி ஆத்துமாக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பெஞ்சமின் வோர்பீல்டின் (Benjamin Warfield) பின்வரும் வார்த்தைகள் ஒவ்வொரு போதகனின் படிப்பறையிலும் பொறித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும், "இன்று நம்முடைய பிரசங்க மேடைகளில் இருக்க வேண்டியவர்கள் பிரசங்கிகளாக உருவாகியுள்ள அறிஞர்களான விசுவாசிகளே."

வேத வசனங்களை விசுவாசத்துடன் பிரசங்கிப்பதற்கு போதகர்கள் இறையியல் வல்லுனர்களாக இருக்க வேண்டும். அவர்கள் முறைப்படுத்தப்பட்ட இறையியலில் (Systematic Theology) தேர்ந்த அறிவைக் கொண்டிருக்க வேண்டும். வேதத்தைப் பற்றிய பொதுவான அறிவை மட்டும் கொண்டிருந்தால் போதாது. போதகர்கள் கொடுக்கும் ஒவ்வொரு பிரசங்கமும் வேத போதனைகள் அனைத்தையும் அரவணைத்து வேதபூர்வமான இறையியல் (Biblical Theology), முறைப்படுத்தப்பட்ட இறையியல் (Systematic Theology), வரலாற்று இறையியல்

(Historical Theology) ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்து அவற்றோடு ஒத்துப்போவதாக இருக்க வேண்டும். தமிழ் கிறிஸ்தவ சபைகள் பரிசுத்த ஆவியின் வல்லமையோடு வரும் பிரசங்கப் பஞ்சத்தால் இன்று வாடி நிற்கின்றன. இன்று நம் மத்தியில் இருக்கும் பிரசங்கப் பஞ்சத்திற்கு வேதபூர்வமான வியாக்கியானப் பிரசங்கம் (Biblical Expository Preaching) செய்யக்கூடிய, உடலை வருத்தி பிரசங்கங்களைத் தயாரித்துப் பிரசங்கிக்கும் நல்ல பிரசங்கிகளான போதகர்கள் திருச்சபை களில் இல்லாமலிருப்பதே முக்கிய காரணம்.

### போதக ஊழியத்துக்கு பிரசங்கத்தைப்போல உதவக்கூடியது வேறு எதுவுமேயில்லை

ஆத்துமாக்களை பரிசுத்தவான்களாக தயார் செய்வது ஒவ்வொரு போதகனுடைய கடமை (எபே. 4:12). சபை பக்தி விருத்தி அடைவதற்கு போதகன் உழைக்க வேண்டியவனாக இருக்கிறான். அதற்காகவே போதகர்களை (மேய்ப்பர்களை) கர்த்தர் சபைக்குக் கொடுத்திருக்கிறார் (எபே. 4:13). போதகன் என்ற வார்த்தைக்குப் “போதிக்கிறவன்” என்று பொருள். மேய்ப்பனின் முழுநேர ஊழியமே போதிப்பதுதான். போதக சமர்த்தனாக இருந்து வேதத்தைப் போதிப்பதன் மூலம்தான் போதகன் ஆத்துமாக்களைப் பரிசுத்தவான்களாக வளரும்படிச் செய்கிறான். இந்த போதக ஊழியத்தைப் போதகன் பிரசங்கிப்பதன் மூலம் சபையில் நடத்திச் செல்கிறான். ஓய்வுநாளிலும், வேதப் பாடங்கள் நடக்கும் நாட்களிலும், இறையியல் போதனைகளை விசேஷமாக தன் மக்களுக்கு அளிக்கும் காலங்களிலும், கன்வென்ஷன்களிலும், பிரசங் கத்தின் மூலமாக போதகன் ஆத்துமாக்கள் பக்திவிருத்தி அடைய உழைக்கிறான். பிரசங்கத்தை நிராகரித்துவிட்டு அவன் வேறுவழிகளை நாடினால் ஆத்துமாக்களின் பக்திவிருத்திக்கு அவனால் ஒன்றுமே செய்ய முடியாது. ஆத்துமாக்களுக்குப் பிடித்தமான எத்தனையோ வழிகள் இருக்கின்றன. ஆனால், அந்த வழிகளின் மூலம் ஒரு நல்ல போதகனால் போதிக்க முடியாது. அவனுக்கு உதவக்கூடிய கர்த்தரளித்திருக்கும் நல்ல வல்லமையுள்ள கருவி பிரசங்கம் மட்டுமே.

போதக ஊழியத்துக்கு பிரசங்கம் மட்டுமே உதவக்கூடிய கருவியாக இருப்பதால்தான் போதகர்கள் படிப்பதில்

நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கிறது. தொடர்ந்து படித்துப் பிரசங்கிக்காத மனிதனால் போதக ஊழியத்தை விசுவாசத் தோடு செய்ய முடியாது. வேதத்தை மட்டுமல்லாமல் அவன் சகலவிதமான நல்ல ஆத்மீக விருத்தி தரும் நூல்களையும் வாசிப்பது அவசியம். வாசிக்கும் கலை இன்று தமிழ் கிறிஸ்தவர்களிடமும், போதகர்களிடமும் இல்லாமலிருக்கிறது. இந்தப் பஞ்சமும் போக வேண்டும். தொமஸ் மர்பி (Thomas Murphy) என்ற போதகர் சொல்லுகிறார், "போதகர்களே! படியுங்கள், படியுங்கள், படியுங்கள். படிக்காவிட்டால் நீங்கள் கிறிஸ்துவில் வளர முடியாது, வாழவும் முடியாது. படிப்பதைப் பலர் கைவிட்டுவிட்டதே இன்று நாம் ஊழியத்தில் பார்க்கும் பல தலைவலிகளுக்கும் காரணம். போதக ஊழியத்துக்கு வந்த பல இளைஞர்கள் பின்பு அதில் தொடர்ந்திருக்க முடியாமலும், கர்த்தருடைய ஆசீர்வாதத்தை இழந்து போனதற்கும் காரணமாக இருந்திருப்பது அவர்கள் தொடர்ந்து படிக்காமல் இருந்ததுதான்."

வாசிப்பது போதக ஊழியத்தின் ஒரு பகுதி என்பதை உணர்ந்து போதகர்கள் நல்ல நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் உள்ள நல்ல நூல்களை வாசிப்பதற்காக ஆங்கில அறிவைப் பெற்றுக் கொள்ள முயற்சி எடுப்பது பயன்தரும். வேதத்தில் நல்லறிவு பெற்று, நாம் செய்யும் பிரசங்கம் நல்ல முறையில் அமைவ தற்காக இத்தனையையும் செய்வது அவசியம். வாசிக்காதவர் களின் சிந்தனை, வளர்ச்சி அடைய முடியாது. வாசிக்காதவன் ஒரு குழந்தையின் சிந்தனையைக் கொண்டிருந்து குழந்தைத் தனத்தோடு நடந்துகொள்வான். வாசிக்காதவர்களுக்கு உலக நடப்பும் தெரியாது. ஆகவே, ஆத்துமாக்களின் பிரச்சனைகளை உணர்ந்து, அவற்றில் இருந்து அவர்களை விடுவிக்கும் திறனோடு வேதப்பிரசங்கம் செய்ய போதகர்களுக்கு வாசிப்பு அவசியம். ஆத்துமாக்கள் பக்திவிருத்தி அடைய, வாசித்துப் படித்துத் தயாரித்த போதகப் பிரசங்கங்களே உதவ முடியும். சார்ள்ஸ் ஸ்பர்ஜன் (Charles Spurgeon), 2 தீமோத்தேயு 4:13 வசனத்தைக் விளக்கும்போது பின்வருமாறு சொல்லுகிறார், "படிக்காதவர்களை பவுல் எவ்வளவு தூரம் இந்த வசனத்தின் மூலம் கண்டிக்கிறார் பாருங்கள். பவுல் கர்த்தரிடம் இருந்து நேரடியாக வெளிப்படுத்தலைப்

பெற்றுக்கொண்டவர், இருந்தாலும் பவுல் புத்தகங்களை நாடி ஓடுகிறார். நாற்பது வருடங்களுக்கு மேலாக போதக ஊழியம் செய்திருக்கிறார், இருந்தாலும் இன்னும் புத்தகங்களை நாடி ஓடுகிறார். பவுல் ஆண்டவரை நேரடியாக சந்தித்திருந்தாலும் பவுலுக்கு இன்னும் புத்தகங்கள் வேண்டியிருக்கிறது, நம்மெல் லோரையும்விட அதிக அனுபவங்களை வாழ்க்கையில் பெற் றிருக்கிறார், இருந்தாலும் அவருக்கு இன்னும் புத்தகங்கள் தேவைப்படுகின்றது, புதிய ஏற்பாட்டில் பல நூல்களைப் பவுல் எழுதியிருக்கிறார், இருந்தாலும் இன்னும் புத்தகங்களை நாடி ஓடுகிறார். ஒவ்வொரு பிரசங்கியையும் பார்த்துப் பவுல் சொல்கிறார், வாசிப்புக்கு உங்களை ஒப்புக் கொடுங்கள்."

போதகர்களை வேதம் ஆடு மேய்க்கும் இடையர்களுக்கு ஒப்பிடுகிறது. மேய்ப்பவன் மந்தைகளின் தேவைகளை அறிந் திருப்பான். அவைகளுடைய தேவைகளை சந்திக்கிறவனாக இருப்பான். மந்தைகளின் தேவைகளை சந்திக்கத் தெரியாதவன் மேய்ப்பனாக இருக்க முடியாது. மேய்ப்பன் அக்கறையோடு செய்யும் செயல்களிலேயே மந்தைகளின் வளர்ச்சி தங்கி யிருக்கிறது, அதைப்போலத்தான் சபைப் போதகனும். அவன் ஆத்துமாக்களை அக்கறையோடு வழிநடத்துகிறவனாக இருக்க வேண்டும். ஆத்துமாக்களின் தேவைகளைப் போதகப் பிரசங்கங்களின் மூலம் சந்திக்கிறவனாக இருக்க வேண்டும். அவனுடைய பிரசங்கங்கள் அனைத்தும் வேதபூர்வமாக இருப்பது மட்டுமல்லாமல், ஆத்துமாக்கள் ஆர்வத்தோடு கேட்டுப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய விதத்தில் நல்ல பல இறையியல் போதனைகளை உதாரணங்களுடன் விளக்குவ தாகவும், நடைமுறைக்கு ஏற்றவையாகவும் இருக்க வேண்டும். நம்முடைய பிரசங்கத்தைக் கேட்கும் ஆத்துமாக்களுக்கு பிரசங்கத்தில் எதுவும் இல்லை என்று தெரிந்தால் ஆர்வத்தை இழந்து பிரசங்கம் கேட்பதைக் குறைத்துக் கொள்வார்கள். பிரசங்கத்தைப் பயன்படுத்திக்கொள்ளாவிட்டால் அவர் களால் பக்திவிருத்திக்குரிய வாழ்க்கையை வாழமுடியாது. சத்தான பிரசங்கத்தையும், பிரசங்கத்தைப் படித்துத் தயாரித்துப் போதிக்கும் போதகர்களையும் சபைகளில் காணமுடியாத தால்தான் இன்று திருச்சபைகள் பக்திவிருத்தி குறைந்து காணப்படுகின்றன.

## பரிசுத்த ஆவியின் கிரியை பிரசங்கத்தின் மூலம் வெளிப்படுவதுபோல் வேறு எதன் மூலமும் வெளிப்படுவதில்லை

இயேசு தான் உயர எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பாக அப்போஸ்தலர்களைப் பார்த்துத் தான் போனபின்பு பரிசுத்த ஆவியை அனுப்பப்போவதாக வாக்குக்கொடுத்தார். அவ்வாறு வரப்போகும் ஆவியானவர் இந்த உலகத்து மக்களுடைய பாவங்களைக் கண்டித்து உணர்த்துவார் என்றும் இயேசு கூறினார். பரிசுத்த ஆவியானவர் அதை எப்படிச் செய்யப் போகிறார் என்பதை அநேகர் சிந்தித்துப் பார்ப்பதில்லை. பெந்தகொஸ்தே கூட்டத்தார் முக்கியமான இந்த உண்மையை ஆராய்ந்து பார்ப்பதில்லை. பரிசுத்த ஆவியானவர் பிரசங்கத்தின் மூலமாகவே இந்த உலகத்து மக்களுடைய பாவங்களை உணர்த்தப் போகிறார் என்று வேதம் போதிக்கிறது. எங்கெங்கு வேதபூர்வமான பிரசங்கங்கள் கொடுக்கப்படு கிறதோ அங்கெல்லாம் பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக செயல்படுவார் என்பதை நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். ஏனெனில், வேதம் அதை உறுதிப்படுத்துகிறது. இன்று பிரசங்கத்தை நிராகரித்துவிட்டு இசைக்கும், பாட்டுக்கும், ஆட்டங்களுக்கும், நடனத்துக்கும், படக் காட்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பவர்கள், பரிசுத்த ஆவி வல்லமை யோடு கிரியை செய்வதைப் பார்க்க முடியாது. கர்த்தருடைய வழியை மீறி அவருடைய ஆவியானவர் செயல்படுவார் என்று எதிர்பார்ப்பது எத்தனை முட்டாள்தனம்.

பிரசங்கிகள் பிரசங்கிக்கும்போது ஆவியின் வல்லமையை அனுபவிப்பார்கள் என்று வேதம் சொல்லுகிறது. போதகர்கள் பிரசங்கத்தை தேவ பயத்தோடு உழைத்துத் தயாரித்து விசுவாசத்தோடு பிரசங்கிக்கும்போது அந்த அனுபவத்தைக் கர்த்தர் அவர்களுக்கு அளிக்கிறார். இதை சபையாரும் அறிந்துகொள்ள முடியும். இந்த அனுபவத்தைத்தான் பவுல், “எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது” என்று கூறுகிறார் (1 தெச. 1:5). இந்த அனுபவத்தைப் பற்றிப் பேசியுள்ள சீர்திருத்தவாத பிரசங்கிகள் தாங்கள் பிரசங்கம் செய்கிற போது பலதடவைகள் பரிசுத்த ஆவியினால் உந்தப்பட்டு வழிநடத்தப்பட்டதாகக் கூறியிருக்

கிறார்கள். பிரசங்கிகள் பிரசங்கிக்கின்றபோது அவர்களுடைய பேச்சோடு சம்பந்தப்பட்டதாக மட்டுமே இந்த அனுபவம் இருக்கும். அதாவது அவர்கள் பிரசங்கிக்கிறபோது எந்தவிதத் தடங்கலும் இல்லாமல் பேசவும், வசனங்களை சுலபமாக நினைவுகூரவும், வேதத்தை விளக்குகிறபோது தெளிவாக விளக்கக்கூடியதாகவும் இருப்பதுதான் இந்த அனுபவம். பெந்தகொஸ்தேகாரர்கள் விளக்குகிற மாதிரி ஆவியானவரின் இந்த அனுபவத்தை நாம் தவறாக விளங்கிக்கொள்ளக் கூடாது. பிரசங்கம் மாத்திரமே ஆவியானவரின் இந்த ஆசீர்வாதத்தைக் கொண்டிருக்கிற, தேவனால் தெரிவு செய்யப்பட்ட, செய்திப் பரிமாற்றல் முறையாக இருக்கிறது. வேறு எந்த முறையும் அவை உலகத்து மக்களைக் கவரக்கூடியனவாக இருந்தபோதும் இந்த அனுபவத்தை வெளிப்படுத்த முடியாதவையாக இருக்கின்றன.

### வேதபூர்வமான பிரசங்கம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி திருச்சபையை வளர்க்கிறது

வேதபூர்வமான பிரசங்கங்களினால் சபை மக்கள் ஆத்மீக வாழ்க்கையில் வளர்ச்சி அடைகிறார்கள். தேவனை அறியாதவர்கள் பிரசங்கத்தைக் கேட்டு கர்த்தரை விசுவாசிக்கிறார்கள். ஆதி சபை பிரசங்கத்தின் மூலமாகவே வளர்ந்ததாக அப்போஸ்தலர் நடபடிகளில் வாசிக்கிறோம். அப்போஸ்தலர்கள் தங்களுக்கு சுவிசேஷத்தை வல்லமையோடு பேசும் ஆசீர்வாதத்தை அளிக்கும்படியாகவே கர்த்தரை நோக்கி எப்போதும் ஜெபித்திருக்கிறார்கள். வேதபூர்வமாக பிரசங்கிக்கப்படும் பிரசங்கங்கள் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறபடியால்தான் பவுல், தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில் பிரசங்கம் செய்வதில் அதிக கவனத்தைச் செலுத்தும்படி எழுதினார். ஜாக்கிரதையாகப் பிரசங்கம் செய்யும்படி வற்புறுத்தி எழுதினார். போதக ஊழியத்தைப் பற்றி அதிகமாகப் பேசுகின்ற 1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து ஆகிய நிருபங்கள் சபைகளில் பிரசங்கத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய முக்கிய இடத்தைப் பற்றியே வலியுறுத்திப் பேசுகின்றன. அதற்குக் காரணம் சபை வளர்ச்சிக்கு பிரசங்கம் மட்டுமே போதகர்களுக்கு உதவுவதாக இருக்கின்றது. அதுவே கர்த்தருடைய வழியாகவும் இருக்கின்றது.

ஆத்துமாக்களுடைய கவனத்தை ஈர்த்து, அவர்களை

நம்வழியில் திருப்புவதற்கு மனிதனால் ஆகக்கூடிய வழிகள் உலகில் எத்தனையோ இருக்கின்றன. ஆனால், அந்த வழிகள் மனிதனின் வழிகளாகத்தான் இருக்கும். மனிதன் உலகப் பிரகாரமான, சரீரத்துக்குரிய வழிகளைப் பயன்படுத்தும்போது அதில் அவனுடைய கிரியைகளையே பார்க்க முடியும். இசையின் மூலமாகவும், பாடல்கள் மூலமாகவும், நடிப்பின் மூலமாகவும் தமிழ் சமுதாயத்தையே இன்று "சினிமா உலகம்" ஆண்டு வருவது நமக்குத் தெரியாததல்ல. அதற்கும் ஆத்துமாக்களின் ஆத்மீக வளர்ச்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மனிதர்களை சினிமாவும், பாட்டும், நடிப்பும் ஈர்க்கிறது என்பதற்காக அவற்றை ஆத்மீகக் காரியங்களுக்காக நாம் ஒருபோதும் பயன்படுத்த முடியாது. அவற்றால் ஆத்துமாக்கள் ஆத்மீக வளர்ச்சியையும் அடைய முடியாது. ஆத்மீக வளர்ச்சி அடைய கர்த்தரின் வழிகளையே நாம் பின் பற்ற வேண்டும். அதற்குக் கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் ஆசீர்வாதமே பிரசங்கமாகும்.

## வேதபூர்வமான பிரசங்கம் கர்த்தரை மகிமைப்படுத்துகிறது

பிரசங்கம் வேதபூர்வமானதாக இருக்கும்போது அது கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. நாம் செய்கின்ற அனைத்தும் கர்த்தரை எப்போதும் மகிமைப்படுத்துபவையாக இருக்க வேண்டும். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதையும், சபை வளர்ச்சியையும் மட்டும் பிரதான நோக்கமாகக்கொண்டு போதகர்கள் பிரசங்க ஊழியத்தில் ஈடுபடக்கூடாது. அவர்களுடைய முதல் நோக்கம் கர்த்தர் தங்கள் ஊழியத்தின் மூலம் மகிமை அடைய வேண்டும் என்பதாகத்தான் இருக்க வேண்டும். ஒவ்வொரு போதகரும் அதை மனதில் வைத்தே ஒவ்வொரு பிரசங்கத்தையும் தயாரிக்க வேண்டும், பிரசங்கிக்க வேண்டும். கர்த்தரின் மகிமையை நாடாத பிரசங்கத்தை அவர் ஆசீர்வதிக்கமாட்டார்.

## முடிவாக

பிரசங்கம் ஏன்? என்று ஆராய்ந்திருக்கிறோம். பிரசங்கிக்கிறவர்கள் இனியாவது பிரசங்கத்தின் மகிமையை உணர்ந்து அதற்குக் கொடுக்க வேண்டிய இடத்தை உங்கள் வாழ்க்கையில் கொடுக்க முன்வருவீர்களா? வேத அடிப்படையிலான

பிரசங்கத்தைச் செய்யும் பிரசங்கிகளைக் கொண்டிருக்கும் சபைகளை மட்டும் ஆதரிக்க முன்வருவீர்களா? போலிகளை இனங்கண்டு அவர்களுடைய போலித்தனங்களுக்கு இனியும் இடங்கொடுக்காது உங்களைக் காத்துக்கொள்வீர்களா? இதை வாசிக்கும் போதகர்களே! உங்கள் போதக ஊழியத்தில் பிரசங்கம் அதி உயர்ந்த இடத்தை வகிக்கும்படியாக இனிப் பார்த்துக்கொள்ளுங்கள். கர்த்தருடைய வழிகளை மீறாமல் நீங்கள் ஊழியம் செய்யும்போது வேத அடிப்படையிலான ஆத்மீக சீர்திருத்தம் ஆத்துமாக்கள் மத்தியில் தானாகவே ஏற்படும். மெய்ப்பிரசங்க வறட்சியினால் வாடிப்போயிருக்கும் தமிழ் கிறிஸ்தவ உலகில் பிரசங்க மழை பொழியும் நாள் எப்போது வரும்?

# எது பிரசங்கம்?

ஏனைய எல்லா செய்திப்பரிமாற்றல் சாதனங்களையும்விட பிரசங்கமே கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்துவதற்காக தெய்வீக வழிநடத்தலின்படி நியமிக்கப்பட்டிருக்கிறது. பிரசங்கத்தை ஆசீர்வதிப்பதுபோல் கர்த்தர் வேறு எதையும் ஆசீர்வதிப்பதில்லை என்பதில் நான் உறுதியானதும், அசைக்க முடியாததுமான நம்பிக்கை வைத்திருக்கிறேன். இது மாம்ச ரீதியிலான நம்பிக்கையல்ல. வேதம் நமக்குப் போதிக்கும் சத்தியத்தின் அடிப்படையிலான நம்பிக்கை. அத்தகைய நம்பிக்கையை நெஞ்சில் கொண்டிராத எந்தப் பிரசங்கியும் பரிசுத்த ஆவியின் வல்லமையைத் தன்னுடைய ஊழியத்தில் காணமுடியாது என்பதையும் நான் உறுதியாக நம்புகிறேன்.

இனி, எது பிரசங்கம்? என்ற கேள்விக்கு நான் பதிலளிக்க வேண்டும். பிரசங்கம் எப்படி இருக்க வேண்டும் என்பதை இந்தக் கேள்வியைக் கேட்பதன் மூலம் ஆராயப்போகிறோம். அதாவது பிரசங்கத்தின் உள்ளடக்கம் எப்படி இருக்க வேண்டும் என்று பார்ப்பதல்ல இந்த கேள்வியின் நோக்கம். ஆனால் பிரசங்கி, ஏனைய செய்திப்பரவல் முறைகளை யெல்லாம் தவிர்த்து பிரசங்கத்தைப் பயன்படுத்தி பிரசங்கம் செய்யும்போது அது எத்தகைய தன்மைகளைக் கொண்ட பிரசங்கமாக இருக்க வேண்டும் என்று பார்ப்பதுதான் இக்கேள்வியின் நோக்கம். பேசுகிற பேச்செல்லாம் பிரசங்கமாகி விடாது என்பது சொல்லித்தெரிய வேண்டியதில்லை. பிரசங்கம் என்ற பெயரில் உப்புச்சப்பில்லாத பேச்சுக்களையும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத வறட்டு வாதங்களையும், இருதயத்தைப் ப்பாதிக்கும் வல்லமையே இல்லாத செய்தி களையும் வாராவாரம் கேட்டுவர வேண்டிய நிலை இன்று அநேக தமிழ் ஆத்துமாக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

இப்பகுதியில் மெய்யான பிரசங்கத்தில் நாம் எப்போதும் அடையாளங் காணக்கூடிய அவசியமான சில குணாதிசயங் களை ஆராய்வோம்.

## எல்லாவகைப் பேச்சுக்களும் பிரசங்கமாகிவிடாது

பேச்சுக்களில் பலவகைகள் இருக்கின்றன. கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், இறையியல் கல்லூரிகளிலும் கொடுக்கப்படும் விரிவுரைகளும் பேச்சுதான். கதாகாலட்சேபம் செய்வதும் ஒருவகைப் பேச்சுத்தான். ஒரு விஷயத்தைக்குறித்து தர்க்கம் செய்வதும் பேச்சோடு தொடர்புடையதுதான். ஆனால், இவையெல்லாம் பிரசங்கமாகிவிட முடியாது. மற்ற எல்லாவற்றையும்விட பிரசங்கம் வித்தியாசமானது. உதாரணத் திற்கு விரிவுரையை எடுத்துக்கொள்வோம். பிரசங்கத்தில் இருக்கும் சில தன்மைகளை நாம் விரிவுரையில் பார்க்க முடியாது. விரிவுரை பிரசங்கத்தைவிட அடிப்படையிலேயே வேறுபாடுடையது. விரிவுரையாளன் ஒரு விஷயத்தைக்குறித்துப் பேசும்போது அந்த விஷயத்தைப்பற்றிய அத்தனை உண்மை களையும் சேகரித்து விளக்குகிறான். அப்படி விளக்கமளிப்பது மட்டுமே அவனுடைய குறிக்கோளாக இருக்கின்றது. ஆனால் பிரசங்கி ஒரு விஷயத்தை விளக்குவதோடு மட்டும் நின்றுவிட முடியாது. அந்த விஷயத்தை ஆணித்தரமாக விளக்கி, அதை ஏன் நாம் விசுவாசிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களைச் சுட்டிக்காட்டி, அதை நாம் நிச்சயமாக பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துவதும் பிரசங்கி யினுடைய இலட்சியமாக இருக்கும். ஒரு விரிவுரையாளன் இதைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. விஷயத்தை ஆதாரத்தோடு சொல்லுவதுடன் அவனுடைய கடமை முடிந்து விடுகிறது. ஆனால், பிரசங்கி அதற்கு ஒருபடி மேலே போய் சொல்லப்பட்ட விஷயத்தின்படி நாம் நடக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறான். பிரசங்கியால் இதைச் செய்யாமல் இருக்க முடியாது. இது அவனுடைய உயிர் மூச்சு; இதைச் செய்யாதவன் பிரசங்கியாக இருக்க முடியாது. இது பிரசங்கத் திற்கும் விரிவுரைக்குமிடையில் உள்ள ஒரு முக்கியமான வேறுபாடு. இந்த வேறுபாட்டைத்தான் ஏனைய பேச்சு வகை களுக்கும் பிரசங்கத்திற்கும் இடையில் பார்க்கிறோம். ஏனைய பேச்சு வகைகள் செய்ய முடியாத காரியத்தை, அதாவது

மனிதனின் இருதயத்தைத் தொட்டுத் தட்டி எழுப்பி கர்த்தரின் வார்த்தையின்படி நடக்க வேண்டும் என்று குரல் எழுப்ப பிரசங்கத்தால்தான் முடியும்.

## பிரசங்கம் வேதபூர்வமான அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டும்

மெய்யான பிரசங்கம் அதிகாரம் கொண்ட பிரசங்கமாக இருக்கும். பல பிரசங்கிகளின் பிரசங்கத்தில் இன்று வேத அதிகாரத்தையே பார்க்க முடியாது. அதிகாரம் என்று நான் கூறும்போது, இன்று பல பிரசங்கிகளிடம் இருக்கிற, ஆத்துமாக்களை ஆட்டி வைக்கப்பார்க்கும் மாம்சத்துக்குரிய அதிகாரத்தொனியைக் குறிப்பிடவில்லை. நான் கூறும் அதிகாரம் பிரசங்கி செய்யும் பிரசங்கத்திலும், அந்தப் பிரசங்கத்தின் மூலம் விளக்கப்படும் சத்தியத்திலும் காணப்படும். புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கும் பரிசேயர்கள் பிரசங்கித்தபோது அங்கே மாம்சத்துக்குரிய அதிகாரத்தையே யூத மக்கள் பார்த்தார்கள். ஆனால், அவர்கள் இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்டபோது "அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால் ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" என்று வேதம் கூறுகிறது. இது மாம்சத்துக்குரிய அதிகாரத்திற்கும், மெய்யான பிரசங்கத்தில் இருக்கும் அதிகாரத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை விளக்குகிறது.

பிரசங்கங்கள் வேத அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டுமானால் பிரசங்கி பின்வரும் தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

### 1. வேதத்தின் அதிகாரத்தில் பிரசங்கிக்கு நம்பிக்கை இருக்க வேண்டும்

பிரசங்கம் அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டுமானால் முதலில் பிரசங்கிக்கு வேதத்தின் அதிகாரத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும். வேதத்தை நம்பாத பலர் இன்று பிரசங்கம் செய்வதில் ஈடுபட்டிருப்பது கிறிஸ்தவத்திற்கே ஏற்பட்டிருக்கும் இழுக்காகும். இவர்கள் வேதத்தை தங்களுடைய சுயநலத்திற்காகப் பயன்படுத்திக்கொள்கிறார்களே தவிர அதை நம்பிப் போதிக்கும் பணியைச் செய்யவில்லை.

வேதம் தனக்குள் சர்வ அதிகாரத்தையும் கொண்டதாக இருக்கிறது. அது கர்த்தருடைய தெளிவான வார்த்தை. அதில் தவறுகளுக்கோ, குறைபாடுகளுக்கோ, குழப்பங்களுக்கோ எந்தவிதமான இடமும் இல்லை. அது கர்த்தருடைய நிறைவான சித்தத்தை மக்களுக்கு வெளிப்படுத்துகின்ற, கர்த்தரால் நமக்களிக்கப்பட்டுள்ள ஒரே நூல். வேதத்திற்கு புறத்தில் இருந்து எதன் மூலமும், எவர் மூலமும் கர்த்தருடைய சித்தத்தை இன்று நாம் அறிந்துகொள்ள முடியாது. இத்தகைய தன்மைகளை வேதம் தனக்குள் கொண்டிருப்பதால்தான் அது அதிகாரமுள்ள கர்த்தருடைய வார்த்தையாக இருக்கின்றது. அதனால் தான் வேதம் அதிகாரம் கொண்டது என்று சொல்லுகிறோம். இந்த சத்தியங்களை முழு இருதயத்தோடும் நம்புபவனாக பிரசங்கி இருக்க வேண்டும். வேதத்தின் இந்த அரிய தன்மைகளை நம்பாதவர்கள் வேதத்தை சந்தேகக் கண்ணோடு பார்க்கிறார்கள். வேதத்தில் குறைகாணுபவர்களும், வேதத்தின் மூலம் மட்டுமே கர்த்தருடைய சித்தம் வெளிப்படுத்தப் படுகிறது என்பதை விசுவாசிக்க மறுக்கிறவர்களும் அதை அதிகாரம் கொண்ட கர்த்தருடைய வார்த்தையாக ஏற்றுக் கொள்வதில்லை. கர்த்தரின் (வேதத்தின்) அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மெய்யான பிரசங்கிகளாக இருக்க முடியாது. அவர்களால் அதிகாரத்தோடு பிரசங்கிக்கவும் முடியாது. அவர்களுடைய பிரசங்கம் மாம்சத்திற்குரியதாக மட்டுமே இருக்கும்.

வேதத்தோடு எதையும் சேர்க்கவும் கூடாது; அதிலிருந்து எதையும் அகற்றவும் கூடாது என்று இயேசு சொன்னார். சாத்தான் தன்னை சோதித்தபோது வேதத்தை மட்டும் பயன்படுத்தியே சாத்தானை அவர் விரட்டியடித்தார். தனக்குள்ளாக பூரணத்துவத்தையும், சகல வல்லமையையும் அவர் கொண்டிருந்தபோதும், இயேசு வேதத்தை அதிகாரத்துடன் பயன்படுத்தி சாத்தானை மடக்கி விரட்டியதை எண்ணிப்பாருங்கள். அன்று இயேசு அற்புதங்களை நாடவில்லை, அதிசயங்களைச் செய்யவில்லை. வேதத்தை மட்டுமே வாளாகப் பயன்படுத்தி (எபே. 6) வேத துரோகியாகிய பிசாசை அடக்கினார். இயேசு வேதத்தின் பூரணத்துவத்தையும், அதிகாரத்தையும் விசுவாசித்தார். அதனால்தான் அவருடைய பிரசங்கங்கள் மக்கள் ஆச்சரியமடையும்படி அதிகாரத்துடன்

இருந்தன. எதிரிகளை அசைத்தன. பலருடைய கண்களைத் திறந்தன. வேதத்தின் அதிகாரத்தில் நம்பிக்கை வைத்துப் பிரசங்கித்த இயேசுவே நமக்கெல்லாம் முன்னோடி. அவரைப் போல வேதத்தின் அதிகாரத்தில் நமக்கு நம்பிக்கை இருந்தால் தான் நமது பிரசங்கங்கள் அதிகாரத்துடன் இருக்க முடியும்.

ஒரு பிரசங்கி மாம்சத்திற்குரிய வல்லமையோடு வேதத்தை பிரசங்கித்துவிடலாம். யூதாஸ் திருடனாகவும், இயேசுவைக் காட்டிக் கொடுத்தவனாகவும் இருந்தபோதும் தன் வாழ்நாளில் பிரசங்கமும் செய்திருக்கிறான். இப்படிப் பலரை வேதத்தில் இருந்து நாம் உதாரணம் காட்ட முடியும். ஆகவே, பிரசங்கிக் கிறவர்களெல்லாம் வேதத்தைப் பயன்படுத்திக்கொள்வதால் அவர்களுடைய பிரசங்கம் அதிகாரமுள்ளதாக இருந்து விடாது. வேதத்தின் புனிதத்தன்மைகளை உணர்ந்து, அறிந்து, விசுவாசித்துப் பிரசங்கிக்கிறவர்கள் மட்டுமே ஆவிக்குரிய அதிகாரத்தோடு வேதத்தை பிரசங்கிக்க முடியும்.

### 2. பிரசங்கி வேதத்தின் அதிகாரத்தில் நம்பிக்கை வைத்து பிரசங்கத்தை தயாரிக்க வேண்டும்

வேதம் சகல அதிகாரமும் கொண்டது என்று விசுவாசிப் பவர்கள் வேத போதனைகளை ஏனோதானோ வென்று பிரசங்கிக்கப் பயப்படுவார்கள். அவர்கள் சர்வ அதிகாரம் கொண்ட கர்த்தரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு, தேவபயத்துடன் பிரசங்கத்தைத் தயாரித்துப் பிரசங்கிப்பவர் களாக இருப்பார்கள். ஏனெனில் பிரசங்கி மாம்சத்துக்குரிய செய்தியைப் பிரசங்கிக்காமல் தெய்வீக செய்தியைப் பிரசங்கிக் கிறான் என்று மார்டின் லொயிட் ஜோன்ஸ் சொல்லி யிருக்கிறார். அந்த தெய்வீக செய்தியின் மூலம் கர்த்தருடைய அதிகாரத்தை ஆத்துமாக்கள் உணர வேண்டுமானால், பிரசங்கி பிரசங்கத்தை ஆவியின் துணையோடு கவனத்தோடு தயாரிப்பான்.

பிரசங்கம் அதிகாரமுள்ளதாக இருக்க வேண்டுமானால் அது பூரணமாக வேத அடிப்படையில் அமைந்ததாக, எந்தவித மனித ஞானத்திற்கும் இடமளிக்காததாக இருக்க வேண்டும். ஆகவே, பிரசங்கி விளையாட்டுத்தனமாக இருந்து நேரத்தை வீணாக்காமல், தன்னுடைய சிந்தனையில் சடுதியாக உதிக்கும்

வேத சம்பந்தமற்ற பேச்சுகளைப் பேசுவதைத் தவிர்க்குமுகமாக பிரசங்கத்தைக் கவனத்தோடும், ஜெபத்தோடும் ஆராய்ந்து தயாரிப்பது அவசியம். கர்த்தருடைய வசனத்தின் அதிகாரத்தை ஆவியின் வல்லமையால் ஆத்துமாக்கள் உணர வேண்டுமென்ற ஒரே இலட்சியத்தோடு இரவும் பகலும் பாடுபட்டுப் பிரசங்கத்தைத் தயாரித்துப் பிரசங்கிப்பவர்களே மெய்யான பிரசங்கிகள். இப்படிப் படித்துத் தயாரித்துப் பிரசங்கித்ததால் தான் லூதரையும், கல்வினையும், பியூரிட்டன் பெரியோர் களையும், ஸ்பர்ஜனையும் அவர்கள் இறந்த பின்பும் உலகம் பாராட்டிப் பேசிக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய பிரசங்கங்கள் இன்றும் அழிவற்றதாக பலருக்கும் பயனளித்து வருகின்றன.

## 3. பிரசங்கத்தை தேவபயம் கலந்த அதிகாரத்துடன் பிரசங்கிக்க வேண்டும்

வேதத்தை தேவபயத்தோடு படித்து பிரசங்கத்தைத் தயாரித்தபின் நமது கடமை முடிந்துவிடுவதில்லை. அதை ஆத்துமாக்களுக்குமுன் பிரசங்கிக்க வேண்டிய பெருங்கடமை இருக்கிறது. பிரசங்கத்தைத் தயாரித்தபோது பிரசங்கிகள் எடுத்த அத்தனை அக்கறையையும் பிரசங்கம் செய்யும்போதும் காட்ட வேண்டும். பிரசங்க மேடையில் ஒரு நடிகனைப்போல நடிக்கவோ (பெனிஹின்), கோமாளியைப்போல கூத்தாடவோ (பாதர் பெர்க்மன்) முயற்சி செய்யக்கூடாது. பிரசங்கம் செய்யும்போது மாம்சத்துக்குரிய எண்ணங்கள் எதுவும் நமது மனதை அலைக்கழிக்காமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். கர்த்தருக்குப் பயந்து, ஆத்துமாக்களின் ஆத்தும வளர்ச்சியை மட்டுமே மனதில் கொண்டு பிரசங்கிக்க வேண்டும். பிரசங்கத்தை நன்றாகத் தயாரித்துவிட்டேன் நிச்சயம் நமக்கு இன்று பாராட்டு கிடைக்கும் என்றெல்லாம் சிந்தனைப் போகக்கூடாது. மிகவும் மனத்தாழ்மையுடனும், ஆத்ம சுத்தத்துடனும் பிரசங்கம் செய்ய வேண்டும். பிரசங்கத்தைக் கர்த்தருடைய அதிகாரத்துடன் பிரசங்கிப்பதற்கு இத்தகைய மனநிலை பிரசங்கிக்கு அவசியம்.

இன்று அநேக பிரசங்கிகள் பிரசங்க மேடை மூலம் ஆத்துமாக்களை மாம்சத்துக்குரிய விதமாக அதிகாரம் செய்து வருகிறார்கள். இத்தகைய பிரசங்கிகள் பிரசங்கிக்கும்போது ஆத்துமாக்களுக்குக் கர்த்தரின் அதிகாரமோ, வேதத்தின்

அதிகாரமோ தெரிவதில்லை. பிரசங்கியின் மாம்சத்துக்குரிய பலவீனமான அதிகாரம் மட்டுமே தெரிகிறது. இதனாலேயே இன்று நம்மத்தியில் பிரசங்கத்தின் வல்லமையைப் பார்க்க முடியாதிருக்கின்றது. எப்போதும் பிரசங்கத்தின் மூலம் கர்த்தருடைய வல்லமை மட்டுமே ஆத்துமாக்களுக்கு புலப்பட வேண்டும். அந்த நோக்கத்துடன்தான் மெய்யான பிரசங்கி எப்போதும் பிரசங்கத்தைக் கவனத்தோடு தயாரிப்பான். அந்தப் பிரசங்கத்தைக் கர்த்தரின் மகிமைக்காக அவருடைய அதிகாரம் மட்டுமே தெரியக்கூடியதாக பிரசங்கிக்க வேண்டியது அவனுடைய கடமை. இதற்காக பிரசங்கி அதிகமாக ஜெபத்தில் ஈடுபட வேண்டியிருக்கிறது. என்னுடைய பிரசங்கத்தால் கர்த்தர் உயர வேண்டும், அவர் மகிமை அடைய வேண்டும் என்ற ஜெபத்தோடு பிரசங்கிகள் பிரசங்க மேடைக்குப் போக வேண்டும். அதனால்தான் தேவபயமுள்ள பிரசங்கிகள் எத்தனை வருடங்கள் பிரசங்கித்திருந்த போதும், ஒவ்வொரு முறையும் பிரசங்க மேடையில் ஏறும்போது முதல் முறையாகப் பிரசங்கிக்கப் போவது போன்ற உணர்வோடு போவார்கள். அத்தகைய மனநிலை இல்லாதவர்களால் மெய்யான தேவபயத்தோடும், கர்த்தரின் அதிகாரத்தோடும் பிரசங்கிக்க முடியாது.

## பிரசங்கத்தை ஆவியின் பலத்துடன் பிரசங்கிக்க வேண்டும்

பவுல் அப்போஸ்தலன் தெசலோனிக்கேயருக்கு எழுதிய நிருபத்தில் தன்னுடைய பிரசங்கத்தைப் பற்றி விளக்கும்போது, "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது" என்று விளக்குகிறார். பவுல் தன்னுடைய பிரசங்கத்தை தேவபயத்தோடு படித்தும், ஆராய்ந்தும் தயாரித்து, அதனை அதிகாரத்தோடு பிரசங்கித்ததோடு தன்னுடைய கடமை முடிந்துவிட்டதாகக் கருதவில்லை. அந்தப் பிரசங்கத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமையைக் காண வேண்டும் என்றும் பவுல் எதிர்பார்த்திருந்தார். பவுலினுடைய பிரசங்கத்தில் ஆவியின் வல்லமை இருந்ததென்பதை பவுல் மட்டும் அல்ல, தெசலோனிக்கேயரும் உணர்ந்திருந்தனர். ஆவியின் வல்லமையை அவர்கள் அனுபவித்திருந்தனர். இதன் மூலம் பிரசங்கங்கள் எப்போதும் ஆவியின் வல்லமையோடு

கொடுக்கப்பட வேண்டும் என்ற சத்தியத்தை அறிந்து கொள்கிறோம். இதையே பவுல் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்திலும், "என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது" என்று விளக்கியுள்ளார்.

ஆவியின் வல்லமையைப் பற்றிய பல தவறான, வேதத்திற்கு விரோதமான எண்ணங்கள் கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கின்றன. அந்தத் தவறான எண்ணங்களுக்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. பெந்தகொஸ்தே அல்லது கெரிஸ்மெட்டிக் இயக்கத்தைச் சேர்ந்த பிரசங்கி ஆத்துமாக்கள் அந்நியபாஷை பேசுவதும், நிலத்தில் திடீரென மயங்கி விழுவதும், உணர்ச்சி வசப்பட்டுத் துள்ளிக் குதிப்பதுமே தனது பிரசங்கம் ஆவியின் பெலத்தைப் பெற்றிருப்பதற்கு அடையாளமாகக் காண்கிறான். பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய நிருபத்தில் இத்தகைய அனுபவங்களோடு தன்னுடைய பிரசங்கம் இருந்ததாக எழுதவில்லை. வேத போதனைகளைத் தவறாக விளங்கிக் கொள்வதாலேயே பெந்தகொஸ்தேகாரர்கள் பிரசங்கத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமைக்கு அடையாளமாக அந்நிய பாஷை, மயங்கி விழுதல் போன்ற அனுபவங்கள் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருக் கிறார்கள். இயேசுவின் மலைப்பிரசங்கத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமை இருந்தது. ஆனால் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டவர்கள் இத்தகைய அனுபவங்களை அன்று அடைந்த தாக சுவிசேஷ நூல்கள் நமக்கு அறிவிக்கவில்லை. அப்போஸ் தலர்கள் பிரசங்கித்த ஒவ்வொரு தடவையும் இத்தகைய அனுபவங்களை ஆத்துமாக்கள் அடையவில்லை என்பதை புதிய ஏற்பாட்டை முறையாக வாசித்துப் பார்ப்பவர்களுக்கு விளங்கும். இத்தகைய அனுபவங்களை ஆத்துமாக்கள் பெற்றுக்கொள்ளாத இடங்களிலெல்லாம் அப்போஸ்தலர் களின் பிரசங்கத்தில் அதிகாரமோ ஆவியின் வல்லமையோ இல்லையென்று கூறிவிட முடியுமா? அங்கெல்லாம் மக்கள் பிரசங்கத்தைக் கேட்டு கர்த்தரை விசுவாசித்திருந்தார்கள். ஆகவே, பிரசங்கத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமைக்கு அடையாளம் அந்நியபாஷை பேசுவது போன்ற அற்புதங் களோ, அடையாளங்களோ அல்ல என்பதை கிறிஸ்தவர்கள்

விளங்கிக்கொள்ள வேண்டும். பிரசங்கத்தோடு இத்தகைய அனுபவங்கள் சேர்ந்துவரும் என்பது பெந்தகொஸ்தேகாரர்கள் வேதப் பகுதிகளை சரியாக ஆராயாமல் கட்டிவிட்ட கதை என்பதை நாம் உணர்வது அவசியம்.

முதலில் பரிசுத்த ஆவியின் வல்லமை எங்கே இருக்காது என்பதைப் பார்ப்பது அவசியம். வேதத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டு பிரசங்கிக்கப்படாத பிரசங்கங்கள் இருக்கின்ற இடங்களில் பரிசுத்த ஆவியின் வல்லமையை நிச்சயமாக பார்க்க முடியாது. சோம்பேறிப் பிரசங்கிகளின் பிரசங்கத்திலும், வெறும் அரசியல், சமூக உயர்வுக்கான பேச்சுக்களிலும், கதை சொல்லுவதையும், பாடல் கச்சேரிகள் நடத்துவதையும் தொழிலாகக் கொண்டிருப்பவர்கள் மத்தியிலும் பரிசுத்த ஆவியின் வல்லமையை ஒருபோதும் பார்க்க முடியாது. பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தின் ஆவி என்று வேதம் சொல்லுகிறது; அவர் சத்தியத்திற்குச் சொந்தக்காரர். சத்தியத்தை உணர்த்தும் பணியைச் செய்கிறவர். ஆத்துமாக் களின் இருதயத்தில் சத்தியத்தைப் பயன்படுத்தியே அவர் பாவங்களை உணரச் செய்கிறார். சத்தியத்திற்கே இடமில்லாத இடங்களில் அவருக்கு என்ன வேலை? சத்தியம் தெளிவாக வும், கர்த்தருக்கு மகிமை தரும் விதத்திலும் பிரசங்கிக்கப்படும் இடங்களில் மட்டும்தான் ஆவியின் வல்லமையைப் பார்க்க முடியும்.

கிறிஸ்து எங்கே வல்லமையாகப் பிரசங்கிக்கப்படுகிறாரோ அங்கே ஆவியின் வல்லமையைப் பார்க்கலாம். ஏனெனில், ஆவியானவர் இந்த உலகத்திற்கு வந்ததே கிறிஸ்துவை மகிமைப்படுத்தத்தான் (யோ. 14:26; 15:26; 16:13-15). பிரசங்கங்கள் கிறிஸ்துவைப்பற்றிய தெளிவான போதனைகளைக் கொண் டிருக்க வேண்டும். பாவிகள் அவரைத் தேடி ஓடிவரத் துணை செய்யும் அளவுக்கு கிறிஸ்து பிரசங்கங்களை அலங்கரிக்க வேண்டும். இதை இன்று அநேகர் மறந்துவிட்டு சபைகளில் வாந்தி எடுப்பதையும் குரங்கைப்போலக் கூத்தாடுவதையும், நாயைப்போலக் குரைப்பதையும், ஆத்துமாக்களை நிலத்தில் விழுந்து புரள வைப்பதையும் ஆவியின் அடையாளங்களாக எண்ணி வருகின்றனர். அது அசுத்த ஆவியின் நடமாட்டத்திற் கான அறிகுறி. இத்தகைய அவலட்சணமான காரியங்களுக்கு

இடம் கொடுப்பவர்களுடைய வாழ்க்கையில் ஆவியின் கிரியைகளைப் பார்க்க முடியாது.

பிரசங்கம் எவ்வாறு பரிசுத்த ஆவியோடு வரும்? பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பிரசங்கத்தில் எப்படிப் பார்க்கலாம்? என்ற கேள்விகளுக்கு நிச்சயம் பதிலளித்தாக வேண்டும். இதைப்பற்றி இன்றையத் தலைமுறையினர் மத்தியில் சிறந்த பிரசங்கி என்று பெயர் பெற்றுள்ள அல்பர்ட் என். மார்டின் (Albert N. Martin) கூறுவதைப் பார்ப்போம்,

> "பிரசங்கத்தின்போது கொடுக்கப்படும் ஆவியின் வல்லமையைப் பற்றி சில பிரசங்கிகள் விளக்குகின்ற போது, தாங்கள் ஆவியானவரால் தூக்கிச் சொல்லப் படுவதுபோன்ற ஓர் அனுபவமாக அது இருந்தது என்று குறிப்பிடுகின்றனர். அதாவது, ஆவியானவரின் வல்லமை இருக்கின்ற வேளைகளில் எந்தவிதமான தடங்கலோ, தடையோ இல்லாமல் தங்களால் சுலப மாக சத்தியத்தைப் பிரசங்கிக்க முடிந்திருக்கிறது என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அத்தோடு, பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது, பேசுவது சுலபமாக இருந்த தாகவும், கருத்துக்கள் தடங்கலின்றித் துள்ளிப்பாய்ந்து வந்திருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். முக்கியமாக பாவிகளுக்கு கிறிஸ்துவைப் பற்றி எடுத்துச் சொல்லுகிற வேளைகளில் இந்தவிதமாக தங்களால் ஆவியின் துணையோடு பிரசங்கம் செய்ய முடிந்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அத்தோடு, ஆவியின் வல்லமை இருக்கும்போது, பிரசங்கிக்கும் ஆத்துமாக்களுக்கும் இடையில் பிரிக்க முடியாததொரு தொடர்பு ஏற்பட்டு ஆத்துமாக்கள் பிரசங்க வார்த்தைகள் ஒவ்வொன்றையும் காதுகொடுத்துக் கேட்டு வாஞ்சையோடு மனதில் வாங்கிக்கொள்கிறார்கள். சத்தியத்தை ஆத்துமாக்கள் ஆவியின் வல்லமையால் தடையின்றிப் பெற்றுக் கொள்ளும் இந்த அனுபவமே ஆவியின் வல்லமைக்கு எடுத்துக்காட்டு."

இத்தகைய ஆவியின் வல்லமை பிரசங்கியின் பேச்சுத் திறத்திலோ, பிரசங்க மேடையில் அவர் நடந்துகொள்கிற விதத்திலோ தங்கியிருக்கவில்லை. பிரசங்கம் ஆவியின்

வல்லமையோடு அளிக்கப்படுகிறபோது பிரசங்கியும் நிச்சயமாக ஆவியின் வல்லமையால் பெரிதும் பாதிக்கப்படு கிறான். ஆனால், இது அவன் சுயமாக உருவாக்கிக்கொள்கிற ஓர் அனுபவம் அல்ல. ஜோர்ஜ் விட்பீல்ட் (George Whitefield), ஜொனத்தன் எட்வர்ட்ஸ் (Jonathan Edwards), சார்ல்ஸ் ஸ்பர்ஜன் (Charles Spurgeon) போன்றோர் தங்களுடைய பிரசங்க ஊழியத்தில் இந்தவிதமாக ஆவியின் வல்லமையை அனுபவித் திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஜொனத்தன் எட்வர்ட்ஸ் ஒருமுறை கடல் கடந்து இங்கிலாந்துக்குப் போய் ஜோர்ஜ் விட்பீல்டின் பிரசங்கத்தைக் கேட்கச் சென்றார். அதைப்பற்றி எட்வர்ட்ஸ் பின்வருமாறு விபரிக்கிறார்,

> "விட்பீல்ட் பிரசங்கிக்க ஆரம்பித்தபோது முதல் ஐந்து நிமிடங்களில் அது எனக்கு சாதாரணமானதாகத்தான் தோன்றியது. இந்தப் பிரசங்கத்தை அவர் ஏற்கனவே பல முறை பிரசங்கித்திருக்கிறார் என்பதையும் என்னால் உணர முடிந்தது. அதைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தபோது அந்தப் பிரசங்கத்தில் இருந்த ஆவியின் வல்லமையை என்னால் உணர முடிந்தது. பிரசங்கியையும் மீறிய ஒரு வல்லமை (ஆவியானவர்) விட்பீல்டை அற்புதமாக அன்று பயன்படுத்தினார். மக்கள் கூட்டம் பிரசங்கத்தால் அன்று பாதிக்கப்பட்டு கண்ணீர் விட்டது. இந்த மனிதனின் பிரசங்கத்தைக் கேட்க ஆயிரக்கணக்கானோர் ஏன் கூடி வருகிறார்கள் என்பதை நான் அன்றுதான் உணர்ந்தேன்."

இத்தகைய ஆவியின் வல்லமையைப் பிரசங்கிகள் இன்றும் அனுபவிக்க முடியும். இது விட்பீல்டுக்கும், எட்வர்ட்ஸுக்கும், ஸ்பர்ஜனுக்கும் மட்டும் சொந்தமானதல்ல. ஆனால், ஆவியின் வல்லமையோடு பிரசங்கிக்க முடியாதபடி பிரசங்கிகள் இன்று உலகப்பிரகாரமாக நடந்து தங்களுடைய ஊழியங்களைச் சிதறடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஊழியத்திற்கே வர அருகதை இல்லாதவர்கள் பிரசங்க ஊழியத்தில் ஈடுபட்டிருப் பதாலும், பிரசங்கம் செய்வதில் நம்பிக்கையை இழந்து வேறு சாதனங்களை நாடிப் பிரசங்கிகள் ஓடுவதாலும், பிரசங்கம் செய்பவர்கள் தேவ பயத்தோடு பிரசங்கத்தைத் தயாரித்துப் பிரசங்கிக்காததாலும் ஆவியின் வல்லமையை இன்று பார்க்க

முடியாதிருக்கின்றது. இந்த நிலை மாற நல்ல பிரசங்கிகள் இன்று நமக்கு தேவை.

## பிரசங்கம் ஆத்துமாக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்

கிறிஸ்துவுக்கு மகிமை சேர்ப்பதே ஒவ்வொரு பிரசங்கி யினுடைய ஊழியத்தின் இலட்சியமாக இருக்க வேண்டும். ஆனால், அந்த இலட்சியத்தை மனதில் கொண்டு உழைக்கும் பிரசங்கியின் ஊழியத்தால் ஆத்துமாக்களின் வாழ்க்கையில் ஆத்மீக மாற்றம் ஏற்பட வேண்டும். அத்தகைய ஆத்மீக மாற்றம் ஆத்துமாக்களில் ஏற்படுவதன் மூலம்தான் கிறிஸ்து மகிமைப்படுத்தப்படுகிறார். மனிதர்களுடைய மனதை மாற்றும் சக்தி பிரசங்கிக்கு இல்லை. அதைக் கர்த்தரால் மட்டுமே செய்ய முடியும். ஆனால், கர்த்தர் அதை வேதப் பிரசங்கங்களின் மூலமாகவே ஆத்துமாக்களில் செய்கிறார். இதை மனதில் வைத்து கொண்டே எந்தப் பிரசங்கியும் உழைக்க வேண்டும்.

ஆத்தும மாற்றத்தை ஏற்படுத்தாத எந்தப் பிரசங்கமும் மெய்யான பிரசங்கமாக இருக்க முடியாது. பிரசங்கத்தைத் தயாரிக்கிறவன் ஆத்துமாக்களின் தேவைகளை உணர்ந்து, அவற்றை மனதில் கொண்டே பிரசங்கங்களைத் தயாரிக்க வேண்டும். எந்த வேதப் பகுதியைப் பயன்படுத்தி பிரசங்கத்தைத் தயாரிக்கும்போதும் அது ஆத்துமாக்களின் வாழ்க்கையில் பரிசுத்தத்தை ஏற்படுத்தும்படியான போதனைகளைக் கொண்டிருப்பதாகத் தயாரிப்பது அவசியம். இதற்காக பிரசங்கிக்கு தகுந்த வேத அறிவு இருப்பது மட்டுமன்றி தன்னுடைய ஆடுகளின் சுகநலன்களும் தெரிந்திருக்க வேண்டும். அது தெரியாத பிரசங்கியால் ஆத்மீக மாற்றத்தை ஏற்படுத்தும் பிரசங்கங்களைத் தயாரிக்க முடியாது. தான் ஊழியம் செய்யும் ஆத்துமாக்களை அன்போடு நேசிக்காமலும், அவர்களின் வாழ்க்கையில் அக்கறை கொள்ளாமலும், அவர்களோடு அந்நியோந்நியமாகப் பழகாமலும் ஊழியம் செய்கிறவர்கள் ஆவிக்குரிய பிரசங்கிகளாக இருக்க முடியாது. ஆத்துமாக்களுடன் பழகத் தெரியாத பிரசங்கி, தன்னில் பெரிய பிரச்சனையைக் கொண்டிருக்கிறான். ஆத்துமாக்களோடு கூடுதலாக பழகினால் நம்மை மதிக்கமாட்டார்கள் என்று சில பிரசங்கிகள் நினைப்பதுண்டு. அவர்களுடைய சிந்தனையில்

கோளாறு இருக்கிறது. பிரசங்கி ஆத்துமாக்களோடு பழக வேண்டிய விதத்தில் பழகி, அவர்களுடைய வாழ்க்கையில் தனக்கு அக்கறை இருக்கிறது என்பதை அவர்கள் அறிந் திருக்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். அதைச் செய்ய முடியாதவர்கள் பிரசங்க ஊழியத்தை விட்டுவிடுவது நல்லது.

ஆத்துமாக்களின் தேவைகளை மனதில் கொண்டு பக்குவத்தோடு பிரசங்கங்களைப் பிரசங்கி தயாரித்தபோதும் அதனால் ஆத்துமாக்கள் பயனடைய ஆவியானவர் கிரியை செய்வது அவசியம். ஆவியானவரைப் பிரசங்கியால் ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், விசுவாசத்தோடு தயார் செய்யப்பட்ட பிரசங்கத்தை ஆவியானவர் நிச்சயம் பயன்படுத்துவார் என்ற நம்பிக்கை பிரசங்கிக்கு எப்போதும் இருக்க வேண்டும். அந்த நம்பிக்கை இல்லாமல் ஒருவரும் பிரசங்கிக்கப் போகக்கூடாது.

பிரசங்கத்தின் மூலம் எப்போதும் இரண்டில் ஒரு காரியம் நடக்க வேண்டும். பிரசங்கம் ஆத்துமாக்களின் இருதயத்தை அசைத்து கர்த்தரின் வழிப்படி நடக்க அவர்களை உந்தித் தள்ளுவதாக இருக்க வேண்டும் அல்லது அவர்களுடைய சுயரூபத்தை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். இந்த இரண்டில் ஒன்றை செய்யாதது ஒருபோதும் வேத பிரசங்கமாக இருக்க முடியாது. இதனால்தான் ஜோர்ஜ் விட்பீல்ட் போன்றோரின் பிரசங்கத்தால் மக்கள் மனம்மாறி கர்த்தரை விசுவாசித்தது மட்டுமல்லாமல், சிலர் அவரை எதிர்க்கவும் செய்தார்கள். மனிதனின் மனதை அசைக்காத, இருதயத்தைப் பாதிக்காத பிரசங்கத்தால் எந்தவிதமான நன்மையுமில்லை. தன்னுடைய பிரசங்கத்தால் ஆத்துமாக்கள் நிச்சயம் இயேசுவிடம் வருவார்கள் என்ற நம்பிக்கையோடு பிரசங்கிகள் எப்போதும் பிரசங்க மேடைக்குப் போக வேண்டும் என்று ஸ்பர்ஜன் சொல்லியிருக்கிறார். பிரசங்கி டெலிவிஷன் செய்தியாளனைப் போல அனலும் இல்லாமல் குளிருமில்லாமல் (Cool Communicator) தேவ செய்தியைப் பிரசங்கிக்கக் கூடாது. ரிச்சட் பெக்ஸ்டர் என்ற பியூரிட்டன் பிரசங்கி சொன்னது போல "மரணத்தின் வாசலில் இருக்கும் மனிதன் மரித்துக் கொண்டிருக்கும் மனிதனுக்கு பிரசங்கிப்பது போல் நாம் பிரசங்கம் செய்ய வேண்டும்."

# பிரசங்கம் தயாரித்தல் 1

பிரசங்கம் தயாரித்தல் ஒரு போதகனுடைய வாழ்க்கையில் அதி முக்கியமான பணி. போதகன் தனக்குக் கொடுக்கப் பட்டுள்ள மந்தையைச் சரியாக மேய்ப்பதற்குப் பயன்படுத்தும் முக்கிய கருவிகளில் ஒன்று பிரசங்கம்.

பிரசங்கம் தயாரிப்பது பிரசங்கிகளுக்கு மட்டுமே சொந்தமான ஒரு கடமை என்று நாம் எண்ணிவிடக் கூடாது. ஆராதனையின் அதி உயர்ந்த அம்சமாக பிரசங்கம் மாத்திரமே அமைந்திருப்பதால் பிரசங்கிப்பவர்கள் மட்டுமல்லாமல் பிரசங்கத்தைக் கேட்பவர்களும் அதில் பெரும் அக்கறை செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கர்த்தருடைய சபையிலே கொடுக்கப்படுகின்ற பிரசங்கங்கள் கர்த்தரை அறியாதவர்களுடைய ஆத்துமாக்களுக்கும் நல்லதையோ அல்லது கெடுதலையோ செய்யக் கூடியவையாக இருக்கின்றன. நாம் இக்காலத்திலே கேட்கின்ற பிரசங்கங்களினால் நமது சந்ததியும்கூட பாதிப்புற்று நல்லதாகவோ அல்லது கேடான தாகவோ அமைந்துவிடக் கூடியதாக இருக்கின்றது. நமது வாழ்க்கையில் நாம் பெற்றுக்கொள்ளும் ஆத்மீக பாதிப்புகளே நமது வளர்ச்சிக்குக் காரணமாக அமைகின்றன. நாம் இப்போது எப்படி இருக்கிறோமோ அதேபோலவே நமது குழந்தைகளும் எதிர்காலத்தில் இருக்கப் போகிறார்கள்.

ஆகவே, பிரசங்கம் தயாரித்தலாகிய இவ்விஷயம் நமது ஆத்மீக வாழ்க்கையில் மிக முக்கியமானதொரு இடத்தைப் பெற வேண்டும். ஒரு கிறிஸ்தவ சபையின் வல்லமை அது வாராவாரம் கேட்கும் பிரசங்கங்களினாலேயே வளரக் கூடியதாகவோ அல்லது அழிந்துப் போகக்கூடியதாகவோ இருக்கின்றது. வரலாறு, நாம் சொல்வது எத்தனை உண்மை

என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கிறது. கர்த்தரிடமிருந்து விசுவாசமுள்ள மிகச் சிறந்த பிரசங்கிகளைப் பெற்றுக் கொண்டிருந்தாலொழிய எந்த ஒரு சபையும் உயர முடியாது. சபை வாழ்க்கையில் பிரசங்கம் இரண்டாந்தரமான நிலையை அடையும்போது அச்சபை சீக்கிரமே விழுந்து போகும் நிலை ஏற்படும். சபை வரலாற்றின் இருண்ட காலங்கள் (Middle Ages) இதற்கு சாட்சியாக இருக்கின்றன. பதினெட்டாம் நூற்றாண்டுகளின் மத்தியக் காலப் பகுதியும் இதற்கு உதாரணமாக இருக்கின்றது. அதே போலவே நாம் வாழும் இக்காலத்தின் பெரும் பகுதியும் இரண்டாந்தரமான பிரசங்கங்களையே கேட்டு அனுபவித்து வந்துள்ளது. ஆனாலும், இதற்கு விதிவிலக்காக ஆங்காங்கு சில விசுவாசமுள்ள பிரசங்கிகளை நாம் பார்க்க முடிவது நம் பாக்கியமே.

எந்தவொரு தனிப்பட்ட விதியாலும் ஒரு ஞானியை உருவாக்கிவிட முடியாது. கர்த்தர் சில பிரசங்கிகளுக்குக் கொடுத்துள்ள அதிவிசேஷமான தாலந்துகளை பிரசங்கம் பற்றிய எந்த விரிவுரையும் ஒருவருக்குக் கொடுத்துவிட முடியாது. ஜோர்ஜ் விட்பீல்ட், சார்ளஸ் ஸ்பர்ஜன், மார்டின் லொயிட் ஜோன்ஸ் போன்றவர்களைப்போல பிரசங்கம் செய்யக் கூடியவர்களுக்கு நாம் இப்பகுதியில் தரப்போகும் ஆலோசனைகள் எந்தவொரு பெரிய உதவியையும் செய்துவிட முடியாது. அத்தகைய மனிதர்கள், அவர்கள் பெற்றிருந்த தாலந்துகளைக் கொண்டிராத நம் போன்ற ஆயிரக்கணக்கான மனிதர்களுக்கு உற்சாகத்தைத் தரும்படியாக கர்த்தரால் எழுப்பப்பட்டவர்கள்.

இது உண்மையாக இருந்தபோதும், தனது பிரசங்கத்தைத் தயாரிக்கும் முறையில் அதிக கவனம் செலுத்தும் எந்தவொரு பிரசங்கியும் அவ்வூழியத்தில் முன்னேற்றம் அடைய முடியும் என்பதை நாம் உறுதியாக நம்புகிறோம். அக்கறையோடு கூடிய படிப்பும், ஆர்வத்தோடு கூடிய உழைப்பும் ஒருவரை ஞானியாக மாற்றாவிட்டாலும், அவருடைய பிரசங்கத்தை இன்னுமொரு படிக்கு உயர்த்தத் தவறுவதில்லை. பிரசங்கம் தயாரிக்கும் முறையில் ஒரு பிரசங்கி கவனம் செலுத்துவானானால் அது அவனது பிரசங்கத்தைத் தொடர்ச்சியாக நல்ல நிலையிலும், அவ்வப்போது அதிசிறப்பாக அமையும்படியும் செய்யும். அதே நேரத்தில் ஒரு மனிதன் மிகச் சிறப்பான தாலந்துகளைக்

கொண்டிருந்தாலும் பிரசங்கத்தைத் தயாரிப்பதில் மோசமான முறைகளைக் கையாளுவானானால் தனது முழு ஊழியத்தையும் வீணாக்கிக்கொள்வான்.

தேவ செய்தியை ஆத்துமாக்கள் அறிந்துகொள்வதற்கு கர்த்தரால் தெரிவு செய்யப்பட்டுள்ளதும், பரிசுத்த ஆவியால் பயன்படுத்தப்படுகிறதுமான செய்திப் பரிமாறல் முறை பிரசங்கம் மட்டுமே என்றும் அந்தப் பிரசங்கம் அதிகாரமுள்ளதாக, உலகப்பிரகாரமானதாக இல்லாமல், தேவபயத்துடன் செய்யப்பட வேண்டும் என்றும் இதுவரை பார்த்தோம். இனி இந்தப் பிரசங்கத்தை எப்படித் தயாரித்தளிப்பது என்று ஆராய வேண்டியது அவசியம். பிரசங்கம் உலகத்தில் நாம் பார்க்கிற ஏனைய செய்திப் பரவல் முறைகளையெல்லாம்விட சிறப்பானதும், கர்த்தரால் பயன்படுத்தப்படுகிறதும், ஆத்துமாக்களின் ஆத்மீகத் தேவைகளை நிறைவேற்ற அவசியமானதுமாக இருப்பதால் அதைத் தயாரிக்கும்போது வேதம் எதிர்பார்க்கின்ற சில காரியங்களை நாம் பின்பற்ற வேண்டியது அவசியமாகிறது. அவற்றை இனிப் பார்போம்.

## பிரசங்கப் பொருளைத் தெரிவு செய்தல்

எந்தப் பிரசங்கியும் முதலில் தான் எதைப் பிரசங்கிக்கப் போகிறேன், அதை எந்த வேதப்பகுதியில் இருந்து பிரசங்கிக்கப் போகிறேன் என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். எதையும் ஏற்கனவே தயார் செய்யாது பிரசங்க மேடைக்குப் போனபின் அங்கே ஆவியானவர் திடீரென பிரசங்கப் பொருளைத் தருவார் என்ற பொய்யை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற அநேக பிரசங்கிகளை நாம் அறிவோம். இவர்கள் தம்மையும் ஏமாற்றிக் கொண்டு தங்களுடைய அறிவீனத்தால் அநேக ஆத்துமாக்களின் ஆத்மீக வாழ்க்கையையும் பாதிக்கிறார்கள். ஆனால், மெய்யான பிரசங்கி பிரசங்கங்களை ஏற்கனவே தயார் செய்கிறவனாக இருப்பதால் அவன் முதலில் பிரசங்கத்திற்கானப் பொருளைத் தயார் செய்வதில் தனது முழுக் கவனத்தையும் செலுத்துவான். அதைச் செய்வதற்கு பிரசங்கி முதலில் இரண்டு முக்கியமான காரியங்களில் ஈடுபடுதல் அவசியம்.

## ஜெபம்

பிரசங்கம் தயாரிப்பதற்கு எந்தப் பிரசங்கியும் அதிகமாக ஜெபத்தில் தரித்திருத்தல் அவசியம். சிலர், ஜெபம் செய்வதோடு

நின்று விடுவார்கள். பிரசங்கத்தைக் கவனத்தோடு தயாரிப்ப தில்லை. அவர்களுடைய பிரசங்கம் ஆவிக்குரியதாக இருக்காது. பிரசங்கி முதலில் பிரசங்கப் பொருளுக்காக தன்னுடைய ஜெபத்தில் கர்த்தரை நாட வேண்டும். பிரசங்கங்களை ஆசீர்வதிக்கும் கர்த்தரே நாம் பிரசங்கிக்க வேண்டிய பிரசங்கத் திற்கான பொருளையும் காட்டித் தருகிறவராக இருக்கிறார். இதைக் கர்த்தர் எப்படிச் செய்கிறார் என்பதை விளங்கிக் கொள்வது அவசியம். நாம் அன்றாடம் வேதத்தைப் படிக்கும் போது ஜெபத்தோடு சிந்தித்துப் படிக்க வேண்டும். அப்படிக் கருத்தோடு படிக்கும்போது அந்தப் பகுதிகளில் எந்த நூலில் இருந்து, எந்தப் பகுதியில் இருந்து பிரசங்கிக்க வேண்டு மென்பதைக் குறித்து நாம் ஜெபத்தோடு சிந்திக்க வேண்டும். அப்படி ஜெபத்தோடு சிந்திக்கின்றபோது கர்த்தர் நாம் பிரசங் கிக்க வேண்டிய பகுதியையும், பொருளையும் குறித்து நம்மை வழிநடத்துவார். இது மேஜிக் காட்சி போல திடீரென்று நடக் கின்ற ஒரு காரியமல்ல. நாம் நேரத்தை செலவிட்டு அன்றாடம் தொடர்ந்து ஜெபத்தோடு வேதத்தைப் படிக்கின்ற போது அதன் மூலமாக கர்த்தர் நமக்குத் தருகின்ற ஞானம். ஜெபித்துப் படிக்காத பிரசங்கியைக் கர்த்தர் வழி நடத்த மாட்டார்.

## ஆத்துமாக்களின் தேவை

பிரசங்கப் பொருளைத் தெரிந்துகொள்வதில் பிரசங்கிகள் அதிக கவனம் செலுத்துவது அவசியம். முக்கியமாக சபை களில் போதகர்களாக இருப்பவர்கள் தொடர்ந்து தம் மக்களுக்கு ஆத்மீக உணவளிக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டிருப்பதால், ஆத்துமாக்களின் தேவைக்கேற்ப உண வளிக்க வேண்டியது அவசியம். பலவீனமானவர்களுக்கும், பலமுள்ளவர்களுக்கும், இளைஞர்களுக்கும், சிறுபிள்ளை களுக்கும் அவரவர் தேவைக்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவிதத்தில் முழு வேதத்தில் இருந்தும் தகுந்த போதனைகளை அளிப்பது அவசியம். அத்தோடு ஒரேவிதமான உணவை எப்போதும் கொடுக்க முடியாது. அதேபோல ஒரே பொருளை ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து பிரசங்கிக்க முடியாது. கேட்பவர்களுக்கு அப்படிப்பட்ட பிரசங்கம் சலித்துப் போகும். வேதத்தின் பல பகுதிகளில் இருந்தும் சகல போதனைகளையும் ஆத்துமாக் களின் வளர்ச்சிக்குத் தேவையான விதத்தில் பிரசங்கிக்க வேண்டும். சுவிசேஷம், திரித்துவம், இயேசு, கிறிஸ்து,

கிருபையின் போதனைகள், வேதத்தின் தன்மைகள், கர்த்தரின் குணாதிசயங்கள், இரட்சிப்பின் நிச்சயம், மரணம், பரலோகம், நரகம், கிறிஸ்துவின் வருகை என்று வேதம் போதிக்கும் பல்வேறு சத்தியங்களையும் முறையாக முறைப்படுத்தி பிரசங்கிக்க வேண்டியது பிரசங்கியினுடைய கடமை. அத்தோடு ஒவ்வொரு வேத நூலையும் முறையாக வியாக்கியானம் செய்ய வேண்டியதும் பிரசங்கியின் பொறுப்பு. தங்களுடைய சபை மக்களை நன்றாக அறிந்து வைத்திருக்கும் போதகர்கள் பிரசங்கங்களைத் தயாரிக்கும்போது அவர்களை நினைவில் கொண்டே எப்போதும் பிரசங்கங்களைத் தயார் செய்வார்கள்.

## பிரசங்கப் பகுதியை ஆராய்தல்

பிரசங்கத்திற்கான வேதப்பகுதியையும், பொருளையும் கர்த்தரின் வழிநடத்தல் மூலமாக தெரிந்து கொண்டபின் பிரசங்கி பிரசங்கத்தைத் தயாரிக்கும் வேலையில் ஈடுபட வேண்டும். இதற்காக ஒவ்வொரு நாளும் பிரசங்கி தகுந்த நேரத்தை ஒதுக்குவது அவசியம். எவருடைய தலையீடும், இடையூறும் இல்லாத நேரத்தில் சில மணி நேரங்களை இதற்காக ஒதுக்கி அமைதியான ஓர் இடத்தில் இருந்து பிரசங்கத் தயாரிப்பில் ஈடுபட வேண்டும். பிரசங்கத் தயாரிப்பில் ஈடுபடுகிறபோது எடுக்க வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகளை இனிப் பார்ப்போம்.

## பிரசங்கம் தயாரிக்கும்போது எடுக்க வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகள் (Initial Discipline)

### 1. அப்பகுதி எங்கு ஆரம்பித்து எங்கு முடிகிறது (Context)

பிரசங்கி பிரசங்கத்தைத் தயாரிக்கும்போது சில ஆரம்ப நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். முதலில் பிரசங்கம் செய்வதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள வேதப்பகுதி எத்தகைய சந்தர்ப்பத்தில் அமைந்திருக்கிறது என்பதை ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டும். அதாவது, அதைப் பலமுறைப் படித்து அந்தப் பகுதி எங்கே ஆரம்பித்து எங்கே முடிகிறது என்று பார்ப்பது அவசியம். எப்போதும் அரை குறையாக தொடர்பில்லாத ஒரு பகுதியை பிரசங்கிப்பதற்கு தெரிந்துகொள்ளக் கூடாது. பிரசங்கிக்கத் தெரிந்துகொள்ளப்

பட்டிருக்கும் வேதப்பகுதிக்கு ஆரம்பமும் முடிவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு வேத வசனமும் அல்லது வசனங்களும் எப்போதும் ஒரு குறிப்பிட்ட பகுதியோடு தொடர்புடைய தாகவே காணப்படும். அந்த வசனமோ, வசனங்களோ காணப் படும் வேதப்பகுதி எது என்பதைக் கண்டுபிடிப்பதுதான் பிரசங்கியின் ஆரம்ப வேலையாக இருக்க வேண்டும்.

முக்கியமாக, ஒரு வசனத்தை மட்டும் எடுத்துக்கொண்டு பிரசங்கிப்பது அவ்வளவு நல்லதல்ல. இன்று அநேகத் தமிழ் பிரசங்கிகள் மத்தியில் இந்தப் பழக்கத்தைக் காணலாம். ஒரு வசனத்தை மட்டும் எடுத்துக்கொண்டு அந்த வசனம் காணப்படும் வேதப்பகுதியை ஒரு முறையாவது ஆராயாது அந்த வசனத்தைப் பயன்படுத்தி தாம் நினைத்ததை சொல்லுவது பல தமிழ் பிரசங்கிகளின் தொழிலாக இருக்கின்றது. எந்த ஒரு வார்த்தைப் பிரயோகமும் வசனமும் வேதத்தில் அவை காணப்படும் வேதப்பகுதியோடு தொடர்புடையதாக இருக்கின்றன. ஆகவே, எந்த வசனத்திற்கும் அது காணப்படும் வேதப்பகுதியோடு தொடர்புபடுத்தி ஆராயாமல் விளக்கம் கொடுப்பது அநீதியான காரியம். உதாரணத்திற்கு ரோமர் 15:1, "அன்றியும் பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும்" என்று எழுதியிருக்கிறது. இந்த வசனத்தைப் பிரசங்கப் பொருளாக எடுத்துக்கொண்டு, பலமுள்ளவர்கள் பலவீனருக்குத் துணையாக இருக்க வேண்டும் என்ற பொருளில் பிரசங்கம் செய்கிறவர்கள் அநேகர். அவர்கள் தொடர்ந்து பலமுள்ளவர்கள் எந்தவகையில் பலவீனருக்கு துணை செய்ய வேண்டும் என்று பல காரணங்களைக் கூறிப் பிரசங்கம் செய்வார்கள். இதில் என்ன தவறு என்று பார்ப்போம். பலமுள்ளவர்கள் பலவீனருக்கு எப்படி உதவியாக இருக்க வேண்டும் என்று பிரசங்கி பல நல்ல ஆலோசனைகளைக் கொடுத்திருந்தாலும் அவர் விடுகிற மிகப் பெரிய தவறு அந்த வசனத்தை அது காணப்படும் வேதப்பகுதியின் அடிப்படையில் பிரசங்கிக்காததுதான். அந்த வசனம், "அன்றியும்" என்ற வார்த்தையுடன் ஆரம்பமாகிறது என்பதை ஒரு நல்ல பிரசங்கி முதலில் கவனிப்பான். அடுத்ததாக, அதற்குக் காரணம் என்ன என்று ஆராய்வான். அப்படி ஆராய்கிறபோது, அந்த வார்த்தை அதற்கு முன்னால்

காணப்படும் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்ற போதனைகளோடு இந்த வசனத்தை இணைக்கிறது என்பதை அறிந்துகொள்வான். அவன் தொடர்ந்து அந்த வசனம் காணப்படுகின்ற பகுதி முழுவதையும் ஆராய்கிறபோது, அவ்வசனம் பொதுவாக பலமுள்ளவர்கள் பலவீனருக்கு செய்ய வேண்டிய உதவிகளைப் பற்றி விளக்காமல் விசுவாசிகளுக்கு மத்தியில் ஏற்பட்டிருந்த ஒரு பிரச்சனையைக் குறித்தும், அந்தப் பிரச்சனையை எப்படித் தீர்ப்பது என்பதற்கு பவுல் தந்துள்ள ஆலோசனைகளையுமே விளக்குகின்றது என்பதையும் அறிந்துகொண்டு பிரசங்கத் தயாரிப்பில் ஈடுபடுவான்.

இதனால்தான் ஒரு வசனத்தை மட்டும் பயன்படுத்தி பிரசங்கம் செய்யும் பழக்கத்தைக் கைவிடுவது நல்லது. வேதத்தில் ஆழ்ந்த அறிவில்லாத நம்முடைய மக்களுக்கு வேத சத்தியங்களை முறையாகப் போதிக்க ஒரு வசனத்தை மட்டும் பயன்படுத்தி பிரசங்கிக்கும் முறை உதவாது. எத்தனை நல்ல காரியங்களை ஒரு வசனத்தை மட்டும் பயன்படுத்தி சொல்ல முடிந்தாலும் நாம் சொல்லுகின்ற அனைத்தும் அந்த வசனம் காணப்படும் பகுதியோடு சம்பந்தப்படாமல் இருந்தால் அதனால் எந்தவிதமான பலனும் இல்லை. ஆகவே பல வசனங்களை அல்லது பல பத்திகளைக் கொண்ட ஒரு வேதப்பகுதியை பிரசங்கிக்க எடுத்துக்கொள்வது எப்போதுமே பலன் தரும். அதாவது, பிரசங்கப் பகுதி ஓர் அதிகாரம் அல்லது அந்த அதிகாரத்தின் அரைவாசிப் பகுதியாகவாவது இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். இதை ஓர் உதாரணத்திற்காகவே சொல்லுகிறேன். முக்கியமாக அப்படி எடுத்துக்கொள்கிற பகுதிக்கு ஆரம்பமும் முடிவும் இருக்க வேண்டும்.

பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் முதலாவது அதிகாரத்தில் இருந்து பிரசங்கிக்கப் போவதாக வைத்துக் கொள்வோம். அது எங்கு தொடங்கி எங்கு முடிகின்றது என்று முதலில் பார்ப்பது அவசியம். இந்தப் பகுதியில் பவுல் கர்த்தரிடம் செய்யும் ஜெபத்தைப் பார்க்கிறோம். மூல மொழியில் இந்தப் பகுதியில் முற்றுப் புள்ளி இல்லாமல் முதல் 14 வசனங்களையும் பவுல் எழுதியிருக்கிறார். அதாவது 14 வசனங்கள் தொடர்ச்சியாக ஒரே வசனமாக இருக்கின்றன. இதைத் தெரிந்துகொள்ளாமல் இந்தப் பகுதியில் இருந்து

பிரசங்கிக்கப் போவது ஆபத்து. இந்தப் 14 வசனங்களிலும் பவுல் தனது ஜெபத்தில் இரட்சிப்பின் பலன்களாக விசுவாசிகளுக்கு கர்த்தர் அளித்திருக்கும் ஆசீர்வாதங்களை படிப்படியாக அடுக்கி வைக்கிறார். ஆகவே, இந்தப் பகுதியின் ஆரம்பம் 1 ஆம் வசனத்தில் தொடங்கி 14 ஆம் வசனத்தில் வந்து முடிகின்றது. இதை உதாசீனப்படுத்திவிட்டு இந்தப் பகுதியில் இருந்து பிரசங்கிப்பது கர்த்தரின் வார்த்தையை அலட்சியப்படுத்தும் செயலாகவே இருக்கும்.

சுவிசேஷ நூல்களில் காணப்படும் உவமைகளில் இருந்து பிரசங்கிக்கும்போது அந்த உவமை எங்கு ஆரம்பித்து எப்படி முடிகின்றது என்று பார்க்க வேண்டும். முக்கியமாக உவமை களுக்கான அர்த்தம் அதன் ஆரம்ப வசனத்திலோ அல்லது அந்தப் பகுதியின் கடைசி வசனத்திலோ கொடுக்கப் பட்டிருக்கும். உவமை காணப்படும் பகுதியின் ஆரம்பத்தையும், முடிவையும் அலட்சியப்படுத்தினால் அந்த உவமையையே புரிந்துகொள்ள முடியாமல் போய்விடும். அதுமட்டுமல்லாமல் சில வேளைகளில் இயேசு கிறிஸ்து தான் ஓர் உவமையின் மூலமாகப் போதிக்கப்போவதாக சொல்லாமலேயே உவமையைச் சொல்லத் தொடங்கியிருக்கிறார். அது உவமை என்பதை அது காணப்படும் பகுதி முழுவதையும் படித்தால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். உதாரணத்திற்கு மத்தேயு 13 ஆம் அதிகாரத்தில் காணப்படும் உவமைகளை அவை உவமைகள் என்பதை “அவர் அநேக விஷயங்களை உவமைகளாக அவர்களுக்கு சொன்னார்” என்று 3 ஆம் வசனத்தில் இருந்தும் 18, 24, 31, 33 ஆகிய வசனங்களில் இருந்தும் தெரிந்துகொள்கிறோம். இந்த வசனங்கள் அங்கே தரப்பட்டுள்ள ஒவ்வொரு உவமையும் எங்கு ஆரம்பித்து எங்கு முடிகின்றன என்பதைத் தெரிந்துகொள்ள உதவுகின்றன.

ஆனால் சில வேளைகளில், “நான் இப்போது உவமையின் மூலமாக ஒரு கருத்தை விளக்கப் போகிறேன்” என்று சொல் லாமலேயே உவமையைத் தந்திருக்கிறார் இயேசு கிறிஸ்து. உதாரணத்திற்கு மத்தேயு 25 ஆம் அதிகாரத்தை எடுத்துக் கொள்வோம். இங்கே தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்த போதனைகள் காணப்படுகின்றன. இந்தப்பகுதியில் தேவனுடைய இராஜ்யத்தை விளக்குவதற்காக இயேசு சில உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். இந்த அதிகாரத்தின்

1 மற்றும் 14 ஆம் வசனங்களில் காணப்படும் "ஒப்பாயிருக்கிறது" "ஒப்புக்கொடுத்ததுபோல்" ஆகிய வார்த்தைகளின் மூலமாக மட்டுமே இவை உவமைகள் என்று அறிந்துகொள்ள முடிகின்றது. இப்படி இன்னும் பல உதாரணங்களைக் காட்ட முடியும். ஆகவே, ஒவ்வொரு வேதப்பகுதியையும் ஆராய்ந்து அவை எங்கு ஆரம்பித்து எங்கு முடிகின்றன என்று பார்ப்பது அவசியம், தொடர்பற்றதாகக் காணப்படும் ஒரு பகுதியில் இருந்து பிரசங்கிக்க முயற்சி செய்தால் அந்தப் பகுதி சொல்லும் கருத்தையே புரிந்துகொள்ள முடியாது. நமது பிரசங்கமும் குழப்பத்தில் போய் முடிந்துவிடும்.

## 2. அப்பகுதியின் இலக்கிய அம்சத்தை ஆராய வேண்டும் (Literary Style)

அடுத்ததாக, நாம் பிரசங்கிக்க எடுத்துக்கொண்டிருக்கும் வேதப்பகுதி எத்தகைய இலக்கிய வகையைச் சேர்ந்தது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். வேதத்தில் பல்வேறு இலக்கிய வகைகள் காணப்படுகின்றன. அதில் வரலாற்று நூல்கள் இருக்கின்றன. தீர்க்கதரிசன நூல்கள் உள்ளன. போதனைகளை அளிக்கும் பகுதிகளைப் பார்க்கிறோம். உவமைகளைக் காண்கிறோம். சங்கீதங்களைப் பார்க்கிறோம். இந்த முறையில் பலவிதமான இலக்கியங்களைக் கொண்டதாக வேதம் அமைந்திருக்கின்றது. ஆகவே, வேத போதனைகளை சரியாக விளங்கிக்கொள்ள பிரசங்கத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் வேதப்பகுதியின் இலக்கிய அமைப்பு பற்றிய அறிவு அவசியமாகிறது. அது உவமையா? வரலாறா? தீர்க்கதரிசனமா? சங்கீதமா? அடையாள மொழியா? என்று கேள்வி எழுப்பி பிரசங்கப்பகுதி எந்த இலக்கிய வகையைச் சேர்ந்தது என்று தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு தீர்மானித்துக்கொண்ட பிறகுதான் அந்தப் பகுதியை விளங்கிக் கொள்ளப் பயன்படுத்த வேண்டிய விதிமுறைகளைப் பயன் படுத்தி அதைப் படிக்க ஆரம்பிக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒரு பகுதி உவமையாக இருப்பின் அது உவமை என்பதை அறிந்துகொண்டபின் அதன் போதனைகளை ஆராய முற்பட வேண்டும். உவமையாக அமைந்து காணப்படும் ஒரு வேதப்பகுதிக்கு நாம் எழுத்துபூர்வமாக ஒருபோதும் விளக்கம் கொடுக்க முடியாது. முதலில் உவமையின் மூலம் முக்கியமாகப்

போதிக்கப்படும் சத்தியம் என்ன என்பதை அறிய வேண்டும். உவமையின் எல்லாப் பகுதிகளுக்கும் பொருள் கொடுக்க முயற்சி செய்யக்கூடாது.

இதே முறையில்தான் தீர்க்கதரிசனமாக அமைந்திருக்கும் வேதப்பகுதிகளும் வெளிப்படுத்தின விசேஷமும் அநேக அடையாள மொழிகளைக் (Symbolic language) கொண்டிருக்கின்றன. இவற்றை நாம் எழுத்துபூர்வமாக விளங்கிக்கொள்ள முடியாது. அடையாள மொழிகளைப் புரிந்துகொள்வதற்குப் பயன்படுத்த வேண்டிய விதிகளைப் பயன்படுத்தி அவற்றின் மூலம் போதிக்கப்படும் சத்தியத்தை விளங்கிக்கொள்ள வேண்டும். சங்கீதங்களும், நீதிமொழியும் பாடல் இலக்கிய வகையைச் சேர்ந்தவை. ஏசாயா போன்ற தீர்க்கதரிசன நூல்களிலும் பாடல்களைப் பார்க்கலாம். இந்தப் பகுதிகளைப் பிரசங்கப் பொருளாக எடுத்துக்கொண்டால் அந்த இலக்கியத்தில் காணப்படும் Parallalism என்று அழைக்கப்படும் தன்மையைக் கவனித்துப் படிக்க வேண்டும். அதாவது, ஒரு வசனத்தில் சொல்லப்பட்டுள்ள கருத்து அடுத்த வரியில் வித்தியாசமான விதத்தில் சொல்லப்பட்டிருக்கும். ஒரே கருத்து இரண்டு வரிகளில் வெவ்வேறு விதத்தில் சொல்லப்படுவதே Parallalism.

வரலாற்றம்சங்களைக் கொண்டு காணப்படும் பகுதிகளை, அவை வரலாறு என்ற எண்ணத்தோடு ஆராய்ந்து படிக்க வேண்டும். வரலாறு நடந்து முடிந்த நிகழ்ச்சி. அப்போஸ்தலருடைய நடபடிகள் வரலாறு என்பதை உணராது அலட்சியம் செய்ததால்தான் தவறான பெந்தகொஸ்தே போதனையான "ஆவியின் அபிஷேகம்" உருவானது. வரலாற்று நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. ஆகவே, பிரசங்கிக்கப்போகும் வேதப்பகுதிகளை முதலில் அவை எத்தகைய இலக்கிய வகையைச் சேர்ந்தவை என்று ஆராய மறக்கக்கூடாது.

### 3. இலக்கண அமைப்பு

அடுத்ததாக, பிரசங்கிப்பதற்கு எடுத்துக்கொண்டுள்ள வேதப்பகுதியின் இலக்கணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அப்பகுதியை ஆராய வேண்டும். இலக்கணமில்லாத மொழிகள்

உலகத்தில் இல்லை. வேத போதனைகள் அத்தனையும் நமது மொழியில் பல்வேறு இலக்கியங்களாக, இலக்கணக் கட்டுக் கோப்போடு தரப்பட்டுள்ளன. ஆகவே, இலக்கணத்தை நாம் அலட்சியப்படுத்த முடியாது.

பிரசங்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள வேதப் பகுதியை ஆராயும் போது, அதன் வசனங்களில் காணப்படும் வார்த்தைப் பிரயோகங்களையும், வசனங்களை ஒன்றோ டொன்று தொடர்புபடுத்தும் வார்த்தைகளையும், அவை பயன்படுத்தப்பட்டிருக்கும் முறையையும், கவனத்தில் கொள்வது அவசியம். அத்தோடு அந்தப் பகுதியில் சொல்லப் பட்டிருக்கும் உண்மைகள் கடந்த காலத்தைச் சேர்ந்தவையா, நிகழ்காலத்தோடு சம்பந்தமுடையவையா அல்லது எதிர் காலத்தைக் குறிப்பவையா என்று ஆராய்வதும் அவசியம். இதையெல்லாம் அறிந்துகொள்ள வசனங்களைத் தொடர்பு படுத்துகின்ற வினைச்சொற்கள் (verbs), இடைச்சொற்கள் (particles), தெரிநிலை வினைகள், விகுதிகள் (termination), உருபுகள் ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தி, அவை எந்தவிதத்தில் வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

புதிய ஏற்பாடு எழுதப்பட்டுள்ள கிரேக்க மொழியில் இடைச்சொற்கள் (particles) ஒரு பொருளை அழுத்தத்தோடு வலியுறுத்திச் சொல்லுவதற்காக அடிக்கடி பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. அவற்றை நாம் கவனிக்காமல் விட்டு விட்டால் அவை காணப்படும் வேதப் பகுதியின் போதனையைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியாது. உதாரணத்திற்கு, யோவான் *4:4* வசனத்தில் “அவர் சமாரியா நாட்டின் வழியில் போக வேண்டியதாயிருந்தபடியால்” என்றிருப்பதை வாசிக்கிறோம். எழுத்துபூர்வமாக மொழிபெயர்ப்பின்படி அவர் சமாரியா நாட்டின் வழியில் “நிச்சயம்” போகவேண்டி யிருந்தபடியால் என்றிருக்க வேண்டும். ஏனெனில், இந்த வசனத்தில் கிரேக்க மொழியில் dei (particle of necessity) என்ற இடைச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது இயேசு அந்தப் இடத்திற்கு கர்த்தருடைய பராமரிப்பின்படி நிச்சயமாக போக வேண்டியிருந்தது என்ற சத்தியத்தை வெளிப்படுத்து கிறது. இந்த இடைச்சொல் தமிழ் மொழிபெயர்ப்பில் “போக வேண்டியிருந்தபடியால்” என்ற வார்த்தையில் மறைந்து

காணப்படுகின்றது. இதேவிதமாகத்தான் மாற்கு 8:31 வசனத்திலும் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டு, இயேசு நிச்சயமாக சிலுவையில் மரிக்க வேண்டியிருந்தது என்ற சத்தியத்தை விளக்குகிறது. ஆனால், தமிழ் மொழிபெயர்ப்பு களில் எல்லா இடங்களிலும் இந்த அழுத்தம் வெளிப்படை யாகத் தெரியாமல் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. உதாரணத்திற்கு, லூக்கா 19:4 வசனத்தையும் கவனிக்கவும். இடைச்சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும் விதத்தைக் கவனித்துப் படிப்பது வேத சத்தியங்களைத் தெளிவாக விளங்கிக்கொள்ள உதவும்.

அத்தோடு, அந்த வேதப்பகுதியில் காணப்படும் தன்வினை (verb denoting direct action), பிறவினை (causative verb), செய்வினை (active verb), செயப்பாட்டு வினைகளுக்கும் (passive verb) முக்கியத்துவம் கொடுத்து அவை பயன்படுத்தப்பட்டிருக்கும் முறைகளைக் கவனித்துப் படிக்க வேண்டும். “ஆனால்,” “ஆகையால்,” “ஆதலால்,” “அன்றியும்,” “ஆகவே,” “அந்தப்படி,” “எப்படியென்றால்” போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும் விதத்தையும் கூர்ந்து கவனித்தல் அவசியம். அவை வசனங்களைத் தொடர்புபடுத்தி வேதப் பகுதியில் விளக்கப்படும் உண்மைகள் எவ்வாறு தரப்பட்டிருக் கின்றன என்பதை விளங்கிக்கொள்ளத் துணை செய்கின்றன. அத்தோடு சொல்லியலுக்கும் (Etymology) முக்கியத்துவம் கொடுத்து ஒரு சொல் எந்தத் திணை, பால், இடம், வேற்றுமையைக் கொண்டு அமைந்திருக்கின்றது என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். 1 கொரிந்தியர் 13:10 வசனத்தில் வேதத்தைக் குறிக்கும் “நிறைவானது” என்ற வார்த்தை பொருட்பாலில் (neuter gender) தரப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தை வேதத்தைத்தான் குறிக்கிறது என்பதைத் தீர்மானிக்க இது எந்தப் பாலில் அமைந்திருக்கிறது என்பதையும் கவனிக்காமல் இருக்க முடியாது.

மார்டின் லொயிட் ஜோன்ஸ் என்ற பிரசங்கி எபேசியர் 2:4 வசனத்தின் “தேவனோ” என்ற ஒரு வார்த்தையைப் பயன்படுத்தி செய்த ஒரு பிரசங்கத்தை எடுத்துக்கொள்வோம். (ஒரு வார்த்தையைப் பயன்படுத்தி அவர் பிரசங்கித்திருந்த போதும், பிரசங்கம் அந்த வார்த்தைக் காணப்படும் முழு வேதப்பகுதியின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது). இந்த

வார்த்தை ஆங்கில வேதத்தில் "But God" என்று இருக்கின்றது. But (ஆனால்) என்ற வார்த்தை தமிழ் வேதத்தில் "தேவனோ" என்ற வார்த்தைக்குள் அடங்கியிருக்கிறது. "ஆனால் தேவன்" என்றும் அதனைத் தமிழில் எழுதலாம். இந்த இடைச்சொல் இந்தப் பகுதியில் மிகவும் முக்கியமானது. பார்ப்பதற்கு சாதாரணமாகத் தோன்றும் இந்த வார்த்தை அதற்கு முன்னால் காணப்படும் 3 வசனங்களை அதற்குப் பின்னால் வரும் வசனங்களோடு இணைக்கின்றது. அத்தோடு, முன்னால் உள்ள வசனங்களில் கூறப்பட்டுள்ள உண்மைகளை வலியுறுத்தி விளக்குவதற்கும் உறுதுணையாக இருக்கின்றது. எபேசியர் 2:1-3 வரையுள்ள வசனங்கள் விசுவாசிகள் எத்தகைய மோசமான பாவிகளாக இரட்சிப்பை அடையுமுன் இருந்திருக்கிறார்கள் என்பதை விளக்குகின்றன 4 ஆம் வசனம் அத்தகைய பாவிகளைக் கர்த்தர் எப்படிக் கரை சேர்த்தார் என்பதை விளக்க ஆரம்பிக்கிறது. இவ்வசனத்தில் "ஆனால்" என்ற இடைச்சொல் வசனங்களை இணைக்கும் வெறும் இடைச் சொல்லாக மட்டும் இல்லாமல் மனிதன் பாவத்தில் மூழ்கிக் கரை சேர முடியாத நிலையில் இருந்தபோது கர்த்தர் இடைப் பட்டு அவனை எப்படிக் கரை சேர்த்தார் என்பதையும் அழுத்திச் சொல்லுவதற்கு உதவுகிறது. இந்த வார்த்தையை நாம் அலட்சியப்படுத்தினால் இந்தப் பகுதி போதிக்கும் சத்தியத்தின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடியாமல் போய்விடும். மார்டின் லொயிட் ஜோன்ஸ் இலக்கணத்துக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் இந்தப் பகுதியில் "ஆனால்" என்ற வார்த்தைப் பயன்படுத்தப்பட்டிருந்த விதத்தைப் புரிந்துகொண்டு இப்பகுதி போதிக்கும் சத்தியத்தை அருமையாக பிரசங்கித் திருந்தார். அந்தப் பிரசங்கமும் பலராலும் பாராட்டப்பட்ட, ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு பிரசங்கமாக இருந்தது.

பிரசங்கத்திற்காக தெரிந்தெடுத்துள்ள வேதப்பகுதியின் இலக்கண அமைப்பை ஆராயும் போது எத்தகைய அழுத்தத் தோடு அதன் கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள முடியும். அப்பகுதியின் இலக்கண அமைப்பைக் கவனிக்காவிட்டால் அந்தப் பகுதி தரும் போதனையையே நாம் மாற்றிச் சொல்லிவிடக்கூடிய ஆபத்து உண்டு. உதாரணத்திற்கு, எபேசியர் 1:3-14 வரையுள்ள வசனங்களை மறுபடியும் பார்ப்போம். அதில் சொல்லப்படும்

இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள் கடந்த காலத்தில் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு செலுத்திய பலியின் காரணமாக இப்போது நிகழ்காலத்தில் விசுவாசியாக இருந்து நாம் அனுபவிக்கும் பலன்களை விளக்குகின்றன. அத்தோடு, அந்தப் பகுதியில் எதிர்காலத்தில் நாம் பரலோகத்தில் அனுபவிக்கப் போகும் ஆசீர்வாதங்களும் சுட்டிக் காட்டப்படுகின்றன. "பரிசுத்த ஆவியினால் அவருக்குள் முத்திரை போடப் பட்டீர்கள்" என்று 13 ஆம் வசனத்தில் கூறப்பட்டுள்ள உண்மை ஏற்கனவே நம்மில் நடந்து முடிந்துவிட்டதும், இப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறதுமான ஆவியின் ஆசீர் வாதத்தைச் சுட்டிக்காட்டுகிறது. "விசுவாசிகளானபோது . . . பரிசுத்த ஆவியினால் முத்திரை போடப்பட்டீர்கள்" என்ற வார்த்தைப் பிரயோகத்தில் "விசுவாசிகளானபோது" என்பதற்கும், "முத்திரை போடப்பட்டீர்கள்" என்பதற்கும் இடையில் இலக்கணத்தின்படி கால இடைவெளி இருப்பதாகவும், விசுவாசிகளானவுடன் கிறிஸ்தவர்கள் ஆவியின் முத்திரையை உடனேயே அடைவதில்லை என்றும் ஒரு போதனை இருக்கிறது. இது சரியா? தவறா? என்று இலக்கணம் தெரியாமல் நாம் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியாது. உண்மையில் இலக்கணத்தின்படி அப்படி ஓர் இடைவெளி அந்த வார்த்தைகளுக்கிடையில் இல்லை. விசுவாசிகளானபோது நமக்குக் கிடைத்த அனுபவத்தையே அந்த வார்த்தைகள் விளக்குகின்றன. ஆகவே அந்தப் போதனை தவறானது.

வேதத்தில் பல பகுதிகளில் காணப்படும் உணர்ச்சிக் குறிப்பு வினாக்களையும் (Rheterocal questions) நாம் கவனத்தில் எடுப்பது அவசியம். 1 கொரிந்தியர் 12:29, 30 ஆகிய வசனங்கள் இதற்கு நல்ல உதாரணம். இங்கே பவுல் கேட்கும் கேள்விகளுக்கு "இல்லை" என்ற பதில் எதிர்பார்க்கப்படுகிறது. இதை விளங்கிக்கொள்ளாமல் இந்தப் பகுதியின் போதனையை அறிந்துகொள்ள முடியாது.

மேலும் வேதத்தில் பல போதனைகள் கட்டளைகளாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன (Imperative). பிரசங்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் பகுதியில் காணப்படும் வசனங்களையும், அவற்றின் இலக்கண அமைப்பையும் ஆராய்வதன் மூலம் மட்டும்தான் அவற்றை நாம் அறிந்துகொள்ள முடியும். அந்தந்த வேதப்பகுதிகளின் இலக்கண அமைப்பை

ஆராயாமல் வேதபோதனைகளை விளங்கிக்கொள்ளவோ, பிரசங்கம் செய்யவோ முடியாது. இலக்கணத்தை அலட்சியப் படுத்தினால் வேதம் நமக்குப் புரியாத நூலாக இருந்துவிடும். ஆகவே, இலக்கணத்துக்கு மதிப்புக் கொடுத்து பிரசங்கப் பகுதியை வாசித்து விளங்கிக்கொள்வது அவசியம். இதற் கெல்லாம் நேரத்தை செலவிட்டுப் படிக்க பிரசங்கி ஒரு போதும் தயங்கக்கூடாது.

## 4. மொழிக்கு அழகு சேர்க்கும் அணிகள்

உலகத்தின் எல்லா மொழிகளுக்கும் அணிகளும், பழமொழிகளுமே அழகு செய்கின்றன. அதேபோல் வேதமும் தன்னுள் அது எழுதப்பட்ட காலத்து மொழிக்குரிய பழமொழி களையும், பல அணிவகைகளையும் கொண்டு காணப்படு கின்றது. உவமையணி, உருவக அணி, வஞ்சப் புகழ்ச்சியணி, உயர்வு நவிற்சி அணி போன்றவற்றை வேதம் முழுவதும் பார்க்கலாம். இவை மொழியையும், வேதத்தையும் அழகு படுத்துவதோடு வேதசத்தியங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளத் துணைபுரிகின்றன. ஆகவே, பிரசங்கி தான் பிரசங்கிப்பதற்கு எடுத்துக் கொண்டுள்ள வேதப்பகுதிகளில் காணப்படும் அணிகள் பயன்படுத்தப்பட்டிருக்கும் விதத்தை ஆராய்ந்து விளங்கிக்கொள்ள வேண்டும்.

உதாரணத்திற்கு, பவுலினுடைய எழுத்துக்களில் பல இடங்களில் வஞ்சப் புகழ்ச்சியணி (Irony) பயன்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம். 1 கொரிந்தியர் 14 அதிகாரத்தில் இந்த அணி அழகாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதை அடையாளம் கண்டுகொள்ளாவிட்டால் இந்தப் பகுதியை நாம் தவறாக விளங்கிக்கொள்ள நேரிடும். 1 கொரிந்தியர் 14:12 வசனத்தில் அந்நியபாஷை பேசுகிறவன் அதற்கு விளக்கம் கிடைப்பதற்காக ஜெபிக்க வேண்டும் என்று பவுல் சொல்லு கிறார். ஏனெனில் அந்நியபாஷை ஒரு மொழியில் இருப்பதால் அதைக் கேட்பவர்கள் புரிந்துகொள்ள அதற்கு விளக்கம் சொல்லப்பட வேண்டும். இதை மேலும் விளக்கும் பவுல் அடுத்த வசனத்தில் தான் அந்நியபாஷையில் பேச நேரிட்டால் அது ஆவியானவரால் தன்னில் நடக்கிற காரியமாக இருந்தாலும் அதற்குரிய விளக்கம் தனக்கு இல்லாமலிருக்கும் என்கிறார். பேசப்பட்ட பாஷையின் மூலம் சொல்லப்பட்ட

கருத்து விளங்காவிட்டால் அதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை என்கிறார் பவுல். இதை விளக்குவதற்காக 15 ஆம் வசனத்தில், "இப்படியிருக்க செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம்பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம்பன்ணுவேன், நான் ஆவியோடும் பாடுவேன்; கருத்தோடும் பாடுவேன்" என்கிறார். இந்த வசனத்தில் பவுல், தான் அந்நியபாஷையில் விண்ணப்பம் செய்யப்போவதாகவும், பாடப்போவதாகவும் சொல்லவரவில்லை. இது வஞ்சப் புகழ்ச்சியணி. இதில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது ஒரு கருத்தும், ஆழ்ந்து சிந்திக்கும்போது நேர் எதிர்மாறான பொருளும் தொனிக்கும் வகையில் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வசனத்தில் பவுல், தான் எதைப் பேசினாலும் கருத் தில்லாமல் (பொருள் இல்லாமல்) பேசமாட்டேன் என்கிறார். இந்த வசனத்தில் வஞ்சப்புகழ்ச்சியணி பயன்படுத்தப்பட்டிருப் பதை அறியாத பெந்தகொஸ்தே இயக்கத்தைச் சேர்ந்தோர், பவுல் சொல்வது போல் நாம் ஆவியிலும் விண்ணப்பிக்கலாம், ஆவியிலும் பாடலாம் என்ற தவறான போதனையை உருவாக்கியிருக்கிறார்கள். உண்மையில் 16, 17 வசனங்கள் நான் சொல்வதை மேலும் உறுதிப்படுத்துகின்றன. அந்த வசனங் களில் பவுல், "நீ சபையில் ஸ்தோத்திரம்பண்ணும்போது (ஜெபம் செய்யும்போது) ஒருவருக்கும் விளங்காத மொழியில் பேசினால் மற்றவர்கள் எப்படி ஆமென் சொல்ல முடியும், அவர்கள் அதனால் எந்தப் பயனும் அடைய மாட்டார்கள்" என்கிறார். இதே முறையில் இந்த அணி பின்வரும் வசனங் களிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது: நியாயா. 10:14; 1 இராஜா. 18:27; 22:15; மாற்கு 7:9; 1 கொரி. 4:8.

1 கொரிந்தியர் 13:1 வசனத்தில் உயர்வு நவிற்சி அணி பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இங்கே பவுல் "தூதர் பாஷை" என்று சொல்வது இல்லாததை இருப்பதுபோல் உயர்த்திப் பேசும் உயர்வு நவிற்சி அணி. இதன் மூலம் பவுல், நான் எத்தனை பெரிய பாஷைகளைப் பேசினாலும் என்னிடம் அன்பு இல்லாவிட்டால் ஒரு பயனுமில்லை என்ற உண்மையை விளக்குகிறார்.

இதைத்தவிர, உவமைகளும் (Simile), உருவகங்களும் (Metaphor) வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பதை பல இடங் களிலும் பார்க்கிறோம். உவமைகளுக்கு உதாரணங்களாக

மத்தேயு 13, 24 போன்ற அதிகாரங்களை எடுத்துக்கொள்ளலாம். இயேசு இப்பகுதிகளில் உவமைகளைப் பயன்படுத்தி தேவராஜ்யத்தைக் குறித்த சத்தியங்களை விளக்கியுள்ளார். யோவான் சுவிசேஷத்தில் இயேசு தன்னை ஜீவ அப்பமாகவும், வாசலாகவும், மேய்ப்பனாகவும், திராட்சைச் செடியாகவும், ஒளியாகவும் உருவகப்படுத்திப் பேசியிருப்பதைப் பார்க்கிறோம். பிரசங்கத்திற்காக தெரிந்தெடுத்துக்கொள்ளப்பட்ட வேதப் பகுதியில் இவை காணப்படுமானால் அவற்றை நாம் கவனத்தில் கொண்டு ஆராய்ந்து விளங்கிக்கொள்வது அவசியம்.

## 5. அப்பகுதியின் மையப் போதனை (Central message)

அடுத்தபடியாக, பிரசங்கிக்க எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள வேதப்பகுதி போதிக்கும் மையக்கருத்து அல்லது அதன் முதன்மையான போதனை என்ன என்பதை ஆராய்தல் அவசியம். பிரசங்கப் பகுதி எப்போதும் ஒரு மையக்கருத்தை வலியுறுத்துவதாக இருக்க வேண்டும். அந்த மையக்கருத்து பிரசங்கிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள பகுதியில் தெளிவாகக் காணப்பட வேண்டும். இன்று 90% தமிழ்ப் பிரசங்கிகள் பிரசங்கத்திற்காக ஒரு வசனத்தைத் தெரிவுசெய்து கொண்டு, அந்த வசனத்தை ஆராய்ந்து பார்க்காமல் இதைத்தான் அந்த வசனம் சொல்லுகிறது என்று தாம் நினைப்பதை அந்த வசனத்திற்குள் திணிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு, ஆதியாகமம் 4:1-5 வரையுள்ள வசனங்களைப் பாருங்கள். இந்த வசனங்களில் அடிக்கடி “காணிக்கை” என்ற வார்த்தைப் பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பார்த்து இந்தப் பகுதி காணிக்கை கொடுப்பதைப் பற்றித்தான் பேசுகிறது என்று தீர்மானித்து, இந்த வசனங்களைப் பயன்படுத்தி காணிக்கை என்ற தலைப்பில் பிரசங்கம் செய்கிற பிரசங்கிகள் அநேகர். இது பிரசங்கிக்கப்போகிற வேதப்பகுதியை ஆராய்ந்து படிக்காததால் ஏற்படுகின்ற விளைவு. ஒரு வேதப்பகுதியின் மையக்கருத்தை அந்தப் பகுதியில் இருந்துதான் பெற்றுக்கொள்ள வேண்டுமே தவிர அதை நாம் அந்தப் பகுதிக்குள் ஒருபோதும் திணிக்கப் பார்க்கக்கூடாது.

ஒரு பிரசங்கத்தில் பல மையக்கருத்துக்கள் இருக்கக்கூடாது. அவை ஒன்றோடொன்று தொடர்பில்லாமல் அமைந்து, கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு சலிப்பைத் தந்து அவர்களை

சிந்திக்கவிடாமல் செய்துவிடும். அத்தோடு, பல மையக் கருத்துக்களை அவர்களால் ஒரே நேரத்தில் சுமக்க முடியாமலும் போய்விடும். ஒரே வேதப்பகுதியில் இருந்து கிறிஸ்துவின் பிறப்பு, இறப்பு, மீட்பு, இரண்டாம் வருகை அனைத்தையும் பிரசங்கத்தில் கொடுக்க முனைந்தால் ஆபத்து. ஒவ்வொரு பிரசங்கமும் எப்போதும் ஒரே ஒரு மையக்கருத்தை மட்டும் போதிப்பதாக இருக்க வேண்டும். அப்போதுதான் அதைக் கேட்பவர்களும் இன்று இந்த சத்தியத்தைத்தான் நான் கேட்டுத் தெரிந்துகொண்டேன் என்ற மன அமைதியுடன் போகமுடியும். சிறுவர்களும்கூட அதை இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கும். ஓய்வுநாளில் நான் சபையில் இருந்து வீடு திரும்பும்போது என்னுடைய பிள்ளைகளிடம் அன்றைய பிரசங்கத்தின் மையப் போதனை என்ன என்று கேட்பது வழக்கம். பிள்ளைகள் இன்று வளர்ந்துவிட்டாலும் கூட இதைத் தொடர்ந்து செய்து வருகிறேன். பிரசங்கம் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் அந்த மையப்போதனையை அவர்கள் விளங்கிக் கொண்டிருப்பார்கள்.

முதலில் நாம் பார்த்த எபேசியர் 1:3-14 வசனங்களையே மறுபடியும் பார்ப்போம். அதன் மையப் போதனையான "கிறிஸ்து இலவசமாகத் தந்துள்ள இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள்" இருப்பதைக் காண்கிறோம். 3 ஆம் வசனம் அந்த மையக்கருத்தை விளக்குவதாக இருக்கிறது. அந்தப் பகுதியின் ஏனைய வசனங்கள் ஒவ்வொன்றாக நமது இரட்சிப்பின் பலன்களைப் படிமுறையாக விளக்குகின்றன. மையக்கருத்தைச் சுற்றியே அந்தப் பகுதியில் காணப்படும் ஏனைய உண்மைகளும் அமைந் திருக்கின்றன. அங்கே ஒன்றுக்கொன்று முரண்பாடானதும் ஒன்றோடொன்று தொடர்பில்லாததுமான சத்தியங்களை நாம் பார்க்க முடியாது. இந்தப் பகுதியில் காணப்படும் சத்தியங்களை ஒன்றுக்கு மேற்பட்ட பிரசங்கங்களின் மூலமாக பிரசங்கிக்க முடிந்தாலும் முழுப்பகுதியும் ஒரே மையப் போதனையைக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்த முறையில்தான் பிரசங்கத்திற்கு நாம் எடுத்துக்கொள்ளும் எந்த வேதப்பகுதியும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

இன்னொரு உதாரணமாக, யோவான் 3:1-18 வரையுள்ள வசனங்களை எடுத்துக்கொண்டால் அப்பகுதியின் முக்கிய போதனையாக "மறுபிறப்பு" இருக்கின்றது. மறுபிறப்பின்

அவசியத்தையே நிக்கொதேமு இயேசுவை இரவில் சந்தித்துப் பேசிய நிகழ்ச்சி மூலம் அறிந்துகொள்கிறோம் அதேபோல் யோவான் *4:1-26* வசனங்களை எடுத்துக்கொண்டால் "ஜீவத்தண்ணீரான நித்திய ஜீவன்" அந்தப் பகுதியின் முக்கிய போதனையாக, பிரசங்கப் பொருளாக இருக்கின்றது. பிரசங்கத்திற்கு எடுத்துக்கொண்டுள்ள வேதப்பகுதியை கவனத்தோடு ஆராய்ந்து படிக்கும்போது அதன் முக்கிய போதனையைக் கண்டுகொள்ளலாம். சில பகுதிகளில் அவை தெளிவாகப் புலப்படும். அப்படித் தெளிவாகத் தெரியாமல் இருக்கும் பகுதிகளை ஆழமாகப் படிப்பதன் மூலம் அப்பகுதி களின் பிரதான போதனையைக் கண்டுகொள்ளலாம் எது எப்படியிருந்தபோதும் எந்தப் பகுதியை பிரசங்கிக்க எடுத்துக் கொண்டாலும் அந்தப் பகுதியின் பிரதான போதனையை கண்டுகொள்ள வேண்டியது பிரசங்கத்திற்கு மிகவும் அவசியம்.

## முடிவாக

இதுவரை நாம் பார்த்து வந்துள்ள பிரசங்கம் தயாரிப்பதற் கான வழிமுறைகளை வாசித்ததும், இதையெல்லாம் செய்வதற்கு நமக்கெங்கே நேரம் கிடைக்கப் போகிறது என்று சிலர் எண்ணக்கூடும். வேறுசிலர், வாசிப்பதற்கு இது நன்றாகத்தான் இருக்கிறது, ஆனால் நடைமுறைக்கு உதவாது என்று அங்கலாய்ப்பார்கள். இத்தகைய சோம்பேறித்தனமான போக்கைக் கொண்டிருப்பவர்களாலும், பிரசங்க ஊழியத்தைக் குறித்த அலட்சிய மனப்பான்மை கொண்டவர்களாலும்தான் பிரசங்க ஊழியம் இன்று தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் தலைகுனிந்து நிற்பதோடு வல்லமையான ஆத்மீக வாழ் வளிக்கும் பிரசங்கங்களுக்கும் இடமில்லாமல் இருக்கிறது. கஷ்டப்பட்டு உழைத்துப் பிரசங்கிப்பதில் வாஞ்சை யுள்ளவர்களை இந்த வழிமுறைகள் பயமுறுத்தாது; மாறாக உற்சாகப்படுத்தி அவர்களை மேலும் பாடுபட வைக்கும். பெரிய படிப்பும், பட்டமும் பெற்றவர்களாக அவர்கள் இல்லாதிருந்தாலும் நேரத்தைப் பயன்படுத்தி நேர்மையுடன் உழைத்துப் பிரசங்கிக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டவர்களாக இருப்பார்கள். அப்படியானவர்களே இன்று திருச்சபைகளுக்குத் தேவையானவர்கள். அவர்கள் மட்டுமே ஆத்துமாக்களின் வளர்ச்சிக்கு உதவக்கூடியவர்கள்.

# பிரசங்கம் தயாரித்தல் 2

பிரசங்கம் தயாரித்தலின்போது பிரசங்கி எடுக்க வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகளை இதுவரை ஆராய்ந்தோம். இந்த ஆரம்ப நடவடிக்கைகள் பிரசங்கத்தை ஆவிக்குரிய விதத்தில் தயாரிக்க அவசியமானவை. இனித் தொடர்ந்து பிரசங்கம் தயாரித்தலில் நாம் அடுத்தபடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்வோம்.

பிரசங்கத்திற்கான பொருளை முடிவு செய்தபின், அந்தப் பிரசங்கப் பொருள் காணப்படும் சந்தர்ப்பத்தின் அடிப் படையில் அதனை இலக்கண, இலக்கிய, வரலாற்றுபூர்வமாக நிதானித்து ஆராய்ந்து அதில் கொடுக்கப்பட்டுள்ள மையப் போதனை என்ன என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஏற்கனவே பார்த்தோம். இது முதலில் செய்ய வேண்டிய அவசியமான பணி. இதைச் செய்யாவிட்டால் அந்தப் பகுதியைப் பயன்படுத்தி பிரசங்கம் செய்ய முடியாது. இந்தப் பணியைப் பாடுபட்டு செய்து முடிக்கும்போதுதான் கர்த்தர் அந்தப் பகுதியில் எதைப் போதிக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

### மையப்போதனையை விளக்கும் துணைச் சத்தியங்கள்

அதன்பின் அந்த மையப்போதனையை விளக்கப் பயன் படுத்தப்பட்டுள்ள துணைச் சத்தியங்களை நாம் கருத்தோடு ஆராய வேண்டும். இந்தத் துணைச்சத்தியங்கள் மையப் போதனையை விளக்குவதாகவும், வலியுறுத்திக் கூறுவதாகவும் அமைந்திருக்கும். எபேசியர் *1:3-14* வரையிலான வேதப் பகுதியின் மையப்போதனையையும் அதை மேலும் விளக்கும் துணைச் சத்தியங்களையும் படிமுறையாகத் தந்திருக்கிறேன்.

## கிறிஸ்து இலவசமாக நமக்குத் தந்துள்ள இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள் (எபேசியர் 1:3-14)

1. உலகத்தோற்றத்திற்கு முன்பே கர்த்தர் நம்மைத் தெரிந்து கொண்டார். (4)

2. அவருடைய சுவிகார புத்திரராகும்படி நாம் முன்குறிக்கப்பட்டுள்ளோம். (5-6)

3. கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்குக் கிடைத்தது. (7-8)

4. தன்னுடைய சித்தத்தின் இரகசியத்தை அவர் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். (9-10)

5. கிறிஸ்துவுக்குள் சுதந்திரராகும்படி நாம் தெரிந்து கொள்ளப்பட்டோம். (11-12)

6. பரிசுத்த ஆவியினால் முத்திரை போடப்பட்டிருக் கிறோம். (13-14)

இந்த உதாரணத்தில், அந்த வேதப்பகுதியின் மையப் போதனையையும் அதை மேலும் விளக்கும் பல துணைச் சத்தியங்களையும் பார்க்கிறோம். இந்தப்பகுதி பவுலின் நிருபங்கள் ஒன்றில் இருந்து எடுக்கப்பட்டிருப்பதால் இதை மேலும் விபரமாக படிக்க வேண்டியது அவசியம். இங்கே நான் தந்திருப்பது ஒரு சுருக்கமான குறிப்பு (Brief outline) மட்டுமே. மையக்கருத்தை மேலும் விளக்கும் இந்தத் துணைச்சத்தியங்களை ஆராயும்போது, எடுத்துக்கொள்ளப் பட்டுள்ள வேதப்பகுதியின் இலக்கண அமைப்பை மனதில் கொள்வது அவசியம். எபேசியர் 1:3-14 வரையிலுள்ள வேதப்பகுதி தொடர்ச்சியாக, முற்றுப்புள்ளி இல்லாமல் போய்க் கொண்டிருக்கும் ஒரு பகுதி. அதில் காணப்படும் பல சத்தியங் களையும் இணைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள இணையிடைச் சொற்களைக் (conjuction) கவனத்தோடு ஆராய்ந்து கருத்தில் கொள்ள வேண்டும். அந்த இணையிடைச் சொற்களே அந்தப் பகுதியில் காணப்படும் துணைச் சத்தியங்களை இணைப்பவை யாக இருக்கின்றன. இங்கே இலக்கண அறிவு வேதத்தை ஆழமாகப் படிப்பதற்கு இன்றியமையாததாக இருப்பதைக் கவனிப்பது அவசியம்.

**பிரசங்கம் தயாரிப்பதற்கான ஆரம்பக் குறிப்புகள்** (Basic Outline)

எபேசியர் 1:3-14 வரையிலான வேதப்பகுதியைப் பயன்படுத்தி நாம் பிரசங்கிப்பதாக இருந்தால், இதுவரை நாம் செய்திருப்பதெல்லாம் அந்த வேதப்பகுதியின் மையப் போதனையையும், அதை விளக்கும் துணைச்சத்தியங்களையும் தெரிந்துகொண்டிருப்பது மட்டும்தான். இதுவே பிரசங்கமாகிவிடாது. இது பிரசங்கத்திற்கான வெறும் ஆரம்பம் மட்டுமே. பிரசங்கத்தைத் தயாரிப்பதில் இனிச் செய்ய வேண்டிய வேலைகள் அநேகம் இருக்கின்றன. இதை ஓர் ஓவியன் ஓவியத்தை வரைய ஆரம்பித்திருப்பதற்கு உதாரணமாகக் கூறலாம். அவன் பலகையில் சில கோடுகளைப் போட ஆரம்பித்திருக்கிறான். அவனைப் பொறுத்தவரையில் ஓவியம் ஆரம்பமாகிவிட்டது. அதன் இறுதி முடிவைக்கூட அவனால் ஓரளவு பார்க்க முடிகின்றது. பக்கத்தில் நின்று கொண்டிருப்பவர்களுக்கு அவை வெறும் கோடுகளாக மட்டும்தான் தெரியும். ஏனெனில் ஓவியம் இன்னும் முடிவடையவில்லை. ஓவியனின் நிலையில்தான் இப்போது பிரசங்கி இருக்கிறான். சுருக்கக்குறிப்பு ஓவியன் தீட்டியுள்ள சில கோடுகள் போன்றது.

நாம் மேலே பார்த்தபடி பிரசங்கத் தயாரிப்பின் ஆரம்பத்திலேயே ஒரு சுருக்கக் குறிப்பை நாம் எழுதி வைத்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம். குறிப்பெழுதி வைத்துக்கொள்ளும் வழக்கம் அநேக பிரசங்கிகளுக்கு இல்லை. சமீபத்தில் ஆங்கிலத்தில் வெளிவந்திருக்கும் ஒரு புத்தகத்தின் தலைப்பு "பிரசங்கக் குறிப்பில்லாமல் பிரசங்கிப்பதெப்படி?" இந்தப் புத்தகத்தை வாசிக்க வேண்டிய அவசியமேயில்லை. பிரசங்கக் குறிப்பில்லாமல் செய்யப்படும் பிரசங்கங்கள் பெரும்பாலும் வெறும் வார்த்தை ஜாலங்களாகத்தான் இருக்கும். சாதாரணமாக எல்லாப் பிரசங்கிகளும் மேதாவிகளாக இருப்பதில்லை. சரீரத்தில் பலவீனங்களையும், குறைந்தளவான ஞாபக சக்தியையும், மறக்கும் தன்மையையும் கொண்டவர்களாகவே இருப்பார்கள். நாற்பத்தைந்து நிமிடங்கள் பேச இருக்கும் பிரசங்கி பிரசங்கக் குறிப்பில்லாமல் தெளிவான பிரசங்கத்தைச் செய்துவிட முடியாது. பிரசங்கக் குறிப்பில்லாமல் பிரசங்கிப்பதை சில பிரசங்கிகள் பெருமையாகக் கருதுவார்கள். அதுபற்றி தம்பட்டம் அடித்துக்கொள்கிறவர்களும் உண்டு. ஆனால், உண்மையில் அவர்களைப் போன்ற சோம்பேறிகள் இல்லை.

**விரிவான அடிப்படைப் பிரசங்கக் குறிப்பு** (Expanded Basic Outline)

பிரசங்கிக்க எடுத்துக்கொண்டுள்ள வேதப்பகுதியின் போதனைகளை சுருக்கமாகக் குறிப்பெடுத்துக்கொள்ள வேண்டுமென்று இதுவரை பார்த்தோம். அந்த ஆரம்பக் குறிப்பின் அடிப்படையில் பிரசங்கம் இனி வளர வேண்டும். கட்டிடத்துக்கு அடித்தளம் அமைந்தாகிவிட்டது. இனிக் கட்டிடத்தின் சுவர்கள் கட்டப்பட வேண்டும். அதற்கு கூரை போட வேண்டும். ஆகவே, பிரசங்கமாகிய கட்டிடத்தின் அடித்தளமாகிய சுருக்கக் குறிப்பின் அடிப்படையில் அதை விரிவாக்குகின்ற நடவடிக்கைகளில் இனி பிரசங்கி ஈடுபட வேண்டும்.

இந்த இடத்தில் நடைமுறைக்கு அவசியமான ஓர் ஆலோசனையைத் தர விரும்புகிறேன். பிரசங்கிகள் பிரசங்கம் தயாரிக்க கட்டுக்கட்டாய் பேப்பரும், பேனாவோ அல்லது பென்சிலோ வைத்திருப்பது அவசியம். எழுதுவதற்கு தேவையான உபகரணங்கள் இல்லாமல் பிரசங்கத்தைத் தயாரிப்பது சுலபமல்ல. கணினி வசதியுள்ளவர்கள் அதையும் பயன்படுத்தி இதைச் செய்ய முடியும். அத்தோடு ஒரு நாளில் இவ்வளவு நேரம் என்று பிரசங்கத் தயாரிப்புக்கு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி வைக்க வேண்டியதும் அவசியம். ஒவ்வொரு நாளும் தகுந்த நேரத்தைக் கொடுக்கமால் ஆவிக்குரிய பிரசங்கங்களைத் தயாரிக்க முடியாது.

சுருக்கக் குறிப்பின் அடிப்படையில் விரிவான பிரசங்கக் குறிப்பு தயாரிக்க, பிரசங்கிப்பதற்காக எடுத்துக்கொண்டுள்ள வேதப்பகுதியை மறுபடியும் ஆராய்தல் அவசியம். ஏற்கனவே நாம் சுட்டிக்காட்டியபடி அந்தப் பகுதியை ஆழமாக நிதானித்துப் படித்திருந்தால் அதில் காணப்படும் சத்தியங் களைக் கொண்டு விரிவான அடிப்படைக் குறிப்பைத் தயாரிக்க முடியும். இதைச் செய்யும்போது அந்தப் பகுதியில் காணப்படுகின்ற சத்தியங்களைத் தவிர வேறு எதுவுமே குறிப்பில் இடம்பெறக்கூடாது. இதைப் பிரசங்கி தனது இலட்சியமாகக் கொண்டு உழைக்க வேண்டும். அந்தப் பகுதி இதைத்தான் சொல்லுகிறது என்று நாமே கற்பனை செய்யக் கூடாது. இன்று பல பிரசங்கிகள் இதைத்தான் செய்து

வருகிறார்கள். பிரசங்கிக்க எடுத்துக்கொண்டுள்ள வேதப் பகுதியை ஆழமாக ஆராய்ந்து படித்தால் அந்தப் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கின்ற சத்தியங்களை எவராலும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். அதற்கு விசேஷமான வேறு எந்தத் தகுதியும் தேவை இல்லை. சில சோம்பேறிப் பிரசங்கிகள் வேதத்தைப் படித்து ஆராய்வது ஆவிக்குரிய செயலல்ல என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வேதசத்தியங்களை ஆராய்ந்து படிக்காதவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் எந்த சத்தியங்களையும் ஒருக்காலும் வெளிப்படுத்தப் போவதில்லை என்பதை இவர்கள் உணர்வதில்லை.

இனி எபேசியர் 1:3-14 வரையுள்ள வசனங்களுக்கான விரிவான அடிப்படைக் குறிப்பைக் கீழே பார்க்கலாம்.

## கிறிஸ்து இலவசமாக நமக்குத் தந்துள்ள இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள் (எபேசியர் 1:3-14)

1. உலகத்தோற்றத்திற்கு முன்பே கர்த்தர் நம்மைத் தெரிந்து கொண்டார். (4)
    - தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களாகவும் குற்றமில்லாதவர்களுமாக இருப்பதற்காக
2. அவருடைய சுவீகாரப் புத்திரராகும்படி நாம் முன்குறிக்கப்பட்டுள்ளோம். (5-6)
    - தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக
    - தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியாக
3. கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்குக் கிடைத்தது. (7-8)
    - அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படி
    - அவருடைய இரக்கத்தினாலே
4. தன்னுடைய சித்தத்தின் இரகசியத்தை அவர் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். (9-10)
    - தமக்குள்ளே தீர்மானித்திருந்தபடி
    - தம்முடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படி

- *வெளிப்படுத்தப்பட்ட சித்தம்: "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்தில் இருக்கிறவைகளும், பூலோகத்தில் இருகிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள் கூட்டப்படும்"*

5. *கிறிஸ்துவுக்குள் சுதந்தரராகும்படி நாம் தெரிந்து கொள்ளப்பட்டோம். (11-12)*

- *அவருடைய மகிமையின் புகழ்ச்சிக்காகவும்*
- *அவருடைய சித்தத்தின் ஆலோசனையின்படியும்*
- *எல்லாவற்றையும் நடப்பிக்கிற தீர்மானத்தின்படியும்*

6. *பரிசுத்த ஆவியினால் நாம் முத்திரை போடப் பட்டிருக்கிறோம். (13-14)*

- *சத்திய வசனத்தைக் கேட்டு அவருக்குள் விசுவாசிகளானபோது*
- *பரிசுத்த ஆவியானவர்*
- *வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர்*
- *நம்முடைய சுதந்திரத்துக்கு அச்சாரமாயிருக்கிறார்.*

*பிரசங்கத் தயாரிப்புக்கான விரிவான அடிப்படைக் குறிப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான மேலும் சில உதாரணங்களைப் பார்ப்போம்.*

## சங்கீதம் 1:1-3

**மையப் போதனை:** *கர்த்தருக்கு விசுவாசமாக இருக்கின்ற மனிதன் பாக்கியவானாயிருப்பான்.*

## தலைப்பு: பாக்கியவான் யார்?

### விரிவான அடிப்படைக் குறிப்பு

1. *அவனுடைய வாழ்க்கையில் பார்க்க முடியாத செயல்கள்:*

- *பாவிகளுடன் ஒருபோதும் தொடர்பு வைத்திருக்க மாட்டான்*
- *துன்மார்க்கரின் ஆலோசனைக்கு இடம் கொடான்*

- பாவிகள் இருக்கும் இடங்களில் இருக்க மாட்டான்
- பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் அமர மாட்டான்

2. அவனுடைய வாழ்க்கையில் பார்க்கக்கூடிய செயல்கள்:

- கர்த்தருடைய வேதத்தை அனுதினமும் படிப்பான்
- கர்த்தருடைய வேதத்தில் அதிக அக்கறை காட்டுவான்
- இரவும் பகலும் அதில் தியானம் செய்வான்

3. அவன் எப்படிப்பட்டவனாய் இருப்பான்?

- கனிகொடுக்கும் நல்ல மரத்தைப் போல இருப்பான்

4. அது எப்படிப்பட்ட மரம்?

- நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டிருக்கும்
- தகுந்த காலத்தில் நல்ல பலன்களை அளிக்கும்
- இலையுதிராதிருக்கும்
- கர்த்தருக்கு விசுவாசமாயிருக்கிறபடியால் அவன் செயல்கள் பலனளிக்கும்

இந்த விரிவான அடிப்படைக் குறிப்பை வைத்து நாம் பிரசங்கத்தைத் தயார் செய்ய வேண்டும். இந்தக் குறிப்பை நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் அதில் காணப்படும் அத்தனை அம்சங்களும் சங்கீதம் 1:1-3 வசனங்களில் இருந்து மட்டுமே பெறப்பட்டவையாக இருப்பதை உணரலாம். 1 ஆம் சங்கீதத்தை ஆராய்ந்து இந்தக் குறிப்பை வரைந்திருக்கிறோம். இதற்குப் பிறகுதான் அந்த வசனங்களை மேலும் ஆராய்ந்து பிரசங்கத்தைத் தயாரிக்க வேண்டிய பெரிய வேலை இருக்கிறது.

இங்கே சங்கீதத்தைப் படிக்கும்போது அதற்கே உரிய சில சிறப்பான இலக்கண அம்சங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியம். அதைத் தெரிந்துகொள்ளாமல் சங்கீதங்களை விளங்கிக்கொள்ள முடியாது; அவற்றிலிருந்து பிரசங்கிக்க முடியாது. சங்கீதங்களைப் பொறுத்தவரையில் அவை ஒரே உண்மையைத் திரும்ப திரும்ப சொல்லுகிற ஒரு தன்மையைத் தம்மில் கொண்டிருக்கும். இதை முழுமையாக

இங்கு விளக்குவதற்கு வசதியில்லை. இருந்தாலும் இந்த முதலாம் சங்கீதத்தில் இருந்து அந்த உண்மையை விளக்குகிறேன்.

முதலாம் சங்கீதத்தின் முதல் வசனம், பாக்கியவான் பாவகரமான செயல்களில் ஈடுபடமாட்டான் என்பதை உணர்த்துகிறது. ஆனால், அந்த உண்மையை சங்கீதக்காரன் மூன்று தடவைகள் அந்த வசனத்தில் விளக்குகிறான். அதாவது, ஒரே உண்மையை வலியுறுத்திக் காட்டுவதற்காக, சங்கீதங்களுக்கே உரிய அழகுடன் மூன்று தடவைகள் அந்த உண்மையைக் கூறுகிறான். பாவகரமானவர்களோடு பாக்கியவான்களுக்கு தொடர்பு இருக்காது. ஆனால், பாவகரமானவர்கள் யார்? அவர்கள் துன்மார்க்கர், பாவிகள், பரியாசக்காரர்கள். பாவகரமானவர்களுடைய மூன்று குணாதிசயங்களைச் சுட்டிக்காட்டி அத்தகையவர்களோடு பாக்கியவானுக்குத் தொடர்பிருக்காது என்கிறான் சங்கீதக் காரன். ஆகவே, ஒரே கருத்து மூன்று விதங்களில் வெவ்வேறு விதமாக இங்கு சொல்லப்பட்டிருப்பதைக் கவனித்தல் அவசியம். இதையே 2 ஆம் வசனத்திலும் காண்கிறோம். கர்த்தருக்கு விசுவாசமானவன் வேதத்தை அனுதினமும் தியானம் செய்கிறவனாக இருப்பான். ஆனால், அதை சங்கீதத்திற்கே உரிய அழகோடு சங்கீதக்காரன் எப்படிச் சொல்கிறான் என்பதைக் கவனியுங்கள்.

> "அவன் கர்த்தருடைய வேதத்தில் 'பிரியமாயிருந்து'; இரவும் பகலும் அவருடைய வேதத்தில் "தியானமா யிருப்பான்."

இந்த வரிகள் சொல்லும் சத்தியம் ஒன்றுதான். ஆனால், அந்த சத்தியத்தை வலியுறுத்திக் கூறுவதற்காகவும், அழகுணர்ச்சிக் காகவும் இரு தடவைகள் அது சொல்லப்பட்டிருக்கின்றது. முதலாம் சங்கீதத்தைப் போலவே வேதத்தில் காணப்படும் அத்தனை சங்கீதப் பகுதிகளிலும் இந்த அம்சத்தைப் பார்க்கலாம். ஆகவே, நாம் அவற்றை கூடுதலாக ஆராய்ந்து படிக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது. சங்கீதங்களில் ஒரே சத்தியம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் சொல்லப்பட்டிருக்கலாம் என்ற உண்மையைப் புரிந்துகொள்ளாவிட்டால் அவற்றிற்கு வெவ்வேறு விளக்கங்களை அளித்து வேதத்தையே நாம் குழப்பி விடக்கூடிய ஆபத்து இருக்கின்றது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

இந்த விரிவான அடிப்படைக் குறிப்பை பிரசங்கிகள் தங்களுடைய வசதிக்குத் தகுந்தபடி மாற்றி அமைத்துக் கொள்ளலாம். இதை மேலும் விரிவுபடுத்தி ஒன்றுக்கு மேற்பட்ட பிரசங்கங்களைக்கூட இதிலிருந்து தயாரிக்கலாம். எது இருந்தபோதும் இப்படியாக வேதப்பகுதியை ஆழமாகவும், நிதானமாகவும் ஆராய்ந்து வாசித்துப்பார்த்து குறிப்பெடுத்து வைத்துக்கொள்ளாமல் பிரசங்கங்களைத் தயாரித்துவிட முடியாது. ஏற்கனவே, பலமுறை நான் சுட்டிக்காட்டியது போல் இந்தக் குறிப்பின் அடிப்படையிலேயே பிரசங்கத்தை நாம் தயாரிக்க ஆரம்பிக்க வேண்டும்.

இன்னும் ஒரே ஒரு உதாரணத்தோடு இந்தப் பகுதியை முடிக்க விரும்புகிறேன். யோவான் 3:1-15 வரையிலான வசனங்களுக்கான ஓர் ஆரம்ப அடிப்படைக் குறிப்பு.

### யோவான் 3:1-15

**மையப் போதனை:**

*மறுபடியும் பிறக்க வேண்டியது அவசியம்*

### தலைப்பு: மறுபிறப்பு

**விரிவான அடிப்படைக் குறிப்பு:**

*1. மறுபடியும் பிறக்க வேண்டியதன் அவசியம் (1-3)*

- *மறுபடியும் பிறக்காமல் ஒருவனும் தேவனுடைய இராஜ்யத்தைக் காண முடியாது.*

*2. மறுபடியும் பிறத்தல் என்றால் என்ன? (4-8)*

- *மறுபடியும் குழந்தையாக இந்த உலகத்தில் பிறப்பது அல்ல (4)*
- *ஜலத்தாலும், ஜீவனாலும் பிறக்க வேண்டும் (5)*
- *இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில், இது ஆவியால் பிறக்கும் வாழ்க்கை (6, 7)*
- *இதை ஊனக் கண்களால் காண முடியாது. ஆனால், உணர முடியும் (8)*
- *இது ஆவியின் வல்லமையான கிரியையினால் ஏற்படுவது (8)*

*3. மறுபடியும் பிறப்பது எப்படி? (10-15)*

- *மனுஷ குமாரனான இயேசு மட்டுமே இதைக் கொடுக்க முடியும் (10-13)*
- *இயேசுவின் கல்வாரிப் பரிகாரப்பலியின் மூலம் இந்த வாழ்க்கைக்கான வித்திடப்பட்டிருக்கிறது (14)*
- *இயேசுவை விசுவாசிப்பவர்களுக்கு மட்டுமே இந்த வாழ்க்கை (15)*

பிரசங்கத்திற்கான ஆரம்பக் குறிப்புகளும், அதன் அடிப்படையில் நாம் தயாரிக்கின்ற விரிவான அடிப்படைக் குறிப்புகளும் நமக்கு வழிகாட்டி. வழிகாட்டி இல்லாமல் ஒருவரும் எங்கும் பிரயாணம் செய்ய முடியாது. விரிந்து கிடக்கும் கடலில் கப்பல் சரியான இடத்தை நோக்கிப் போக கப்பலை ஓட்டுகிறவனுக்கு வழிகாட்டி தேவை. வழிகாட்டியைப் பயன்படுத்தி போகுமிடத்திற்கான வழியைக் கணித்து, கப்பலை ஓட்டுவான் கப்பலோட்டி. அடிக்கடி அவன் வரை படத்தில் கோடுகளைப் போட்டு, போகவேண்டிய பாதையைத் தீர்மானிப்பான். இதைப்போலத்தான் நாம் வேதப்பகுதியை கவனமாக வாசித்து குறிப்புகளை எழுதி நமது பிரசங்கப் பாதையை நிர்ணயிக்கிறோம்.

அநேக பிரசங்கிகள் தங்களுடைய பிரயாணத்தை பிரசங்க மேடையில்தான் தீர்மானிப்பார்கள். அவர்கள் பிரசங்கப் பிரயாணத்திற்கான எந்த வேலையையும் அங்கு வருவதற்கு முன் செய்யவில்லை என்பதை ஐந்து நிமிடம் அவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்டாலே தெரிந்துவிடும். இதெல்லாம் பிரசங்கமாகாது. இது தமிழினத்தைப் பிடித்திருக்கும் தலைவலி. இதை நிவர்த்தி செய்யவே பிரசங்கிகளான நீங்கள் நாம் இதுவரை பார்த்தபடி வேதத்தை ஆராய்ந்து குறிப்பெடுக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

# பிரசங்கம் தயாரித்தல் 3

பிரசங்கத்தைத் தயாரிக்கின்ற வேளையில் அதற்கான ஆரம்பக் குறிப்புகளையும், விளக்கமான குறிப்புகளையும் தயாரித்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை இதுவரைப் பார்த்தோம். இப்படியாக நாம் தயாரிக்கும் குறிப்புகளே பிரசங்கத் தயாரிப்பில் நாம் போக வேண்டிய பாதையைச் சுட்டிக்காட்டுவனவாக இருக்கின்றன. அநேக பிரசங்கிகள் பிரசங்கத்தை முன்னதாகவே தயாரிக்காமல், ஏதோ ஒரு வசனத்தை எடுத்துக்கொண்டு எங்கோ ஆரம்பித்து, எங்கோ போய்க் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கே தாம் ஆரம்பித்த பாதை எது? போய்க் கொண்டிருக்கிற பாதை எது? என்பது தெரியாமலிருக்கின்றபோது, கேட்டுக்கொண்டிருக்கிறவர்களுக்கு கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல்தான் இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. பிரசங்க மேடைக்குப் போவதற்கு முன்பாக பிரசங்கிக்கு தான் எதைப் பிரசங்கிக்கப் போகிறோம்? அதை எப்படிப் பிரசங்கிக்கப்போகிறோம்? எப்படி முடிக்கப்போகிறோம்? என்பதெல்லாம் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். பிரசங்க மேடையில் நிற்கும்போது எந்தப் பிரசங்கிக்கும் பரிசுத்த ஆவியானவர் பிரசங்க செய்தியைக் கொடுப்பதில்லை. அவருக்கு சோம்பேறிகளைத் துப்புரவாகப் பிடிக்காது.

கடந்த பகுதியில் பார்த்தபடி, இதுவரை நாம் தயாரித்துள்ள பிரசங்கக் குறிப்புகள் பிரசங்கப் பகுதியைக் குறித்த தெளிவான விளக்கத்தை நமக்கு அளித்திருக்கும். அதாவது அந்தப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள போதனை என்ன என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொண்டிருப்போம். இது மிகவும் அவசியம். பிரசங்கிக்க எடுத்துக்கொண்டிருக்கும் பகுதியில் சொல்லப்பட்டிருப்பது என்ன என்பதை எந்தவித சந்தேகமு

*மில்லாமல் தெளிவாகப் புரிந்துகொண்டிராமல் அந்தப் பகுதியை வைத்துப் பிரசங்கிக்கப் போகக்கூடாது. இந்தப் பிரசங்கக் குறிப்புகள் நாம் பிரசங்கிக்கப்போகும் பகுதியை நமக்கு விளக்க உதவியாக இருந்திருக்கின்றனவே தவிர இவையே பிரசங்கமாகிவிடாது. இதுவரை நாம் எடுத்துக் கொண்டுள்ள வேதப்பகுதியைக் குறித்துப் பெற்றுக்கொண் டிருக்கும் விளக்கத்தின் அடிப்படையில்தான் இனிப் பிரசங்கத்தைத் தயாரிக்க வேண்டும். இதுவரை நாம் செய்திருப்ப தெல்லாம் ஒரு காரை அக்குவேர் ஆணிவேராகக் கழட்டித் தனித்தனியாகப் பிரித்து அந்தக் காரின் அம்சங்களைப் புரிந்து கொண்டிருப்பதுதான். இதுவரை நாம் எடுத்துள்ள குறிப்புகள் நமக்குத்தான் உபயோகப்படுமே தவிர பிரசங்கம் கேட்பவர்களுக்கல்ல. இனி, நாம் பிரித்து வைத்திருக்கும் காரின் பாகங்களையெல்லாம் முறையாக அந்தந்த இடத்தில் வைத்து காரை உருவாக்க வேண்டும். பிரசங்கத் தயாரிப்பும் இதுபோல்தான்.*

## குறிப்புகளின் அடிப்படையில் பிரசங்கத்திற்கான வசனங்களைத் தீர்மானித்தல்

*பிரசங்கத்தைத் தயாரிக்க இனி நாம் செய்ய வேண்டியது, இதுவரைத் தயாரித்த குறிப்புகளை வைத்துக்கொண்டு பிரசங் கத்திற்கான வசனங்களை முடிவு செய்துகொள்ள வேண்டும். உதாரணத்திற்கு எபேசியர் 1:3-14 வரையுள்ள வசனங்களை ஆராய்ந்து குறிப்புகளை எழுதி வைத்திருந்தால், அது முழுவதையும் ஒரே பிரசங்கத்தில் பிரசங்கிக்கப் போகிறோமா? அல்லது அதைப் பல பகுதிகளாகப் பிரித்து வாராவாரம் அதிலுள்ள சத்தியங்களை ஒவ்வொன்றாகப் பிரசங்கிக்கப் போகிறோமா? என்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அப்படியான முடிவை எடுத்த பின்னர் பிரசங்கிக்கத் தீர்மானித் திருக்கும் வசனங்களை மேலும் ஆராய்வது அவசியம்.*

## பிரசங்கிக்கத் தெரிந்துகொண்ட பகுதியை மேலும் ஆராய்தல்

*பிரசங்கிப்பதற்கு எபேசியர் 1:3-6 வரையுள்ள வசனங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அந்த வசனங்களை இதற்கு முன்னுள்ள பகுதியில் ஆராய்ந்*

திருப்பதால் அந்த வசனங்களில் தரப்பட்டிருக்கும் போதனையும் நமக்குத் தெரியும். (இதை வாசிக்கும்போது ஒரு முறை அந்த பகுதியை பார்த்து விட்டு பிறகு தொடர்வது நல்லது, பக்கம் 89-90). இனி அந்த வசனங்களை வசதியாக பிரித்து அதில் காணப் படும் சத்தியங்களின் அடிப்படையில் குறிப்பெடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக கீழ்வரும் குறிப்பைப் பாருங்கள்:

1. **வசனம் 3,** கர்த்தர் நம்மை ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதித்திருக்கிறார்.

2. **வசனம் 6,** அந்த ஆசீர்வாதங்களில் ஒன்று: கர்த்தரால் நாம் முன்குறிக்கப்பட்டிருக்கிறோம்.

3. **வசனங்கள் 5-6,** அவர் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி நம்மை உலகத்தோற்றத்திற்கு முன்பே முன்குறித்திருக்கிறார்.

4. **வசனங்கள் 4-5,** அவருடைய முன்குறித்தலின் நோக்கங்கள்:

   - அவர் நமக்குத் தந்தருளின அவருடைய கிருபையின் மகிமை புகழ்ச்சியடைய வேண்டும்.
   - அவருக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்த முள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாக இருக்க வேண்டும்.

5. **வசனம் 6,** அவருடைய முன்குறித்தலின் இலக்கு:

   கிறிஸ்துவின் மூலமாக நாம் அவருடைய சுவிகாரப் புத்திரராவது.

மேலே தந்துள்ள குறிப்பை நீங்கள் கவனமாக ஆராய்ந்தால் எபேசியர் 1:3-6 வரையுள்ள வசனங்களில் காணப்படும் போதனைகள் அனைத்தையும் முறைப்படுத்தி குறிப்பெடுத் திருப்பதைக் காணலாம். இப்படிச் செய்வதன் மூலம் அந்தப் பகுதியில் பவுல் எதை, எந்த முறையில் சொல்லவருகிறார் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இதில் இன்னுமொரு உண்மையையும் புரிந்துகொள்வீர்கள், எபேசியர் 1:3-14 வரையுள்ள வசனங்களை நாம் ஆராய்ந்தபோது 3-6 வரையிலான வசனங்களை இந்தளவுக்கு விவரமாக நாம் ஆராயவில்லை. அதற்குக் காரணம், அங்கே நாம் வானத்தில்

பறக்கும் விண்கலத்தில் இருந்து பூமியைப் பார்க்கும் விதத்தில் முழுப் பகுதியையும் பார்த்தோம், ஆகவே, நமக்கு முழுப்பகுதியின் போதனையே தெரிந்தது (Bird's eye view) விண்கலம் கீழே இறங்கி வர வர பூமியில் இருக்கும், நாடுகளும், நகரங்களும், ஆறுகளும், குளங்களும், ஏன் வீதிகளும்கூடத் தெளிவாகத் தெரிய வரும். அதுபோலத்தான் நாம் 3-6 வரையுள்ள வசனங்களைத் தனியாகப் பிரித்து ஆராய்கிறபோது அதில் காணப்படும் மேலும் பல விபரங்களைத் தெளிவாக அறிந்துகொள்ள முடிகின்றது.

மேலே பார்த்த குறிப்பிலிருந்து எபேசியர் 1:3-6 வரையிலான பகுதியின் முக்கிய போதனை கர்த்தரின் முன்குறித்தல் என்பதையும், அந்த முன்குறித்தல் எவ்வாறு நிகழ்ந்தது என்றும், அந்த முன்குறித்தலுக்கான நோக்கம் என்னவென்றும், அந்த முன்குறித்தலின் இறுதி இலக்கு என்ன என்பதையும் தெளிவாகப் பார்க்கிறோம். இதுவரை பார்த்த விளக்கங்களில் இருந்து நாம் பிரசங்கத்திற்கான ஒரு வரைபடத்தை சுலபமாகத் தயாரித்துக்கொள்ளலாம்.

## பிரசங்கத்திற்கான வரைபடம்

பிரசங்கத்திற்கான வரைபடம் பிரசங்கத்தின் தலையங்கத்தையும், அதன் அடிப்படையில் வரப்போகும் முறைப்படுத்தித் தரப்பட்டிருக்கும் முக்கிய தலைப்புகளையும் குறிக்கும். அது பின்வரும் முறையில் அமையும்.

### தலைப்பு: கர்த்தரின் முன்குறித்தல்

### அறிமுகம்

3வது வசனத்தின்படி கர்த்தர் விசுவாசிகளை ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களுடன் ஆசீர்வதித்திருக்கிறார். அந்த ஆசீர் வாதங்களில் ஒன்று முன்குறித்தல்.

1. முன்குறித்தல் என்றால் என்ன?
2. விசுவாசிகள் எவ்வாறு முன்குறிக்கப்பட்டிருக் கிறார்கள்?
   - தேவனுடைய தயவுள்ள சித்தத்தின்படி
   - உலகத்தோற்றத்துக்கு முன்னதாக

3. விசுவாசிகளை கர்த்தர் முன்குறித்ததற்கான நோக்கம் என்ன?

- அவர் நமக்குத் தந்தருளின அவருடைய கிருபையின் மகிமை புகழ்ச்சியடைய வேண்டும்.
- அவருக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்த முள்ளவர்களாகவும், குற்றமில்லாதவர்களுமாக இருக்க வேண்டும்.

4. விசுவாசிகளை எதற்காக கர்த்தர் முன்குறித்திருக் கிறார்?

- தம்முடைய சுவீகாரப் புத்திரராராவதற்கு

இதில் எபேசியர் 1:3-6 ஆகிய வசனங்களில், நாம் 3 ஆம் வசனத்தை பிரசங்கத்தை அறிமுகப்படுத்துகின்ற வசனமாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதாவது 3 ஆம் வசனம் கர்த்தர் நம்மை சகல ஆசீர்வாதங்களுடன் ஆசீர்வதித்திருப்பதாகத் தெரிவிக்கிறது. 4-6 வரையிலான வசனங்கள் இப்பகுதியில் இருந்து நாம் கொடுக்கப்போகும் பிரசங்கத்தின் சரீரமாக இருக்கின்றது. அதாவது பிரசங்கத் தலைப்பான கர்த்தரின் முன்குறித்தலை இவ்வசனங்கள் விளக்குகின்றன. இப்பகுதி போதிக்கும் முன்குறித்தலை நான்கு கேள்விகளைத் தலைப்பு களாகக் கொண்டு பிரசங்கத்தில் விளக்கப் போகிறோம். தலைப்புகள் இந்தவிதத்திலேயே இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. அது வேறுவிதமாகவும் இருக்கலாம். ஆனால், பிரசங்கப் பொருளை முறையாக, படிமுறையாக விளக்கிப் பிரசங்கிக்க தலைப்புகள் அவசியம். இதே தலைப்புகளை இன்னொரு விதத்தில் மாற்றிக் கீழே தந்திருக்கிறேன்.

### தலைப்பு: விசுவாசிகளின் முன்குறித்தல்

1. விசுவாசிகளின் முன்குறித்தலின் தன்மை
2. விசுவாசிகள் முன்குறிக்கப்பட்டிருக்கும் விதம்
3. விசுவாசிகள் முன்குறிக்கப்பட்டதற்கான நோக்கம்
4. விசுவாசிகள் முன்குறிக்கப்பட்டிருப்பதன் இலக்கு

இதுவரை எபேசியர் 1:3-6 வரையுள்ள வசனங்களில் முன்குறித்தலைப்பற்றிய போதனைக்கான வரைபடத்தைத்

தயாரித்துவிட்டோம். இத்தோடு பிரசங்கத் தயாரிப்பு முடிந்து விட்டதாகக் கருதிவிடக்கூடாது. இன்னும் செய்ய வேண்டிய பல காரியங்கள் இருக்கின்றன. படிப்படியாக ஒவ்வொன்றை யும் இனிப் பார்க்கப்போகிறோம்.

## பிரசங்கத்தின் சரீரத்தைத் தயாரித்தல்

மேலே கொடுக்கப்பட்ட வரைபடத்தை வைத்து இனி பிரசங்கத்தின் சரீரத்தை உருவாக்க வேண்டும். அதாவது, கர்த்தரின் முன்குறித்தலைப் பற்றி இந்த வசனங்கள் போதிக்கும் சத்தியங்களை ஏனைய வேத பகுதிகளின் மூலம் நிரூபித்து, உதாரணங்களைத் தந்து பிரசங்கத்தின் சரீரத்தை அமைக்க வேண்டும். எபேசியர் முதலாம் அதிகாரத்தின் 1:3-14 வரையுள்ள வசனங்களை நாம் ஆரம்பத்தில் ஆராய்ந்தபோது பல உண்மைகளை ஏற்கனவே அறிந்து குறிப்பெடுத்திருப்போம். அத்தோடு 3-6 வரையுள்ள வசனங்களுக்கான வரைபடத்தைத் தயாரிக்கும்போதும் பல உண்மைகளை இந்தப் பகுதியில் இருந்து தெரிந்துகொண்டிருப்போம். அந்த உண்மைகளை யெல்லாம் முறையாக மேலே நாம் பார்த்த தலைப்புகளின் கீழ் பிரசங்கத்தில் விளக்கமாக எழுதிக்கொள்ள வேண்டும். முக்கியமாக இந்தப் பகுதியில் காணப்படும் பதங்களான முன்குறித்தல், கர்த்தரின் தயவுள்ள சித்தம், கிருபையின் மகிமை, சுவிகாரப் புத்திரர் போன்றவற்றை ஆராய்ந்து அவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் சத்தியங்களை முறையாக விளக்க வேண்டும். எந்த சத்தியம் எந்தத் தலைப்பின் கீழ் வரவேண்டும் என்பதையும் தீர்மானித்துக்கொள்வது அவசியம்.

முதலாவது தலைப்பான விசுவாசிகளின் முன்குறித்தலில், முன்குறித்தலைப் பற்றி வேதம் என்ன சொல்கிறது என்பதை ஆராய்ந்து தகுந்த விளக்கங்களையும், உதாரணங்களையும் தந்து அந்தத் தலைப்பின் கீழ் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். ஒத்தவாக்கிய அகராதி, சொல் அகராதி போன்றவை வேதத்தின் ஏனைய பகுதிகளில் காணப்படும் முன்குறித்தலைப் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள உதவும். விளக்கங்களும் உதாரணங்களும் எந்தளவுக்கு இருக்க வேண்டும் என்பதையும் கவனிக்கத் தவறக்கூடாது. வேறு வேதபகுதிகளில் இருந்து நிரூபண வசனங்களைத் தந்தால் மூன்றுக்கு மேல் வசனங்களிராதபடி பார்த்துக்கொள்வது

நல்லது. அந்த வசனங்கள் வேதத்தில் இருக்கும் உதாரணங் களில் சிறப்பானவையாக இருப்பவையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வசனத்தையும் பிரசங்கத்தில் விளக்க நேரம் தேவை. ஆகவே, அதிக வசனங்களைக் கொடுத்துவிட்டு ஏனைய தலைப்புகளை விளக்க நேரமில்லாமல் போய்விடக் கூடாது. ஒரு தலைப்பை மட்டும் விளக்க முழுப்பிரசங்கத்தை யும் பயன்படுத்திவிடக்கூடாது. இன்னும் மூன்று தலைப்பு களுக்கு விளக்கம் எழுதித் தயாரிக்க வேண்டியிருக்கிறது.

முன்குறித்தலைப்பற்றிய இந்த வேதவசனங்கள் இறையியல் போதனைகளைத் தருவதால் இதுபற்றி இதுவரை அதிகம் ஆராய்ந்திராத பிரசங்கிகள் இந்த சத்தியத்தை ஆராய்ந்து படிப்பது பிரசங்கத்தைத் தெளிவாகப் பிரசங்கிக்க உதவும். நமக்கே சத்தியத்தில் தெளிவு இல்லாவிட்டால் கேட்கும் ஆத்துமாக்களுக்கு நாம் சொல்வது எங்கே புரியப்போகிறது! தவறான உபதேசத்தைத் தந்துவிடாமல் இருப்பதும் மிக அவசியம். தமிழ் மக்கள் மத்தியில் முன்குறித்தலாகிய வேத சத்தியத்தை முறையாக அறிந்திருப்பவர்கள் குறைவு. அப்படியொன்று வேதத்தில் இல்லை என்று தவறாக எண்ணிப் பிரசங்கித்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் அதிகம். ஆகவே, இந்த சத்தியத்தை விளக்கும் நல்ல நூல்களை வாங்கி வாசிப்பது நமது பிரசங்கம் தெளிவாக இருக்க துணை செய்யும். உதாரணமாக முன்குறித்தலைப் பற்றித் தெரிந்துகொள்ள, தமிழில் இருக்கும் ஏ. டபிள்யூ. பிங்கின் (A.W. Pink) "சர்வ வல்லவரின் ஏகாதிபத்தியம்," ஆபிரகாம் பூத்தின் (Abraham Booth) "கிருபையின் மாட்சி," ஜோண் ஓவனின் (John Owen) "கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு" ஆகிய நூல்களை சிந்தித்து வாசிப்பது நல்ல பயன் அளிக்கும். இந்த நூல்களை எழுதியுள்ள வேத அறிஞர்களின் விளக்கங்களை நாம் பிரசங்கத்தில் உதாரணங்காட்டவும் பயன்படுத்திக் கொள்ளலாம். இது நம் மக்கள் இத்தகைய நூல்களை வாசித்து சத்தியத்தில் மேலும் வளரவும் துணை செய்யும்.

இதுவரை பிரசங்கத்தில் படிமுறையாக வரும் தலைப்புகள் ஒவ்வொன்றையும், எடுத்துக்கொண்டுள்ள வேதவசனங்களை வைத்து, பிரசங்கத்திற்கான சரீரத்தை எவ்வாறு உருவாக்குவது என்று பார்த்தோம். பிரசங்கத்தின் சரீரமே இந்த வசனங்கள் போதிக்கின்ற முன்குறித்தலாகிய சத்தியத்தை தெளிவாக

ஆத்துமாக்களுக்கு பவுல் போதித்திருக்கும் முறையில் விளக்கப் போகிறது. ஆகவே, பிரசங்கத்தின் சரீரத்தை அமைப்பதில் பெருங்கவனம் செலுத்துவது அவசியமாகிறது.

## வசனப்பகுதிகளை ஆராய அவசியமான துணைகள்

வேத வசனங்களை மேலே பார்த்தவிதத்தில் ஆராய்ந்து சரியான அர்த்தங்களை அறிந்துகொள்ள நமக்கு துணைகள் தேவைப்படுகின்றன. கீழ்வரும் நூல்களைப் பயன்படுத்தி வேத அறிவை மேலும் வளர்த்துக்கொள்ள முடியும்.

- வேதத்தை சரியாக விளங்கிக்கொள்ள நாம் படிக்கப் பயன்படுத்தும் தமிழ் வேதத்தைத் தவிர இன்னொன்றையும் பயன்படுத்தலாம். வேதத்தை எழுத்துப்பூர்வமாக தமிழில் மொழிபெயர்த்து அதோடு ஆங்கில வேதத்தையும் இணைத்து ஒரு வேதநூலை India Bible Literature (IBL) வெளியிட்டிருக்கிறது. இது தமிழிலுள்ள வார்த்தைகளுக்கு ஆங்கிலத்தில் என்ன வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று பார்த்துக்கொள்ள உதவும்.

- வேத ஒத்தவாக்கிய அகராதி (Concordance).

- வேதத்தில் காணப்படும் முக்கியமான வார்த்தை களுக்கு விளக்க மளிக்கும் ஒரு நல்ல அகராதி (A good Bible dictionary and Encyclopedia).

- வேதகாலப்பகுதியின் இடங்களைக் காட்டும் நல்ல வரைபடம் (Bible Atlas).

- எபிரெய, கிரேக்க வார்த்தைகளுக்கு அர்த்தம் தரும் வேத இன்டர்லீனியர் (Interlinear).

- நல்ல வேத விளக்கவுரை நூல்கள் (Commentaries).

இறுதியாக, நாம் மேலே பார்த்த வகையில் வேதத்தை ஆராய்ந்து படிக்காமல் வேதத்தில் ஆவியானவர் தந்திருக்கும் சத்தியங்களை மெய்யாக அறிந்துகொள்ள ஒருபோதும் முடியாது. இந்த முறைகளை ஜெபத்தோடு உழைத்துப் பயன்படுத்தினால் மட்டுமே கர்த்தரின் வேதத்தின் வல்லமையை நாம் உணர முடியும். ஆத்துமாக்கள் சத்தியத்தை அறிந்து தங்களுடைய

வாழ்க்கையில் பயன்படுத்தி வளர வேண்டுமானால் வேதத்தைப் போதிக்கிறவர்கள் மேலே பார்த்த முறைகளை அலட்சியப்படுத்திவிடாமல் கையாண்டு சத்தியத்தில் தெளிவான அறிவைப் பெற்றுக்கொண்டு மற்றவர்களுக்கு போதிக்கும் பணியைச் செய்ய வேண்டும். சத்தியம் மட்டுமே விடுதலையாக்கும்.

# பிரசங்கத்தில் பயன்பாடுகள்

“சத்தியம் ஆணியாக இருந்தால், அதை ஆத்துமாவின் இருதயத்தில் பதியவைக்கும் சுத்தியலே பிரசங்கத்தின் பயன்பாடு”

- அல்பர்ட் என். மார்டின்

பிரசங்கிகள் பிரசங்கிக்க வேண்டிய செய்திக்கான ஒரு வரைபடத்தைத் தயாரித்து (Outline), அதன் அடிப்படையில் பிரசங்கத்திற்கான சரீரத்தை (Body of the Sermon) முறையாகத் தயாரிப்பது எப்படி என்று இதுவரை பார்த்தோம். இவற்றைச் செய்து முடித்ததோடு பிரசங்கத்தை முழுமையாகத் தயாரித்து விட்டதாக எண்ணிவிடக்கூடாது. பிரசங்கத்தின் சரீரத்தைத் தயாரித்து விட்டால் மட்டும் போதாது. அதற்குத் தலையும், நடப்பதற்கு கால்களும் தேவை. அதாவது பிரசங்கத்தின் பயன்பாட்டு அம்சங்களையும் (Application), முகவுரையையும் (Introduction) தயாரிக்க வேண்டும். இவற்றை எவ்வாறு தயாரிப்பது என்பதை இனிப் படிப்படியாகப் பார்ப்போம். முதலாவதாக, பிரசங்கத்தின் பயன்பாடுகளை (Sermon Applications) எப்படித் தயார் செய்வது? என்பதை ஆராய்வோம். பெரும்பாலான பிரசங்கிகள் இந்தப் பயன்பாடுகளை முடிவுரைபோல பிரசங்கத்தின் இறுதியில் சுருக்கமாகக் கொடுத்துவிடுவதுண்டு. அவர்கள் பிரசங்கத்தின் பயன்பாடு களைத் தயாரிப்பதில் அதிகம் கவனம் செலுத்துவதில்லை. நான் பிரசங்கத்தின் பயன்பாடுகளைத் தனியாகப் பிரித்து விளக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறேன். பிரசங்கத்தின் பயன்பாடுகளை வெறும் முடிவுரையாகக் கருதி அலட்சியப் படுத்திவிடாமல் அதைப் பிரசங்கத்தின் சரீரத்துக்கு அடுத்த முக்கிய பகுதியாகக் கருதித் தயாரிக்க வேண்டியது அவசியம்.

ஒரு பிரசங்கத்தில் எத்தனை நல்ல போதனைகள் இருந்தாலும், அதில் பயன்பாடுகளும், அந்தப் பயன்பாடுகள் அழுத்தமான தாகவும், தெளிவானதாகவும், ஆத்துமாக்களின் இருதயத்தை அசைப்பனவாகவும் இருக்காவிட்டால் அவற்றால் எந்தப் பிரயோஜனமும் இல்லை.

## பயன்பாடு பற்றிய சில தவறான எண்ணங்கள்

நம்முடைய பிரசங்கங்கள் ஏனைய அவசியமான அனைத்து அம்சங்களையும் கொண்டிருந்து, அதன் பயன்பாடு என்ன என்பதை விளக்காமல் இருந்தால் அந்தப் பிரசங்கங்களால் கேட்பவர்களுக்கு எந்தப் பயனும் இருக்காது. அந்தப் பிரசங்கங்கள் நல்ல செய்தியைக் கொண்டிருக்கலாம். வேதப் பகுதிகளை முறையாக, தவறில்லாமல் விளக்குவனவாகவும், நல்ல உதாரணங்களையும், கொண்டிருப்பவையாகவும் இருக்கலாம். ஆனால், அவற்றைக் கேட்கும் ஆத்துமாக்கள் அவற்றின் மூலம் தங்கள் வாழ்க்கையில் செய்ய வேண்டிய காரியங்கள் என்ன?, அந்தப் பிரசங்கத்தின் மூலம் அவர்கள் கர்த்தரை எவ்வாறு மகிமைப்படுத்த வேண்டும் என்பதை விளக்கத் தவறுமானால் அந்தப் பிரசங்கத்தால் எந்தப் பிரயோஜனமும் இருக்காது. சில பிரசங்கிகள், வேதத்தை விளக்குவது மட்டும்தான் தங்களுடைய பணி, அவற்றை ஆத்துமாக்களின் வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டியது பரிசுத்த ஆவியின் பணி என்ற தவறான எண்ணத்தில் ஆத்து மாக்கள் அந்தப் பிரசங்கத்தைக் கேட்டு செய்ய வேண்டியது என்ன என்பதை உறுதியாக விளக்கத் தவறிவிடுகின்றனர். இப்படி நம்பிச் செயல்படும் சில பிரசங்கிகளை நானறிவேன்.

வேறு சில பிரசங்கிகள் ஆத்துமாக்களுக்கு எந்தப் பிரச்சனையும் கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்திலும், அவர்கள் தங்களைப் பற்றித் தவறாக எண்ணிவிடக்கூடாது என்ற எண்ணத்திலும் இனிப்பான பிரசங்கங்களையே எப் போதும் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டு, பிரசங்கத்தில் பயன்பாடுகள் பற்றிப் பேசுவதையே விட்டுவிடுகின்றனர். சில பிரசங்கிகள், ஒவ்வொரு வேத வசனத்தின் மூலமும் கிறிஸ்துவை ஆத்துமாக்கள் காணும்படிச் செய்வது மட்டுமே பிரசங்கியின் தொழில், ஆகவே ஒழுக்கரீதியான எந்த விளக்கத்தையும் வேதவசனங்களில் இருந்து பிரசங்கிக்கக் கூடாது என்று

கருதுகின்றனர். இவர்களுடைய தவறான இறையியல் கண்ணோட்டமே இவர்கள் இத்தகைய எண்ணத்தைக் கொண்டிருப்பதற்குக் காரணமாக அமைகிறது. அதாவது, பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு பகுதியிலும், வசனத்திலும் இருந்து கிறிஸ்துவைப்பற்றி மட்டுமே விளக்க வேண்டும் என்று இவர்கள் கருதுகிறார்கள். அத்தோடு, புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் வரலாற்றை விளக்குவதால் அவரைப்பற்றி மட்டுமே அதன் மூலம் விளக்க வேண்டும் என்பார்கள். ஆகவே, பழைய ஏற்பாட்டில் இருந்து ஆபிரகாமின் விசுவாச வாழ்க்கையைப்பற்றிப் பிரசங்கித்து நாம் எப்படி கர்த்தருக்கு விசுவாசமாக வாழ்வது என்று பிரசங்கிப்பது, இவர்களைப் பொறுத்தவரையில் தவறு. இத்தகைய தவறான இறையியல் பார்வையால் இவர்களுடைய பிரசங்கத்தில் பயன்பாடுகளுக்கு இடமிருக்காது. பிரசங்கத்தைக் கேட்கும் ஆத்துமாக்கள் கிறிஸ்துவைப் பற்றி அதிகம் தெரிந்துகொள்ள முடிந்தாலும் தங்கள் வாழ்க்கையில் இறைவாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்பதை இம்முறையிலான பிரசங்கங்களில் இருந்து அறிந்துகொள்ள முடியாது.

நாம் முக்கியமாக தமிழ்ப் பிரசங்கிகளுக்கு உதவுமுகமாக இந்நூலை எழுதுவதால் அவர்கள் மத்தியில் காணப்படும் குறைபாடுகளைக் குறித்து சிந்திக்காமல் இருக்க முடியாது. நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வீதம் தமிழ்ப் பிரசங்கிகள் வேத வசனங்களை ஆராய்ந்து அதன் அடிப்படையில் பிரசங்கிக்கும் வழக்கத்தைக் கொண்டிராததால் அவர்களுடைய பிரசங்கத்தில் பயன்பாடுகள் வேத வசனங்களின் அடிப்படை யில் அமைந்திருப்பதில்லை. அவர்கள் பிரசங்கப் பயன்பாடுகள் என்ற பெயரில், ஆத்துமாக்கள் என்ன செய்ய வேண்டும் என்று தாங்கள் எதிர்பார்ப்பதைப் பிரசங்கத்தில் திட்டித் தீர்த்துவிடுவதையே வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். பிரசங்கத்தின் பயன்பாடுகள் அனைத்தும் பிரசங்கத்தில் இருந்துதான் பெறப்பட வேண்டுமே தவிர பிரசங்கி, தான் ஆத்துமாக்கள் செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பவற்றை பிரசங்கத்தைப் பயன்படுத்தி சொல்ல முயற்சிக்கக் கூடாது. உதாரணத்திற்கு, விசுவாசிகள் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதைப் பிரசங்கப் பொருளாகக் கொண்டிருக்கு மானால் அதை வைத்துக் கொண்டு, ஆத்துமாக்கள் போதகர்

களுக்கு எந்தவிதத்தில் முகங்கோணாமல் கீழ்ப்படிய வேண்டும், சபைக்கு எந்தவிதத்தில் விசுவாசமாக காணிக்கைகளை அள்ளிக் கொடுக்க வேண்டும் என்று பட்டியல் போட்டு பிரசங்கிக்கக்கூடாது. இது பெரும்பாலும் இன்று வழக்கில் இருக்கும் ஒரு முறை. வேத வசனங்களை ஆராய்ந்து தயாரிப் பவர்கள் பிரசங்கப் பயன்பாடுகளை அந்த வசனத்தில் இருந்தே பெற்றுக்கொள்வார்கள். பிரசங்கப் பொருளுக்கும் பிரசங்கப் பயன்பாட்டிற்கும் இடையில் முழங்காலுக்கும், மொட்டைத் தலைக்கும் இடையில் இருக்கும் இடைவெளி இருந்தால் அது பிரசங்கமாகாது.

பிரசங்கப் பயன்பாடு குறித்து நம்மத்தியில் இருக்கும் இத்தகைய நடைமுறைக்கு மத்தியில் நாம் பிரசங்கத்தில் காணப்பட வேண்டிய பயன்பாடுகளைப்பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. வெளிப்படையாகக் கூறப் போனால் பயன்பாடுகளைக் கொண்டிருக்காத பிரசங்கத்தை ஒருபோதும் பிரசங்கமாகவே கருத முடியாது. மேலே நாம் பார்த்தவிதத்தில் பிரசங்கிப்பவர்கள் பிரசங்கத்தைப் பற்றிய தவறான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

## பிரசங்கத்தில் பயன்பாடுகளின் அவசியம்

ஜெப்ரி தொமஸ் (Geoffrey Thomas) என்ற வேல்ஸ் தேசத்து பிரசங்கி, "பிரசங்கத்தின்மூலம் வேத சத்தியத்தின் பயன்பாடு களை ஆத்துமாக்கள் அறிந்துகொள்ளும்படி செய்வதே வேதபூர்வமான, சீர்திருத்த விசுவாசப் பிரசங்கங்களின் இருதயமாக இருக்கிறது" என்று கூறியிருக்கிறார். ஜோண் ஏஞ்சல் ஜேம்ஸ் (John Angell James) என்னும் பழங்காலப் போதகர், "வேத வசனங்களை முறையாக, தெளிவாக ஆராய்ந்து, அந்த ஆய்வின் அடிப்படையிலேயே நம்முடைய பிரசங்கங்கள் அனைத்தும் அமைய வேண்டும் என்றும், இருந்தபோதும் அத்தகைய முறையான, தெளிவான ஆய்விற்கும் மேலான அம்சங்களை பிரசங்கம் கொண்டிருக்க வேண்டும்" என்றும் கூறுகிறார். அதாவது "அறிவைத் தருவதாக மட்டும் இல்லாமல் இதயத்தை அசைப்பதாகவும், மனச்சாட்சியை விழிக்க வைப்பதாகவும் நமது பிரசங்கம் இருக்க வேண்டும்" என்று அவர் கூறுகிறார். போதகர் அல்பர்ட் என். மார்டின் (Albert N. Martin) இதை பின்வருமாறு அருமையாக விளக்குகிறார்,

“பிரசங்கத்தின் பயன்பாடு என்பது நமது தலையிலிருந்து இருதயத்தை நோக்கிச் செல்லும் பிரதான பாதையாக இருக்கிறது. வேதபூர்வமான சத்தியத்தையும், அந்த சத்தியத்தின் அடிப்படையில் ஆத்துமாக்களில் ஏற்படும் நேர்மையான உணர்வுகளுக்கும் இடையில் பாலமாக அமைவதுதான் பிரசங்கத்தின் பயன்பாடுகள். ஆத்துமாக்கள் வேத ஞானத்தை மட்டுமல்லாமல், இருதயத்துக்கு தேவையான உணவையும் பெற்றுக்கொள்ளச் செய்வதே முறையான பயன்பாடுகளைக் கொண்டுள்ள பிரசங்கமாக அமைகின்றது” என்கிறார்.

பிரசங்கத்தின் பயன்பாடுகளின் அவசியத்தை நாம் இத்தனைதூரம் வலியுறுத்தி சொல்வதற்குக் காரணம் அவை இல்லாமல் பிரசங்கம் பிரசங்கமாக இருக்க முடியாது என்பதற்காக மட்டுமல்ல, அவற்றைக் கொண்டிராத பிரசங்கங்களால் ஆத்துமாக்களுக்கு எந்தப் பயனுமில்லை என்பதால்தான். பயன்பாடுகளை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டாமல் மேலெழுந்தவாரியாகப் பிரசங்கிக்கப்படும் பிரசங்கங்களைப் பற்றிக் கூறும் அல்பர்ட் என். மார்டின், “மேலெழுந்தவாரியாகப் பிரசங்கிக்கப்படும் எல்லோருக்கும் பொதுவான பிரசங்கங்களால் ஒருவருக்கும் எந்தப் பயனுமில்லை” என்கிறார். எல்லோருக்கும் பொதுவானவிதத்தில் சத்தியத்தைப் பிரசங்கித்து, ஆத்துமாக்கள் தாங்களாகவே அந்தப் போதனையை எப்படிப் பயன்படுத்திக்கொள்வது என்று சிந்தித்துப் பயன்படுத்திக் கொள்ளும்படி விட்டுவிடுவது தவறான செயல். இப்படிச் செய்யும் போது ஆத்துமாக்கள் அந்தப் போதனைகள் ஏனையோருக்குத் தான் பொருந்தும், தங்களுக்குப் பொருந்தாது என்ற விதத்தில் தான் சிந்திப்பார்கள். ஆத்துமாக்களுக்கு பாவத்தைப் பற்றிய வெறும் ஞானத்தை மட்டும் கொடுத்தால் போதாது. அவர்கள் தங்களுடைய பாவத்தை உணர்வதற்கு பிரசங்கம் வழி வகுக்க வேண்டும். அதேபோல் கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் தங்களுக்குத்தான் என்பதில் அவர்கள் ஆறுதலடைய வேண்டும். கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் தங்கள் பாவம் கழுவப்படும் என்ற நம்பிக்கையில் உறுதிபெற வேண்டும். இதைப் பிரசங்கம் செய்யகூடியதாக இருக்க வேண்டும். “கிறிஸ்துவின் ஆடுகளில் தாங்களும் ஒருவரா என்பதை, நியாயத்தீர்ப்பு நாளின் தீவிரத் தோடு ஆத்துமாக்கள் உணர்வுபூர்வமாக ஆராய்ந்து அறியும் படியாக சத்தியம் பிரசங்கத்தின் மூலம் இதயத்தைத் தாக்குவ

தாக இருக்க வேண்டும். இப்படிச் செய்யாத பிரசங்கங்கள் வேதபூர்வமான பிரசங்கங்களாக இருக்க முடியாது" என்கிறார் அல்பர்ட் என். மார்டின்.

## பிரசங்கங்களில் பயன்பாடுகளின் அவசியத்தை வலியுறுத்தும் ஆதாரங்கள்

பிரசங்கத்தின் பயன்பாடுகளைத் தயாரிப்பதில் பிரசங்கிகள் ஏன் அதிகம் ஊக்கம் காட்ட வேண்டும் என்பதற்கு நிராகரிக்க முடியாத இரண்டு காரணங்களை முன்வைக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, அதில் நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்பதை வேதம் வலியுறுத்துகிறது (2 தீமோ. 3:16-4:2). "வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கின்றது. தேவனுடைய மனுஷன் தேறினவ னாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளு தலுக்கும், நீதியைப்படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது. நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக் கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும், அவருடைய இராஜ்யத்தையும் சாட்சியாக வைத்து கட்டளையிடுகிறதாவது சமயம் வாய்த் தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத் தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லு."

இந்த வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் வேத வாக்கியங்கள் உபதேசத்துக்கு மட்டும் பிரயோஜனமுள்ளவை களாக இருக்கின்றது என்று கூறவில்லை. பவுல் அத்தோடு விட்டிருந்தால் நாம் பிரசங்கத்தின் பயன்பாடுகளில் அக்கறைக் காட்ட வேண்டிய அவசியமிருக்காது. ஆனால் பவுல், அந்த வேதவாக்கியங்களை நாம் எந்தவகையில் ஆத்துமாக்களின் முன் பிரசங்கிக்க வேண்டும் என்பதை இந்த வசனங்களின் மூலம் விளக்கத் தவறவில்லை. பிரசங்கிகளுடைய கடமை உபதேசத்தைக் கொடுப்பது மட்டுமல்ல என்பதை இந்த வசனங்களைக் கூர்ந்து கவனித்தால் விளங்கிக்கொள்ளலாம். உபதேசங்கள் ஆத்துமாக்களின் இருதயத்தை அசைத்து

அவர்கள் தங்கள் வாழ்க்கையில் நடந்துகொள்ள வேண்டிய முறையை ஆணித்தரமாக விளக்குவதாக இருக்க வேண்டும். அதனால்தான் பவுல், பிரசங்கத்தின் மூலம் பிரசங்கிகள் வேத உபதேசங்களைச் சரியாகப் போதித்து ஆத்துமாக்களைத் தேவையான வேளைகளில் கண்டனம் செய்தும், கடிந்தும், அவர்கள் நேர்மையுள்ளவர்களாகவும், நீதிக்குரிய செயல்களைச் செய்பவர்களாகவும் சீர்திருந்தும்படிப் பிரசங்கம் செய்ய வேண்டும் என்கிறார். “கடிந்து,” “கண்டனம் செய்து” என்ற வார்த்தைகளை வெறுமனே திட்ட வேண்டும் என்ற அர்த்தத்தில் நாம் விளங்கிக்கொள்ளக்கூடாது. உபதேசங்களைப் பயன்படுத்தி ஆத்துமாக்கள் தங்களுடைய வாழ்க்கையில் தவறிழைத்துவிடாமல் இருக்கும்படி நீடிய சாந்தத்தோடு கண்டித்துப் பிரசங்கிப்பதைத்தான் பவுல் இங்கே குறிப்பிடு கிறார். பிரசங்கத்தில் பயன்பாடுகள் இருக்க வேண்டு மென்பதை இந்த வசனங்கள் தெளிவாக விளக்குகின்றன. பயன்பாடுகளைக் கொண்டிராத பிரசங்கத்தால் ஒரு போதும் ஆத்துமாக்களை நீதிக்குரிய செயல்களில் வழிநடத்த முடியாது.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் பிரசங்கங்கள் பயன்பாடுகளைக் கொண்ட பிரசங்கங்களாக இருந்தன. ஏசாயாவின் பிரசங்கங்களை இங்கே உதாரணத்திற்குக் காட்ட லாம். இஸ்ரவேலரின் தவறுகளை ஏசாயா வெளிப்படுத்தி, அவர்கள் எத்தகைய மனமாற்றத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைத் துல்லியமாக அறிவிக்கத் தவறவில்லை. மல்கியா கர்த்தருடைய செய்தியை இஸ்ரவேலருக்குப் பிரசங்கித்தபோது, “நீங்கள் வாழ்கின்ற வாழ்க்கை தவறானது” என்று மட்டும் பிரசங்கிக்கவில்லை. “நீங்கள் கர்த்தருடைய பணத்தைத் திருடிக் கொண்டிருக்கிறீர்கள், உங்கள் வீடுகளை நல்ல முறையில் கட்டிக்கொண்டு கர்த்தருடைய ஆலயத்தை உதாசீனப்படுத்துகிறீர்கள், கர்த்தருடைய ஆராதனையை அலட்சியப்படுத்தி உங்கள் சொந்த வழியில் அவரை ஆராதிக்கிறீர்கள்” என்று வரிசைக்கிரமமாக அவர்களுடைய தவறான வாழ்க்கை முறையை வேதரீதியில் அவர்கள் முன் திறந்து வைத்ததை மல்கியாவில் வாசிக்கலாம். பயன்பாடு களைக் கொண்ட பிரசங்கம் (Applicatory Preaching) எப்படி யிருக்க வேண்டுமென்பதற்கு இதெல்லாம் உதாரணங்கள்.

யோவான் ஸ்நானன் ஏரோதைப் பார்த்து ஒழுக்கமற்ற வாழ்க்கையை வேதம் நிராகரிக்கிறது என்று மட்டும் கூறவில்லை. அத்தோடு நிறுத்தியிருந்தால் அது மெய்யான பிரசங்கமாக இருந்திராது. வெறும் உபதேசமாக மட்டுமே இருந்திருக்கும். ஆனால், யோவான் ஸ்நானன், நீ உன்னுடைய சகோதரனுடைய மனைவியோடு வைத்திருக்கும் தொடர்பை உடனடியாகத் துண்டித்துக்கொள்ள வேண்டுமென்று பிரசங்கித்தார் (மாற்கு 6:17-18). அதுவே பயன்பாடுள்ள பிரசங்கம். இயேசு கிறிஸ்துவின் எல்லாப் பிரசங்கங்களும் இதே முறையிலேயே அமைந்திருந்தன. அவர் வெறும் உபதேசத்தை மட்டும் கொடுக்கவில்லை. அவற்றின் பயன்பாடுகளை ஆணித்தரமாக நிலைநிறுத்தினார். உதாரணத்திற்கு, மத்தேயு 23 ஆம் அதிகாரத்தில் அவர் பரிசேயர்களைப் பார்த்து செய்த பிரசங்கத்தைக் கவனியுங்கள்.

இத்தகையப் பயன்பாடுகளைக் கொண்ட பிரசங்கங்களின் அவசியத்தை வெளிப்படையான போதனைகள் மூலமும், உதாரணங்களின் மூலமும் வேதம் வலியுறுத்திக் காட்டுவது மட்டுமல்ல; சபை வரலாறும் அதை வலியுறுத்துகிறது. சபை வரலாற்றில் பெருமைமிக்க போதகர்களான தூய்மைவாதிகள், பயன்பாடுகளைக் கொண்ட பிரசங்கங்களை அளிப்பதில் உதாரணபுருஷர்களாக இருந்தனர். அவர்களுடைய பிரசங்கங்கள் பெரும்பாலும் 50, 60 பயன்பாடுகளைக் கொண்டவையாக இருந்தன. எடுத்துக்கொண்டுள்ள வேதவசனங்களைத் துல்லியமாக ஆராய்ந்து அதில் காணப்படும் பயன்பாடுகளை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து ஆத்துமாக்களுடைய இருதயத்தைப் பிழியும் வகையில் பிரசங்கிப்பதில் அவர்கள் சமர்த்தர்கள். இந்த முறையிலான பிரசங்கங்களுக்கு ஜோண் ஓவன் (John Owen), ஜோண் பிளேவல் (John Flavel), தொமஸ் புரூக்ஸ் (Thomas Brooks), ரிச்சட் சிப்ஸ் (Richard Sibbs) ஆகியோரின் பிரசங்கங்களை உதாரணத்திற்குக் காட்டலாம்.

ஆத்துமாவின் இருதயத்தைத் தாக்காமல், அவர்களுடைய தலைக்குமேல் போகும்படிப் பிரசங்கிப்பதைத் தூய்மைவாதிகள் அறியாதிருந்தனர். அவர்களுடைய பிரசங்கங்கள் ஆத்துமாக்களின் சிந்தனையைத் தூண்டிவிட்டு இருதயத்தைத் தாக்குவனவாயிருந்தன. 17 ஆம் நூற்றாண்டில் திருச்சபைகளின் நன்மை கருதி ஆராதனை முறைகள்பற்றி வெளியிடப்பட்ட

வெஸ்ட்மின்ஸ்டர் ஆராதனைக் கோட்பாடுகளில் பிரசங்கத்தைப்பற்றி பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது:

> "பிரசங்கி பொதுவான போதனைகளை அளிப்பதில் மட்டும் தங்கியிராமல், அந்தப் போதனைகளின் பயன்பாடுகளை ஆத்துமாக்கள் அறிந்துகொள்ளும் படிப் பிரசங்கிக்க வேண்டும். இந்தவகையில் பயன்பாடுகளைக் கொண்ட பிரசங்கங்களை அளிப்பதற்கு பிரசங்கி அதிக ஞானத்தோடும், உற்சாகத்தோடும், தியானத்தோடும் கடுமையாக உழைப்பது அவசியம். பிரசங்கத்தின் அத்தகைய பயன்பாடுகள், பிரசங்கங்களைக் கேட்கும் ஆத்துமாக்களுக்கு இனிப்பானவையாக இல்லாமலிருக்கலாம். ஆனால், கர்த்தரின் வார்த்தை அவர்களில் வல்லமையாகக் கிரியைசெய்து, அவர்களுடைய இருதயத்தை சோதிப்பதோடு, அவிசுவாசிகள் யாராவது இருந்தால் அவர்களுடைய இருதயங்களிலுள்ள இரகசியங்களையும் வெளிப்படுத்தி கர்த்தருக்கு அவர்கள் மகிமைதரும்படியாகப் பிரசங்கிப்பவர் பிரசங்கம் செய்ய வேண்டும்."

தூய்மைவாதிகளைப் போலவே 16 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகளும் பிரசங்கங்களில் பயன்பாடுகள் நிறைந்திருக்கும்படிப் பார்த்துக் கொண்டார்கள். ஜோண் கல்வின் (John Calvin) தனது பிரசங்கங்களைத் தயாரிக்கும்போது, அவற்றின் பயன்பாடுகளைத் தயாரிப்பதில் அதிகமாக நேரத்தை செலவிட்டதாகச் சொல்லுவார்கள். பழைய ஏற்பாட்டு நூலான யோபுவில் அவர் செய்துள்ள பிரசங்கங்கள் இதற்கு நல்ல உதாரணம். இதேவகையில்தான் ஜொனத்தன் எட்வர்ட்ஸும் (Jonathan Edwards) பிரசங்கித்தார். தலைசிறந்த பிரசங்கியான சார்ள்ஸ் ஸ்பர்ஜனுடைய (Charles Spurgeon) பிரசங்கங்களை ஆராய்ந்து பார்த்தால் அவற்றில் பயன்பாடுகள் ஆற்றுநீரைப்போலத் துள்ளியோடுவதையும் நெஞ்சைத் தொடுபவையாகவும் இருப்பதைக் கவனிக்கலாம். அதேநேரம் பிசப் ஜே.சி. ரைலினுடைய (J.C. Ryle) பிரசங்கங்களைக் குறிப்பிடாமலும் இருக்க முடியாது. ரைலின் பிரசங்கங்கள் தூய்மைவாதிகள், சீர்திருத்தவாதிகளின் பிரசங்கங்களைப் போலவே பயன்பாடுகள் நிறைந்து காணப்படும்.

பிரசங்க ஊழியத்தில் வித்தகர்களாக இருந்து, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட தூய்மைவாதிகளுடையதும், சீர்திருத்தவாதிகளினுடையதும், ஸ்பர்ஜனுடையதும், ரைலினுடையதுமான பிரசங்கங்களை நாம் வாசித்துப் பார்த்தால் அவர்கள் எந்த விதத்தில் தங்கள் பிரசங்கங்களில் பயன்பாடுகளைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதை அறிந்துகொள்ளலாம். அத்தகைய படிப்பு பிரசங்க ஊழியத்தில் பிரசங்கிகள் நல்ல தேர்ச்சிபெறத் துணை செய்யும்.

## பயன்பாடுகளைக் கொண்ட பிரசங்கங்களை அளிக்க ஒரு போதகனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள்

### போதகனின் பக்திவிருத்தி

பொதுவான உபதேசத்தை மட்டும் அளிக்காமல் ஆத்துமாக்கள் தங்களுடைய வாழ்க்கையை சோதித்துத் திருத்திக்கொள்ள வேண்டியவிதத்தில் பயன்பாடுகள் நிறைந்த பிரசங்கங்களை அளிக்கவேண்டுமானால் பிரசங்கியினுடைய வாழ்க்கை அவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். கர்த்தரோடு தனக்கிருக்கும் உறவில் வளர்ந்து, பக்திவிருத்தியில் சிறந்திருக்கும் போதகனாலேயே பயன்பாடுகளைக் கொண்ட பிரசங்கங்களை அளிக்க முடியும். தன்னுடைய வாழ்க்கையில் பல குறைபாடுகளைக் கொண்டு, அவற்றைத் திருத்திக் கொள்ளாமலும், பக்தியில் வளராமலும் இருக்கும் போதகனால் ஆத்துமாக்கள் பயனடைகிற வகையில் சுத்தமான இருதயத்தோடு பயன்பாடுகளைத் தயாரித்துப் பிரசங்கிக்க முடியாது. பண ஆசையில் மனம் நிலைதடுமாறிக் கொண்டிருந்தாலோ, ஊழியத்தை வெறும் வர்த்தகமாக நடத்திக் கொண்டிருந்தாலோ, இருதயத்தில் ஆத்துமாக்களின் மேல் மெய்யான அன்பு இல்லாமலிருந்தாலோ ஒருவரால் ஆத்துமாக்களுடைய வாழ்க்கையில் நேர்மையான அக்கறை வைத்து உழைத்துப் பிரசங்கிக்க முடியாது.

### சபை ஆத்துமாக்களுடன் அந்நியோன்னியம்

அடுத்ததாக, பயன்பாடுகளைக் கொண்ட பிரசங்கங்களை அளிக்க வேண்டுமானால் ஒரு போதகனுக்கு ஆத்துமாக்களுடன் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். ஆத்துமாக்

களின் ஆத்மீகத் தேவைகளையும் ஏனைய தேவைகளையும் அறிந்திருந்தால்தான் அவர்களுக்குப் பயன்படும் முறையில் பிரசங்கப் பயன்பாடுகளைத் தயாரிக்க முடியும். அதுமட்டு மல்லாமல் அவற்றை நேர்மையுடனும், நெஞ்சுரத்துடனும், மனித பயமில்லாமலும் பிரசங்கிக்க வேண்டுமானால் ஆத்துமாக்களுக்கு பிரசங்கியில் அன்பும், நம்பிக்கையும் இருக்க வேண்டும். சட்டசபை எம்.எல்.ஏ.வைப் போல ஆத்துமாக்களை தூரத்தில் தள்ளிவைத்துப் பழகும் பிரசங்கிகளுக்கு ஆத்துமாக் களில் எந்த அன்பும் இருக்காது அவர்களுடைய தேவைகளில் அக்கறையும் இருக்காது; ஆத்துமாக்களோடு வர்த்தக உறவுமுறை (Professional relationship) மட்டும் வைத்திருப்பவர்களுக்கு பயன்பாடுகளைக் கொண்ட பிரசங்கங்களைக் கனவிலும் கொடுக்க முடியாது.

## அறிவு விருத்தி

பயன்பாடுகள் நிறைந்த நல்ல பிரசங்கங்களை அளிக்க வேண்டுமானால் பிரசங்கி தன்னுடைய ஞானத்தைப் பெருக்கிக்கொள்ள நல்ல நூல்களை வாசிக்க வேண்டும். நாம் ஏற்கனவே கூறியதுபோல் சீர்திருத்தவாதிகள் மற்றும் தூய்மைவாதிகளின் பிரசங்கங்களை வாசிப்பதும் அவசியம். ஜோண் பனியனின் “மோட்ச பயணம்” புத்தகத்தை பல தடவை வாசிப்பது அவசியம். பனியனின் எல்லா நூல்களுமே சிறந்தவை. வேதம் மட்டும் போதும், படிப்பு அவசியமில்லை என்பவர்களால் அன்றாடக் கஞ்சிக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டு மனநிம்மதிக்காக ஆராதனைக்கு வருபவர்களுக்கும், திருமண வாழ்க்கையில் இடர்களைச் சந்தித்து அதற்கு வழிதேடி மனச்சமாதானத்திற்காக பிரசங்கம் கேட்க வருபவர்களுக்கும், வேலைத்தளத்தில் பிரச்சனை மிகுதியால் நிம்மதியில்லாமலிருப்பவர்களுக்கும் அவரவர் தேவைகளுக்குத் தகுந்தபடி ஞானத்தோடு வேதத்திலிருந்து தகுந்த விளக்கங் களையும், நடைமுறைக்குப் பயன்படும் ஆலோசனைகளையும் கொடுத்து, அவர்களுடைய மனதைத்தொட்டு, அசைத்து, திருத்தி, ஊக்கப்படுத்திப் பிரசங்கிப்பதென்றால் நல்ல நூல்களை வாசிக்காமலும், நம்மைவிட ஆசீர்வதிக்கப்பட்ட பிரசங்கிகளின் பிரசங்கங்களைக் கேட்டுப் பயனடையாமலும் அதைச் செய்ய முடியுமா?

**பிரசங்கத்தின் பயன்பாடுகளைத் தயாரிக்க நாமெடுக்க வேண்டிய நடவடிக்கைகள்**

1. பிரசங்கிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற வேதவசனங்களை சரியாக ஆராய்ந்து, அவை தரும் போதனை என்ன என்பதைத் தெளிவாக அறிந்து கொண்ட பின்பே அப்பகுதியின் பயன்பாடுகளை ஆராய்ந்து தயாரிக்க வேண்டும். பயன்பாடுகள் பிரசங்கப் பகுதியில் இருந்து வரவேண்டியிருப்பதால் இது அவசியம். பிரசங்கப் பகுதியை ஆராயாமல் இதுதான் இந்தப் பகுதியின் பயன்பாடு என்று நாமே ஏதோ ஒன்றை ஆலோசனையாக சொல்லுவது பெருந்தவறு. இன்று அநேகர் இப்படி செய்து வருகிறார்கள்.

2. பயன்பாடுகள் எப்போதும் நாம் பிரசங்கிக்க எடுத்துக்கொண்டிருக்கும் வேதப்பகுதியில் இருந்து வெளிப்படையாகப் புறப்படுபவையாக இருக்க வேண்டும். அதாவது, பிரசங்கப் பகுதியில் பயன் பாடுகளை ஆள்விட்டுத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நிலை ஏற்படக்கூடாது. பயன்பாடு களுக்கும் பிரசங்கப் பகுதிக்கும் சம்பந்தமில்லா திருக்குமானால் பிரசங்கத் தயாரிப்பில் நாம் எங்கோ தவறுவிட்டுவிட்டோம் என்றுதான் அர்த்தம்.

3. பயன்பாடுகளை நாம் பிரசங்கத்தில் விளக்கும் சத்தியத்தின் ஒவ்வொரு தலைப்பின் கீழுமோ அல்லது பிரசங்கத்தின் இறுதியில் வரிசைக்கிரம மாகவோ கொடுக்கலாம். சில பிரசங்கங்களில் ஒவ்வொரு பகுதியையும் விளக்குகிற வேளை யிலேயே அதற்குரிய பயன்பாட்டை உடனடியாக வலியுறுத்த நேரிடும். வேறு சில பிரசங்கங்களில் பயன்பாடுகளை வரிசையாக பிரசங்கத்தின் இறுதி யில் ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்கு வலியுறுத்தி விளக்கவேண்டிவரும். சில வேளைகளில் பிரசங்கத் தின் ஆரம்பத்திலேயே இருதயத்தை அசைக்கக் கூடிய ஒரு கேள்வியாக அமைந்த ஒரு பயன்பாட்

டோடு பிரசங்கம் ஆரம்பமாகலாம். பிரசங்கங்களுக்குத் தகுந்த முறையில் பயன்பாடுகளை நாம் பயன்படுத்த வேண்டும்.

4. பிரசங்கத்தின் பயன்பாடுகள் கேள்விகளாக அமைந்திருந்தால் அவை நாம் வலியுறுத்தும் பயன்பாட்டைக் குறித்து, கேட்பவர்களை சிந்திக்க வைப்பதாக இருக்கும். உதாரணமாக, ஜெபத்தை வலியுறுத்தும்போது "நீங்கள் அன்றாடம் ஜெபிக்கிறீர்களா?" என்று கேள்வியாக இதயத்தைத் துளைப்பது போல் கேட்பது அவசியம். பயன்பாடுகளாக பிரசங்கி கொடுக்கும் ஆலோசனைகள் கேள்விகளையும் உள்ளடக்கி இருந்தால் அந்த ஆலோசனைகள் அழுத்தமாக இருதயத்தில் பதியும்.

5. பயன்பாடுகள் மேலெழுந்தவாரியாகவும், பொதுவானவையாகவும் இருக்கக்கூடாது. பயன்பாடுகளைக் கேட்டுக்கொண்டிருக்கும் ஆத்துமா இது பக்கத்திலிருப்பவருக்குத்தான் பொருந்தும் என்று நினைப்பதற்கு நாம் இடம் கொடுத்துவிடக்கூடாது. அது எனக்கு அவசியமானது என்று அந்த ஆத்துமா நினைக்கும்படியாக பயன்பாடுகள் இருக்க வேண்டும். ஆகவே, பிரசங்கி பயன்பாடுகளை ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் பொருந்துகிறவிதத்தில் ஆணித்தரமாகவும், அழுத்தத்தோடும் பிரசங்கத்தில் விளக்க வேண்டும்.

6. பயன்பாடுகளை பிரசங்கத்தின் ஏனைய பகுதிகள் அனைத்தையும் (முகவுரையைத் தவிர) தயாரித்த பின்னரே கவனத்தோடு தயாரிக்க வேண்டும்

7. பயன்பாடுகள் சுருக்கமானதாகவும், ஆத்துமாக்களின் இருதயத்தில் ஊன்றிப் பதியக்கூடியவனவாகவும் இருக்க வேண்டும். தேவைக்கு அதிகமாக பயன்பாடுகள் நீண்டுவிடக்கூடாது. ஆகவேதான், அவற்றைத் தயாரிப்பதில் அதிக கவனம் செலுத்துவது அவசியம். தகுந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி பயன்பாடுகளைத் தயாரிப்பது அவசியம்.

## பிரசங்கப் பயன்பாட்டிற்கு ஓர் உதாரணம்

*பிரசங்கத்தின் பயன்பாடுகள் எந்தவகையில் பிரசங்க வசனங்களில் இருந்து வெளிப்பட்டு தெளிவாக அமைய வேண்டும் என்பதற்கு உதாரணமாக லூக்கா 15:1-7 வரையுள்ள வசனங்களைப் பயன்படுத்தி நான் கீழே தந்துள்ள பிரசங்கக் குறிப்பிலிருந்து அறிந்துகொள்ளலாம்.*

## தலைப்பு: காணாமற்போன ஆடு (லூக். 15:1-7)

### பிரசங்கத்தின் அறிமுகம்

*இது ஓர் உவமை. இந்த உவமையின் எல்லாப் பகுதிகளுக்கும் நாம் விளக்கங்கொடுக்கக்கூடாது. இந்த உவமை காணாமற்போன தன்னுடைய ஆட்டை விடாப்பிடியாகத் தேடிக் கண்டுபிடித்த ஒரு மேய்ப்பன் அந்தச் சந்தோஷத்தை தன் நண்பர்களோடு பகிர்ந்து கொண்டு மகிழ்கிறான் என்பதாகும். அதேவிதமாக கர்த்தர் இழந்துபோன தன்னுடைய ஆடாகிய பாவியைத் தேடிக் கண்டுபிடித்து மகிழ்கிறார் என்பதே இந்த உவமையின் போதனையாகும். இந்த உவமையை இயேசு ஏன் சொன்னார் என்பதை உவமையின் ஆரம்ப வசனங்கள் விளக்குகின்றன. பாவிகளைக் குறித்த பரிசேயர்களின் தீங்கான எண்ணத்தை திருத்து முகமாகவே இயேசு இந்த உவமையைச் சொன்னார்.*

### பிரசங்கத்தின் சரீரம்

1. *நீதிமான்களென்று நம்பிய நீதியற்றவர்கள் (2, 7)*
2. *சுயநீதியும், தற்பெருமையும் கொண்ட பரிசேயர்கள் (உவமையில் கூறப்படும் தொண்ணூற்றொன்பது பேரும் விசுவாசிகளல்ல, அவர்கள் பரிசேயர்களைப் போன்றவர்கள்).*
3. *காணாமற்போய் மனந்திரும்பிய பாவி*
   - *காணாமல் போனான் (பாவத்தால் கர்த்தரை அறியாது இருக்கும் நிலை)*
   - *மனந்திரும்புகிறான் (பாவமன்னிப்பும், விசுவாசமும்)*

4. இழந்த ஆட்டைத் தேடும் மேய்ப்பன்

- தேடுகின்ற கர்த்தர் (சுவிசேஷ அழைப்பின் மூலம்)
- ஆட்டைக் கண்டுபிடிக்கும் கர்த்தர் (ஆவியின் கிரியை)
- ஆடு திரும்பியதால் பரலோகத்தில் ஆனந்தம்

## பிரசங்கத்தின் பயன்பாடுகள்

### 1. போலித்தனமான பரிசேய வாழ்க்கை வாழ்கிறவர்கள் நீதிமான்களல்ல

அநேகர் இன்று சபைகளில் பரிசேயர்கள் போல் நீதியற்றவர்களாயிருந்தும் நீதிமான்கள் என்ற நம்பிக்கையில் தவறான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கலாம். கர்த்தரோடு தங்களுக்கு ஐக்கியம் இருந்ததாக பரிசேயர்கள் நம்பினார்கள். ஆனால், அவர்களில் இரட்சிக்கும் விசுவாசம் இருக்கவில்லை. உங்களுடைய வாழ்க்கையில் வெறும் உயிரற்ற கிரியைகள் மட்டுமிருந்து இயேசு கிறிஸ்து மேல் எந்த அன்பும், கர்த்தரை அறியாதவர்கள் மீது சுவிசேஷ அனுதாபமும் இல்லாதிருக்குமானால் நீங்கள் நீதிமான்களாக இருக்க முடியாது. விசுவாசத்துக்கும் உங்களுக்கும் வெகுதூரம். போலித்தனமான பரிசேய வாழ்க்கையை இன்றே தூக்கி எறிந்துவிட்டு மனந்திரும்பி கிறிஸ்து இயேசுவை விசுவாசியுங்கள்.

### 2. பாவிகள் மனந்திரும்ப வேண்டும்

பரலோகத்தில் உண்டாகும் சந்தோஷம் பாவிகள் பாவிகளாயிருப்பதனால் ஏற்பட்டதல்ல, பாவியொருவன் மனந்திரும்பியதால் ஏற்பட்டது. ஆகவே, பாவியாகிய மனிதன் மனந்திரும்ப வேண்டியது அவனுடைய தவிர்க்க முடியாத பொறுப்பு. மனந்திரும்பாத எவரும் இரட்சிப்பை அடைய முடியாது. வெறும் ஒழுக்கமும், உலகப் பிரகாரமான அன்றாட சமய சடங்காச்சாரங்களும் ஒரு மனிதனை நீதிமானாக் காது. எத்தனை ஒழுக்கமுடையவனாக இருந்தாலும், கர்த்தருக்கு பணத்தை வாரிக்கொடுப்பவனாக இருந்தாலும், மனந்திரும்பாதவன் போகிற இடம் நரகத்தைத் தவிர வேறில்லை. மனந்திரும்பினால் மட்டுமே பரலோகம்.

### 3. சுவிசேஷத்தை அனைவரும் அறிந்துகொள்ளும்படிச் சொல்லுவது விசுவாசியின் கடமை

தன்னுடைய ஆடுகளைத் தேடிக்கொண்டிருக்கும் கர்த்தர் சுவிசேஷத்தின் மூலமாக அவர்களை அழைக்கிறார். அந்தச் சுவிசேஷத்தைக் கர்த்தருக்கு இருப்பது போன்ற அடங்காத் தாகத்துடன் பாவிகளோடு பகிர்ந்துகொள்கிறீர்களா? அது உங்களுடைய கடமை. தன்னுடைய ஆட்டைத் தேடுகிற கர்த்தரில் நாம் காணும் அன்பும், ஆர்வமும், தீவிரமும், விடாப் பிடியான முயற்சியும் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளும் கடமைப்பாட்டைக் கொண்டுள்ள நம்மில் இருக்கிறாதா?

# பிரசங்கத்தில் அறிமுகம்

இதுவரை பிரசங்கத்தின் இறுதியில் அந்தப் பிரசங்கத்தின் அடிப்படையில் தரப்பட வேண்டிய "பயன்பாடுகளைப்" பற்றி ஆராய்ந்தோம். இனிப் பிரசங்கத்தின் அறிமுகம் எப்படி அமைய வேண்டும் என்பதை ஆராய்வது அவசியம். பிரசங்கத்தின் எல்லா அம்சங்களுமே முக்கியமானவை. பிரசங்கத்தின் ஏனைய பகுதிகள் நன்றாய் அமைந்து அதன் அறிமுகம் சரிவர அமையாவிட்டால் அது பிரசங்கத்தைப் பாதித்துவிடும். பிரசங்கத்தின் அறிமுகம் வரப்போகும் செய்தியின் ஏனைய பகுதிகள் எப்படி அமையப் போகின்றன என்பதை விளக்கு வதாக இருக்கும். ஆகவே, பிரசங்கம் பலனுள்ளதாக அமைய அதன் அறிமுகம் நன்றாக இருப்பது அவசியமாகின்றது. உதாரணத்திற்கு ஒரு நவீன ஓட்டலுக்கு சாப்பிடப் போனால் நாம் ஆர்டர் செய்யும் பிரதான உணவு வருவதற்கு முன்பாக சிற்றுணவாக சிலவற்றை சாப்பிடத் தருவார்கள் (Entree). அது வரப்போகும் உணவை உண்பதற்கு நம்மைத் தயார் செய்வதாக இருக்கும். அந்த ஆரம்பச் சிற்றுணவே பிரதான சாப்பாடு அல்ல. வரப்போகிற சாப்பாட்டை சாப்பிட நம்மைத் தயார் செய்வது அந்த ஆரம்ப சிற்றுணவுதான். எப்போதுமே அந்த ஆரம்பச் சிற்றுணவு சுவைபடத் தயாரிக்கப்பட்டிருக்கும். ஏனெனில், சாப்பிட வந்திருக்கிறவர்கள் அது பிடிக்காமல் எழுந்து போய்விடக் கூடாதல்லவா. அதைப் போலத்தான் பிரசங்கத்தின் அறிமுகமும் இருக்க வேண்டும். "அறிமுகம்" பிரசங்கம் கேட்கிறவர்களுடைய ஆர்வத்தை அதிகரிப்பதாய், ஓர் எதிர்பார்ப்பை ஏற்படுத்துவதாய் இருக்க வேண்டும். "பிரசங்கத்தைக் கேட்கிறவர்களுடைய மனதில் அது ஒரு நல்ல எண்ணத்தை ஏற்படுத்த வேண்டியிருப்பதால் அதில் ஏதாவது தவறு நேர்ந்துவிட்டால் அதைத் திருத்துவது இலகுவான

காரியமல்ல" என்று சொல்லுகிறார் ஆர்.எல். டெப்னி (Lectures on Sacred Rhetoric, R.L. Dabney). அத்தோடு அந்தச் சிற்றுணவு பேருணவாய் இருந்துவிடக்கூடாது. அவ்வாறு இருந்துவிட்டால் சாப்பிட வந்தவர்களுக்கு இனி வரப்போகும் உணவைச் சாப்பிட மனமும், வயிற்றில் இடமும் இருக்காது. அதேபோல் அறிமுகத்தின் நோக்கம் பிரசங்கத்தை அறிமுகப் படுத்துவது மட்டுமே. அதுவே பிரசங்கமாக நீண்டுவிடக் கூடாது. இந்த வகையில் அமைய வேண்டிய பிரசங்கத்தின் அறிமுகத்தை இனி விவரமாகப் பார்ப்போம்.

## அறிமுகமில்லாத பிரசங்கம் தலையில்லாத சரீரம் போன்றது

முதலில் அறிமுகத்தின் அவசியத்தை உணர்வது அவசியம். ஒரு பிரசங்கம் எத்தனை அழகாக, ஆழமான சத்தியங்களோடு தயாரிக்கப்பட்டிருந்தாலும் கேட்கிறவர்களுக்கு அதைப் பற்றிய நல்ல அறிமுகத்தைக் கொடுக்காவிட்டால் அந்தப் பிரசங் கத்தின் பலன் குறைவாகவே இருக்கும். ஒரு சரீரத்திற்கு தலை எவ்வளவு அவசியமோ அந்தளவுக்கு பிரசங்கத்திற்கு அறிமுகம் அவசியம். தமிழ்ப் பிரசங்கிகளில் இரண்டு வகையினரை நாம் பார்க்கலாம். அருமையான அறிமுகத்தை மட்டும் கொடுத்து விட்டு உப்புச்சப்பில்லாத பிரசங்கத்தை அளிப்பவர்கள் ஒரு வகையினர். கேட்பதற்கு பரவாயில்லை என்ற வகையில் பிரசங்கத்தைத் தயாரித்து அறிமுகமே இல்லாமல் பேசு கிறவர்கள் அடுத்தவகையினர். இரண்டு வகையுமே பிரயோ ஜனமில்லாத பிரசங்கங்கள். நல்ல அறிமுகம் இருந்து பிரசங்கம் பயனுள்ளதாயிராவிட்டால் அதனால் கேட்பவர்களுக்கு எந்த நன்மையுமில்லை. அதேவேளை அறிமுகமே இல்லாததொரு பிரசங்கத்தால் அதிக பயனுமிருக்காது.

பிரசங்கத்தை எந்தளவுக்கு கவனத்தோடு தயாரிக்கிறோமோ அந்தளவுக்கு அறிமுகத்தையும் கவனத்தோடு தயாரிக்க வேண்டும். அறிமுகத்தில் கவனம் செலுத்துகிற பிரசங்கிகள் இன்று மிகவும் குறைவு. புதிய ஏற்பாட்டில் காணப்படும் பிரசங்கங்களை கவனித்துப் பார்த்தால் அவை அருமையான அறிமுகங்களைக் கொண்டமைந்திருப்பதைப் பார்க்கலாம். இயேசு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தைக் கவனித்துப் பாருங்கள். அங்கே, இயேசு யார் பாக்கியவான்கள் என்று ஆரம்பித்து பாக்கியவான்களுக்கு உள்ள தகுதிகளை விளக்கி,

கேட்டுக்கொண்டிருக்கிறவர்கள் மத்தியில் ஆவலைக் கிளப்புகிறார். அது மலைப்பிரசங்கத்தில் தொடர்ந்து வரப்போகிற செய்திகளுக்கு அருமையான அறிமுகமாக இருக்கிறது. சாலோமோனின் பிரசங்கம் இன்னுமொரு நல்ல உதாரணம். அதில் "மாயை, மாயை எல்லாம் மாயை" என்று தன்னுடைய பிரசங்கத்தை ஆரம்பிக்கிறான் சாலோமோன். அதன் பின் தன்னுடைய செய்தியை விளக்குகிறான். அவனுடைய பிரசங்கத்தின் அறிமுகம் கேட்பவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்ற நல்ல அறிமுகமாக அமைந்திருக்கின்றது. பேதுரு பெந்தகொஸ்தே நாளில் அன்று நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து பிரமித்துப்போய் நின்ற மக்கள் மத்தியில் அந்த நிகழ்ச்சிகளையே தன்னுடைய பிரசங்கத்திற்கு அறிமுகமாகக் கொண்டு யோவேலின் தீர்க்கதரிசனத்தை நினைவுறுத்தி பிரசங்கம் செய்திருப்பதை வாசிக்கிறோம் (அப். 2:14-39). இயேசுவும், சாலோமோனும், பேதுருவும் தங்களுடைய பிரசங்க அறிமுகத்தில் அதிக கவனம் செலுத்தியிருக்கிறார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுலினுடைய பிரசங்கங்களும் தகுந்த அறிமுகங்களோடு அமைந்திருப்பதை அப்போஸ் தலருடைய நடபடிகளில் வாசிக்கலாம். உதாரணத்திற்கு, அப்போஸ்தலருடைய நடபடிகள் 26 ஆம் அதிகாரத்தில் பவுல் அகிரிப்பா அரசனுக்கு முன்பாக பிரசங்கம் செய்தபோது பின்வருமாறு சொல்கிறார், "விசேஷமாய், நீர் யூதருடைய சகல முறைமைகளையும், தர்க்கங்களையும் அறிந்தவரானதால் அப்படி எண்ணுகிறேன். ஆகையால், நான் சொல்வதை பொறுமையோடு கேட்கும்படி வேண்டிக்கொள்கிறேன்" என்று தன்னுடைய பேச்சை ஆரம்பிக்கிறார். அகிரிப்பா யூத முறைமைகளையும், தர்க்கங்களையும் நன்கு அறிந்தவன் என்பது பவுலுக்குத் தெரியும். அதைப் பயன்படுத்திக் கொண்டு, அந்த உண்மையைச் சுட்டிக்காட்டி அகிரிப்பாவின் கவனத்தைத் தன் பக்கம் திருப்பி பேச்சை ஆரம்பிக்கிறார் பவுல். இது அகிரிப்பா பவுல் சொல்லப்போவதைத் கேட்பதற்கு அவனைத் தயார் செய்தது. அதேபோல், மார்ஸ் மேடையில் நின்று "அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதா பக்தியுள்ளவர்களென்று காண்கின்றேன்" என்று ஆரம்பித்து அத்தேனரின் கவனத்தைத் தன்பக்கம் திருப்பினார் பவுல் (அப். 17:22). எந்தக் காரியத்தில் அத்தேனர்

அதிக அக்கறை காட்டினார்களோ அதை வைத்தே அவர்களுடைய தவறை உணர்த்த பிரசங்கம் செய்தார் பவுல். இது ஓர் அருமையான அறிமுகம். இவ்வாறாக வேதத்தில் நாம் வாசிக்கின்ற பிரசங்கங்கள் அனைத்தும் நல்ல அறிமுகங்களோடு அமைந்திருப்பதைக் காணலாம்.

இங்கிலாந்து நாட்டு அரசியை நாம் பார்க்கப்போனால் நம்மை அவருக்கு முன் அழைத்துச் செல்கிறவர் செய்கிற முதல் வேலை நாம் யார் என்பதை அரசிக்கு சொல்லி நம்மை அறிமுகப்படுத்தி வைப்பதுதான். அந்த அறிமுகம் மிக மிக அவசியம். அது இல்லாமல் நாம் அரசி முன் நிற்கக்கூட முடியாது. அதுபோல்தான் பிரசங்கத்தின் அறிமுகமும். நான் இதுவரை சொன்னவை மூலம் அறிமுகம் பிரசங்கத்திற்கு எத்தனை அவசியம் என்பதை விளங்கிக் கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

## பிரசங்க அறிமுகத்தைத் தயாரிக்க கவனிக்க வேண்டியவை:

### 1. பிரசங்க அறிமுகத்தை எப்போதும் கடைசியாகத் தயாரிப்பது நல்லது

பிரசங்கத் தயாரிப்பு பற்றி எழுதியுள்ள ஒரு போதகர் பிரசங்கத்தைத் தயாரித்து முடித்தபின்பே அறிமுகத்தைத் தயாரிக்க வேண்டும் என்று ஆலோசனை தருகிறார். அது நல்ல ஆலோசனைதான். ஏனெனில், முழுப் பிரசங்கத்தையும் தயாரித்த பின்புதான் அதன் உள்ளடக்கம் நமக்குத் தெளிவாகப் புரியும். ஆகவே, பிரசங்கத்தைத் தயாரித்த பின்பு நாம் சொல்லப்போகிற விஷயத்தின் அடிப்படையில் அதற்குத் தகுந்த, பிரசங்கத்தைத் கேட்கிறவர்களை ஈர்க்கக்கூடிய அறிமுகத்தை நம்மால் தயாரிக்க முடியும். பிரசங்கத்தைக் கேட்கிறவர்களுக்கும் நமக்கும் இடையில் ஒரு நட்புப்பாலமாக அமையும் பிரசங்கத்தின் அறிமுகத்தை சரிவர தயாரிக்க அதைக் கடைசியில் தயாரிப்பதே நல்லது.

### 2. அறிமுகம் எப்போதும் பிரசங்கத்தின் உள்ளடக்கத்தை அறிமுகப் படுத்துவதாக இருக்க வேண்டும்

அதாவது பிரசங்க உள்ளடக்கத்தோடு தொடர்பில்லாததாக

அறிமுகம் அமைந்துவிடக்கூடாது. ஆத்துமாக்களுடைய கவனத்தை ஈர்க்க வேண்டுமென்பதற்காக எதையாவது சொல்லி பிரசங்கத்தை அறிமுகப்படுத்தக் கூடாது. நாம் எடுத்துக்கொண்டுள்ள பிரசங்கப் பகுதி அமைந்திருக்கும் சந்தர்ப்பத்தை (context) விளக்குவதாக அறிமுகம் இருக்கலாம். அதாவது, நாம் எடுத்துக்கொண்டிருக்கிற வசனங்கள் எத்தகைய சந்தர்ப்பத்தில், எந்த முறையில் அமைந்து காணப்படுகின்றன என்றும் அதன் முக்கியத்துவம் என்ன என்பதையும் அறிமுகமாகக் கொடுக்கலாம். அதன் மூலம் நாம் பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் பிரசங்கப் பகுதியை ஆராய வழி நடத்திச் செல்ல முடியும். நாம் எடுத்துக்கொண்டுள்ள வேதப்பகுதி ஒரு வரலாற்றுப் பகுதியாக இருந்தால் அல்லது இயேசு கிறிஸ்துவின் பூவுலக வாழ்க்கை சம்பவமாக இருந்தால் அந்தப் பகுதிகளின் வரலாற்று அல்லது வாழ்க்கை நிகழ்ச்சி நடந்த சந்தர்ப்பத்தை விளக்குவதை பிரசங்கத்தின் ஆரம்பமாகக்கொள்ளலாம். இந்தமுறையை ஒவ்வொரு பிரசங்கத்திலும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. ஆனால், இதுவரை குறிப்பிட்ட பகுதிகளைப் பொறுத்தவரை இம்முறை மிகவும் இயற்கையானதாகும். இந்த முறையில் பிரசங்கத்தை அறிமுகப்படுத்துவதால் கேட்பவர்களை நேரடியாக பிரசங்கப் பகுதிக்கு அழைத்துச் செல்கிறோம்.

### 3. அறிமுகம் எப்பொழுதும் பிரசங்கத்தைக் கேட்பவர்களின் கவனத்தை ஈர்ப்பதாக இருக்க வேண்டும்

தொலைக்காட்சியில் நாம் பார்க்கும் விளம்பரங்கள் ஒரு சில நிமிடங்களுக்கு மேல் இருக்காது. அந்த விளம்பரத்தைக் கொடுப்பவர்கள் தங்களுடைய முழுத் திறமையையும் காட்டி அந்த ஒரு சில நிமிடங்களுக்குள் தாங்கள் விற்கும் பொருளின் அருமை, பெருமைகளை விளக்க வேண்டும். அதைப் போலத் தான் பிரசங்கியின் அறிமுகமும் இருக்க வேண்டும். பிரசங் கத்தைக் கேட்கிறவர்கள் ஆர்வத்தோடு அதைக் கேட்கும் படியாக சில நிமிடங்களுக்குள் அந்தப் பிரசங்கத்தை ஒரு விளம்பரதாரருக்கு இருக்க வேண்டிய திறமையுடன் அறிமுகப் படுத்த வேண்டும். பிரசங்கத்தைக் கேட்கிறவர்களின் கவனத்தை ஈர்த்து, தொடர்ந்து கேட்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதே நல்ல அறிமுகத்துக்கு இலக்கணம்.

### 4. அறிமுகம் எப்போதும் சுருக்கமாக இருக்க வேண்டும்

நீண்ட அறிமுகங்கள் பிரசங்கம் கேட்பவர்களுடைய கவனத்தை ஈர்ப்பதைவிட்டு அவர்களை சலிப்படைய செய்துவிடும். அறிமுகத்தைக் கேட்டவுடன் பிரசங்கம் எப்போது வரும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் அளவுக்கு அது சுருக்கமாக அமைந்திருக்க வேண்டும்.

### 5. அறிமுகத்தை எழுதி வைத்திருப்பது அவசியம்

பிரசங்கம் கேட்பவர்களுடைய கவனத்தைக் கவருமளவுக்கு சுருக்கமாக அறிமுகம் இருக்க வேண்டுமானால் அதைப் பலதடவைகள் எழுதி வாசித்துப் பார்த்து, சொல்லிப் பார்த்து நமக்கு திருப்திதரும் விதத்தில் அது அமைந்தவுடன் அதைத் தெளிவாக எழுதி வைத்திருப்பது அவசியம். “முதல் கோணல் முற்றும் கோணல்” என்பார்கள். ஆகவே அறிமுகத்தைப் பலதடவைகள் வாசித்து நினைவில் வைத்திருப்பதற்கு வசதியாக எழுதி வைத்திருப்பது பயனளிக்கும்.

### 6. அறிமுகம் பலவிதங்களில் அமையலாம்

அறிமுகத்தின் அடிப்படை நோக்கமே பிரசங்கத்தில் நாம் சொல்லப்போகிற விஷயங்களை அறிமுகப்படுத்துவதுதான். பிரசங்கப் பகுதியோடு பிரிக்க முடியாத தொடர்புடைய அறிமுகம் பலவிதங்களில் அமையலாம். அதாவது, எடுத்துக் கொண்ட பிரசங்கப் பகுதியின் சந்தர்ப்பத்தை விளக்குவதாக ஆரம்பிக்கலாம். இல்லாவிட்டால் பிரசங்கப் பொருளோடு தொடர்புடைய நடைமுறை வாழ்க்கையில் ஒரு சம்பவத்தை விவரித்து ஆரம்பிக்கலாம். பிரசங்கப் பொருளோடு தொடர் புடைய பழமொழியொன்றை விளக்கி ஆரம்பிக்கலாம். அதிர்ச்சி தரக்கூடிய ஒரு கேள்வியைக் கேட்டு கேட்பவர்களின் சிந்தனையை நம்பக்கம் திருப்பி ஆரம்பிக்கலாம். இப்படி பலவகைகளில் அறிமுகம் அமையலாம். எந்தவகையில் அமைந்தாலும் அது பிரசங்கப் பொருளோடு தொடர் புடையதாக இருப்பது அவசியம்.

### 7. அறிமுகம் மன்னிப்புக் கேட்கிறவிதமாக இருக்கக்கூடாது

அதிகாரத்தோடு பிரசங்கிக்க வேண்டிய பிரசங்கி ஆத்துமாக்களுக்கு முன் தன்னுடைய செய்திக்காக ஒருபோதும்

மன்னிப்புக்கேட்டு பிரசங்கத்தை ஆரம்பிக்கக்கூடாது. பிரசங்க அறிமுகம் எப்போதும் ஆணித்தரமாகவும், அதிகாரத்துடனும், உறுதியோடும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பிரசங் கத்தைக் கேட்கிறவர்கள் சலிப்படைந்து ஆர்வமற்று தங்கள் கவனத்தைப் பிரசங்கத்தில் காட்டமாட்டார்கள்.

# பிரசங்கத்தில் உதாரணங்கள்

இதுவரை பிரசங்கத்தின் மிக முக்கியமான அம்சங்களை எல்லாம் தெளிவாகவும், விரிவாகவும் பார்த்து வந்திருக்கிறோம். பிரசங்கத்தின் உள்ளமைப்பு சம்பந்தமான இன்னுமொரு அம்சத்தை இனி பார்க்கப் போகிறோம். இது பிரசங்கத்தில் பிரசங்கிகள் பயன்படுத்த வேண்டிய உதாரணங்களைப் பற்றியது.

பிரசங்கி, பிரசங்க வாக்கியத்தை இலக்கண பூர்வமாக ஆராய்ந்து அதன் முக்கிய போதனையை விளங்கிக்கொண்டு அதன் அடிப்படையில் பிரசங்கத்தைத் தயாரித்து ஆத்துமாக் களுக்கு முன் சமர்ப்பிக்கின்றபோது அந்தப் பிரசங்கத்தில் கொடுக்கப்படுகிற போதனைகளுக்கு தகுந்த உதாரணங்களைக் காட்டி விளக்குவது அவசியம். உதாரணங்கள், விளக்கப் படுகின்ற சத்தியத்தைப் பளிச்சென்று புரியவைக்க உதவுகின்றன. பல வசனங்களின் மூலம் நாம் விளக்குகின்ற செய்தியை அவை சிறுநொடியில் இடிபோல் இதயத்தைத் தாக்கி விளங்க வைக்கின்றன. உதாரணத்திற்கு, இயேசு கிறிஸ்து மலைப் பிரசங்கத்தில் பயன்படுத்தியுள்ள சில உதாரணங்களைக் கவனித்துப் பாருங்கள் (*மத். 6:29-30*). நமது இருதயத்தில் கொடிய பாவங்களைத் தலைதூக்கவிட்டால் அவை நமது வாழ்க்கையையே கெடுத்துவிடும் என்பதை விளக்க இயேசு இந்த வசனங்களில் நமது சரீரம் பற்றிய உதாரணங்களைத் தந்து சத்தியத்தை விளக்குகிறார். இப்படி அநேக உதாரணங்களை இயேசு கிறிஸ்து தனது பிரசங்கங்கள் முழுவதும் பயன்படுத்தி இருப்பதைப் பார்க்கிறோம் (*மத். 6:22-23; 7:3, 4, 7, 9, 10, 13, 16-19*). இதைப் பற்றிக் குறிப்பிடும் பிஷப் ஜே.சி. ரைல், "அவர் உதாரணத்திற்காகப் பயன்படுத்தாத, அவர் கண்ணில்படாத எந்தப் பொருளும் இருக்கவில்லை . . . அவர் போன பாதையில்

நடந்து அவரைப் பின்பற்றப் பாருங்கள்" என்கிறார் (Upper Room, p. 48, J.C. Ryle).

இதே முறையில் பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள் அநேக உதாரணங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். எரேமியாவின் உதாரணங்களைக் கவனித்துப் பாருங்கள்: ஒன்றுக்கும் உதவாமற்போன கச்சை (எரே. 13); குயவனும், களிமண்ணும் (எரே. 18); கூடை நிறைய அத்திப் பழங்கள் (எரே. 24). ஓசியாவின் கோமேரை எண்ணிப் பாருங்கள். ஓசியாவின் தீர்க்கதரிசனத்திற்கு ஒளியூட்டுவதே அந்தக் கோமேர்தான். அதேபோல் சங்கீதப் புத்தகத்திலும், நீதிமொழிகளிலும் இப்படி உதாரணங்கள் நிரம்பி வழிவதைப் பார்க்கலாம். புதிய ஏற்பாட்டில் பவுலும், பேதுருவும், யாக்கோபும் ஏனைய அப்போஸ்தலர்களும் தங்கள் செய்திகளில் தேவையான இடங்களிலெல்லாம் உதாரணங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

## பெருத்தமான உதாரணங்களின் பல்வேறு பயன்பாடுகள்

உதாரணங்கள் நாம் கொடுக்கும் செய்தியை விளங்க வைப்பதாக இருக்க வேண்டும். அதுவே அவற்றின் பிரதான நோக்கமாகும். நாம் விளக்குகின்ற சத்தியத்தைத் தெள்ளத் தெளிவாக புரிய வைப்பதாக உதாரணங்கள் இருக்க வேண்டும். உதாரணங்களைக் கொடுக்க வேண்டுமென்பதற்காக உதாரணங்களைத் தேடி அலையக்கூடாது. அவசியமில்லாமல் உதாரணங்களைப் பயன்படுத்தக்கூடாது. எப்பொழுதும் பிரசங்கத்தில் நாம் முதலில் சத்தியத்தை விளக்க வேண்டும். அதற்குப்பிறகு அந்த சத்தியத்தை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கக்கூடியதாக இருக்கும் உதாரணங்களைப் பயன்படுத்த வேண்டும். ஆகவே, முதலில் வருவது சத்தியம். அடுத்து வரவேண்டியது அந்த சத்தியத்தை நெஞ்சில் பதிய வைக்கும் உதாரணம். இது எல்லாப் பிரசங்கங்களிலும் கடைப்பிடிக்க வேண்டிய முறையாகும்.

இந்த உதாரணங்கள் பழமொழிகளாக இருக்கலாம். உவமைகளாக இருக்கலாம். உருவகங்களாக இருக்கலாம். வாழ்க்கை சம்பவங்களாக இருக்கலாம். வரலாற்று அம்சங்களாக இருக்கலாம். நாமே உருவாக்குகின்ற கதையாகக்கூட இருக்கலாம். ஆனால், இவை பிரசங்கத்தில் சத்தியத்தை விளக்க அவசிய

மாக இருந்தபோதும் நாம் சொல்லப்போகிற செய்தியைவிட இவற்றிலேயே நாம் அளவுக்குமீறிய கவனத்தை செலுத்தக் கூடாது. உதாரணங்களை எப்படி உணர்ச்சி வசப்படும் விதத்தில் சொல்ல வேண்டும் என்பதில் அக்கறை காட்டி மேடை நடிகனைப்போல பிரசங்க மேடையில் நடித்து மக்களைக் கவரப் பார்க்கிறவன் மெய்ப்பிரசங்கியாக இருக்க முடியாது. அவன் மனித உணர்ச்சிகளோடு விளையாடுகிற நயவஞ்சகன். அப்படிப் பிரசங்கிக்கிற போதெல்லாம் நெஞ்சை உலுக்குகிற விதத்தில் கதை சொல்லி கண்ணீர் விடுகிற தமிழ்நாட்டுப் பிரசங்கிகளை நானறிவேன். இந்த மனிதர்கள் பிரசங்க ஊழியத்தையே அசிங்கப்படுத்தும் அயோக்கியர்கள். இத்தகைய மேடை நாடகத்தை மார்டின் லொயிட் ஜோன்ஸ் "பிரசங்க விபச்சாரம்" என்று அழைக்கிறார்.

பிரசங்க செய்தியை விளங்க வைப்பது உதாரணங்களின் பிரதான நோக்கமாக இருந்தபோதும் அவை மேலும் நான்கு விதங்களில் பயன்படுகின்றன என்று அல்பர்ட் என். மார்டின் (Albert N. Martin) விளக்குகிறார்.

### 1. பிரசங்கத்தைக் கேட்பவர்களுடைய கவனத்தைக் கவருவதற்கு அவை உதவுகின்றன.

"நான் உங்களுக்கு இப்போது ஒரு கதை சொல்லப் போகிறேன்" என்று பிரசங்கத்தை ஆரம்பித்தால் தூங்கிக் கொண்டிருப்பவர்களையும் அது தட்டியெழுப்பும்.

டாக்டர் ஜே. அடம்ஸ் (Dr. J. Adams) உதாரணங்களின் வல்லமையான பயன்பாட்டைப் பின்வருமாறு விளக்குகிறார். "ஒரு பிரசங்கி அமலேக்கியர்களைப் பற்றிப் பிரசங்கித்துக் கொண்டிருந்த போது சபையில் பலர் கண்ணயரத் தொடங்கி விட்டார்கள். அவர்களுடைய தலைகளும் தூக்கக்கலக்கத்தால் ஆட ஆரம்பித்தன. அதைக் கவனித்த பிரசங்கி "நான் இப்போது யுத்தகாலத்தில் என்னுடைய வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உங்களுக்கு சொல்லப் போகிறேன்" என்று கூறினார். திடீரென சபையார் நிமிர்ந்து உட்கார்ந்து கவனத் தோடு அவர் சொல்லப் போவதைக் கேட்பதில் குறியாக இருந்தார் கள். உதாரணங்கள் இந்த விதத்தில் பிரசங்கத்தைக் கேட்பவர் களுடைய கவனத்தை நம்பக்கம் இழுக்க உதவுகின்றன.

**2. உதாரணங்கள், சில வேளைகளில் பிரசங்கத்தைக் கேட்பவர்களுடைய இருதயத்தைத் திடீரெனத்தாக்கி அவர்களுடைய கவனத்தைத் திருப்ப உதவுகின்றன.**

தாவீது செய்த பாவத்தைச் சுட்டிக் காட்ட வந்த நாத்தான் ஓர் உவமையை அவன் முன் விளக்கி அவனுடைய இருதயத்தைத் தாக்கினான் (2 சாமு. 12). ஆரம்பத்தில் தாவீது அதை உணராவிட்டாலும் நேரம் போகப் போக நாத்தான் சொல்லுவதன் பொருள் தாவீதைத் துன்புறுத்த ஆரம்பித்தது. மத்தேயு 25 ஆம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து தன்னுடைய நிலத்தை வாடகைக்குவிட்ட கேடான ஒரு மனிதனைப் பற்றிய உவமையை விளக்கி இறுதியில் அது யாரைக் குறிக்கிறது என்பதை இடிபோல் விளக்கினார். அத்தோடு, தேவ இராஜ்யத்துக்கான கனிகொடுப்பவர்களுக்கு மட்டுமே அந்த இராஜ்யம் சொந்தமானது என்று கூறி, கேட்டுக் கொண் டிருந்தவர்களுடைய இருதயத்தையும் தாக்கினார். தங்களைப் பற்றியே இயேசு பேசுகிறார் என்பதை அவர்களும் புரிந்து கொண்டார்கள். இந்த வகையில் உதாரணங்கள் கேட்போரின் கவனத்தை நம்பக்கம் ஈர்ப்பதற்கு உதவுகின்றன.

**3. உதாரணங்கள், பிரசங்கங்களை கேட்பதற்கு சுவையானதாகவும், கேட்பவர்களை ஈர்க்கக்கூடியதாகவும் இருக்கும்படிச் செய்கின்றன.**

ஸ்பர்ஜன் இதில் கைதேர்ந்தவராக இருந்தார். அவர் பின் வருமாறு கூறுகிறார், "வீட்டை ஜன்னல்கள் அலங்கரிப்பதுப் போல் உதாரணங்கள் பிரசங்கத்தை அழகுபடுத்துகின்றன. ஜன்னல் இல்லாத வீடு சிறையைப் போல இருக்கும். அந்த வீட்டை எவரும் வாடகைக்கு எடுக்கமாட்டார்கள். அதேபோல் உதாரணங்கள் இல்லாத பிரசங்கங்கள் கேட்பவர் களின் சரீரத்தை அசதியுறச் செய்யும். போதனையாகிய இறைச்சியில் இருக்க வேண்டிய உதாரணங்களாகிய உப்பைப் போட மறக்காதீர்கள்."

**4. உதாரணங்கள், நாம் கேட்கும் சத்தியங்களை ஆத்துமாக்கள் மறக்காமல் மனதிலிருத்திக்கொள்ளுவதற்கு உதவுகின்றன.**

1992ல் நான் தமிழகத்தில் ஒரு கிறிஸ்தவ கன்வென்ஷனில் பேசினேன். அந்தக் கூட்டத்தில் பிரசங்கித்தபோது சத்தியத்தைக்

கேட்பவர்களுடைய மனதில் பதிய வைப்பதற்காக நான் பயன்படுத்திய ஒரு வார்த்தைப் பிரயோகத்தை இன்றும் நினைவுகூர்ந்து என்னிடம் ஞாபகப்படுத்துபவர்களை தொடர்ந்து சந்திக்கிறேன். உதாரணங்கள் அந்த வகையில் சத்தியங்களை ஆத்துமாக்களின் இருதயத்தில் ஆழமாகப் பதிய வைக்கின்றன.

## உதாரணங்களைப் பயன்படுத்துவதில் உள்ள சிக்கல்கள்

உதாரணங்களை என்னென்ன காரணங்களுக்காக பயன்படுத்த வேண்டும் என்று கூறினோமோ அந்தக் காரணங்களில் இருந்தே அவற்றை பயன்படுத்துவதில் உள்ள சிக்கல்களும் உருவாகின்றன. உதராணங்கள் எல்லோராலும் பாராட்டப்படுபவை. அத்தோடு அவை கேட்பவர்களின் கவனத்தை ஈர்ப்பவை. இந்த வகையில் வலிமையுடையவையாய் உதாரணங்கள் இருப்பதால் பிரசங்கி அவற்றைத் தன்னுடைய பிரசங்கங்களில் அதிகமாகவே பயன்படுத்திவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது. தேவைக்கு அதிகமாக பயன்படுத்தப்படும் உதாரணங்கள் கொடுக்க வேண்டிய வேத போதனைக்கான நேரத்தையும் மிஞ்சிவிடுகின்றன. வேதபோதனைகளை விளக்க வேண்டிய நேரத்தை ஆக்கிரமிக்கும் எதுவுமே பாவமாகும். உதாரணங்கள் போதனைகளை விளங்கிக்கொள்வதற்கு மட்டுமே துணை செய்ய முடியும். அவற்றால் வேதபோதனை களை அளிக்க முடியாது. வேத போதனைகளே இரட்சிப்புக் குரிய ஜீவனை அளிக்கின்றன. வெறும் உதாரணங்களால் அதனைச் செய்ய முடியாது. “பன்னிரண்டு கரண்டி இனிப்புப் போட்ட காப்பியைக் குடித்து நாம் முகம் சுழிப்பதுபோல் நன்றாகப் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு சபை தேவைக்கு அதிகமான உதாரணங்களைக் கொண்ட பிரசங்கத்தைக் கேட்டு முகம் சுழிக்கும்” என்கிறார் அல்பர்ட் என். மார்டின். ஸ்பர்ஜன் இதைப்பற்றிக் கூறும்போது, “உதாரணங்களின் அவசியத்தை நாம் வலியுறுத்தினாலும் ஒரு வீட்டை அதன் ஜன்னல் தாங்காமலிருப்பதுபோல் உதாரணங்களும் பிரசங் கத்தைத் தாங்குவதில்லை. அதனால் பிரசங்கத்தில் அதிகமாக உதாரணங்கள் இருப்பதாகாது. தேவைக்கு அதிகமாக ஜன்னல்கள் இருந்தால் வீட்டுக்கு ஆபத்து. அதேபோல், அதிகமான உதாரணங்களால் பிரசங்கத்துக்கு ஆபத்து” என்கிறார். மார்டின் லொயிட் ஜோன்ஸ், “உதாரணங்கள்

நமக்கு ஊழியர்கள். அவற்றை நாம் சிறிதளவாகவும் கவனத்தோடும் பயன்படுத்த வேண்டும். என்னுடைய பல்லாண்டு காலப் பிரசங்க அனுபவத்தின் அடிப்படையில் நான் சொல்ல விரும்புவதென்னவென்றால், தேவைக்கு அதிகமான உதாரணங்களை உங்களுடைய பிரசங்கத்தில் பயன்படுத்துவீர்களானால் உங்களுடைய பிரசங்கம் பலனில்லாமல் போய்விடும் என்பதுதான்" என்கிறார்.

வெளிப்படையானதும், தெளிவானதும், இலகுவாக புரிந்துகொள்ளக் கூடியதுமான போதனைகளை விளக்க உதாரணங்களை ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது. விளக்கப் படுத்த அவசியமேயில்லாத போதனைகளை உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்க முயற்சிப்பது அந்த சத்தியங்களை இழிவுபடுத்தும் செயலாகும். சபையார் தகுந்த அறிவில்லாதவர் களாகவும், சிந்திக்கும் பக்குவம் இல்லாதவர்களாகவும் இருந்தாலொழிய இலகுவாக புரியக்கூடிய போதனைகளை விளக்குவதற்கு உதாரணங்களைப் பயன்படுத்தக்கூடாது. தேவையில்லாமல் உதாரணங்களை பிரசங்கத்தில் சேர்ப்போ மானால் அது பிரசங்கம் கேட்பவர்களுக்கு சலிப்பூட்டும். அந்த வகையிலான அநாவசியமான உதாரணங்கள் பிரசங்கத்தைப் பாழாக்கி கேட்பவர்களுக்கு எந்தப் பலனையும் கொடுக்காமல் போய்விடும்.

## உதாரணங்களைப் பயன்படுத்தும் முறை

நம்முடைய அன்றாடப் பேச்சுவழக்கில் நாம் பழமொழி களையும், உவமான, உவமேய, உருவகங்களைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழிலக்கியம் படித்த பிரசங்கிகள் தமிழர் மத்தியில் குறைவாக இருப்பது இன்றைக்கு பிரசங் கத்தில் பயன்படுத்தும் மொழிநடை மோசமாக இருப்பதற்கு ஒரு முக்கிய காரணம். "அன்றாடப் பேச்சு வழக்கில் பழமொழி களையும், உவமான உவமேயங்களையும் பயன்படுத்துங்கள். ஆரம்பத்தில் இது ஒரு மாதிரியாகப்பட்டாலும் போகப் போக அதன் பயன் தெரியும்" என்கிறார் அல்பர்ட் என். மார்டின்.

இதை எழுதிக் கொண்டிருக்கும்போதே என்னுடைய மேசையில் சி. வேலுசாமி எழுதிய பழமொழிகளின் தொகுப்பு பக்கத்திலேயே இருப்பதைப் பார்க்கிறேன். அதை நான் அடிக்கடி வாசித்து பழமொழிகள் மறந்து விடாமல் இருக்கப்

பார்த்துக்கொள்வது வழக்கம். ஒவ்வொரு பிரசங்கியும் இத்தகைய நூல்களை வாங்கிப் படிக்க வேண்டும். அது பிரசங்க மொழிநடை தேர்ச்சி அடைய மிகவும் உதவும். தமிழ்மொழி பழமொழிகள், அடைமொழிகள், உவமைகள், உருவகங்கள் நிறைந்த அழகிய தொன்மையான மொழி. நாம் சத்தியத்தை விளக்கும்போது, அந்தச் சத்தியம் ஆழமாகக் கேட்கிறவர்கள் மனதில் பதிய, நமது மொழியின் அநேக சிறப்பான அம்சங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நான் ஒருவருக்கும் பயந்தவனல்ல என்பதை விளக்கும்போது “பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது” என்று சொன்னால் அதில் அழுத்தமும், அர்த்தமும் அதிகமாக இருக்கிறது இல்லையா? நான் என்னுடைய இறையியல் மாணவர்களுக்கு போதிக்கும்போது அடிக்கடி பயன்படுத்தியுள்ள ஓர் உதராணம் “லட்டு.” முதலில், “லட்டு” எனக்குப் பிடித்த ஒரு சுவையான இனிப்பு. அதைவிட அதன் பல அம்சங்கள், போதிக்கும் போது சில இடங்களில் சத்தியத்தை விளக்கப் பேருதவி செய்கின்றது.

ஸ்பர்ஜன் பழமொழிகளையும், உருவகங்களையும் பயன்படுத்துவதில் மிகத் திறமைசாலியாக இருந்தார். அவருடைய பிரசங்கங்களை வாசித்துப் பார்ப்பது கதை சொல்லும் முயற்சியில் தேர்ச்சி பெற உதவும். 18 ஆம் நூற்றாண்டின் பெரும் பிரசங்கியான ஜோர்ஜ் விட்பீல்டும் இதில் கைதேர்ந்தவராக இருந்தார். அவருடைய வாழ்க்கை சரிதத்தில் இது பற்றி எழுதப்பட்டிருக்கிறது. கதை சொல்லியே காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கும் தமிழ்ப் பிரசங்கிகளுக்கும் சத்தியத்தை விளக்குவதற்கு பொருத்தமான கதைகளைத் தகுந்த இடங்களில் பயன்படுத்திய ஸ்பர்ஜனுக்கும், விட்பீல்டுக்கும் வெகுதூரம்.

தகுந்த உதாரணங்களைப் (பழமொழிகள், உருவகங்கள், நடைமுறைச் சம்பவங்கள் ஆகியவை) பெற்றுக்கொள்ளும் நமது முயற்சி முக்கியமாக பிரசங்கத்தைத் தயாரிக்கும்போதே நடைபெறுகின்றது. பிரசங்கத்தை ஓரளவுக்கு நல்லபடியாகத் தயாரித்து எழுத்தில் வடித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். அதற்குப்பிறகு அந்தப் பிரசங்கத்தை நீங்கள் திரும்பத் திரும்ப வாசித்து எங்கெங்கு பொருத்தமான உதாரணங்கள் தேவைப்படும் என்பதை ஆராய வேண்டும். சிலவேளைகளில் உதாரணங்களை இலகுவாகத் தேடிவிடலாம்.

சிலவேளைகளில் அதற்காக நீங்கள் கடினமாக உழைக்க நேரிடும்.

## உதாரணங்களை எங்கிருந்து பெற்றுக்கொள்வது?

வேதமே இதற்கு நமக்கு உதவும் அருமையான கருவியாக இருக்கிறது. பழைய ஏற்பாடு உதாரணங்களுக்கு அருமையான நூல். அதன் மானுடர்கள், அவர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள், விசுவாசிகளின் வாழ்க்கை, தீர்க்கதரிசிகள் பயன்படுத்தியுள்ள உதாரணங்கள் என்று பழைய ஏற்பாடு முழுவதும் நாம் பயன்படுத்திக்கொள்ள அவசியமான உதாரணங்களை அள்ளி வீசுகின்றன. பழைய ஏற்பாடு நமக்கு கர்த்தரைப் பற்றிய போதனையை மட்டுமல்லாது இந்த விதத்திலும் பிரசங்கத்திற்குத் தேவையான உதாரணங்களைத் தருகின்றது. அதேவிதமாக புதிய ஏற்பாட்டில் இருந்தும் நாம் உதாரணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏற்கனவே நான் நமது மொழியிலுள்ள பழமொழிகள், உவமைகள், உவமான உவமேயங்கள், உருவகங்கள், பொருத்தமான கதைகளின் அவசியத்தை விளக்கியிருக்கிறேன். அத்தோடு அன்றாட வாழ்க்கை சம்பவங்களை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு பிரசங்கி தன்னுடைய கண்களையும் காதுகளையும் எப்போதும் திறந்து வைத்திருக்க வேண்டும். அவன் அன்றாடம் பார்க்கின்ற காட்சிகள், கேட்கின்ற செய்திகள், விஷயங்கள் தேவ செய்தியை விளக்குவதற்கு அவனுக்குப் பேருதவி செய்யும். நான் எப்போது தமிழ் நாட்டுக்குப் போனாலும் என்னுடைய நண்பர்கள் "ஐயா நீங்கள் வெளிநாட்டில் வாழ்ந்து கொண்டு இந்த அளவுக்கு நம்மூர் (தமிழ்நாட்டு) விஷயங்களை அறிந்து வைத்திருக்கிறீர்களே" என்று ஆச்சரியமாகக் கேட்பார்கள். நாம் பிரசங்கம் செய்கிற, போதிக்கின்ற மக்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள், நாட்டு நடப்புகள் நாம் விளக்குகின்ற சத்தியத்தை ஆழமாக அவர்களுடைய மனதில் பதிய வைக்க உதவும். நமது பிரசங்கம் அவர்களுடைய வாழ்க்கை நடைமுறைக்கு பொருத்தமானதாக இருக்க வேண்டும் (Preaching must be relevant). மக்களால் கிரகிக்க முடியாதபடி பிரசங்கம் இருந்துவிடக்கூடாது. சிலர் இப்படி அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளை பிரசங்கத்தில் உதாரணம் காட்டுவதை பிரசங்கியின் ஆத்மீகக் குறைபாடாகவும்,

ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவாததாகவும் கருதுவார்கள். இது ஒரு தவறான கணிப்பு. இப்படி சிந்திக்கிறவர்கள் நல்ல பிரசங்கிகளாக வளரவே முடியாது.

கடைசியாக, உதாரணங்கள் பற்றி ஒரு வார்த்தை. உதாரணங்கள் பிரசங்கத்திற்கு சேவகனாக இருக்கும்படி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். பிரசங்கத்தில் கவனம் செலுத்தாமல் உதாரணங்களைத் தேடுவதில் மட்டும் காலத்தை செலுத்தி மேடை நடிகனாவதற்கு வழிதேடிக் கொள்ளக்கூடாது. பிரசங்கிகள் என்ற பெயரில் மேடை நடிகர்களை நாம் அளவுக்கு அதிகமாகவே பெற்று வைத்திருக்கிறோம். அதற்கு மத்தியில் மெய்ப் பிரசங்கியாக ஊழியம் செய்ய வேண்டியது நமது கடமை. “அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்” என்பது பழமொழி. அதை நினைவுகூர்ந்து தகுந்த உதாரணங்களை அளவோடு பிரசங்கத்தில் பயன்படுத்தி சத்தியம் ஒளிவீசும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

# பிரசங்கத்தில் கோட்பாடுகள்

சம காலத்து தமிழ் பிரசங்கங்களை எடுத்துப் பார்த்தால் அங்கே கோட்பாட்டுப் பஞ்சம் நிலவுவதை சுலபமாக அறிந்துகொள்ளலாம். வேத வசனங்கள் அங்குமிங்குமாக பிரசங்கங்களில் பலரால் பயன்படுத்தப்படுகிறபோதும் அவர்களுடைய பிரசங்கங்களின் சாராம்சத்தையும், உட்தாற்பரியத்தையும் ஆராய்ந்து பார்த்தால் அவற்றில் மிஞ்சுவது வெறும் கதைகளும், தனிமனித அனுபவங்களும் மட்டுமே. வேதவசனங்களை மட்டுமே விளக்கிப் போதிக்கின்ற பிரசங்கிகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய அளவுக்கு மட்டுமே அத்தகைய பிரசங்கிகளை தமிழினத்தில் காணமுடிகின்றது.

பிரசங்கங்களில் கோட்பாடுகள் இல்லாமலிருப்பதற்குப் பல காரணங்களுண்டு.

1. பிரசங்கிகளில் பலர் பிரசங்கப் பயிற்சியையோ, அனுபவத்தையோ தங்களுடைய வாழ்க்கையில் பெற்றுக்கொள்ளவில்லை. இன்று வேதாகமக் கல்லூரிகளில் அத்தகைய பயிற்சிக்கு வழியுமில்லாமலிருக்கிறது.

2. இறையியல் போதனைகளை முறையாகக் கற்றுக் கொள்ளாததால் பிரசங்கிகளுக்கு வேத வசனங்களைப் பயன்படுத்தி சத்துள்ள போதனைகளை அளிக்க முடியாதிருக்கிறது. ஏதாவதொரு தலைப்பின் அடிப்படையில் அங்குமிங்குமாக தெரிவு செய்யப்பட்ட சம்பவங்களின் தொகுப்பாகவே பிரசங்கங்கள் காணப்படுகின்றன.

3. கோட்பாடுகள் பிரிவினைக்கு வழிவகுக்கும் என்ற தவறான, வீணான எண்ணத்தைக் கொண்டிருக்கும் அநேக பிரசங்கிகள் அவற்றை முற்றாகத் தவிர்த்து விடுவதால் பிரசங்கத்தில் சொல்லுவதற்கு எந்த சத்தியமும் இல்லாமல் வெறும் சக்கையான சம்பவத் தொகுப்புகளைப் பிரசங்கமென்ற பெயரில் அளித்து வருகின்றனர்.

4. வெறும் அனுபவத்திற்கு மட்டும் இடம் கொடுத்து வேத போதனைகளைப் பெரும்பாலானோர் நிராகரித்திருப்பதால் பிரசங்கத்தைக் கேட்பதைவிட பரவசத்தை அடைவதே விசுவாசத்திற்கு வழி என்ற எண்ணத்தில் அவர்கள் வனாந்தரப் பிரயாணத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மொத்தத்தில் பெரும் பாதிப்புக்குள்ளாகி சத்தியமறியாமல் இருட்டில் வாழ்கிறது தமிழினம்.

## பிரசங்கத்தின் முக்கிய பணி கர்த்தரின் செய்தியை ஆத்துமாக்களுக்கு தெளிவாக விளக்குவது.

கர்த்தர் வேதத்தில் தந்திருக்கும் அனைத்துப் போதனைகளையும் தகுந்த முறையில் ஆத்துமாக்களின் ஆத்மீக வளர்ச்சிக்காக வாழ்நாள் முழுவதும் எடுத்துப் பிரசங்கிப்பதே பிரசங்கியின் முக்கிய கடமை. ஆரம்பத்திலிருந்து இறுதிவரை கர்த்தரின் வேதம் கோட்பாடுகளால் நிரம்பி வழிகின்றது. கர்த்தரின் ஒவ்வொரு செய்தியும் போதனைகளே. போதனைகள் இல்லாத செய்தியை வேதத்தில் பார்க்க முடியாது. தன்னுடைய போதனைகளை அறிந்த விசுவாசிகள் அவற்றின்படி விசுவாசமாக வாழவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். அவருடைய போதனைகளை அறிந்துகொள்ள விரும்பாத மனிதனால் கர்த்தரின் வழிப்படி வாழமுடியாது. கர்த்தரின் போதனைகளை நிராகரிக்கிறவர்கள் கர்த்தரையே நிராகரிக்கிறார்கள்.

உதாரணத்திற்கு, பத்துக் கட்டளைகளை எடுத்துக் கொண்டால், முதலாம் கட்டளை கர்த்தர் மட்டுமே ஜீவனுள்ள தேவன் என்பதை விளக்குகிறது. அந்தக் கட்டளையை ஆராய்ந்து படித்தால். கர்த்தர் ஒருவரே தேவன் என்றும், அவர்

ஜீவனுள்ள தேவன் என்றும், அவரைத் தவிர வேறு தேவர்கள் இல்லை என்றும், அவர் மட்டுமே தேவனாக இருப்பதற்கான காரணங்களையும் அறிந்துகொள்ளலாம். இதையே இன்னும் ஆழமாகப் படித்துப் பார்த்தால் கர்த்தர் சர்வ வல்லவர் என்றும், அனைத்தையும் படைத்து இயக்குகிறவர் என்றும் அவரைப் பற்றி இன்னும் அதிகமான சத்தியங்களை அறிந்து கொள்ளலாம். இதெல்லாம் முதலாம் கட்டளை கர்த்தரைப் பற்றித் தரும் போதனைகள். இதையெல்லாம் விளக்காமல் முதலாம் கட்டளையைப் பிரசங்கிக்கவே முடியாது. இந்தப் போதனைகளை உதறித் தள்ளிவிட்டு முதலாம் கட்டளையைப் பிரசங்கிக்க முற்பட்டால் கர்த்தரைப் பற்றிய சத்தியங்களே இல்லாத செய்தியாகத்தான் அது போய் முடியும்.

பிரசங்கம் என்றால் அதில் வேதபோதனைகள் இருந்தே யாக வேண்டும். வேதக்கோட்பாடுகளை விளக்காத செய்திகள் பிரசங்கங்களல்ல. அத்தகைய செய்திகள் ஆத்துமாக்களை சீரழித்துவிடும். இனி பிரசங்கத்தில் வேதக்கோட்பாடுகள் இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்வது எப்படி? என்பதை ஆராய்வோம்.

## பிரசங்கிகளுக்கு இறையியல் அறிவு அவசியம்

இறையியல் என்ற பதத்தைக் கேட்டவுடனேயே பலருக்கு ஜுரம் வந்து விடுகிறது. அந்தளவுக்கு போலித்தனமான செய்திகளைக் கேட்டு இறையியலைத் தள்ளி வைத்திருக் கிறார்கள் பெரும்பாலானோர். பிரசங்கம் செய்யத் துணி கிறவர்கள் கர்த்தரின் வேத அறிவில் நல்ல தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதைத்தான் இறையியல் என்று கூறுகிறேன். கர்த்தரின் வேதத்தில் தரப்பட்டிருக்கும் அத்தனை சத்தியங் களையும் அறிந்தவனாகவும், அந்த சத்தியங்களைப் பகுத்துப் போதிக்கும் வல்லமையுள்ளவனாகவும் பிரசங்கி இருக்க வேண்டும். வேத இறையியலை இன்று வேதாகமக் கல்லூரி களில் பெற்றுக்கொள்ள முடியாமலிருப்பது கவலை தரும் செய்திதான். பெரும்பாலான வேதாகமக் கல்லூரிகள் இறையியல் என்பதையே அறியாத தேவ நிந்தனை செய்யும் கல்லூரிகளாக இருக்கின்றன.

இந்த நிலைமையில் பிரசங்கி எப்படி, எங்கிருந்து, வேத இறையியலைப் பெற்றுக்கொள்வது? அதற்கு வழி என்ன? என்ற

கேள்வி எழுகிறது. முதலில் வேதத்தை முறையாகத் தொடர்ந்து வாசித்து, குறிப்பெடுக்கப் பழகிக்கொள்ள வேண்டும். அரைகுறையாக ஒரு பகுதியை வாசிப்பதோ அல்லது பிரசங்கம் செய்வதற்காக ஒரு வசனத்தை வாசிப்பதையோ நான் குறிப்பிடவில்லை. அது வேதவாசிப்பாகாது. ஒவ்வொரு நாளும் நேரத்தை ஒதுக்கி ஆரம்பம் முதல் கடைசி நூல்வரை வருடா வருடம் வேதத்தை வாசித்து ஆராய்வதையே குறிப்பிடுகிறேன். இதன் அவசியத்தை உணர்ந்து இதற்கு நேரம் ஒதுக்கி வேதத்தைப் படிக்க வேண்டும். இப்படிப் படிப்பது வேதம் முழுவதிலும் தரப்பட்டிருக்கும் போதனைகளை நாம் படித்தறிந்துகொள்வதற்கு துணைபுரியும்.

அடுத்ததாக, ஒரு குறிப்பிட்ட வேதநூலை ஆராய்வதற்கு தனியாக நேரம் ஒதுக்கி அதைப் பலமுறைப் படித்து, அதன் எல்லா அம்சங்களையும் விளங்கிக்கொள்ள முயல வேண்டும். உதாரணத்திற்கு, பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தை எடுத்துக்கொண்டால்,

1. பவுல் அதை எங்கிருந்து, யாருக்கு எழுதினார்?
2. அந்த நூலில் அவர் நூலைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு எதைப் போதிக்கிறார்?
3. அந்தப் போதனை நூலில் எந்தமுறையில் தரப்பட்டிருக்கிறது?
4. அந்தப் போதனை எப்படி விளக்கப்பட்டிருக்கிறது?
5. அதேவிதமான போதனை வேதத்தின் ஏனைய பகுதிகளில் காணப்படுகின்றதா?
6. அந்தப் போதனையை பவுல் முக்கியமாக நூலைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு விளக்கியிருப்பதற்குக் காரணம் என்ன?
7. அந்தப் போதனையின் மூலம் பவுல் எதிர்க்கும் போலிக்கோட்பாடு எது?
8. அந்தப் போலிக்கோட்பாடு விசுவாசிகளை எந்த விதத்தில் பாதித்தது?

என்பது போன்ற கேள்விகளுக்கான பதில்களை எல்லாம் ரோமருக்கு பவுல் எழுதிய நூலில் இருந்து பெற்றுக்கொள்ளும்படி

நமது வாசிப்பும் ஆராய்ச்சியும் அமைய வேண்டும். இதை ஒரு நாளிலோ, ஒரு வாரத்திலோ செய்துவிட முடியாது. இதைச் செய்வதற்கு ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும். இந்த முறையில் வேத நூல்களை ஆராய்ந்து ஆவியின் துணையோடு படிக்கும்போது வேதபோதனைகளில் நாம் நிச்சயம் வளர்வோம். வேதக் கோட்பாடுகளை இலகுவாக புரிந்துகொள்ளுவோம்.

## இறையியல் ஞானத்தைத் தரக்கூடிய நூல்கள்

வேதபோதனைகளை முறையாகக் கற்றுக்கொள்ளுவதற்கு வேதஞானமுள்ளவர்கள் எழுதிவைத்துள்ள நூல்களை வாசித்து ஆராய்வது பெரும் பயனளிக்கும். இன்று வேதக்கோட்பாடு களை விளக்கும் நூல்கள் தமிழில் மிகக் குறைவு. இருந்தாலும் இருக்கும் நல்ல நூல்களை பயன்படுத்திக்கொள்ளாமலிருப்பது மன்னிக்க முடியாத குற்றம். நம் முன்னோர்களான சீர்திருத்தவாதிகள் ஆராய்ந்து எழுதி வைத்துள்ள 1689 விசுவாச அறிக்கை வேதபோதனைகளை விளக்கமாகவும், சுருக்க மாகவும் தொகுத்து அளிக்கும் மிகவும் பயனுள்ள ஒரு நல்ல நூல். பிரசங்க ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவரும் வாசித்துப் பயன்பெற வேண்டிய நூல் இது. வேதம் போதிக்கும் அனைத்து சத்தியங்களும் இதில் முறையாகத் தொகுத்து அளிக்கப்பட்டிருக்கிறது. வேதத்தாலும், வரலாற்றாலும், காலத்தாலும் நிரூபிக்கப்பட்டுள்ள அருமையான நூல். இதற்கு அடுத்தபடியாக வினாவிடைப் போதனையொன்றையும் நம் முன்னோர்கள் நமக்கு அருளிச் சென்றிருக்கிறார்கள். விசுவாச அறிக்கையில் நாம் வாசிக்கும் சத்தியங்களை வினாவிடை வடிவத்தில் தந்திருக்கிறார்கள். அதையே திருமறைத்தீபம் பத்திரிகையில் கிறிஸ்தவ கோட்பாடுகள் என்ற தலைப்பில் விளக்கமாகத் தொடர்ந்து தந்து வருகிறோம். இவை இரண்டையும் கவனமாகப் படிக்கும் எந்தப் பிரசங்கியும் தேவையான வேதபூர்வமான இறையியல் அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த ஆரம்ப இறையியல் அறிவு இல்லாமல் பிரசங்க ஊழியத்திற்குப் போவது குதிரையோட்டத் தெரியா தவன் குதிரை சவாரி செய்யப் போவது போல்தான் அமையும்.

இவைதவிர வேதபூர்வமான நல்ல நூல்களையும் வாசிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, ஜோண்

பனியனின் மோட்ச பயணம். இது வேத இறையியலை அனுபவரீதியில் அருமையாக விளக்குகிறது. மார்டின் லூத்தரின் பிறவி அடிமைகள், மனிதன் பாவத்திற்கு எப்படி அடிமையாக இருக்கிறான் என்பதை விளக்கும் நல்ல நூல். நூல்களை வாசிக்கும்போது ஆராய்ந்து வாசிப்பது அவசியம். தவறான போதனைகளை அளிக்கும் நூல்களை வாசித்து இருதயத்தைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது. பெனிஹின், ஜொய்ஸ் மேயர், கென்னத் கோப்லாந்து, தமிழ் நாட்டில் தினகரன், சாம் ஜெபத்துரை மேலும் இவர்களைப் போன்ற பெந்தகொஸ்தே இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் நூல்கள் பக்கம் தலை வைத்தும் படுக்காமல் இருப்பது நல்லது. "செழிப்பு உபதேசம்" என்ற பிசாசின் போதனையை இவர்கள் பரப்பி வருகிறார்கள்.

ஆங்கில அறிவுள்ளவர்கள் அநேக நல்ல நூல்களைப் படிக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஆங்கிலத்தில் வாசிக்கும் பயிற்சியையாவது பெற்றுக் கொண்டால் பிரசங்க ஊழியத்திற்கு பேருதவியாக அமையும். முக்கியமாக, லூயி பேர்கொவ்வின் (Louis Berkhof) "Summary of Christian Doctrine," என்ற புத்தகம் வேதசத்தியங்களை சுருக்கமாக விளக்குகிறது. இவர் முழுக்கு ஞானஸ்நானத்தை விசுவாசிப்பவரல்ல என்றாலும் நூலில் உள்ள இறையியல் மிகவும் தரம் வாய்ந்தது.

## வேதபோதனைகளை (இறை கோட்பாடுகள்) பிரசங்கத்தில் பயன்படுத்தும் முறை

நாம் கற்றறிந்து கொண்டிருக்கும் வேதபோதனைகளை பிரசங்கத்தில் தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் கேட்கின்ற ஆத்துமாக்கள் வேத அறிவில் வளர வழி செய்து கொடுக்க முடியும். வேத அறிவில் அவர்கள் வளர்ந்தால் மட்டுமே அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் மெய்யான வளர்ச்சி ஏற்படும். பிரசங்கி ஒரு நூலில் இருந்து தொடர்ச்சியான பிரசங்கத்தை அளிக்க முடிவு செய்திருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். அவர் ஏற்கனவே அந்த நூலைப் பலதடவை வாசித்து, அந்த நூலை எந்த முறையில் பிரசங்கிக்கப் போகிறேன் என்பதைத் தீர்மானித்து, நூலைப் பல பகுதிகளாகப் பிரித்து அவற்றில் இருந்து எத்தனைப் பிரசங்கங்களை அளிக்கப் போகிறேன்

என்பதையும் ஏற்கனவே தீர்மானித்திருப்பார். அத்தோடு அந்த நூலில் முக்கியமாகப் போதிக்கப்பட்டிருக்கும் இறைகோட்பாடு என்ன என்பதையும் நூல் விளக்கும் ஏனைய போதனைகளையும் குறிப்பெடுத்து வைத்திருப்பார். உதாரணமாக, ரோமர் நிருபத்தை எடுத்துக்கொண்டால் அதில் நீதிமானாக்கல் (Justification) முக்கிய போதனையாக இருக்கிறது. அதைத் தவிர தேவகோபம், தேவநீதி, பாவம், மூல பாவம், நியாயப் பிரமாணம், விசுவாசம், பரிசுத்தமாகுதல், கிறிஸ்துவினுடனான ஐக்கியம், எஞ்சியிருக்கும் பாவம், மகிமையடைதல், கர்த்தரின் இறையாண்மை, தேவனின் திட்டத்தில் இஸ்ரவேலின் பங்கு, விசுவாச வாழ்க்கை, கிறிஸ்தவ சுதந்திரம் போன்ற பல வேதபோதனைகளும் நூலில் அடங்கியிருக்கின்றன.

ரோமருக்கு எழுதிய நூலில் இருந்து பிரசங்கிக்கிறபோது மேலே நாம் பார்த்த சத்தியங்கள் காணப்படும் பகுதிகளில் அந்தந்த சத்தியங்களை முறையாக நூலில் அவை தரப் பட்டிருக்கும் விதத்தில் விளக்கமாக போதிக்க வேண்டியது பிரசங்கியின் கடமை. நூலில் காணப்படும் கோட்பாடுகள் அனைத்தையும் விலக்கி வைத்துவிட்டு அதிலிருந்து பிரசங்கம் செய்ய முடியாது. அப்படிச் செய்கிற ஆயிரக்கணக்கான அதிகப்பிரசங்கிகள் இருக்கிறார்கள் என்பதுதான் ஆச்சரியம். பிசாசு செய்யவேண்டிய வேலையை இவர்கள் தத்தெடுத்து செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இதை எப்படிச் செய்கிறார்கள் என்றால் நூலை முறையாக, தொடர்ச்சியாக விளக்கிப் போதிக்காது இங்கும் அங்குமாக தங்களுக்குப் பிடித்தமான ஓரிரு வசனங்களை எடுத்துக்கொண்டு அவற்றின் அடிப்படையில் மேலெழுந்தவாரியாகப் பிரசங்கித்து ரோமர் நிருபத்தில் பவுல் தந்திருக்கும் போதனைகளை அடியோடு மறைத்துவிடுகிறார்கள். இதனால் ஆத்துமாக்கள் வேதம் தெரியாமலேயே வாழ நேரிடுகிறது.

பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து நீதிமானாக்கலைக் குறித்து பிரசங்கி பிரசங்கிப்பதானால் அவர் முதலிலேயே நீதிமானாக்கல் போதனையை ஆராய்ந்து படித்து குறிப்பெடுத்து வைத்துக்கொள்ளுவது அவசியம். அந்தக் கோட்பாட்டை சரிவர அறிந்துகொள்ளாமல் பிரசங்கிக்கப் போகக்கூடாது. நீதிமானாக்கலின் சகல அம்சங்கள் பற்றியும் பிரசங்கிக்கு நல்ல அறிவு இருக்க வேண்டும். இல்லாவிட்டால்

அந்தக் கோட்பாட்டைத் தவறாகப் பிரசங்கித்துவிடக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும். அதேபோலத்தான் அந்நூலில் உள்ள ஏனைய சத்தியங்களையும் கவனமாகப் படித்து, பவுல் அவற்றை எவ்வாறு கையாளுகிறார் என்பதை உணர்ந்து பிரசங்கிப்பது அவசியம். அதேவேளை நீதிமானாக்கலுக்கு எதிர் கோட்பாடுகளையும் அறிந்து வைத்திருப்பது அவசியம். ரோமன் கத்தோலிக்கர்கள் வேதம் போதிக்கும் நீதிமானாக்கல் போதனையை ஏற்றுக்கொள்வதில்லை. கிரியையின் அடிப் படையிலான விசுவாசத்தை அவர்கள் போதிக்கிறார்கள். நீதிமானாக்கல் போதனையை நன்கு உணர்ந்தவர்கள் இரட்சிப் பில் மனிதனுக்கு எந்தப்பங்கும் இல்லை என்பதை நன்றாகப் புரிந்துகொள்ளுவார்கள்.

## வேதக்கோட்பாடுகளை தலைப்பாகக் கொண்டு பிரசங்கித்தல்

ஒரு நூலில் இருந்து முறையாக பங்கு பங்காகப் பிரசங்கிக்காமல் சில சமயங்களில் வேதக் கோட்பாடுகளின் தலைப்புகளின் அடிப்படையிலும் (Topical Sermons) பல வாரங்களுக்குப் பிரசங்கிக்கலாம். இப்படிப் பிரசங்கிப்பது சபை மக்களுக்கு வேதசத்தியங்களைப் போதித்து அவற்றில் அறிவு அதிகரிக்க வழி செய்யும். இதையே வழக்கமாகக் கொண்டிராமல் வசதிக்கும், ஆத்துமாக்களின் தேவைகளுக்கும் ஏற்ப அவ்வப்போது பிரசங்கிப்பது நல்லது. முக்கியமாக, பிரசங்கி ஒரு காலண்டரை வைத்திருந்து குறிப்பிட்ட வருடத்தில் எப்போது எத்தனை வாரங்களுக்கு தலைப்புகளின் அடிப்படையில் பிரசங்கிப்பது என்பதைக் குறித்து வைத்துக் கொள்ளலாம்.

இந்த முறையில் பிரசங்கிப்பதற்கு பிரசங்கிக்கப்போகும் ஒவ்வொரு வேதக் கோட்பாட்டிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருப்பது அவசியம். வெறும் தலைப்பை மட்டும் எடுத்துக்கொண்டு தனக்குத் தோன்றுவதை பேசுவது ஒரு தலைப்பின் அடிப்படையில் செய்யும் பிரசங்கமாகாது. உதாரணமாக, பரிசுத்தமாகுதலைப் பற்றிப் பிரசங்கிப்பதானால் வேதம் அதுபற்றி எல்லாப் பகுதிகளிலும் கொடுக்கும் விளக்கங்களை அறிந்திருக்க வேண்டும். மேலும் வேதத்திற்கு முரணான, பரிசுத்தமாகுதல் பற்றிய தவறான போதனை களையும் அறிந்துவைத்திருக்க வேண்டும்.

கத்தோலிக்க மதம், விசுவாசி முழுக்கு ஞானஸ்நானத்தின் மூலமும், சபைக்குக் கட்டுப்பட்டு செய்யும் கிரியைகளின் மூலமும் ஒருவன் பரிசுத்தமாகுவதாக தவறாகப் போதிக்கிறது. பெந்தகொஸ்தே இயக்கங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத் தால் விசுவாசி பரிசுத்தமாகுவதாக எண்ணி, விசுவாசியின் கடமைப்பாட்டை முற்றாக அலட்சியப்படுத்துகிறது. சகோதர சபைப் பிரிவுகளில் சில, பத்துக் கட்டளைகளுக்கு விசுவாசி அடங்கி நடக்க வேண்டுமென்பதை அலட்சியப்படுத்தி பாவம் செய்கிற விசுவாசி ஜெபத்தாலும், உபவாசத்தாலும், கர்த்தரில் தங்கியிருப்பதாலும் பரிசுத்தமடையலாம் என்று போதிக்கின்றன. ஜோண் வெஸ்லி, விசுவாசி இந்த உலகத்தில் பூரணத்துவமடையலாம் என்று தவறாகக் கருதினார். இத்தனைத் தவறான போதனைகளும் நம்மத்தியில் உலவுவதால் இதையெல்லாம் தோலுரித்துக் காட்டி பரிசுத்தமாகுதல் விசுவாசியால் மட்டுமே முடியும் என்றும், அதை அடைய முதலில் ஒருவன் மனந்திரும்புதலையும் விசுவாசத்தையும் பெற்றிருத்தல் வேண்டும் என்றும், அப்படி விசுவாசியாக இருக்கும் மனிதன் தன் வாழ்க்கையில் பாவத்துக்கு புறமுதுகு காட்டி அன்றாடம் பத்துக் கட்டளைகளைத் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்து கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும் என்பதையும் விளக்குவது அவசியம். பரிசுத்தமாகுதலை விசுவாசி கர்த்தரின் ஆவியின் துணையோடு மட்டுமே தன் வாழ்க்கையில் காண முடியும் என்பதையும் விளக்குவது அவசியம். கர்த்தர் விசுவாசியில் செய்யும் பரிசுத்தமாகுதலில் மனிதனின் பங்கு நிச்சயம் இருக்கிறது *(பிலி. 2:12-13).*

இந்த முறையில் வேதக்கோட்பாடுகளை ஆராய்ந்து படித்துத் தயாரித்து பிரசங்கங்களை அளிக்க வேண்டியது ஒவ்வொரு பிரசங்கியினதும் கடமை.

# பிரசங்கிக்கும்போது . . .

இதுவரை பிரசங்கத்தைத் தயாரிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை நாம் முடிந்தளவுக்கு தெளிவாக ஆராய்ந் திருக்கிறோம். பிரசங்கத் தயாரிப்பில் கவனிக்க வேண்டிய அத்தனை அம்சங்களையும் விளக்கமாக ஆராய்ந்திருக்கிறோம். பிரசங்கம் மிகவும் கீழான நிலையிலிருக்கும் நம்மினத்து சபைகளில் பிரசங்கம் உயர்ந்த இடத்தை வகிக்க வேண்டு மானால் ஒவ்வொரு பிரசங்கியும் இதுவரை நாம் பார்த்த, படித்த விஷயங்களில் கருத்தோடு கவனம் செலுத்தி உழைத் தால் மட்டுமே அது முடியும்.

இனி, பிரசங்கத்தை நாம் கர்த்தரின் துணையோடு நல்ல முறையில் தயாரித்து விட்டோம் என்ற அனுமானத்தோடு தயாரித்த பிரசங்கத்தைப் பிரசங்க மேடைக்கு கொண்டு சென்று ஆத்துமாக்கள் முன் படைப்பதற்கு அவசியமான, பிரசங்கி கவனம் செலுத்த வேண்டிய சில முக்கிய விஷயங்களை ஆராய்வோம். பிரசங்கத்தை நல்ல முறையில் தயாரித்து விடுவதால் மட்டும் அது நல்ல பிரசங்கமாகி விடாது. பிரசங்கத்தை நல்ல முறையில் தயாரிப்பது பிரசங்க ஊழியத்தில் 50% பணி மட்டுமே. தயாரித்த பிரசங்கத்தைக் கர்த்தரின் துணையோடு ஆத்துமாக்களின் இருதயத்தைப் பாதிக்கும்படி பிரசங்கிப்பது அடுத்த 50% பணியாகும். அதைச் செய்யாதவரை தயாரித்துள்ள பிரசங்கம் அது எத்தனை நல்ல பிரசங்கமாக இருந்தாலும் ஏட்டோடு மட்டுமே நின்றுவிடும்.

### பிரசங்கக் குறிப்புகள்

தயாரிக்கப்பட்ட பிரசங்கத்தை எந்த முறையில் பிரசங்க மேடைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பது நாம்

அடுத்ததாகக் கவனிக்க வேண்டிய விஷயம். பிரசங்கத்தை நாம் நல்ல முறையில் தயாரித்து எழுத்தில் வைத்திருக்கிறோம் என்றால் அதனை எந்த முறையில் மேடைக்கு கொண்டு செல்வது?

பெரும்பாலானோர், பிரசங்கத்தை நான் மனனம் செய்து விட்டேன், அதனால் பிரச்சனை இல்லை என்று சொல்லு வார்கள். ஒரு சிறு காகிதத்தில் குறைந்தளவான குறிப்பை மட்டுமே வைத்துக் கொண்டு · பிரசங்கம் செய்வது பெரும் பாலான பிரசங்கிகளின் வழக்கம். அதாவது, அவர்கள் முழுப் பிரசங்கத்தையும் எழுத்தில் வடிப்பது இல்லை. இது ஆபத்தான தாகும். எப்படியென்றால், தயாரித்துள்ள பிரசங்கத்தை முழுவது மாக வார்த்தை தவறாமல் மனனம் செய்துகொள்ளும் வல்லமை எல்லோருக்கும் இல்லை. பிரசங்க வேளையில், தயாரித்த பகுதி நினைவுக்கு வராதபோது நம் மனதுக்கு வருவதை அந்த நேரத்தில் பேசிவிட வேண்டிய நிலை ஏற்பாடும். இதனால் பிரசங்கம் பாதிப்புறும். ஆவியானவர் வெளிப்படுத் தினார் என்ற பெயரில் இல்லாததையும் பொல்லாததையும் மேடையில் சொல்லுவதே அநேக பிரசங்கிகளுக்கு இன்று வழக்கமாக இருக்கிறது. முழுவதுமாக தயாரித்து பிரசங்கிக்கப் படாத பிரசங்கத்தை ஆவியானவர் ஒருபோதும் ஆசீர்வதிப்ப தில்லை. அதேவேளை, நன்றாக தயாரித்து வைத்திருக்கும் பிரசங்கத்தையும் சரியாகப் பிரசங்கிக்க ஆவியானவரின் துணை நமக்குத் தேவை. அதனால் பிரசங்கத்தை தயாரித்த போது நாம் காட்டிய அக்கறையையும், கவனத்தையும் பிரசங்கத்தைப் பிரசங்கிக்கும் போதும் காட்ட வேண்டியது அவசியம். அதற்காகத்தான் தயாரித்த பிரசங்கத்தை கையோடு மேடைக்குக் கொண்டுபோக வேண்டியிருக்கிறது.

வேதப்பகுதிகளை இலக்கணபூர்வமாக விளக்கிப் பிரசங்கிக்கும் வியாக்கியானப் பிரசங்கங்களை முழுவதுமாக மனனம் செய்து பிரசங்கிப்பது மிகவும் கடினமானது. திறமையும், அனுபவமுமுள்ள பிரசங்கிகளாலேயே அது முடியும். சராசரி பிரசங்கிகள் அத்தகைய தகுதிகளை வாழ்க்கையில் பெற்றிருப்பதில்லை. இத்தகைய பிரசங்கங்களை வழங்கும்போது அநேக விஷயங்களை நினைவில் வைத்திருக்க வேண்டும். அந்தளவுக்கு எல்லாவற்றையும் நம்மால் மனனம்

செய்துவிட முடியாது. ஆகவே, பிரசங்கக் குறிப்பு கையில் இல்லாமல் நமது ஞாபக சக்தியை மட்டும் நம்பி மேடைக்குப் போவது பேராபத்தில் போய் முடியும்.

பிரசங்கத்தை நாம் விசுவாசத்தோடு பிரசங்கிக்க வேண்டு மானால் முழுப் பிரசங்கத்தையும் பேப்பர்களில் தெளிவாக எழுதி வைப்பது அவசியம். குறைந்தபட்சம் ஆறு பக்கங்களில் தெளிவான கையெழுத்திலோ அல்லது டைப் செய்யப்பட்ட தாகவோ பிரசங்கம் இருக்க வேண்டும். பிரசங்கத் தலைப்பு, முன்னுரை, உப தலைப்புகள், வரிசைக்கிரமமான பயன்பாடு களின் தலைப்புகள், முடிவுரை ஆகியன பெரிய எழுத்துக் களில் கண்களுக்கு நன்றாக தெரியும் வகையில் பேப்பரில் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்க வேண்டும். இந்தவிதமாக எழுதியோ அல்லது டைப் செய்யப்பட்டோ இருக்கும் பிரசங்கத்தை நாம் முழுவதுமாக பலமுறை வாசித்து சிக்க லில்லாமல் மனதில் பதியும்படி செய்துகொள்ள வேண்டும். இந்தப் பேப்பர்களை நாம் ஒரு பைலில் (file) வைத்து பிரசங்க மேடைக்கு கொண்டு செல்லக்கூடியதாக இருக்க வேண்டும். பிரசங்கிக்கும் வேளையில் நமது கண்கள் தொடர்ந்து பேப்பரில் இருக்கப்போவதில்லை என்றாலும் பேப்பர்களில் நாம் எழுதி வைத்திருப்பதை பிரசங்கிக்க அந்தக் குறிப்புகள் உதவும்.

ஆரம்பப் பிரசங்கிகள் பல வருடங்களுக்கு பிரசங்கங்களை முழுவதுமாக எழுதித் தயாரித்துப் பிரசங்கிப்பது அவசியம். இத்தகைய பயிற்சி, பிரசங்கத்தைத் திறமையோடு தயாரிக்கவும், அதை தயாரித்த விதத்தில், கொடுக்கப்பட்டுள்ள கால அளவில் பிரசங்கிக்கவும் உதவும். பெரும் பிரசங்கியாக இருந்த மார்டின் லொயிட் ஜோன்ஸ் இதை வற்புறுத்தியுள்ளார். தனது ஆரம்பகாலப் பிரசங்கங்களையெல்லாம் அவர் முழுவதுமாக வார்த்தை தவறாமல் எழுத்தில் வடித்திருந்தார். இந்தப் பழக்கம் அவருக்கு கட்டுப்பாட்டையும், ஒழுங்குமுறையையும் கற்றுத் தந்தது. தயாரித்தப் பிரசங்கத்தைத் தவிர மனதில்பட்டதை மேடையில் சொல்லாமலிருக்கவும், குறித்த நேரத்துக்கு பிரசங்கத்தை அளிப்பதிலும் அது அவருக்கு உதவி செய்தது. இதே பயிற்சியை தற்காலப் பிரசங்கிகளும் நடைமுறையில் கைக்கொள்ளுவதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். என் நண்பர்களான பல பிரபலமான தேர்ந்த சீர்திருத்த பிரசங்கிகள்

தங்களுடைய பிரசங்கங்களை அருமையாக பேப்பரில் வடித்து, பிரசங்கிக்கும்போது அவற்றைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

நாம் பிரசங்கக் குறிப்புகளை தயாரித்து பேப்பரில் வைத்திருந்தால், அவற்றைப் பலமுறை வாசித்து மனதில் பதிய வைத்திருந்து மேடைக்குப் போகும்போது தேவையற்ற வார்த்தைகளையும், வசனங்களையும் பயன்படுத்தாமல் இருக்க முடியும். பிரசங்க வாக்கியங்களையும், வார்த்தைகளையும் தகுந்த முறையில் பயன்படுத்த கையில் இருக்கும் பிரசங்கக் குறிப்புகள் உதவும். ஒழுங்குப்படுத்தப்பட்ட வார்த்தைகளும், வாக்கியங்களும் இல்லாமல் எந்தவொரு விஷயத்தையும் நாம் தெளிவாகப் பிரசங்கித்துவிட முடியாது. பிரசங்கத்தைத் தயாரித்தபோது நாம் பல உதாரணங்களையும், பழமொழி களையும் தகுந்த இடங்களில் பயன்படுத்தியிருப்போம். அதையெல்லாம் எல்லோராலும் பிரசங்கக் குறிப்புகள் கையில் இல்லாமல் மனனம் செய்து வைத்திருப்பது முடியாத காரியம். ஆகவே, பிரசங்கக் குறிப்புகளை எழுத்தில் வடித்து மேடைக்குக் கொண்டுபோவதை நாம் வழக்கத்தில் வைத்திருக்க வேண்டும்.

## பிரசங்கிக்கும்போது பிரசங்கக் குறிப்பை வாசிக்கக் கூடாது

இவ்வாறாக எழுதி நாம் மேடைக்குக் கொண்டுபோகும் பேப்பர்களை நாம் பிரசங்கிக்கும்போது முழுவதுமாக வாசிக்கக் கூடாது. அப்படி வாசித்தால் அது பிரசங்கமாக இருக்காது. பிரசங்க வேளையில் ஆத்துமாக்களுடைய கண்களை நமது கண்கள் சந்திப்பது அவசியம். மேலை நாடுகளில் ஒரு சில சபைப் பிரிவுகளில் இவ்வாறாக பிரசங்கத்தை வாசிப்பவர்கள் உண்டு. இது சரியான முறையல்ல. உணர்ச்சியே இல்லாமல், எழுதி வைத்திருப்பதை வாசிப்பது ஆத்துமாக்களுடைய உள்ளத்தை அசைக்காது. வாசிப்பதைத் தவிர்ப்பதற்காக பிரசங்கத்தை முழுவதுமாக எழுதி மேடைக்கு கொண்டு போகாமல் இருப்பது நல்லது என்று சிலர் கூறுவார்கள். அது அவசியமில்லை. “பிரசங்கத்தை வாசிப்பதை எந்தவிதத்திலும் ஒருவர் நியாயப்படுத்த முடியாது” என்று இறையியல் அறிஞர் ரொபட் லூயிஸ் டெப்னி (Robert Lewis Dabney) கூறியுள்ளார். அவர் தொடர்ந்து “அப்படி வாசிக்கும் வழக்கத்தை பிரசங்க மேடை அருகில்கூட வரவிடக் கூடாது” என்று கூறியிருக்கிறார்.

## பிரசங்கக் குறிப்பை தேவைப்பட்டபோது மட்டுமே பிரசங்கி பிரசங்க வேளையில் பார்க்க வேண்டும்

பிரசங்கிக்கும்போது நமது கண்கள் எப்போதும் ஆத்துமாக்களில் பதிந்திருக்க வேண்டியிருப்பதால் அவசியமானபோது மட்டுமே நாம் நமக்கு முன்னால் இருக்கும் பிரசங்கக் குறிப்பைப் பார்க்க வேண்டும். நாம் ஒரு விரிவுரையை வகுப்பில் கொடுக்கும்போது அதை வாசிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். ஆனால், பிரசங்கம் ஒரு விரிவுரை அல்ல. பிரசங்கம் உணர்ச்சி ததும்ப, ஆத்துமாக்களின் உள்ளத்தைத் தொடுவதாக அமைய வேண்டியிருப்பதால் அதைத் தடை செய்துவிடக்கூடிய எதற்கும் நாம் பிரசங்கிக்கும்போது இடம் கொடுத்துவிடக் கூடாது. எழுதி வைத்திருப்பதைப் பார்த்து வாசிப்பது அத்தகைய தடையைத்தான் ஏற்படுத்தும். சில வேளைகளில் நமது பிரசங்கத்தில் நாம் வேறு எவராவது சொன்னதைக் குறிப்பிட (quote) வேண்டியிருந்தால் அதை வாசிக்க நேரிடும். மற்றவர்களுடைய குறிப்புகள் நமது பிரசங்கங்களில் மிகக் குறைவாகவே இருக்க வேண்டும். ஆத்துமாக்கள் வசனத்தைத்தான் கேட்க வந்திருக்கிறார்களே தவிர மற்றவர்களுடைய கருத்துக்களை அல்ல.

பிரசங்க வேளையில் நாம் பிரசங்கக் குறிப்பை அவசியம் பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது அதைக் கவனமாக ஆத்துமாக்களுடன் நமக்கிருக்கும் தொடர்புக்கு தடைவராத விதத்தில் செய்வது நல்லது. பேசிக்கொண்டே குனிந்து பார்த்தோ அல்லது குரலைக் கொஞ்சம் தாழ்த்தி குறிப்பைப் பார்த்தோ செய்ய வேண்டும். சில வேளைகளில் ஒரு வசனத்தை வாசிப்பதற்காக ஆத்துமாக்களை அந்த வசனத்தைப் பார்க்கச் சொல்லுகிறபோது பிரசங்கக் குறிப்பைப் பார்க்கலாம். இப்படிச் செய்கிற போது நாம் பிரசங்கக் குறிப்பைப் பார்க்கிறோம் என்பதையே ஆத்துமாக்கள் அறியாதபடி செய்வது அவசியம். இது பயிற்சி இல்லாமல் வராது. பிரசங்கக் குறிப்பை நாம் வாசிப்பதற்காக அங்கு கொண்டுபோகவில்லை என்பதை உணர வேண்டும். பிரசங்கத்தைப் பலமுறை வாசித்து அதில் நல்ல பரிச்சயம் ஏற்படுகிறபோது தாளில் இருப்பதெல்லாம் மனதில் பதிந்துவிடும். சில வேளைகளில் நமது கரங்கள் குறிப்புகளைப் புரட்டினாலும், கண்கள்

அதில் பதிந்தாலும் நம்மால் தொடர்ந்து தடையில்லாமல் தயாரித்ததை பிரசங்கிக்க முடியும்.

பிரசங்கக் குறிப்பை பிரசங்க மேடைக்குக் கொண்டு போவது அவசியமானபோதும் பிரசங்கி, பிரசங்கக் குறிப்புக்கு கட்டுப்பட்டவராக இருக்கக் கூடாது. பிரசங்கக் குறிப்பைக் அவர் தம்முடைய கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். கர்த்தர் தம்முடைய மக்களோடு பிரசங்கத்தின் மூலம் பேசுவதற்கு தடையாக பிரசங்கக் குறிப்புகள் அமைந்துவிடக்கூடாது. இதற்காக பிரசங்கி தன்னுடைய பிரசங்கத் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதாவது ஆத்துமாக்களில் தன்னுடைய கண்களைப் பதித்து சரளமாக பேசக்கூடிய விதத்தில் பயிற்சி செய்வது அவசியம். தனிமையில் இருக்கின்ற வேளைகளில் இத்தகைய பயிற்சியில் ஈடுபடுவது பிரசங்கப் பணிக்கு பெரும் துணைபுரியும்.

## பிரசங்கிப்பதற்கு தேவையான கால அளவு

பிரசங்கி எவ்வளவு நேரம் பிரசங்கிக்க வேண்டும் என்பது முக்கியமான கேள்வி. ஒவ்வொரு பிரசங்கியும் வித்தியாச மானவர். கர்த்தரின் படைப்பில் எல்லோருமே ஒரேவிதமாக படைக்கப்பட்டிருக்கவில்லை. சிலருடைய குரல்வளம் திறமையானதாக ஆத்துமாக்களைக் கவருவதாக இருக்கும். அவர்களால் நாற்பத்தைந்து நிமிடத்துக்குப் பேசி ஆத்துமாக் களைச் சலிப்படையாமல் செய்ய முடியும். அத்தகைய குரல்வளமில்லாதவர் தானும் நாற்பத்தைந்து நிமிடத்துக்குப் பேச வேண்டும் என்று துடித்தால் அது ஆத்துமாக்களால் சகித்துக்கொள்ள முடியாதபடி போய்விடும். ஒருவர் முப்பது நிமிடத்துக்குப் பேசுவதற்குத்தான் திறமையானவர் என்றால் அவர் அதைக் கூட்டிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

அத்தோடு, பிரசங்க நேரம் நாம் பிரசங்கிக்கும் பிரசங் கத்துக்குதக்கதாக வேறுபட்டும் இருக்கும். ஒவ்வொரு பிரசங்கமும் வித்தியாசமானதாக வித்தியாசமான பகுதிகளில் இருந்தும் அமையும். பழைய ஏற்பாட்டில் இருந்து ஒரு வரலாற்றுப் பகுதியை விவரித்துப் பிரசங்கிக்கும்போதோ அல்லது புதிய ஏற்பாட்டு நிருபங்களில் ஒரு பகுதியை விளக்கிப் பிரசங்கிக்கும்போதோ அல்லது இறையியல்

விளக்கத்தை ஒரு தலைப்பின் அடிப்படையில் பிரசங்கிக்கும் போதோ சிறிது நேரம் அதிகமாகத் தேவைப்படும். அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு சபையும் வித்தியாசமானதாகவும், ஆத்மீக வளர்ச்சிப்படியில் வித்தியாசமான நிலையில் இருப்பதாகவும் இருக்கும். ஒரு சபை மக்கள் பிரசங்கத் தாகம் அதிகமாக இருந்து நீண்ட பிரசங்கங்களுக்கு பழக்கப்பட்டவர் களாக இருப்பார்கள். இன்னொரு சபையில் அதைப் பார்க்க முடியாமல் இருக்கும்.

பிரசங்கத்திற்கான கால அளவைத் தீர்மானிக்கும் இன்னுமொரு அம்சம், எத்தகைய கூட்டத்தில் நாம் பேசு கிறோம் என்பதாகும். பிரசங்கி ஒரு போதகர் கூட்டத்தில் பேசுபவராக இருப்பாரானால் அவர் போதகர்களுக்கு ஏற்றவிதத்தில் பேச வேண்டும். ஏற்கனவே பிரசங்கங்களையும், போதனைகளையும் கேட்டு தங்களுடைய மனதை அதற்குத் தயாராக்கிக் கொண்டுள்ள கூட்டமாக போதகர்கள் கூட்டம் இருக்கும். அத்தோடு, சபை மக்களைவிட அதிகளவு இறையியல் போதனைகளைப் பெறத்தக்கதாக அவர்களுக்கு மனவளர்ச்சியும் இருக்கும். இதனால் போதகர்களுக்கு மத்தியில் நாம் நேரத்தைப் பற்றி அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை.

சிலவேளைகளில் பிரசங்கி ஒரு பிரசங்கத்தை ஆத்துமாக்கள் சலிப்படையாதபடி நாற்பத்தைந்து நிமிடத்துக்கும், இன் னொன்றை முப்பது நிமிடத்திலும் கொடுத்துவிட முடியும். ஆகவே, இந்த விஷயத்தில் நாம் ஒரு நிலையான விதியை ஏற்படுத்தி இவ்வளவு நேரத்திற்குத்தான் பிரசங்கிக்க வேண்டும் என்று கூற முடியாது. ஸ்பர்ஜன், “பிரசங்கங்கள் மிகவும் நீளமானதாக இருந்துவிடக்கூடாது” என்று கூறியுள்ளார். மார்டின் லொயிட் ஜோன்ஸ், “நாற்பத்தைந்து நிமிடங்கள் போதுமானது” என்று சொல்லியிருக்கிறார். இருவருமே அதற்கு மேலும் பிரசங்கித்தவர்கள். ஆனால், அவர்களுடைய பிரசங்கங்கள் என்றைக்கும் எவருக்கும் சலிப்பேற்படுத்த வில்லை. ஒருமணி நேரத்துக்கு மேல் பேசுவது அதிகம் என்றுதான் கூற வேண்டும். அதுவும் நமது கூட்டங்களில் குழந்தைகளும், வயதானவர்களும் இருப்பார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அவர்களால் மிகவும் நீளமான பிரசங்கங்களைத் தாங்கிக்கொள்ள முடியாது. ஆரம்பப் பிரசங்கிகள் முப்பது நிமிடங்களுக்குள் பேச முயற்சித்தால்

அவர்கள் பின்பு நேரத்தைத் தங்கள் கட்டுக்குள் வைத்துப் பிரசங்கிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

புரோடஸ் (Broadus) என்ற அமெரிக்க இறையியல் அறிஞர் கூறுவதைக் கவனியுங்கள், "ஒரு போதகர் தன்னுடைய பிரசங்கத்தை சில வேளைகளில் நீளமானதாகவும், சில வேளைகளில் மிகச் சுருக்கமானதாகவும் தயாரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை அறிந்திருப்பது அவசியம். இருபது நிமிடங்களில் அருமையாகக் கேட்பவர்கள் மகிழும்படிப் பிரசங்கிக்க வேண்டிய சில போதனைகள் இருக்கின்றன. அவற்றை நாற்பது நிமிடங்கள் அல்லது அதற்கு அதிகமான கால அளவில் பிரசங்கிக்க முயற்சித்தால் அநாவசியமான தேவையற்ற விஷயங்களை அந்தப் பிரசங்கங்களில் சேர்க்க நேரிடும். அதனால் பிரசங்கம் தன்னுடைய வல்லமையை இழந்துவிட நேரிடுவதோடு கேட்பதற்கும் சலிப்பைத் தருவதாக அமைந்துவிடும்."

நமது சபைகளில் எப்போதுமே குறை கண்டுபிடிக்கும் சிறுதொகையினர் இருப்பார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அவர்கள் பிரசங்கம் நீண்டதாக இருந்தாலும் குறைகூறுவார்கள். பிரசங்கம் குறைந்த நேரத்தில் இருந்தாலும் குறைகூறுவார்கள். அவர்களை வைத்து நம்முடைய பிரசங்கத் தகுதியை தீர்மானிக்க நாம் பழகிக் கொள்ளக்கூடாது. அதேநேரம் இந்த உலகத்திலேயே நாம்தான் மிகச் சிறந்த பிரசங்கி என்று நம்மைப் பாராட்டும் ஒரு சிலரும் இருப்பார்கள். நாம் இன்னும் அதிக நேரத்திற்கு பிரசங்கிக்க வேண்டுமென்று அவர்கள் சில வேளைகளில் நம்மை ஊக்கப்படுத்தக்கூடும். ஆனால், சிறுபிள்ளைகளும், வயதானவர்களும் சபையிலிருப்பதை அவர்கள் ஒருபோதும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். இப்படியானவர்கள் சபையில் எப்போதும் குறைந்த எண்ணிக்கைக் கொண்ட மக்களாகவே இருப்பார்கள். அவர்கள் சொல்லுவதை வைத்து உணர்ச்சி வசப்பட்டு நம்முடைய தலை வீங்கிவிடாமல் பார்த்துகொள்வதும் அவசியம். ஆகவே, பிரசங்கி எப்போதும் தகுந்த கால நேரத்தில் தன்னுடைய பிரசங்கத்தை அளிப்பதில் மிகவும் அக்கறை காட்ட வேண்டும்.

போதகர் அல்பர்ட் என். மார்டின் சொல்லுகிறார், "ஒரு

பிரசங்கிமீது ஆத்துமாக்கள் குறைகூறுவார்களானால் அவர் குறைந்தளவே பேசுகிறார் என்ற குறையை அவர் கொண்டவ ராக இருக்கட்டும். அவர் நீண்ட பிரசங்கங்களை அளிக்கிறார் என்ற குறைகூறப்படுவதைவிட சுருக்கமாகப் போதிக்கிறார் என்ற குறைகூறப்படுவது நல்லது. சரியான அளவுக்கு நாம் உணவு படைக்கிறபோது சாப்பிடுகிறவர்கள் திருப்தியோடு சாப்பிட்டுவிட்டுப் போகமுடியும். நாம் அவர்களுக்கு தொடர்ந்து, விடாமல் உணவைப் படைத்துக் கொண்டிருந்தோ மானால் சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் திருப்திக்கு அப்பாலுள்ள நிலையை அடைந்து மூச்சுத் திணறி உணவை வெறுக்கும் நிலை ஏற்படும்."

ஆத்துமாக்களுக்கு கர்த்தரின் ஆசீர்வாதங்களை அள்ளிக் கொடுத்து, ஆத்துமவிருத்தி ஏற்படுத்துவதற்காக பிரசங்கிகளுக்கு தரப்பட்டிருக்கும் சிறந்த ஆயுதம், கிருபையின் சாதனம் பிரசங்கம். அந்த ஆயுதத்தை எத்தனை தடவை பட்டை தீட்டினாலும் அது நல்லதே. பிரசங்க ஆயுதத்தை நாம் பட்டைதீட்டிப் பயன்படுத்த ஊழியக்காலம் முழுதும் பயிற்சி எடுக்க வேண்டும். பிரசங்கிகளே! செய்வீர்களா?

# பிரசங்கப் பேச்சுநடை

பிரசங்கங்களை நாம் வேத அடிப்படையில் கஷ்டப்பட்டு ஆராய்ந்து தயாரித்துவிடுவதோடு நமது வேலை முடிந்துவிடுவதில்லை. கடினமாக உழைத்து ஞானத்தோடு பிரசங்கங்களைத் தயாரிப்பது இன்றியமையாதது. அப்படித் தயாரித்த பிரசங்கத்தை ஆத்துமாக்களுக்கு முன் பிரசங்கிப்பது அதன் அடுத்த பகுதியாகும். பிரசங்கத்தை பிரசங்கித்து முடியும்வரை அந்தப் பணி நிறைவேறிவிட்டதாக நாம் கருத முடியாது. எத்தனைக் கருத்தோடு பிரசங்கத்தை உழைத்துத் தயாரித்தாலும் அதை ஆத்துமாக்களுக்கு முன் படைக்காதவரை அதனால் பிரயோஜனம் இருக்காது.

பிரசங்கிகள் பிரசங்கிக்கும்போது கவனம் செலுத்த வேண்டிய அம்சங்களை இனி ஆராய்வோம். அதில் பிரசங்கத்தைப் பிரசங்கிக்கப் பயன்படுத்தும் பேச்சுநடை பற்றி முதலில் பார்ப்பது அவசியம். தமிழில் பிரசங்கிக்கும் பிரசங்கிகள் அந்த மொழியில் வளமாகப் பேசத் தெரிந்திருப்பது அவசியம். பிறந்தது முதல் பேசிக்கொண்டிருக்கிற மொழியில் யாருக்காவது வளமாகப் பேசத் தெரியாமல் இருக்குமா? என்று நீங்கள் கேட்கலாம். பிறந்தது முதல் நாம் தாய் மொழியில் பேசினாலும் பிரசங்கம் செய்கிறபோது அது சுலபமாக நல்ல முறையில் அமைந்துவிடும் என்று நினைப்பது தவறு. இன்றைய நடைமுறைப் பேச்சுத் தமிழ் கொச்சையாக இருப்பது நமக்குத் தெரியும். அதில் இலக்கண சுத்தத்திற்கோ, அழகுணர்ச்சி நயங்களுக்கோ இடமில்லை. நாம் பேசுகின்ற மொழி பிரசங்கம் செய்வதற்கு ஏற்றவிதத்தில் அமைந்திருக்க வேண்டும். இதற்கு மொழிப் பயிற்சி அவசியம்.

மொழியில் பயிற்சி இல்லாமல் பிரசங்கத்தை அளிக்க

முடியாது. இதற்காக நாம் பண்டிதர்களாகிவிட வேண்டிய அவசியமில்லை. இலக்கணம் மற்றும் மொழி பற்றிய அனைத்திலும் நல்ல பயிற்சி இருக்க வேண்டும் என்பதையே நான் வலியுறுத்துகிறேன். வளமாகப் பேசத் தெரியாத காரணத்தால் பிரசங்கி ஒரு நல்ல பிரசங்கத்தைப் பயனற்றதாக்கி விடலாம். அதைவிடக் கொடுமை இருக்க முடியாது. மொழி அறிவும், மொழி வளமும் இல்லாமல் பிரசங்கம் கேட்பவர்களை சோர்வடையச் செய்கிறவர்கள் இன்று அதிகம். ஒரு சிலருடைய குரலைக் கேட்டாலே நமக்கு ஓடிவிடத் தோன்றும். அப்படியிருக்கும்போது அவர்களுடைய பிரசங்கங்களை அமர்ந்திருந்து கேட்பதெப்படி? இன்று பிரசங்க ஊழியத்தின் இந்த விஷயத்தில் இறையியல் கல்லூரிகளோ, சபைகளோ அக்கறை காட்டுவதில்லை. டெலிவிஷனில் செய்தி வாசிப்பவர்களையும், பேசுகிறவர்களையும் அவர்களுடைய பேச்சுநடை, மொழிவளம் ஆகியவற்றைப் பார்த்தே இந்த உலகத்தார் தெரிவு செய்கிறார்கள். பேசுவதற்கு அவர்கள் நல்ல பயிற்சி எடுக்க வேண்டியிருக்கிறது. பிரசங்க ஊழியத்தில் இன்றைக்கு தட்டு த்தடுமாறி, திக்கித் திணறி, வார்த்தைகளை உச்சரிக்கத் தெரியாதவர்கள் பெருகிக் கிடப்பது நம்மினத்தைப் பிடித்துள்ள வியாதியே.

தமிழகத்துப் பிரசங்கிகளில் பலர் பிரசங்கத்துக்கென்று தனியாக ஒரு மொழிநடையைத் தயாரித்து வைத்திருக்கிறார்கள். பிரசங்கம் கேட்கிறவர்கள் பேசுகிறது நம் போதகர்தானா? என்று தலையை உயர்த்திப் பார்க்கும் விதத்தில் அவர்களுடைய மொழிநடை அமைந்திருக்கும். பிரசங்க மேடைக்கு வெளியில் அவர்களுடைய பேச்சு வித்தியாசமானதாக இருக்கும். “பிரியமானவர்களே”, “அன்பானவர்களே” என்று ஆத்துமாக்களை பார்த்துப் பேசாதத் தமிழகத்துப் பிரசங்கிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். தமிழ் வேதத்தில் பயன்படுத்தப் பட்டுள்ள மொழிநடை மிகவும் பழமையானது. இன்று அந்த மொழிநடையில் எழுதுகிறவர்களையும் பேசுகிறவர்களையும் நம்மினத்தில் பார்க்க முடியாது. பிரசங்கிகளில் பலர் இன்று அந்த மொழிநடையை பிரசங்கிக்கும்போது பயன்படுத்தி வருகிறார்கள். அதற்கு அவர்கள் தரும் விளக்கம் அது கர்த்தரின் பாஷையாம்! அவிசுவாசியான ஒருவன் சபைக்கு வந்தால் இந்த மொழிநடையைக் கேட்டே ஓடிவிடுவான் என்பது

அநேகருக்குப் புரிவதில்லை. வழக்கமாக நாம் பேசும்போது பயன்படுத்தும் மொழிநடையை பிரசங்கிக்கும்போதும் பிரசங்க மேடையில் நிற்கும்போதும் பயன்படுத்துவது தகாது என்ற தவறான எண்ணம் எல்லாப் போதகர்களுடைய இரத்தத்திலும் ஊறிப்போயிருக்கிறது.

பிரசங்கிக்கும்போது நாம் வழக்கத்துக்கு மாறான மொழிநடையைப் பயன்படுத்தினால் ஆத்துமாக்களுக்கும் நமக்கும் இடையில் ஓர் இடைவெளி ஏற்பட்டுவிடும். பிரசங்கமும் கேட்பதற்கு செயற்கையானதாக இருக்கும். அதில் உயிரோ, உணர்ச்சியோ இருக்காது. அருமையான பிரசங் கத்தைக்கூட மொழிநடை செயற்கையானதாக இருப்பதால் நாம் கெடுத்து விடலாம். இதற்காக நாம் வழக்கில் இருக்கும் கொச்சைத் தமிழில் பேச வேண்டுமென்று சொல்லவில்லை. பண்டிதத் தமிழ் வாடையோ அல்லது நாம் யார் என்பதை அடையாளம் காட்ட முடியாத மொழிநடையோ இருந்துவிடக் கூடாது என்றுதான் சொல்லுகிறேன். பிரசங்க மொழிநடை மக்களுடைய பாஷையில் இருக்கவேண்டுமென்பதில் ஸ்பர்ஜன் உறுதியாக இருந்தார். சீர்திருத்தவாதிகளான மார்டின் லூதரும், கல்வினும், நொக்ஸூம் அதற்குப் பின்வந்த ஜோர்ஜ் விட்பீல்ட் போன்றோரும் மக்களுடைய பாஷையிலேயே பேசினார்கள்.

பிரசங்கிகளுடைய பேச்சு வெளிப்படையாக இருக்க வேண்டும். ஜோடனைகள் உள்ளதாக செயற்கையாக இருக்கக் கூடாது. இதைக் குறிக்க வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிற கிரேக்க வார்த்தை Parresis *(அப். 4:13)*. இதற்கு வெளிப்படையான, ஒளிவு மறைவில்லாமல், நேரடியான ஆகிய அர்த்தங்கள் உண்டு. கர்த்தர் செயற்கையான பாஷையில் நம்மோடு பேசவில்லை. மனிதர்களுக்குப் புரிகிற, தொடர்ந்து மனிதர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த மொழியில்தான் (Common or Vulgar language) பேசினார். இயேசு கிறிஸ்துவும் மனிதர்களுடைய அன்றாட பாஷையில் அவர்களுக்கு தெளிவாகப் புரிகிற மொழியில் பேசினார். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளும் இவ்விதமாகவே பேசியிருக்கிறார்கள். உண்மையில் அவர் களுடைய பேச்சில் கடுமையான வார்த்தைகளும், முகம் சுழிக்கக்கூடிய வார்த்தைகளும் இருந்திருக்கின்றன. தேவைப் பட்ட இடங்களில் அப்படிப் பேசுவதை அவர்கள் தவிர்க்க வில்லை. இதற்காக கீழ்த்தரமான பாஷையில் நாம் பேச

வேண்டும் என்பதல்ல. தீர்க்கதரிசிகளும் இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் ஜோடனைகள் எதுவுமின்றி தெளிவான மொழியில் குழப்பங்கள் இல்லாமல் கிராமத்தானுக்கும் புரிகிற பாஷையில் பேசினார்கள். பிரசங்கம் ஆத்துமாக்களுடைய இருதயத்தில் பதிய வேண்டுமானால் நாம் பேசுகிற மொழி அவர்களுக்கு புரியக்கூடியதாக அவர்களுடைய நெஞ்சில் பதியக்கூடியதாக இருக்க வேண்டும்.

சார்ள்ஸ் பிரிட்ஜஸ் (Charles Bridges) சொல்லுகிறார், "ஒரு மனிதனை மிகவும் படித்தவனைப்போலக் காட்டக்கூடிய மொழியில் எழுதவும் பேசவும் வைப்பது அவனுடைய மாயையே. ஆனால், பக்திவிருத்தி ஓர் அறிஞனை ஜோடனைகளில்லாத மொழியில் பொதுமக்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் பேச வைக்கும்." "ஜோடனைகளில்லாமல் படிப்பறிவில்லாதவர்களும் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் பேசுவது இலகுவான காரியமல்ல. கஷ்டப்படாமல் இதை நாம் அடைய முடியாது. மீண்டும் சொல்லுகிறேன், வலியும், கஷ்டமும் இல்லாமல் இது வராது" என்கிறார் பிஷப் ஜே.சி. ரைல். இதுபற்றி ஸ்பர்ஜன் பின்வருமாறு சொன்னார், "ஆத்துமாக்களில் நமக்கிருக்கும் அன்பு நம்மைப் பலவிதங்களில் உழைக்க வைக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக அந்த அன்பினால் நாம் ஆத்துமாக்களுக்குப் புரியக்கூடிய மொழியில் பேசுவோம். நம்மைப் பார்த்து நாமே இப்படிச் சொல்லிக்கொள்ளுவோம், 'சபையில் அமர்ந்திருக்கும் அந்தப் பெண்ணால் புரிந்து கொள்ள முடியாத அந்தப் பெரிய வார்த்தையை நான் பயன்படுத்தக்கூடாது. அந்தப் பகுதியில் இருக்கும் கடினமான விஷயத்தை நான் விளக்க முயற்சிக்கக் கூடாது. என்னுடைய விளக்கம் கலங்கிப் போயிருக்கும் அந்த ஆத்துமாவைக் குழப்பத்துக்குள்ளாக்கி அமைதி ஏற்படுத்தாமல் போய் விடும்,' . . . நீங்கள் ஆத்துமாக்களை நேசிக்கப் பழகுவீர்களானால் வார்த்தை ஜாலங்களைப் பயன்படுத்துவதில் உங்களுக்கு ஆசை ஏற்படாது . . . நமக்கு அன்பு இருந்தால் சகலவிதமான ஜோடனைகளையும், வர்ணனைகளையும் நமது பேச்சில் இருந்து களைந்து, வேதத்தின் அர்த்தத்தை மட்டும் தெளிவாக விளக்கி, ஆத்துமாக்களுக்கு நமது பேச்சு ஆசீர்வாதமாக இருக்கும்படிப் பார்த்துக்கொள்ளுவோம்." ஸ்பர்ஜனின் இந்த வார்த்தைகள் பொருள் பொதிந்தவை.

ஆத்துமாக்களுக்கு புரிகிறபடி வெளிப்படையாக, ஜோடனைகளின்றி பிரசங்கம் செய்யவேண்டுமென்று வலியுறுத்துகிறபோது அதைத் தவறாக விளங்கிக்கொள்ளாம லிருப்பதும் அவசியம். இதுவரை நாம் விளக்கியவற்றின் மூலம் நாம் எல்லா இடங்களிலும் ஒரே முறையில் பேச வேண்டும் என்று நான் கூறவரவில்லை. கிராமத்து மக்கள் முன்னிலையில் பேசுவதற்கும், படித்த கல்லூரி மாணவர்கள் முன்னிலையில் பேசுவதற்கும் பெரும் வித்தியாசம் உண்டு. எல்லா இடங் களிலுமே அநாவசியமான ஜோடனைகள் தேவையில்லை. இருந்தாலும் படித்தவர்கள் மத்தியில் பேசும்போது நமது பேச்சில் அவர்களுக்குத் தேவையான விஷய ஞானமிருப்பது அவசியம். புரிந்துகொள்ளும்படியாகப் பேச வேண்டும் என்று நான் தந்த ஆலோசனையை நமது பேச்சு குழந்தைத் தனமானதாக, சாராம்சமற்றதாக, விஷயமற்ற, உப்புச்சப் பில்லாத பேச்சாக இருக்க வேண்டும் என்று தவறாக விளங்கிக் கொள்ளக்கூடாது. இன்று பெரும்பாலான தமிழினத்து பிரசங்கி களின் பிரசங்கங்கள் பொருளற்றதாகவும் கேட்பவர்களின் ஆத்மீக தாகத்தைத் தீர்த்துவைக்க முடியாததாகவும் இருக்கிறது என்று கூறுவது இருக்கின்ற நிலைமையை மிகைப்படுத்துவ தாகாது.

நாம் எவ்வளவு படித்திருந்தாலும், எத்தனை மொழி வல்லமையுடையவர்களாக இருந்தாலும் நமது பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் அதைப் புரிந்துகொள்ளும்படி பிரசங்கம் இருக்க வேண்டும். அதைச் செய்வதற்காக நாம் படிக்காத முட்டாளைப் போல பேச வேண்டியதில்லை. ரிக்ஷா இழுக்கிறவர்களைப் போலவும் பேசத் தேவையில்லை. தெருப் பாஷையில் பேச வேண்டிய அவசியமில்லாமலேயே நமது பேச்சுநடை எளிமையானதாக, கேட்பவர்கள் புரிந்துகொள்ளும் படியானதாக இருக்க வேண்டும்.

## உச்சரிப்பு

பேச்சு நடையோடு நமது உச்சரிப்பும் தெளிவாக இருக்க வேண்டும். வார்த்தைகளை நாம் விழுங்கக் கூடாது. நாம் பேசுகின்ற வார்த்தைகளை ஆத்துமாக்கள் தெளிவாகக் கேட்கக்கூடியதாக இருக்க வேண்டும். ஸ்காட்லாந்து நாட்டவர் களின் ஆங்கில உச்சரிப்பு வித்தியாசமானதாக இருக்கும்.

ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு பிரசங்கி ஒருமுறை ஒரு சபையில் பிரசங்கித்தார். அந்த சபையில் ஆங்கிலம் தெரிந்த சீன இனத்தைச் சேர்ந்த பலர் இருந்தனர். ஸ்காட்லாந்துப் பிரசங்கி சபையைக் குறித்துப் பயன்படுத்திய ஆங்கில வார்த்தையான "church" என்ற வார்த்தையை அவர் "சுர்ச்" என்று உச்சரித்த விதம் ஆங்கிலம் தெரிந்த சீனர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது. கூட்டம் முடிந்தபின் ஒரு சீனப் பெண் பிரசங்கியைப் பார்த்து அவர் உச்சரித்த அந்த வார்த்தை என்ன? என்று கேட்டாள். பிரசங்கம் முடியும்வரை அந்தப் பெண்ணின் மனம் அந்த வார்த்தை என்ன என்று ஆராய்வதிலேயே செலவழிந்து பிரசங்கத்தைக் கேட்காமல் செய்துவிட்டது. இந்த விஷயத்தை அந்தப் போதகரே ஒருமுறை என்னிடம் சொன்னார். அநேகர் பேசுகிற போது எல்லா 'லகர'ங்களையும் ஒரேமாதிரியாக உச்சரிப்பார்கள். 'ற'வையும் 'ர'வையும்கூட ஒரே மாதிரியாக உச்சரிப்பார்கள். இதை யெல்லாம் திருத்தி அமைத்துக்கொள்வது அவசியம்.

பிரசங்கிக்கிறபோது வார்த்தைகளையும் வசனங்களையும் உணர்ச்சியோடு பயன்படுத்த வேண்டும். வார்த்தைகள் வலிமை மிக்கது. அவற்றை அழுத்திப் பயன்படுத்த வேண்டிய நேரத்தில் அழுத்திப் பயன்படுத்தி, நிறுத்திப் பேசவேண்டிய நேரத்தில் நிறுத்திப் பேசுவது அவசியம். தங்குதடையில்லாமல் குதிரை ரேஸில் வர்ணணை கொடுப்பவரைப் போல உணர்ச்சி யில்லாமல் பேசக்கூடாது. சிலர் உணர்ச்சியே இல்லாமல் பேசிக் கொண்டிருப்பார்கள். அது பிரசங்கத்தைப் பாழடித்து விடும். பிரசங்கம் கேட்பவர்களையும் தூங்க வைத்துவிடும். தேவைக்கு மேலாக உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதும் பிரசங்கத்தைப் பயனில்லாமல் செய்துவிடும். அரசியல் மேடைப்பேச்சு நடை பிரசங்கத்திற்கு உதவாது. கருணாநிதியும், ஸ்டாலினும் கட்டைக் குரலில் நிறுத்தி நிறுத்திப் பேசுவது போல் பேசக்கூடாது. அவர்களுடைய பேச்சில் ஒவ்வொரு வார்த்தைக்கும் இடையில் இருக்கும் இடைவெளி மிகவும் அதிகம். இது பிரசங்கத்திற்கு உதவாது.

## பிரசங்கத் தொனி

பிரசங்கிகள் கவனிக்க வேண்டிய இன்னுமொரு முக்கிய அம்சம் அவர்களுடைய குரல்வளம். பிரசங்கியின் நடத்தை,

பக்திவிருத்தி ஆகியவற்றிற்கும் பிரசங்கத் தயாரிப்புக்கும் அடுத்தபடியான இடத்தையே பிரசங்கியின் பிரசங்கத் தொனி வகிக்கிறது. குரல்வளம் மட்டுமிருந்து ஒருவர் சிறந்த பிரசங்கியாகிவிட முடியாது. அதேவேளை குரல்வளத்தின் அவசியத்தை அலட்சியப்படுத்திவிடவும் முடியாது. ஒரு மெய்ப்பிரசங்கியின் வேதபூர்வமாக தயாரிக்கப்பட்ட பிரசங்கம் பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால் பிரசங்கி தன்னுடைய குரலைத் தகுந்த முறையில் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்.

பிரசங்கிக்கு இருக்கும் முக்கியமான கருவி குரல். பிரசங்கி கர்த்தர் தந்திருக்கும் தன்னுடைய குரலோடு சம்பந்தப்பட்ட அனைத்தையும் நல்லபடி பிரசங்கிப்பதற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குரலில் இருக்க வேண்டிய உயர்வு தாழ்வுகள், வேறுபாடுகள், அழுத்தங்கள், வேகம், உணர்ச்சி ஆகிய அனைத்தும் பிரசங்கப் பணி சிறப்பாக இருப்பதற்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டிய அம்சங்களாகும்.

பிரசங்கப் பணி சிறப்பாக அமையும் பொருட்டு பிரசங்கி தன்னுடைய குரல்வளத்தைப் பெருக்கிக்கொள்ள கீழ்வரும் ஆலோசனைகளைப் பின்பற்றலாம்:

### 1. தன்னுடைய குரலைப் பயன்படுத்தும் விதத்தில் இருக்கும் தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

மூக்கினால் பேசும் வழக்கத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். மூக்கு பேசுவதற்காக அல்ல, மூச்சுவிடுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மூக்கால் பேசும் வழக்கத்தைக் கொண்டிருப்பவர்கள் அதைத் திருத்திக்கொள்ள வேண்டும். இதற்கு வயிற்றில் இருந்து குரலை எழுப்பப் பயிற்சி செய்வது நல்லது. சிலருக்கு குரல் பெண்களுடைய குரலைப் போன்றதாக இருக்கும். அது உதவாது. பிரசங்கிகளின் குரலில் அநாவசிமான ஜோடனை இருக்கக்கூடாது. சில பிரசங்கிகள் கேட்பவர்கள் இருதயத்தைக் கசியச்செய்வதுபோல் இனிப்பான குரலில் பேசுவார்கள். அது செயற்கையானது. அழுகின்ற குரலில் பேசுவதும் தகாது. தவறான விதத்தில் பேசிப் பேசிப் பழகிப் போனவர்கள் அதைத் திருத்திக்கொள்ள முயற்சி எடுக்க வேண்டும்.

**2. பிரசங்கத்தைக் கேட்க வந்திருக்கும் அனைவரும் அதைக் கேட்கும் அளவுக்கு குரலை கம்பீரமாக உயர்த்திப் பேசப் பழக வேண்டும்.**

சிலருடைய குரல் வளமானதாக இருந்தாலும் அவர்களால் குரலை உயர்த்திப் பேச முடியாமல் இருக்கும். ஆத்துமாக் களுக்கு தங்களுடைய குரல் கேட்கிறது என்று அவர்கள் தவறாக எண்ணிக் கொண்டிருக்கலாம். அதைவிட தங்க ளுடைய குரல் ஆத்துமாக்களுக்குக் கேட்கிறதா என்பதை அவர்கள் அடிக்கடி விசாரித்துப் பார்த்துக்கொள்வது நல்லது. சபையில் பின்வரிசையில் இருப்பவர்களுக்கு முன்வரிசையில் இருப்பவர்களுக்குக் கேட்பதைப்போலவே பிரசங்கம் கேட்க வேண்டும். சிலர் நன்றாக குரலை உயர்த்தி பிரசங்கத்தை ஆரம்பித்துவிட்டு பிற்பாடு பாதியில் குரலை அடக்கிக் கொள்வார்கள். இத்தகைய குறை உள்ளவர்கள் தங்களுடைய குரல் சாதாரணமாக மற்றவர்களுக்கு கேட்பதில்லை என்பதை நினைவில் வைத்து எப்போதும் குரலை உயர்த்திப் பேசுவதற்கு பயிற்சி எடுக்க வேண்டும். வாய்க்குள்ளேயே வைத்து வார்த்தைகளை மென்றுவிடுகிறவர்கள் பிரசங்க ஊழியத்துக்கு வருவதால் எந்தப் பயனுமில்லை. ஆரம்பத்திலேயே இதை சரிப்படுத்திக்கொள்ளாவிட்டால் போகப்போக பிரசங்க ஊழியத்தில் அவர்களால் வளர முடியாது.

சங்கீதம் கற்றுக்கொள்ளுகிறவர்கள் தங்களுடைய சாரீரத்தை நல்ல முறையில் பயன்படுத்தப் பயிற்சி எடுப்பார்கள். ஆற்றிலோ குளத்திலோ இருந்து பாடிப் பயிற்சி எடுப்பார்கள். அது அவர்கள் குரலை வளமாகப் பயன்படுத்துவதற்கு உதவுகிறது. அதுபோல பிரசங்கி தன்னுடைய குரலில் கவனத்தை செலுத்துவது அவசியம். குரலை உயர்த்தி எல்லோருக்கும் கேட்கும்படியாகப் பேசுவது அவசியமானாலும், அநாவசியமாக குரலை தேவைக்கு மேலாக உயர்த்தி கேட்பவர்கள் காதுகளைக் கிழித்துவிடக் கூடாது.

**3. குரலில் தேவையான உயர்வு தாழ்வுகளும், வேறுபாடுகளும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.**

பிரசங்கத்தை ஆரம்பித்து முடிக்கும்வரை பிரசங்கியின் குரல் ஒரே அளவில் தொடர்ந்து இருக்குமானால் கேட்பவர்கள் சலிப்படைந்து போவார்கள். எந்த இடத்தில் குரலை உயர்த்த

வேண்டும், தாழ்த்த வேண்டும், நிறுத்திப் பேச வேண்டும் என்பது பிரசங்கிக்கு தெரிந்திருக்க வேண்டும். உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்துக்களை எப்படி உச்சரித்துப் பயன்படுத்த வேண்டும் என்பதில் பிரசங்கி அதிக கவனம் எடுக்க வேண்டும். தன்னுடைய நாவையும், பற்களையும், தொண்டையையும், வயிற்றையும் அக்கறையுடன் தன்னுடைய குரல் வளத்திற்கு பொருத்தமானவிதத்தில் பயிற்சிசெய்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தீமோத்தேயுவுக்கு வயிறு சரியில்லாமலிருந்தபோது அதைத் குணப்படுத்திக்கொள்வதற்கு திராட்சை இரசத்தை அருந்தும்படிப் பவுல் கூறியதற்கு பிரசங்கியான தீமோத்தேயுவின் வயிற்றுக்கும், குரலுக்கும், பிரசங்கம் செய்வதற்கும் இருந்த பெருந் தொடர்புகூடக் காரணமாக இருந்திருக்கலாம்.

## மேடை பாவனை

இனி பிரசங்க மேடையில் பிரசங்கி நின்று பிரசங்கிக்க வேண்டிய விதத்தைப் பற்றியும் சில ஆலோசனைகளை சொல்ல விரும்புகிறேன். நாம் பிரசங்கிக்கும்போது ஆத்துமாக்களின் கண்கள் நம்மீது பதிந்திருக்கின்றன. நமது பிரசங்கத்தை ஆத்துமாக்கள் கேட்கிறபோது நமது பிரசங்க மேடை செயல்முறைகள் அவர்களுடைய கவனத்தை எந்தவிதத்திலும் பாதித்துவிடுவதாக அமையக்கூடாது. பிரசங்கத்தை ஆரம்பித்து அது முடிகிறவரை ஆவியானவரின் கிரியைக்குத் தடையாக எதுவும் இருப்பதற்கு இடந்தரலாகாது.

தமிழகத்து பிரசங்கிகளில் பலர் கண்களை மூடிக் கொண்டு பிரசங்கம் செய்யும் வழக்கத்தை நான் கவனித்திருக்கிறேன். இப்படி ஏன் செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. அது பக்தியைக் குறிப்பதாக இருக்கிறது என்று நினைக்கிறார்களோ என்னவோ. கண்களை மூடிக் கொண்டு பேசுவது மிகவும் தவறான செயல். ஆத்துமாக்களின் கண்களைப் பார்த்து பிரசங்கிக்க முடியாதவர்கள் மெய்ப்பிரசங்கிகள் அல்ல. உத்தமமான இருதயத்தைக் கொண்டிராதவர்கள் மட்டுமே கண்களை மூடிக்கொண்டு பிரசங்கிப்பார்கள். மெய்ப்பிரசங்கிகளுக்கு இது தகாது. ஜெபிக்கும்போது மட்டுமே கண்கள் மூடி இருக்க வேண்டும். பேசும்போது கண்கள் திறந்திருக்க வேண்டும்.

பிரசங்க மேடையில் நிற்கும்போது ஒரு காலில் நின்று பிரசங்கிக்கும் சிலரையும் பார்த்திருக்கிறேன். இரண்டு கால்களிலும் நின்று நெஞ்சை நிமிர்த்திப் பேசுகிறவனாக பிரசங்கி இருக்க வேண்டும். ஒரு காலில் நின்றோ அல்லது பிரசங்க மேடையில் ஒரு பக்கம் சாய்ந்து நின்றோ அல்லது கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டோ, கூரையைப் பார்த்துக் கொண்டோ பேசுவது மிகவும் தவறு. இதெல்லாம் பிரசங்கம் செய்வதற்கு உதவாத செயல்முறைகள்.

பிரசங்கம் செய்யும்போது ஒரே இடத்தில் நின்று அசை யாமல் கூட்டத்தின் ஒரு பகுதியினரை மட்டும் பார்த்து பிரசங்கிக்கக் கூடாது. கூட்டத்தின் சகல பக்கமும் நமது கண்கள் திரும்ப வேண்டும். அதற்கேற்ப உடலசைவும் இருக்க வேண்டும். பிரசங்க மேடையில் உணர்ச்சியற்ற கட்டைபோல இயங்காமல், இயந்திரம் போல் செயல்படாமல், உணர்ச்சி யோடும், கம்பீரத்தோடும், வேத அதிகாரத்தோடும் பிரசங்கி இயங்க வேண்டும்.

# பிரசங்கமும் பரிசுத்த ஆவியும்

வேத அடிப்படையில் பிரசங்கத்தைத் தயாரித்துப் பிரசங்கிப்பதற்கு அவசியமான அம்சங்களில் கவனம் செலுத்திப் பிரசங்கம் பிரசங்கமாக இருக்குமாறு பார்த்துக் கொள்வது எப்படி என்று இதுவரை பார்த்திருக்கிறோம். இத்தோடு பிரசங்கம் குறித்த சகல அம்சங்களையும் ஆராய்ந்து முடித்துவிட்டோம் என்று எண்ணிவிடக்கூடாது. நமது பிரசங்க ஊழியம், கர்த்தரை மகிமைப்படுத்தும்படியாக, அவற்றின் நோக்கங்கள் நிறைவேற வேண்டுமானால் நம்முடைய உழைப்பையும் மீறிய பரிசுத்த ஆவியானவரின் அநுக்கிரகமும், வல்லமையும் அவசியம். அதாவது, நமது படிப்பையும், திறமைகளையும், உழைப்பையும் மீறிய கர்த்தரின் கிரியை அவசியம். மனிதனின் வேறு எந்தவிதமான மேடைப் பேச்சுக்கும், விரிவுரைகளுக்கும் அவசியமில்லாத கர்த்தரின் விசேஷ ஆசீர்வாதம், பிரசங்கம் மனிதர்களுக்குப் பயனுள்ள தாக அமைய அவசியமாகிறது. அதைத்தான் நாம் பரிசுத்த ஆவியின் அநுக்கிரகம் என்று அழைக்கிறோம். இது பரிசுத்த ஆவியானவர் பிரசங்கியிலும், பிரசங்கத்தின் மூலம் ஆத்துமாக் களின் இருதயங்களிலும் செய்கின்ற கிரியையாகும்.

பரிசுத்த ஆவியானவர் திரித்துவத்தின் மூன்றாம் ஆள்தத்துவம். அவர் தேவன், கர்த்தர். இராஜாவாகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுகை சகல இடங்களிலும் தொடர பரிசுத்த ஆவியானவர் அவருடைய பிரதிநிதியாக உலகில் செயல்பட்டு வருகிறார். தான் போதித்த அனைத்தையும் அப்போஸ்தலர்கள் நினைவுகூரும்படி ஆவியானவர் அவர்களுக்கு உதவுவார் என்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் திருச்சபை இந்த உலகில் நிறுவப்பட்ட காலமுதல், ஆவி யானவர், சகல தேசங்களிலும் சகல குல மக்கள் மத்தியிலும்

சுவிசேஷம் பரவி சபைகள் நிறுவ கிரியை செய்து வருகிறார். ஆவியானவருடைய கிரியையில்லாமல் சுவிசேஷம் பரவ முடியாது. திருச்சபைகள் நிறுவப்பட முடியாது.

பிரசங்கத்துக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் இடையில் உள்ள தொடர்பை ஓரளவுக்கு கிறிஸ்தவர்களில் பலரும் அறிந்து வைத்திருந்தாலும், அவர்களுடைய எண்ணங்கள் வேத அடிப்படையில் அமைந்திருப்பதில்லை. பெந்தகொஸ்தே/ கெரிஸ்மெடிக் இயக்கங்களால் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய தவறான போதனைகள் இன்று சர்வசாதாரணமாக தமிழினத்தின் மத்தியில் உலவி வருகின்றன. ஆகவே, பிரசங்கத்துக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் இடையில் உள்ள தொடர்பைப் பற்றி நாம் ஆராய்கிறபோது கவனத்தோடு அதை அணுகுவது அவசியமாகிறது.

கர்த்தரின் செய்தியை அவருடைய ஊழியக்காரர்கள் பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி பரிசுத்த ஆவியானவருடைய துணையோடேயே அறிவித்திருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள் ஆவியின் வல்லமையினாலேயே கர்த்தரின் செய்தியை இஸ்ரவேலருக்கு அறிவித்தார்கள். எசேக்கியல் 2:1-2 வசனங்களில், "அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, உன் காலூன்றி நில்; உன்னுடனே பேசுவேன் என்றார். இப்படி அவர் என்னோடே பேசும்போது, ஆவி எனக்குள் வந்து, என்னைக் காலூன்றி நிற்கும்படி செய்தது; அப்பொழுது அவர் என்னோடே பேசுகிறதைக் கேட்டேன்" என்றிருக்கிறது. எசேக்கியேல் யூதாவுக்கு கர்த்தரின் வார்த்தையைப் பிரசங்கிக்குமுன் அந்த வார்த்தையைப் பெற்றுக்கொள்ள ஆவியானவர் அவரில் கிரியை செய்திருப்பதை இந்த வசனம் உணர்த்துகிறது. இது எசேக்கியல் மட்டுமல்லாமல் சகல தீர்க்கதரிசிகளும் பழைய ஏற்பாட்டில் பெற்றிருந்த அனுபவமாகும். புதிய ஏற்பாட்டிலும் அதே விதமாகவே கர்த்தரின் செய்தியை அப்போஸ்தலர்களும், அவருக்குப்பின் வந்தவர்களும் அறிவித்திருக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் கர்த்தரின் வார்த்தையைப் பிரசங்கித்தபோது அவர்களுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. அவர்கள் தங்களுடைய சபைக்குத் திரும்பி சபையாக ஜெபித்து பிரசங்க ஊழியத்திற்காக கர்த்தரின் துணையை நாடியபோது பரிசுத்த

ஆவியானவர் வல்லமையாக அவர்களுக்கு உதவினார் என்றும் அவர்கள் ஆவியின் வல்லமையுடன் வசனத்தைப் பிரசங்கித்தார்கள் என்றும் அப்போஸ்தலர் *4:1-31* வரையுள்ள வசனங்களில் வாசிக்கிறோம். பிரசங்கத்தோடு தொடர்புடைய இந்த ஆவியின் கிரியையை நாம் வேதரீதியில் அறிந்து வைத்திருப்பது அவசியம். இதை நமது சீர்திருத்தவாத பெரியவர்கள் "Unction of the Spirit" என்று அழைத்தார்கள். இதை அவர்கள் வேதப் பிரசங்கத்தோடு தொடர்புடையதும், வேதப் பிரசங்கத்துக்கு அவசியமானதுமான அனுபவமாகக் கருதினார்கள். பெந்தகொஸ்தே/கெரிஸ்மெடிக் இயக்கங்களின் பரிசுத்த ஆவியானவர் பற்றிய தவறான போதனைகளுக்கும் நாம் விளக்கப்போகும் பிரசங்க ஊழியத்துக்கு அவசியமான ஆவியானவரின் அனுபவத்திற்கும் பெரிய இடைவெளி இருக்கிறது. இன்று பெந்தகொஸ்தே/கெரிஸ்மெடிக் இயக்கங்கள் "அபிஷேகம்" என்ற பெயரில் அழைக்கும் போலித்தனமான அனுபவமல்ல இது. ஆகவே, நாம் பெந்தகொஸ்தேகாரர்களைப் போல ஆவியானவரைப் பற்றி பேச ஆரம்பித்துவிட்டோம் என்று யாரும் தப்புக்கணக்கு போட்டுவிடக்கூடாது. பெந்தகொஸ்தே/கெரிஸ்மெடிக் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பிரசங்கத்தைப் பிரசங்கத்திற்குரிய இலக்கணங்களோடு, கடின உழைப்போடு வேதபூர்வமாக தயார் செய்யாமல் பிரசங்க வேளையில் மட்டும் பரிசுத்த ஆவியானவரின் கிரியையை நாடி வருகிறார்கள். வேத அடிப்படையில், இறையியல் பூர்வமாக தயாரிக்கப்படாத எந்தப் பிரசங்கத்தையும் பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்துவதில்லை என்பதை அவர்கள் உணர்வதில்லை. அத்தோடு, அவர்கள் பிரசங்கத்தின் அவசியம் இல்லாமலேயே பரிசுத்த ஆவியானவர் ஆத்துமாக்களில் கிரியை செய்து அவர்களுக்கு இரட்சிப்பைத் தருவார் என்று தவறாக நம்பி வருகிறார்கள்.

## பிரசங்கத் தயாரிப்பில் பரிசுத்த ஆவியின் கிரியை

தங்களுடைய பிரசங்க ஊழியத்தில் பரிசுத்த ஆவியின் கிரியையைப் பார்க்க வேண்டுமானால் பிரசங்கிகள் தங்களுடைய ஊழியக்காலம் முழுவதும் பரிசுத்த ஆவியில் தங்கியிருக்க வேண்டும். விசுவாசியாக பரிசுத்த ஆவியின் இடைப்படுதலை தன் வாழ்வில் அன்றாடம் அறிந்திருந்து

பரிசுத்தத்தில் வளர்ந்துவராதவர்கள் பிரசங்க ஊழியத்தையும் போதக ஊழியத்தையும் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தோடு செய்ய முடியாது.

பிரசங்கிகள் பிரசங்கிக்கும்போது ஆவியானவர் அவர்களில் செய்யும் கிரியையையும், பிரசங்கத்தைக் கவனமாக தயாரிக்க வேண்டிய அவர்களுடைய கடமையையும் நாம் பிரித்துப் பார்க்கக்கூடாது என்று கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட பிரசங்கியான மார்டின் லொயிட் ஜோன்ஸ் கூறியிருக்கிறார். அவர் கூறியது உண்மைதான். இவற்றில் ஒன்றில்லாமல் மற்றதை நாம் எதிர்பார்ப்பது முட்டாள்தனம். அநேகர் பிரசங்கத்தைத் தயாரிக்க வேண்டிய விதத்தில் உழைத்துத் தயாரிக்காமல் பரிசுத்த ஆவியின் கிரியையை மட்டும் பிரசங்க வேளையில் நாடி வருகிறார்கள். அது மிகவும் தவறான செயல். வேறு சிலர் பிரசங்கத்தை மட்டும் இறையியல் பூர்வமாக நல்லமுறையில் தயாரித்துவிட்டு பிரசங்க வேளையில் ஆவியின் துணையை நாடி வருவதில்லை. இதுவும் தவறான செயல். இந்த இரண்டும் அவசியம்; இரண்டும் இல்லாத எதையும் கர்த்தர் ஒருபோதும் பயன்படுத்துவதில்லை.

பிரசங்கத்தைத் தயாரிக்க ஆரம்பிக்கும் நேரத்திலிருந்து அதைப் பிரசங்கித்து முடிக்கும்வரை பிரசங்கி ஜெபத்தோடு பரிசுத்த ஆவியில் தங்கியிருப்பது அவசியம். பிரசங்க நேரத்தில் மட்டும் திடீரென பரிசுத்த ஆவியானவர் இடைப்பட்டு பிரசங்கத்தை ஆசீர்வதிப்பார் என்று எண்ணுவது வெறும் கனவு. பிரசங்கப் பகுதியை விளங்கிக்கொள்வதற்கு நாம் பரிசுத்த ஆவியில் தங்கியிருக்க வேண்டும். வசனத்தை நாம் விளங்கிக்கொள்ளத் துணை செய்கிறவர் பரிசுத்த ஆவி யானவரே (லூக். 10:21; 11:13; யோ. 14:26). பிரசங்கிப்பதற்காக எடுத்துக்கொண்ட வசனங்களைப் பிரித்து ஆராய்ந்து, அதில் தரப்பட்டுள்ள போதனைகளுக்கேற்ப இறையியல் போதனை களையும், உதாரணங்களையும், நடைமுறைப் பயன்பாடு களையும் கொண்டு பிரசங்கத்தைத் தயாரிப்பதற்கு ஆரம்ப முதல் இறுதிவரை நமக்கு பரிசுத்த ஆவியின் துணை தேவைப் படுகிறது. வேத அடிப்படையில் பிரசங்கத்தைக் கவனத்தோடு பாடுபட்டுத் தயாரிப்பவர்களை ஆவியானவர் நிச்சயம் வழிநடத்தித் துணை செய்கிறார்.

## பிரசங்கவேளையிலும், பிரசங்கத்தின் மூலமும் பரிசுத்த ஆவியானவர் செய்யும் கிரியை

ஏதோ ஒரு வேத வசனத்தை எடுத்துக்கொண்டு மாம்ச தைரியத்தோடு பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதத்தை நாடி பிரசங்கிக்கப் போகிறவர்கள் இன்று நம்மத்தியில் அதிகம். பரிசுத்த ஆவியானவர் ஊழியக்காரனுக்கு கட்டுப்பட்டவர் என்ற அசட்டுத் தைரியத்திலும் அறியாமையிலும் ஊழியம் செய்கிறவர்களின் தொகைக்கும் அளவேயில்லை. இவர்கள் எல்லோரும் பிரசங்கத்தின் மூலம் ஆவியானவர் செய்யும் கிரியையைப் பற்றிய தவறான எண்ணங்களைக் கொண்டிருக்கிறார்கள்.

பிரசங்கத்தின் மூலம் பரிசுத்த ஆவியானவர் செய்யும் கிரியையைப் பற்றி விளக்குகிறபோது இரண்டு முக்கிய அம்சங்களை நாம் கருத்தில் கொண்டிருக்கிறோம்.

1. பரிசுத்த ஆவியானவர் பிரசங்கியில் செய்யும் கிரியை
2. பரிசுத்த ஆவியானவர் பிரசங்கங்களின் மூலம் செய்யும் கிரியை

### 1. பரிசுத்த ஆவியானவர் பிரசங்கியில் செய்யும் கிரியை

பிரசங்கி பிரசங்கிக்கும் வேளையில் ஆவியானவரின் கிரியையைத் தன்னில் உணர முடியும். ஆவியின் அநுக்கிரகம் பிரசங்கியோடு இருக்கும்போது பிரசங்கத்தை ஆரம்பித்து பிரசங்கிக்கின்ற வேளையில் பிரசங்கி தன்னுடைய வார்த்தைகள் தடையில்லாமல் அருவி போலப் பாய்வதையும், மனித பயமில்லாமல் வைராக்கியத்தோடு தன்னால் பிரசங்கிக்க முடிவதையும், தன்னை மீறிய ஒரு வல்லமை தன்னைப் பயன்படுத்துவதையும் உணர முடியும். இதைத்தான் "Unction of the Spirit" என்று சீர்திருத்தவாத பெரியவர்கள் அழைத்தார்கள். இது மனித சக்தியாலோ, மனித ஞானத்தினாலோ நிகழும் காரியமல்ல. அப். 4:31, அப்போஸ்தலர்கள் "தேவ வசனத்தை தைரியமாய்ச் சொன்னார்கள்" என்கிறது. "தைரியமாய்" என்ற இந்த வார்த்தையைப் பலவிதமாக விளக்கலாம். இதற்கு வெளிப்படையாய், பயமின்றி, முழு நம்பிக்கையோடு என்று பல அர்த்தங்கள் உள்ளன. இதெல்லாம் அப்போஸ்தலர்கள் மனித

சக்தியினாலல்லாமல் அவர்களுக்குப் புறத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் தந்த வல்லமையால் தேவ வார்த்தையைப் பிரசங்கித்தார்கள் என்பதை விளக்குகின்றன. பரிசுத்த ஆவியானவர் அவர்களைப் பயன்படுத்தியபோது அவர்களால் குழப்பமில்லாமல், வைராக்கியத்தோடு, மனுஷ பயமின்றி வசனத்தை வல்லமையாய் பிரசங்கிக்க முடிந்தது.

இந்த அனுபவத்தைப் பற்றிப் பவுல் அப்போஸ்தலன் பல தடவை விளக்கியிருக்கிறார். "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது" என்று பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதினார் (1 தெச. 1:5). தொடர்ந்து 1 கொரிந்தியர் 2:5 வசனத்தில், "என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது" என்று பவுல் விளக்குகிறார். தன் பிரசங்கம் ஆத்துமாக்களுக்குப் பயனுள்ளதாக அமைய பவுல் மனுஷனுடைய ஞானத்தில் தங்கியிருக்கவில்லை; இந்த உலகத்துக்குரிய கருவிகளில் தங்கியிருக்கவில்லை; வீண் வார்த்தை சாமர்த்தியத்திலும், வார்த்தை ஜாலத்திலும் தங்கியிருக்கவில்லை. அவர் ஆவியின் பெலத்தினாலேயே ஒவ்வொரு முறையும் பிரசங்கித்திருக்கிறார். "உறுதிப்பட்டதாயிருந்தது" என்ற வார்த்தையின் மூலம் ஆவியின் கிரியையின் அடையாளங்களோடு தன்னுடைய பிரசங்கம் அமைந்திருந்ததாக பவுல் கூறுவதைக் கவனிப்பது அவசியம். .இன்று ஆவியின் கிரியையின் அடையாளங்களாக கூட்டத்தில் இருப்பவர்கள் பேயாட்டம் ஆடுவதையும், நிலத்தில் விழுந்து புரளுவதையும் சுட்டிக்காட்டுவார்கள். அவை ஆவியின் கிரியைகளல்ல, பிசாசின் கிரியைகளே. பவுல் சுட்டிக்காட்டும் கிரியைகள் ஆவியானவரின் பரிசுத்தமான கிரியைகள்; கர்த்தரை மகிமைப்படுத்தும் கிரியைகள். பிரசங்கியை அவர் பயன்படுத்தும் அற்புதமான கிரியைகள். இதில் அவலட்சணத்திற்கும், அசட்டுத்தனமான செயல்களுக்கும் இடமிருக்கவில்லை.

•"எல்லாருடைய காதுகளிலும் விழும்படியாக சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டாலும், அது சிலருடைய காதுகளில் மட்டும்தான் வல்லமையாக விழுகிறது.

சுவிசேஷத்தின் வல்லமை அதைப் பிரசங்கிக்கும் பிரசங்கியின் பேச்சுத்திறத்தில் தங்கியிருக்கவில்லை; அப்படியிருந்திருந்தால் ஆத்துமாக்களின் மனந்திரும்புதலுக்கு மனிதனல்லவா காரணமாக இருந்திருப்பான். அது பிரசங்கியின் அறிவுத்திறத்திலும் தங்கியிருக்கவில்லை; அவ்வாறிருந்திருந்தால் மனிதனின் ஞானத்தினாலல்லவா மனந்திரும்புதல் என்றாகிவிடும். நம்முடைய நாக்கு தேய்ந்து போகுமளவுக்கு நாம் பிரசங்கித்தாலும், நம்முடைய இருதயம் பலவீனமாகி நாம் இறந்துபோகுமளவுக்கு பிரசங்கித்தாலும் நமது பிரசங்கத்தோடு ஆவியின் வல்லமையும் சேர்ந்து செயல்படாவிட்டால் ஓர் ஆத்துமாவாவது மனந்திரும்புவதற்கு வழியில்லை" என்றார் பிரசங்கிகளின் இளவரசன் என்றழைக்கப்பட்ட ஸ்பர்ஜன்.

பிரசங்கம் எப்போதும் வேதபூர்வமாகவும், தத்துவரீதியிலும், ஆத்துமாக்களை சிந்திக்க வைப்பதாகவும், அவர்களுக்கு அறிவூட்டுவதாகவும், இறையியல் போதனைகளையளிப்பதாகவும், நடைமுறைப் பயன்பாடுகளைக் கொண்டதாகவும் இருப்பது மிகவும் அவசியம் என்பதை நான் ஏற்கனவே பலமுறை வலியுறுத்தியிருக்கிறேன். அதேவேளை அத்தனை சிறந்த அடையாளங்களைக் கொண்டுள்ள பிரசங்கத்தைப் பிரசங்கி ஆவியின் வல்லமையோடு பிரசங்கிக்காவிட்டால் அந்தப் பிரசங்கம் வெறும் ஏட்டுச்சுரைக்காயாகிவிடும். அதாவது, அது சிந்தனைக்கு மருந்து தரும்; ஆனால், ஆத்துமாவுக்கு உணவளிக்காது. இதை ஸ்பர்ஜன் மறுபடியும் பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார்,

"ஒரு பிரசங்கம் தெளிவானதாய், சரியானதாய், நல்ல கருத்துக்களைக் கொண்டதாய், காரண காரியங்களை ஆராய்ந்து சிறப்பாக விளக்குவதாய், அழகுள்ளதாய், உவமை உருவகங்களைக் கொண்டதாய், உணர்வுகளைத் தூண்டக்கூடியதாய், நல்ல பயன்பாடுகளைக் கொண்டதாய் இருந்துவிடலாம். அத்தகைய அருமையான பிரசங்கத்தை மேடைப் பிரசங்கத்தின் இளவரசனாக இருக்கும் ஒருவர் பிரசங்கித்தாலும் அது பரிசுத்த ஆவியின் வல்லமையோடு பிரசங்கிக்கப்படாவிட்டால்

மரித்தவனுக்கு உயிரளிப்பதுபோல் ஆத்துமாவின் இருதயத்தை அசைத்து மனந்திரும்பவைக்கக்கூடிய வல்லமை இல்லாததாக இருந்துவிடும்."

பிரசங்கத்தை ஆரம்பித்தது முதல் முடியும்வரை ஒரே தொனியில் எந்தவித மாற்றமுமில்லாமல், உணர்ச்சியும் இல்லாமல் கொடுக்கப்படும் பிரசங்கம் ஆவியின் வல்லமையைக் கொண்டதல்ல. அதில் காணப்படும் செய்திகள் ஆவிக்குரியதாக இருந்தாலும் , அது ஆத்துமாக்களை அசைக்கும் ஆவியின் அடையாளத்தைக் கொண்டிருக்காது. ஆவியின் வல்லமையுள்ள பிரசங்கம் அதைக் கேட்பவர்களில் இரண்டில் ஒன்றை நிச்சயம் செய்யும். அது அவர்களுடைய இருதயத்தை அசைத்து பாவத்தை உணர்த்தும் அல்லது பிரசங்கியின் மேல் அவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தும். எவரையும் ஏதாவதொருவிதத்தில் அசைக்காதப் பிரசங்கம் பிரசங்கமாக இருக்க முடியாது.

பிரசங்கத்தில் ஆவியின் வல்லமையை உணர்ந்த பிரசங்கிகள், ரிச்சட் பெக்ஸ்டர் சொன்னது போல் "மரணத்தின் வாசலில் நிற்கும் மனிதர்களுக்கு, நான் மரணத் தருவாயில் இருக்கும் மனிதனைப் போல பிரசங்கம் செய்வேன்" என்ற வைராக்கியத்தோடு பிரசங்கிப்பார்கள். ஆவியின் வல்லமையுள்ள பிரசங்கத்தில் பிரசங்கியின் இருதயத்தைப் பார்க்க முடியும். ஆத்துமாக்கள் மனந்திரும்பி இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்ற வாஞ்சையோடு, மரணத்துக்கும் வாழ்வுக்கும் இடையில் அவர்கள் நிற்கிறார்கள் என்ற ஆணித்தரமான நம்பிக்கையோடு இயேசுவை விசுவாசிக்கும்படி அறைகூவலிடும் ஆத்துமாவைப் பார்க்க முடியும். பவுலின் பிரசங்கம் அப்படிப்பட்டதாயிருந்தது. அரசனான அகிரிப்பாவைப் பார்த்து பவுல், "ராஜாவே தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன்" என்று பிரசங்கித்தபோது அகிரிப்பா பவுலை நோக்கி, நீ தொடர்ந்து பேசினால் என்னைக் கொஞ்ச நேரத்தில் கிறிஸ்தவனாக மாற்றிவிடுவாய் என்று சொல்லவில்லையா? (அப். 26:27-28). அந்தளவுக்கு பவுலின் பிரசங்கம் ஆவியின் வல்லமையையும், அகிரிப்பா இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்ற வாஞ்சையையும் கொண்டிருந்தது.

பிரசங்கத்தில் ஆவியின் வல்லமை இருக்கும்போது பரலோகம் இந்த உலகத்துக்கு வந்துவிடுகிறது. ஆவியின் வல்லமையோடு பிரசங்கம் இருக்கும்போது பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கும் ஆத்துமாக்கள் அலற வேண்டிய அவசியமில்லை. கூட்டத்தில் விவரிக்க முடியாத அமைதி காணப்படும். சிலரது முகங்களில் வடியும் கண்ணீரைக் காணலாம். கூட்ட முடிவில் ஆத்துமாக்கள் ஆவிக்குரிய சத்தியங்களில் அதிக நாட்டம் காட்டிப் பேசுவதைக் கேட்கலாம். இரட்சிப்பை எப்படிப் பெற்றுக்கொள்வது என்று துடித்துக் கேட்கிறவர்களைப் பார்க்கலாம். இதெல்லாம் பிரசங்கத்தின் மூலம் ஆவியானவர் செய்யும் கிரியைகள்.

ஆவியின் வல்லமையைப் பிரசங்கத்தில் காண மாம்ச வழியில் பிரசங்கி எதையும் செய்துவிட முடியாது. அதற்காக ஜெபிப்பதைத் தவிர வேறு வழியில்லை. நேர்மையான, கடின உழைப்பும், விசுவாசமுள்ள ஜெபமும் மட்டுந்தான் நமது பிரசங்கங்களில் ஆவியின் வல்லமையைக் காண உதவி செய்யும். ஆவியானவரை நாம் கட்டுப்படுத்திக் காரியம் சாதிக்க முடியாது என்று ஏற்கனவே பார்த்தோம். விசுவாசமுள்ள ஜெபத்தையும், விசுவாசமுள்ள பிரசங்கங்களையும் அவர் ஆசீர்வதிக்கத் தவறுவதில்லை. ஜோர்ஜ் விட்பீல்ட், ஜொனத்தன் எட்வர்ட்ஸ், ஜோண் பனியன், ஸ்பர்ஜன் போன்ற நமது சீர்திருத்தவாத பெரியவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் வல்லமையைத் தங்களுடைய பிரசங்க ஊழியத்தில் அறிந்திருந்தார்கள். இன்று தமிழினத்தின் ஆத்மீக விடுதலைக்கும், திருச்சபை சீர்திருத்தத்திற்கும் ஆவியின் வல்லமையைக் கொண்ட பிரசங்கங்களும், அத்தகையப் பிரசங்கங்களை அளிக்கக்கூடிய பிரசங்கிகளும் தேவை. வேதத்தைப் படித்துப் பிரசங்கங்களைத் தயாரிக்கின்ற பிரசங்கிகள் ஆவியின் வல்லமையோடும் பிரசங்கிக்கிறவர்களாக இருக்க நாம் ஜெபிப்பது அவசியம்.

பிரசங்கியில் ஆவியானவர் செய்யும் கிரியையைப் பற்றி இதுவரைப் பார்த்தோம். இனி, பிரசங்கத்தின் மூலம் ஆவியானவர் செய்யும் கிரியையைப் பற்றி அறிந்துகொள்வதும் அவசியமாகிறது. திரித்துவத்தின் மூன்றாம் ஆள்தத்துவமான பரிசுத்த ஆவியானவரின் குணாதிசயங்களைப் பற்றியும், கிரியைகளைப் பற்றியும் தமிழினத்தில் பலவிதமான தவறான எண்ணப்போக்குகள் நிலவி வருகின்ற இக்காலகட்டத்தில்

ஆவியானவரின் கிரியைகளைப் பற்றிய நல்லறிவு விசுவாசிகளுக்கு அவசியம் தேவை. ஆவியானவரின் கிரியை என்ற பெயரில், அவிசுவாசிகள்கூட வெட்கப்பட்டு விலகியோடும் அளவுக்கு அநாவசியமான செயல்களை கிறிஸ்தவத்தின் பெயரில் அநேகர் இன்று நடத்தி வருகின்றார்கள். அத்தகைய தவறான போதனைகளிலிருந்தும், நடவடிக்கைகளிலிருந்தும் நம்மைக் காப்பாற்றிக்கொள்ள ஆவியானவரின் பரிசுத்தமான ஆத்மீகக் கிரியைகளைப் பற்றி நாம் சிந்திப்பது அவசியமாகிறது.

இயேசு கிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலர்களும் நம்மத்தியில் சரீரப்பிரகாரமாக இல்லாத இந்தக் காலத்தில், அவர்கள் இருந்த காலத்தில் ஆவியானவரின் மூலம் நிகழ்ந்த காரியங்களை நாம் எதிர்பார்க்க முடியாது. அப்போஸ்தலர்கள் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் திருச்சபையை நிறுவியபோது பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய ஊழியத்தை உறுதிப் படுத்த இயேசுவின் வழிப்படி அவர்களோடு இருந்து, அவர்கள் மூலமாக அநேக கிரியைகளைச் செய்தார். திருச்சபை இந்த உலகத்தில் நிறுவப்பட்டு, அப்போஸ்தலர்களுடைய காலம் முடிவடைந்தபின் ஆவியானவர் அத்தகைய நடவடிக்கைகளைச் செய்ய வேண்டிய அவசியமில்லாது போயிற்று. கர்த்தர் வல்லமையுள்ள தன்னுடைய வசனத்தை முழுமையாக வேதப் புத்தகமாக திருச்சபைக்கு அளித்து அதைத் தொடர்ந்து பிரசங்கிக்கும்படியாக கட்டளையிட்டார். வேதப்பிரசங்கம் மூலமாக ஆத்துமாக்களில் ஆவியானவரின் மூலம் கிரியை செய்து அவர்களை தேவ இராஜ்யத்துக்குள் அழைத்துக் கொள்வதும், திருச்சபையின் அங்கத்தவர்களாக்குவதும் கர்த்தரின் திட்டமாக இருந்தது. ஆத்துமாக்கள் இரட்சிப்பை அடைய சுவிசேஷப் பிரசங்கம் அத்தியாவசியமானதாக இருந்தது (ரோமர் 10). சுவிசேஷப் பிரசங்கத்தை உறுதிப்படுத்த எந்தவிதமான அசாதாரணமான அற்புதச் செயல்களும் தேவையற்றுப் போயிற்று. இதைத்தான் இன்று பலர் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். அற்புதங்களின் தேவன் தொடர்ந்து அற்புதங்களைச் செய்து கொண்டிருந்தாலொழிய எவரும் இரட்சிப்பை அடைய முடியாது என்ற எண்ணத்தில் வாழ்ந்து வருகிறார்கள். சுவிசேஷப் பிரசங்கத்தை மட்டும் செய்யமுற்படாமலும், அதன் வல்லமையில் நம்பிக்கை வைக்காமலும் சுவிசேஷக் கூட்டங்களிலெல்லாம் நோய்

தீர்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். புதிய ஏற்பாட்டுப் போதனைகளை விளங்கிக்கொள்ளாமலும், அதைத் தவறான அணுகுமுறையோடு எழுத்துபூர்வமாகக் கையாண்டு தவறான ஊழியங்களையும் செய்து வருகிறார்கள். இதையெல்லாம் நான் விளக்குவதற்குக் காரணம் இன்றைக்கு பரிசுத்த ஆவியானவர் எப்படிக் கிரியை செய்கிறார் என்று வேதம் விளக்கும் உண்மைகளை நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான்.

இனி, பரிசுத்த ஆவியானவர் பிரசங்கங்களின் மூலம் ஆத்துமாக்களில் செய்யும் கிரியைகளைப் பற்றி சரிவரப் புரிந்துகொள்வதும் அவசியம்.

## 2. பரிசுத்த ஆவியானவர் பிரசங்கங்களின் மூலம் செய்யும் கிரியை

பரிசுத்த ஆவியானவர் தேவவசனத்தின் மூலமாக ஆத்துமாக்களில் கிரியை செய்கிறார். அவரே வேத வசனங் களை நாம் புரிந்துகொள்ளும்படிச் செய்கிறார் (யோவான் 14). ஆவியானவரின் கிரியையில்லாமல் வசனமும், பிரசங்கமும் எவருக்கும் பயன்பட முடியாது. பரிசேயர்களும், வேதபாரகர் களும் பழைய ஏற்பாட்டைக் கரைத்துக் குடித்து யூதர்களுக்குப் போதித்த போதும் அவர்களுக்கு அதில் ஆத்மீக ஞானமில்லா திருந்தது. அவர்களால் கர்த்தரின் செய்தியைப் புரிந்துகொள்ள முடியவில்லை; அது அவர்களுடைய இருதயத்தை ஒருபோதும் தொடவில்லை. இதிலிருந்து இரண்டு உண்மைகளை விளங்கிக் கொள்ள வேண்டும்.

1. ஆவியானவரின் துணையில்லாமல் பிரசங்கத்தின் செய்தியை ஒருவரும் விளங்கிக்கொள்ள முடியாது.
2. ஆவியானவர் வார்த்தையின் மூலம் கிரியை செய்யாவிட்டால் கர்த்தரை ஒருவரும் விசுவாசிக்க முடியாது. ஆவியின் கிரியையின் மூலமே வசனத் தின் வல்லமையை நம்மால் அறிந்துணர்ந்துகொள்ள முடியும்.

பரிசுத்த ஆவியானவர் பிரசங்கங்களின் மூலம் கிரியை செய்கிறபோது அவருடைய கிரியை பொதுவாக நமது கண்களுக்குப் புலப்படாமலேயே இருந்துவிடும். கண்களால்

பார்க்க முடியாத எதையும் ஆவியானவரின் கிரியையாக ஒப்புக்கொள்ள மறுக்கிறது பெந்தகொஸ்தே/கெரிஸ்மெடிக் இயக்கங்கள். அது ஆவியானவரின் கிரியையைப் பற்றி அவர்கள் கொண்டுள்ள தவறான எண்ணங்களின் விளைவு. பரிசுத்த ஆவியானவரின் கிரியையைப் பற்றி விளக்கிய இயேசு, அவர் காற்று வீசுகிறதைப் போல நமது கண்களுக்குப் புலப்படாமல் செயல்படுகிறார் என்றார் (யோவான் 3). இயேசு இங்கே ஆவியானவர் ஆத்துமாக்களின் இருதயத்தில் செய்கின்ற ஆத்மீகக் கிரியையைப் பற்றியே விளக்குகிறார். பெந்தகொஸ்தே/ கெரிஸ்மெடிக் இயக்கங்கள் ஆவியானவரின் ஆத்மீகக் கிரியைகளைவிட அவர் மனிதர்களின் சரீரத்தில் செய்யும் புறக்கிரியைகளை மட்டுமே எப்போதும் நாடி வருகிறார்கள். அதுவே அவர்கள் விடும் பெரிய தவறு. கர்த்தர் இன்று பிரசங்கத்தைப் பயன்படுத்தி ஆவியானவரின் கிரியைகள் மூலம் தன்னுடைய இராஜ்யத்துக்குள்ளும், திருச்சபைக் குள்ளும் ஆத்துமாக்களைக் கொண்டுவருவதையே பிரதான நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறார். இயேசு கிறிஸ்து மறுபடியும் வருகிறபோது தன்னுடைய சபையைத் தன்னோடு கொண்டுபோக வரப்போகிறார்; அவர் தன்னுடைய மக்களுக்காக வரப்போகிறார்.

பிரசங்கிகள் பிரசங்கத்தைக் கர்த்தரில் தங்கியிருந்து பிரசங்கிக்கிற போது கர்த்தர் தன்னுடைய சித்தப்படி ஆத்துமாக்களின் இருதயத்தில் வசனம் செயல்படுமாறு ஆவியானவர் மூலம் கிரியை செய்கிறார் என்று பார்த்தோம். அப்படி ஆவியானவர் வசனத்தைப் பயன்படுத்தும்போது ஆத்துமாக்கள் துள்ளிக்குதிப்பதையோ, நிலத்தில் புரளு வதையோ, கூக்குரலிடுவதையோ, மிருகங்களைப் போல சத்த மிடுவதையோ, வலிப்பு வந்தது போல் துடிப்பதையோ, சாமி வந்ததுபோல் ஆடுவதையோ நாம் பார்க்க முடியாது. இத்தகைய சரீர நடவடிக்கைகள் எதுவும் இல்லாமலேயே ஒரு மனிதனின் இருதயத்தில் ஆவியானவர் வசனத்தின் மூலம் கிரியை செய்ய முடியும். இந்த புறச்சரீர நடவடிக்கைகள் ஆத்துமாக்களின் இருதயங்களில் ஆவியானவர் செய்யும் கிரியையின் அடையாளங்களல்ல. மாறாக, ஆவியின் கிரியை நிகழ்ந்த இருதயங்களின் சிந்தனைகளும், உணர்வுகளும் மாற்றமடை கின்றன. அவர்கள் சில வேளைகளில் பிரசங்கத்தைக் கேட்டு

துள்ளிக்குதிக்காமலேயே இருதய ஆழத்தில் ஆனந்தப்படலாம். அவர்கள் ஆடாமல் அசையாமல் இருந்த இடத்தில் இருக்கும் போதே அவர்களுடைய கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகப் பெருகலாம். இவையெதுவும் இல்லாமல்கூட அவர்கள் அமைதியாக இருதய மாற்றத்தை மட்டும் அடைந்து தங்களுடைய வாழ்க்கை நடைமுறைகளை மாற்றிக்கொள்ள லாம். வசனத்தின் மூலம் ஆவியானவர் செய்யும் கிரியையின் அடையாளமாக மனிதரில் சரீரத்தின் புற அடையாளங்களில் ஆர்வம் காட்டி வருகிறவர்கள் ஆவியின் கிரியையைப் பற்றிய வேத அறிவு இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

ஆத்துமாவின் இரட்சிப்புக்காக வசனத்தின் மூலம் ஆவியானவர் செய்யும் கிரியையை மறுபிறப்பு என்று அழைக்கிறோம். இது மனித இருதயத்தின் ஆழத்தில் உள்ளார்ந்து நிகழ்கின்ற அனுபவம். இதை நாம் கண்களால் பார்க்க முடியாது. ஆவிக்குரிய இந்த அனுபவம் கர்த்தரின் வார்த்தையை ஆவியானவர் பயன்படுத்துவதன் மூலம் மனிதனில் நிகழ்கின்றது. இது வசனத்தின் துணை இல்லாமலும் நிகழலாம் என்று பிரெஸ்பிடீரியன் இறையியலாளர் தவறாகப் போதிக்கிறார்கள். அவர்களுடைய சபை வழக்கப்படி பிறந்த குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் வழக்கத்தை நியாயப்படுத்துவதற்காக இந்தவிதமாக விளக்கம் கொடுக் கிறார்கள். வசனத்தைக் காதால் கேட்டு மனந்திரும்பாத எவருக்கும் இரட்சிப்பின் அனுபவம் கிடையாது என்று வேதம் போதிக்கின்றது. பிறந்த குழந்தையால் வசனத்தைக் கேட்டு ஒருபோதும் மனந்திரும்ப முடியாது.

மறுபிறப்பாகிய அனுபவத்தை அடைந்த ஆத்துமா உடனடியாக அது நிகழ்ந்த நேரமே அதை அறிந்திருப்பதில்லை. உள்ளார்ந்து நிகழ்கின்ற இந்த ஆவியின் கிருபை புற அடையாளங்களைக் கொண்டு உடனடியாக எவரிலும் நிகழ்ந்ததாக வரலாறும் இல்லை; வேதம் அதற்கு எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை. மறுபிறப்பு மனிதனின் இதயத்தில் உள்ளார்ந்து நிகழ்கிறபோது சுவிசேஷப் பிரசங்கக் கூட்டத்தில் ஆவியானவரின் வெளிப்புற கிரியைகளுக்காக மட்டும் அலைகிறவர்கள் பெருந்தவறு செய்கிறார்கள். பிரசங்கத்தைக் கேட்டு வலிப்பு வந்ததுபோல் துடிக்கின்ற கூட்டத்தைத் தேடாமல், மெய்யான மறுப்பிறப்பை அடைந்த

ஆத்துமாக்களை இனங்கண்டுகொள்ளும் பக்குவத்தைக் கொண்டவர்களாக நாம் இருக்க வேண்டும்.

வரலாற்றில் பரிசுத்த ஆவியினால் எழுப்புதல்கள் நிகழ்ந்த காலத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் பிரசங்கத்தைக் கேட்டு மறுப்பிறப்படைந்து மனந்திரும்பியதாக வாசிக்கிறோம். ஜோர்ஜ் விட்பீல்ட், ஜொனத்தன் எட்வர்ட்ஸ், ஹொவல் ஹெரிஸ், டேனியல் ரோலன்ட்ஸ், ஸ்பர்ஜன் போன்றோரின் பிரசங்க ஊழியங்கள் இந்தவிதமாக கர்த்தரின் ஆசீர்வாதத்தைப் பெற்றதாக அமைந்திருந்தன. கர்த்தர் தன்னுடைய சித்தப்படி வரலாற்றில் குறிப்பிட்ட காலப்பகுதிகளில் எழுப்புதல்களை உண்டாக்கியிருக்கிறார். இக்காலங்களில் உலகம் பிரசங்கத்தில் வல்லமையுள்ளவர்களை சந்தித்திருக்கிறது. பிரசங்கம் மிக உயர்ந்த நிலையில் இருந்திருக்கிறது. அத்தோடு, எழுப்புதல் களை மனிதன் ஜெபத்தாலோ, வேறு எதையும் செய்தோ உருவாக்கிவிட முடியாது. இறையாண்மையுள்ள கர்த்தர் தன் சித்தப்படி அதை உண்டாக்குகிறார்.

வரலாற்றில் எழுப்புதல்கள் நிகழ்ந்த காலங்களில் ஆவியின் கிரியையினால் பெருந்தொகையானோர் இரட்சிப்பை அடைந்தார்கள். அப்படி அவர்கள் இரட்சிப்பை அடைந்த போதும் இன்று நாம் கேள்விப்படுகின்ற விதமாக அவர்கள் வலிப்பு வந்து ஆடவுமில்லை, நிலத்தில் விழுந்து புரளவு மில்லை. மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை விசுவாசித்ததற் கான அடையாளங்கள் மட்டுமே தெளிவாக இருந்தன. அப்படி இரட்சிப்பை அடைந்தவர்கள் அந்தக் காலங்களில் கர்த்தரின் சபைகளை நாடிச் சென்று ஜெபத்திலும், வேத வாசிப்பிலும், ஆத்மீக வாழ்க்கையிலும் வளர்ச்சியடைந்தார்கள் என்று வாசிக்கிறோம். ஜொனத்தன் எட்வர்ட்ஸின் காலத்தில் எழுப்புதல் நிகழ்ந்தபோது எட்வர்ட்ஸ் ஆவியின் கிரியை யோடு தொடர்பற்ற சில நிகழ்வுகள் கூட்டங்களில் இருந்ததைக் கவனித்து அவற்றைத் தடுத்து வந்தார். மெய்யான இரட்சிப்பின் அனுபவத்தை அறிந்துகொள்வதற்காக அதற்கான அடையாளங்களை விபரித்து அவர் ஒரு நூலையும் எழுதினார். பிசாசின் கிரியைகளை எட்வர்ட்ஸ் ஆவியின் செயல்களாக ஏற்றுக்கொள்ள மறுத்தார் என்பதை இது விளக்குகிறது. ஆவியின் கிரியை என்ற பெயரில் வரும் எதையும், எட்வர்ட்ஸோடு

ஏனைய பிரசித்தி பெற்ற பிரசங்கிகளும் ஏற்றுக்கொள்ளாமல் அவற்றை நிதானத்தோடு சோதித்துப் பார்த்தார்கள்.

எழுப்புதல் நிகழ்ந்த காலங்களில் சில பிரசங்கிகளின் ஊழியத்தைக் கர்த்தர் பேரளவில் ஆசீர்வதித்திருக்கிறார். ஜோர்ஜ் விட்பீல்ட் இதற்கு ஒரு நல்ல உதாரணம். அவருடைய பிரசங்கங்கள் ஆத்துமாக்களை அசைத்து வரப்போகும் நியாயத்தீர்ப்பைக் குறித்து எச்சரித்து மனந்திரும்பும்படி அறைகூவலிட்டன. ஆயிரக்கணக்கில் மக்கள் அவருடைய பிரசங்கங்களைக் கேட்க அலை மோதினார்கள். இவருடைய பிரசங்கங்களை ஆவியானவர் அற்புதமாகப் பயன்படுத்தினார்.

# போதகனின் கடமை

போதகர் என்ற வார்த்தை மேய்ப்பன் என்ற வார்த்தையின் இலத்தீன் மொழிபெயர்ப்பாகும். 1 பேதுரு 5:2 வசனத்தில், போதகர்களின் முக்கியமான கடமையை பின்வரும் வார்த்தைகளின் மூலம் பேதுரு படம்பிடித்துக் காட்டுகிறார். "மந்தையை மேய்ப்பாயாக" இதன் மூலம் பேதுரு தனக்கு கிறிஸ்து கொடுத்த கட்டளையை நினைவுகூர்ந்து (யோ. 21:16) இவ்வூழியத்தில் அடங்கியிருப்பது எது என்று தெளிவாக விளக்குகிறார். இதை ஒவ்வொரு மேய்ப்பனும் தன்னுடைய மந்தையின் ஆத்துமாக்களுக்கு செய்ய வேண்டியது அவசியம்.

மேய்ப்பனைக் குறித்த வேத போதனை மிகவும் ஆழமானதும் அழகானதுமாகும். இதற்கான சில உதாரணங்களை மட்டும் இங்கே தருகிறேன்.

| | |
|---|---|
| சங். 80:1 | கர்த்தர் தன் மக்களின் மேய்ப்பனாக இருக்கிறார் |
| ஏசா. 53:6 | அவர்கள் ஆடுகளைப் போல வழி தவறிப்போகும் நிலையில் இருக்கிறார்கள். |
| சங். 23:2 | மேய்ப்பன் தன் ஆடுகளுக்கு தண்ணீர் வார்த்து உணவையும் அளிப்பான். |
| சங். 23:3,4 | அவன் ஆடுகளை வழிநடத்தி அவைகளைப் பாதுகாப்பான். |
| லூக். 15:4-6 | அத்தோடு ஆடுகள் தொலைந்து போனால் அவைகளைத் தேடி அலைவான். |
| 2 சாமு. 5:2 | பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி, மனிதர்கள் |

மேய்ப்பர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

யோ. 10:11 ஆனால், எல்லா மேய்ப்பர்களுக்கும் மேலான மேய்ப்பர் தனது ஆடுகளுக்காக தன்னையே அளித்த இயேசு கிறிஸ்து மட்டுமே.

நாம் இதுவரை பார்த்த வேத பகுதிகளில் இருந்தும் வேறு பகுதிகளில் இருந்தும் மூப்பர்கள் தங்களுடைய ஊழியத்தின் கடமைகளைப் படித்துப் புரிந்துகொள்ளலாம். மேய்ப்பனைப் பற்றி வேதம் போதிக்கும் சத்தியங்களை ஆழமாகக் கவனித்துப் படிப்பதன் மூலம் போதகர்கள் தங்கள் கடமைகளை சரியாக செய்கிறார்களா என்று ஆராய்ந்து பார்த்துக்கொள்ளலாம்.

## 1. போதகனின் கடமை சிறப்புத் தன்மை வாய்ந்தது "மந்தையை மேய்"

மூல வார்த்தைகளில், அதாவது கிரேக்க மொழியில் இதன் பொருள் விசேஷமானது (poimanate to poimnion). இதை ஆங்கிலத்திலோ தமிழிலோ அதேவிதமாக மொழிபெயர்ப்பது கடினம். "மந்தையை மேய்" என்பதே மிகவும் பொருத்தமான நெருங்கிவரக்கூடிய தமிழ் மொழிபெயர்ப்பு. இவ்விரு பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும் ஒரே மூல வார்த்தையிலிருந்தே புறப்படுகின்றன. மேய்ப்பன் செய்ய வேண்டிய கடமையும், அவன் யாருக்கு அக்கடமையை செய்ய வேண்டுமோ அவை இரண்டுமே முடிந்தவரை மிகவும் நெருக்கமான முறையில் இவ்வார்த்தைகளின் மூலம் விளக்கப்படுகின்றன.

நாம் தேவைக்கு மேல் இவ்வுண்மையை வலியுறுத்தத் தேவையில்லை. போதகனின் ஊழியம் அவன் ஊழியம் செய்ய வேண்டிய சபை மக்களின் வாழ்க்கையோடு பிரிக்க முடியாத மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளது என்பதை இவ்வார்த்தைகள் தெளிவாகவே போதிக்கின்றன. அவன் செய்யும் அனைத்துக் காரியமும் அவர்களை மனதில் வைத்தே செய்யப்பட வேண்டும். என்னுடைய மக்கள் யார்? அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள்? அவர்களுடைய தேவை என்ன? அவர்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள்? இத்தகைய கேள்விகளை ஒரு போதகன் தனது கடமையைச்

செய்யும் போது அவசியம் கேட்க வேண்டும். ஒரு போதக னுடைய கடமையில் எதுவுமே நடைமுறைக்குப் பொருந்தாத தாக இருக்காது. அவனது அனைத்து வேலைகளும் தனது மந்தைகளின் நலத்தைக் கருத்தில் கொண்டே இருக்கும்.

மெய்யான போதகன் வாரத்தின் பல மணி நேரங்களைத் தனது படிப்பகத்தில் செலவிடுவான். அவனது ஊழியத்தின் கருவியாக இறையியல் நூல்களும், வேதத்தை விளக்க உதவும் விதிகள் பற்றிய நூல்களும், சபை சரித்திரம் பற்றிய நூல்களும் வேறு பல நூல்களும் அமையும். இவற்றை அவன் ஆனந்தத்தோடு படிப்பான். இதற்கெல்லாம் மேலாக வேத தியானத்தில் அதிக நேரத்தை அவன் செலவிடுவான். ஆனால் படிப்பு மட்டுமே அவனது தொழிலாக அமைந்து விடாது. இத்துறையில் பாண்டித்தியம் பெற்று பட்டம் வாங்க வேண்டும் என்பதற்காக அவன் படிக்க மாட்டான். தனது படிப்பின் மூலம் பெற்றுக்கொண்ட அனைத்தையும் கொண்டு ஆத்துமாக்களுக்கு ஆவிக்குரிய உணவை அளிக்க வேண்டு மென்பதே அவனது முழு நோக்கமாக இருக்கும். இதுவே எப்போதும் போதகனின் கடமையாக இருக்கும்.

போதகனின் பிரசங்கம் எப்போதும் போதகப் பிரசங்கமாக இருக்கும். அவன் பிரசங்கங்களைத் தயாரிக்கும்போது தனது மக்களை மனதில் வைத்தே அவற்றைத் தயாரிப்பான். தன்னுடைய வேத விளக்கங்கள் அருமையானதாக, கேட் பவர்கள் பாராட்டும்படியாக இருக்க வேண்டுமென்பதற்காக மட்டும் அவன் பிரசங்கங்களைத் தயாரிப்பதில்லை. அவனுடைய நோக்கம் நடைமுறைக்குப் பொருத்தமானதாக இருக்கும். தனது மக்களை கிறிஸ்துவிடம் அழைத்துச் சென்று அவர்களைக் கிறிஸ்துவிடம் ஆறுதல் பெறவைத்து தைரியப் படுத்துவதே அவனது பெரு நோக்கமாக இருக்கும்.

தனது சபை மக்களுக்காகத் தயாரிக்கப்பட்ட ஒரு பிரசங்கத்தை வேறொரு இடத்தில் பிரசங்கிப்பதற்கு தயங்குவது ஒரு நல்ல போதக பிரசங்கியின் அடையாளமாக இருக்கும். ஏனெனில் அவனது பிரசங்கங்கள் ஒரு குறிப்பிட்ட மக்களுக் காக அவர்களுடைய தேவைகளுக்காகத் தயாரிக்கப்பட்டவை. அம்மக்களுடைய தேவைகளை மனதில் வைத்து அவற்றிற் கேற்றவிதத்தில் அப்போதகன் அப்பிரசங்கங்களைத் தயார்

செய்திருக்கிறான். வேறொரு இடத்தில் அவற்றை அவன் பிரசங்கிக்க வேண்டுமானால் அவற்றை அவன் முழுமையாக மாற்றி அமைக்க வேண்டும். அவனது பிரசங்கங்களில் ஒரு சிலவற்றை மட்டுமே அவன் வேறு இடங்களில் பிரசங்கிக்க் முடியும். புதிய உடை தேவை என்று விருப்பப்படுபவர்களுக்கு எல்லோருக்கும் பொருந்தக்கூடிய ஒரே சைஸ் உடை என்ற விளம்பரம் அதிக ஆர்வத்தையோ நம்பிக்கையையோ அளிக்காது. அதேபோல், தனது மக்களை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கும் போதகனின் பிரசங்கங்களைப் போல "ரெடிமேட்" பிரசங்கங்கள், எல்லா சபை மக்களுக்கும் ஒத்துப் போகாது.

நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் போதக ஊழியமும், பிரசங்கமும் ஒன்றோடொன்று மிக நெருக்கமான தொடர்புடையவை. சபை மக்கள் அவர்களுடைய போதகர்கள் படிக்க வேண்டிய நேரத்தைப் பாதுகாத்து அவர்களுக்கு உதவ வேண்டும். போதகர்கள் எந்தவித இடையூறுமில்லாமல் பிரசங்கத்தை முறையாக சபை மக்களின் தேவைக்கேற்ற விதத்தில் தயாரிக்க சபையார் அவர்களுக்கு துணையாக இருக்க வேண்டும். சபை மக்கள் போதகர்களை தங்களின் எடுபிடி வேலை செய்யும் கையாட்களாகப் பயன்படுத்தி அவர்கள் குரல் கொடுக்கும் நேரத்திற்கெல்லாம் போதகர்கள் வர வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. ஆனால், சில போதகர்கள் பிரசங்கம் செய்ய வேண்டுமென்பதற்காக போதக ஊழியத்தையே அலட்சியம் செய்துவிடுகிறார்கள். தங்களுடைய ஆத்துமாக்களைப் போய்ப்பார்த்து அவர்களுடைய தேவைகளை நிறைவேற்ற அவர்கள் தவறிவிடுகிறார்கள். தங்களுக்கு அதற்கு நேரமில்லை என்று அவர்கள் காரணம் கூறுகிறார்கள். இத்தகைய போதகர்களைக் குறித்துத்தான் "வாரத்தின் ஆறு நாட்களுக்கு ஆத்துமாக்களின் கண்ணில் படமாட்டார்கள். அதனால், வாரத்தின் முதல் நாளில் ஆத்துமாக்களால் அவர்களைப் புரிந்து கொள்ள முடியாது" என்று சொல்லுவார்கள்.

சில போதகர்களின் இத்தகைய போக்கு போதக ஊழியத்தைப் பற்றிய அவர்களுடைய தவறான எண்ணத்தால் ஏற்பட்டிருக்கலாம் அல்லது சோம்பேறித்தனத்தாலோ, சமூக உறவில் முதிர்ச்சியின்மையினாலோ ஏற்பட்டிருக்கலாம். நமது மக்களை நாம் தெரிந்துகொள்ளாவிட்டால் தொடர்ந்து

வாராவாரம் அவர்களுடைய தேவைக்கேற்றவிதத்தில் நம்மால் பிரசங்கம் செய்ய முடியாது. போதகன் தனது மக்களை அவர்கள் இருக்கும் இடத்தில் போய் பார்க்கும் போதுதான் அவர்களுடைய குறைகளையும் தேவைகளையும் தெரிந்து கொள்ள முடிகிறது. அவ்வேளையிலேயே தனது பிரசங்கங்களை அவர்கள் எவ்வளவு தூரம் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிந்து கொள்ள முடிகிறது. இது அந்த போதகன் நல்ல முறையில் தொடர்ந்து பிரசங்கம் செய்ய உதவும். அப்போதுதான் அவன் பிரசங்க மேடையில் நிற்கும்போது தனது மக்களின் தேவையறிந்து அவர்களுக்கு உணவளிக்க முடியும். ஆகவே, போதக ஊழியமும், பிரசங்க ஊழியமும் ஒன்றையொன்று வலியுறுத்துகின்றன.

போதக ஊழியத்தைப்பற்றி எழுதப்பட்டுள்ள அநேக நூல்களில் முக்கியமானதொன்று ரிச்சட் பெக்ஸ்டர் (Richard Baxter) எழுதிய சீர்திருத்த போதகன் (Reformed Pastor) என்ற நூலாகும். ரிச்சட் பெக்ஸ்டர் இங்கிலாந்தில் கிடர்மின்ஸ்டர் என்ற இடத்தில் 1647-1661 வரை சபைப் போதகராக இருந்தார். இவரது நூல், போதகர்கள் தம்முடைய மக்களின் வீடுகளுக்குப் போய் அவர்களுக்கு வேத போதனையளிக்க வேண்டும் என்று கூறுகின்றது. ரிச்சட் பெக்ஸ்டர் இந்நூலில் இத்தகைய செயலை வலியுறுத்தி 22 காரணங்களைத் தந்துள்ளார். அவற்றில் ஒன்றைக் கீழே காணலாம்:

> இது நமது பிரசங்கத்தை மக்கள் நன்றாகப் புரிந்து கொள்ள உதவும். உங்களுடைய பிரசங்க ஊழியத்தை இழந்துபோகாதபடி இந்த ஊழியத்தில் நீங்கள் கவனம் செலுத்துங்கள். இதன் மூலம் உங்கள் மக்களை நீங்கள் நன்றாக அறிந்துகொள்ளலாம். அதன் மூலம் அவர்களுடைய அன்பையும், மரியாதையையும் அடையலாம். ஒரு போதகனுக்கு தனது மக்களைத் தெரியாவிட்டாலோ அல்லது அவர்களுக்கு அவனைத் தெரியாதது போல் மனதில்பட்டாலோ அந்த போதகனால் அவர்களுக்கு எந்த நன்மையையும் செய்ய முடியாது. சபை மக்களைப் போய்ப் பார்ப்பதன் மூலம் அவர்களுடைய தனிப்பட்ட ஆவிக்குரிய தேவைகளைப் புரிந்துகொள்வதோடு, ஒவ்வொருவருக்கும் ஏற்றவிதத்தில் மேய்த்தல் ஊழியத்தை செய்யவும்

முடியும். அத்தோடு அவர்களுடைய மனநிலை, குறை பாடுகள் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டு அவர்கள் கேட்கத் தேவையான பிரசங்கங்களை அவர்களுக்கு அளிக்க முடியும். (பக்கம் 177-8)

ஆகவே ஒரு போதகன் நல்ல போதகனாக இருக்க வேண்டுமா? அல்லது நல்ல பிரசங்கியாக இருக்க வேண்டுமா? இரண்டும் அவசியம். கர்த்தர் இணைத்துள்ள எதையும் நாம் பிரிக்கக்கூடாது. ஓய்வுநாளில் நம் மக்கள் நம்மைப் புரிந்து கொள்ள முடியாதபடி இருப்பதைத் தவிர்க்க வேண்டுமானால் நாம் வாரத்தின் ஆறு நாட்களிலும் அவர்கள் கண்ணில் படும்படியாக இருக்க வேண்டும்.

போதக ஊழியத்தைக் குறித்த இத்தகைய மனநிலை போதகனின் ஏனைய எல்லாக் கடமைகளிலும் இருக்க வேண்டும். ஒரு போதகன் தன்னுடைய ஆடுகளை எப்போதும் மேய்க்கிறான். அவன் எல்லாவற்றையும் அவர்களுடைய நன்மையை மனதில் வைத்தே செய்கிறான்.

இதனால் போதகர்கள் ஊழியத்திற்கு தயார் செய்யப்பட வேண்டுமென்பது இதன் மூலம் தெளிவாகப் புலனாகும். ஆடுகளைக் கவனித்து வளர்த்தவர்களால் மட்டுமே போதக ஊழியத்திற்கு எவரையும் தயார் செய்ய முடியும். ஆகவே, போதக ஊழியத்திற்கு வர இருப்பவர்களை போதக ஊழியத்தில் இருந்து ஏற்கனவே அனுபவப்பட்டவர்களே பயிற்சியளிக்க வேண்டும். இன்று பல இடங்களிலும் போதக ஊழியத்தில் இருந்து எந்த அனுபவத்தையும் அடையாத மனிதர்களிடம் போதக ஊழியத்திற்கு வருபவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொறுப்பு கொடுக்கப்படுகிறது. இது நாம் மிகவும் வருந்த வேண்டிய காரியம். அத்தகைய மனிதர்களின் படிப்பும், பட்டங்களும் பெரிதாக இருக்கலாம். அவர்களுடைய போதனையும்கூட வேதபூர்வமானதாக இருந்து விடலாம். இதையெல்லாம் நாம் குறை கூறவில்லை. ஆனால் அவர்கள் போதக ஊழியத்தில் எந்தவிதமான அனுபவத்தையும் அடையாதபடியால் அவர்கள் போதிக்கும் எதுவும் போதக ஊழியமாகிய நிலத்தில் விதைத்துப் பண்படுத்த முடியாததாக இருக்கும். போதக ஊழியத்தில் நல்ல அனுபவமில்லாத வர்களிடத்தில் அவ்வூழியத்திற்கு வருபவர்களைப் பயிற்சிக்கு அனுப்புவது மிகப் பெரிய தவறு.

அமெரிக்காவின் புகழ்பெற்ற பிரின்ஸ்டன் இறையியல் கல்லூரியைப் (Princeton Seminary) பற்றி எழுதிய தனது நூலில் டேவிட் கல்ஹூன் (David B. Calhoun) கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில், இறையியல் கல்லூரியில் எத்தகைய பாடங்கள் இருக்க வேண்டும் என்று எழுந்த வாதத்தில் இப்பிரச்சனை பற்றி பேசப்பட்டதாகக் கூறுகிறார். பிரின்ஸ்டன் இறையியல் கல்லூரியில் எப்போதுமே ஆரம்பத்தில் இருந்தே நல்ல இறையியல் போதனை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், காலம் போகப்போக நடைமுறைக்குத் தேவையான பாடங்களும் அளிக்கப்பட வேண்டும் என்ற ஒரு வாதமும் பின்னால் எழுந்தது. இதற்குக் காரணம் அங்கு வெறும் புத்தகப் பூச்சிகள் உருவாகத் தொடங்கியதுதான். கல்ஹூன் இன்னுமொரு முக்கிய காரணத்தையும் எடுத்துக்காட்டுகிறார். இக்கல்லூரியின் ஆரம்பப் பேராசிரியர்களாக இருந்த ஆர்ச்சிபால்ட் அலெக்சாண்டர் (Archibald Alexander), சாமுவேல் மிலர் (Samuel Miller) ஆகியோர் இங்கு போதிக்க வருவதற்கு முன் இருபது வருடங்களுக்குக் குறையாமல் போதக ஊழியத்தில் அனுபவம் பெற்றிருந்தனர். ஆனால், அவர்களுக்குப் பின்னால் போதிக்க வந்தவர்களுக்கு அத்தகைய போதக ஊழிய அனுபவமில்லாததால் அவர்களால் போதக ஊழியத்திற்கு ஏற்றவிதத்தில் மாணவர்களைத் தயார் செய்ய முடியவில்லை.

போதகர்கள் தாம் சிறப்பம்சம் வாய்ந்த ஊழியக்காரர்களாக இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய ஊழியத்தின் சிறப்பம்சம் சபை ஆடுகளைக் கவனித்து வளர்க்க வேண்டுமென்பதுதான். போதகர்கள் இப்பணியில் இருந்து தம்மைப் பிரிக்கக்கூடிய வேறு எந்த காரியத்தில் ஈடுபடுவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அது எவ்வளவு கவர்ச்சிகரமானதாக இருந்தாலும் அதிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்.

## 2. போதகருடைய கடமை அளப்பரிய பொறுப்பு வாய்ந்தது

## "தேவனுடைய மந்தை"

"தேவனுடைய மந்தை" இவ்வார்த்தைகள் போதகர்களாகிய நாம் ஊழியம் செய்ய வேண்டிய மக்களை வர்ணிக்கின்றன. இவ்வர்ணணைதான் எத்தனை அருமையானது! அவர்கள்

கர்த்தருக்கு சொந்தமான மந்தைகள், கர்த்தருடைய மக்கள், நித்தியத்திலிருந்து அவரால் அன்புகூரப்பட்டு தெரிவு செய்யப்பட்டவர்கள். மந்தை மேய்த்தலாகிய விவசாயக் கலாச்சாரத்தைக் கொண்ட நாடுகளில் ஒரு மனிதனுடைய மதிப்பிலடங்காத சொத்து அவனது மந்தையே. அவற்றை அவன் மிகக் கவனமாகப் பராமரித்து உயிரைக் கொடுத்துப் பாதுகாத்து வருவான். இதைக் குறித்து பழைய ஏற்பாட்டு "கர்த்தர் தன் மந்தைகளைப் பராமரிக்கிறார்" என்று போதிக் கின்றன *(சங். 78:52; ஏசா. 40:11; எசே. 34:11-16).*

எத்தனை ஆழமாக கர்த்தர் தன் மந்தைகளை நேசிக்கிறார்! அவர்களுடைய நலனில் எத்தனை அக்கறை வைத்திருக்கிறார்! இந்த மந்தைகளே போதகர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக் கின்றன. தேவனுடைய பிள்ளைகளை நாம் வெறுக்கக்கூடாது. அவர்களிடம் நாம் பொறுமையில்லாமல் நடந்துகொள்ளக் கூடாது. அவர்களை உதாசீனப்படுத்தக் கூடாது. நம்முடைய பெருமைக்காக அவர்கள் வாழவில்லை. நம்முடைய பெரும் திட்டங்கள் வெற்றியடைவதற்கு அவர்கள் படிக்கற்கள் அல்ல. அவர்கள் மந்தைகள் . . . அவர் தன்னுடைய இரத்தத்தை விலையாகக் கொடுத்து பெற்றுக்கொண்ட தேவனின் சபை *(அப். 20:28).* சீ. எஸ். லூயிஸ் (C. S. Lewis) சொன்னது போல், கிறிஸ்து பேதுருவிடம் தனது ஆடுகளுக்கு உணவளிக்கச் சொன்னாரே ஒழிய தனது எலிகளுக்கு புதிய வித்தைகளைக் கற்றுக்கொடுக்கும்படிச் சொல்லவில்லை. நமது மந்தைகள் யார் என்பதையும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெரும் பொறுப்பையும் நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இஸ்ரவேலின் விசுவாசமற்ற மேய்ப்பர்களை கடினமான வார்த்தைகளைக் கொண்டு எசேக்கியலில் கர்த்தர் கடிந்து கொண்டபோது அவரது வார்த்தைகள் இருதயத்தைப் பிளக்கும் கூரான கத்திபோல் "என்னுடைய மந்தை" என்று அவர் அடிக்கடி பயன்படுத்திய வார்த்தைகளையே சுற்றி அமைந்தன *(எசே. 34:6-10).*

இதை எப்போதுமே மனதில் வைத்திருப்பது இலகுவான தல்ல. ஏனெனில் ஒரு சபை தேவனுடைய மந்தையைப்போலத் தோற்றமளிக்காமலும் நடந்துகொள்ளாமலும் இருந்துவிடலாம். அவர்களுடைய வித்தியாசமான நடத்தை மோசமாகத் தெரியலாம். அவர்களுடைய பலவீனங்களும், அலைந்து

திரியும் போக்கும் அவர்களுக்குத் துணைபுரியப் போகிறவர்களை ஆயாசப்படுத்தலாம். முக்கியத்துவமில்லாத ஒரு கூட்டத்திற்காக தனது நேரத்தையும், சக்தியையும் வீணாக்கிக் கொண்டிருப்பதாகக்கூட ஒரு போதகர் எண்ணலாம். அவ்வேளைகளில் அவர் மேலும் அதிக நேரத்தை ஜெபத்தில் செலவிட்டு கிறிஸ்துவின் கண்களோடு அம்மக்களைத் தான் பார்க்கக்கூடியதாக இருக்கும்படி மன்றாட வேண்டும். இத்தகைய உணர்வு மட்டுமே கர்த்தருடைய சபையை அக்கறையுடன் கவனிக்க ஒரு போதகருக்கு துணை செய்யும்.

இயேசு பேதுருவை போதக ஊழியத்திற்கு அனுப்பும் போது, பேதுருவைப் பார்த்து, என் ஆடுகளை நேசிக்கிறாயா? என்று கேட்கவில்லை. பேதுரு ஆத்துமாக்களை நேசிக்க வேண்டியது அவசியமானாலும், ஊழியத்திற்கு ஆத்துமாக்களின் மேல் அவன் வைக்கும் அன்பு மட்டும் போதாது. ஆகவே, இயேசுவின் கேள்வி "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா?" என்றிருந்தது (யோ. 21:16). இக்கேள்வியில் காணப்படும் இரகசியம் என்ன? நாம் நமது இரட்சகரை நேசித்தால் மட்டுமே, அவரது ஆடுகளை நம்மால் மேய்க்க முடியும் என்பதுதான். அவ்வாடுகள் சில வேளைகளில் கண்ணுக்கு எத்தனை அவலட்சணமாக தெரிந்தபோதும் அவைகள் அவருடைய ஆடுகளாக இருப்பதால் அவருக்காக நாம் அவற்றை நேசிப்போம்.

### 3. போதகருக்கு மந்தைகளோடு நெருக்கமான தொடர்பு இருக்க வேண்டும் - "உங்களிடத்திலுள்ள தேவனின் மந்தை"

ஆர்.சி.எச். லென்ஸ்கி (R.C.H. Lenski) என்ற வேத விளக்கவுரையாளர் இவ்வாக்கியத்தை "உங்களுடைய பாதுகாப்பிலுள்ள" என்று மொழிபெயர்த்திருக்கிறார். N.I.V. ஆங்கில மொழிபெயர்ப்பும் இதை ஒத்திருக்கிறது. ஆனால் பழைய மொழிபெயர்ப்பே சிறந்தது. இதே வாக்கியமே முதலாவது வசனத்திலும் இருப்பதால் அங்கே "உங்கள் பாதுகாப்பிலிருக்கும்" என்று வாசிப்பது பொருந்திவராது. "உங்களிலுள்ள மூப்பருக்கு" என்று வாசிப்பதே சரி. தமிழில் இது சரியாக இரண்டிடங்களிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. சபை மக்களுக்கு தங்களுடைய மூப்பர்களைத் தெரிந்திருந்தது. மூப்பர்களைத் தெரிவு செய்யுமுன் அவர்கள் அம்மூப்பர்களின்

குணாதிசயங்கள், அவர்களுடைய குடும்ப வாழ்க்கை, வரங்கள் ஆகியவற்றை ஏற்கனவே ஆராய்ந்து பார்த்துவிட்டனர். ஆகவே, அவ்வாறாக தெரிவு செய்யப்பட்டவர்கள் முகமறியாத மனிதர்களல்ல, நெருக்கமான நண்பர்கள். அதேபோல், மேய்ப்பர்களும் தங்களுடைய மந்தைகளுடன் நெருக்கமான தொடர்பு வைத்துள்ளார்கள். அவர்கள் தங்களுடைய பொறுப்பிலுள்ள மந்தைகளில் அக்கறை செலுத்தி, அவர்களை சுற்றி வந்து, அவர்களுடைய வாழ்க்கையில் அதிக தொடர்பு வைத்திருக்கிறார்கள். அவர்கள் அம்மந்தைகளை விட்டு விலகிப்போவதில்லை. அம்மந்தைகளை அவர்கள் ரிமோட் கண்ட்ரோலினால் செயற்கையாக செயல்படச் செய்வதில்லை. அவ்வூழியம் தொலைபேசித் தொடர்புச் சாதனங்களினால் செய்யப்படுவதில்லை. மந்தைகளுக்கு அருகில் நெருக்கமாக இருந்து செய்யப்படும் ஊழியம் அது.

இப்பகுதியில் பேதுரு மேய்ப்பர்கள் கண்காணிகளாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார். கண்காணியானவர் காவலாளி போன்றவர். ஒரு கட்டிட வேலையை மேற்பார்வை செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் மேற்பார்வையாளன் என்பதே கிரேக்க மொழியில் இதன் பொருள். யோசியாவின் காலத்தில் கர்த்தரின் ஆலயக்கட்டிட வேலை நடந்தபோது அவ்வேலையில் ஈடுபட்டிருந்தவர்களை மேற்பார்வை செய்தவர்களை கண்காணிகள் என்று அழைத்தனர் *(2 நாளா. 34:12)*. மிகவும் நுணுக்கமாக நடந்து கொண்டிருக்கும் வேலையைக் கவனிக்க வேண்டியது அக்கண்காணிகளுடைய பொறுப்பாக இருந்தது.

புதிய ஏற்பாடும் இதே பொருளிலேயே கண்காணி என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது. எபிரெயருக்கான நிருபத்தை எழுதியவர், "ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கு . . . எச்சரிக்கையாயிருங்கள்" என்று எழுதியிருக்கிறார் *(எபி. 12:15, 16)*. இதை ஏன் சுட்டிக்காட்டுகின்றேன் என்றால் *1* பேதுரு *5:3* வசனத்தில் காணப்படும் "கண்காணிப்புச் செய்யுங்கள்" என்ற வார்த்தைகளும் எபிரெயர் 12 ஆம் அதிகாரத்திலுள்ள நாம் பார்த்த "எச்சரிக்கையாயிருங்கள்" என்ற வார்த்தைகளும் ஒரே கிரேக்க மூலத்தின் மொழிபெயர்ப்புகள். பி.எஃப். வெஸ்ட்கொட் (B.F. Westcott) என்பவர் இதைப்பற்றி விளக்கும்போது, இவ்வார்த்தைகள்

"பொறுப்புள்ள பதவியைக் கொண்டிருப்பவர்கள் கவனத்தோடு செய்ய வேண்டிய ஊழியத்தை" விளக்குவதாக கூறியுள்ளார். ஆகவே, கண்காணியானவன் ஆராய்ந்து பார்க்க வேண்டிய, ஊன்றிக் கவனிக்க வேண்டிய, கவனித்துப் பார்க்க வேண்டிய, எச்சரிக்கையாயிருக்க வேண்டிய பெரும் பொறுப்பைக் கொண்டுள்ளான்.

ஆகவே, ஒரு போதகன் தனது கடமையைச் செய்வதற்காக தனது ஆத்துமாக்களைப்பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியவனாக இருக்கிறான். ஒவ்வொரு விசுவாசியும் ஆசாரியனாக இருந்து கர்த்தரை எவருடைய துணையுமில்லாமல் அணுக முடியும் என்பது நமக்குத் தெரியும். ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கை யின் வளர்ச்சிக்கு பொறுப்பாளியாக இருக்கிறான் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். சில போதகர்கள் விசுவாசியின் வாழ்க்கையில் தங்களுக்கு சம்பந்தமில்லாத, தலையிடக்கூடாத காரியங்களில் எல்லாம் தலையிட்டு எதேச்சாதிகாரமாக நடந்துகொண்டுள்ளார்கள் என்பதும் உண்மை. ஒரு விசுவாசியினுடைய சொந்த வாழ்க்கையின் அந்தரங்கமான விஷயங்களில் எவருக்கும் தலையிட உரிமையில்லை. அத் தகைய தலையிடுதல்களை நாம் எப்போதுமே நிராகரித்துவிட வேண்டும். ஏனெனில் அத்தகைய தலையீடுகள், நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக் கொப்புவிப்பான் என்ற உண்மைக்கு எதிரானதாக அமை கின்றது (ரோ. 14:12).

ஆனால் நாம் வாழும் இன்றைய கலாச்சாரப் பின்னணி விசுவாசியின் இத்தனிமனித சுதந்திரத்தை மிகவும் மோச மானதும் முட்டாள்தனமுமான ஒரு நிலைக்குக் கொண்டுபோய் விட்டது. அதாவது, இன்னும் பிறக்காமல் வயிற்றில் இருக்கும் ஒரு குழந்தை அல்லது வயதானவர்களைத் தவிர வேறு எந்த ஒரு தனி மனிதனுடைய வாழ்க்கையிலும் நாம் எந்த விதத்திலும் தலையிடக்கூடாது என்று பலர் இன்று எண்ணு கிறார்கள். இன்றைய உலகம் அதிகாரத்தை, அது எந்த ரூபத்தில் வந்தாலும் எதிர்க்கிறது. தமது சொந்த ஆலோசனைகளைத் தவிர வெளியில் இருந்து வரும் வேறு எந்த ஆலோசனையையும் சந்தேகக் கண்ணோடு பார்த்து வெறுப்பது எல்லோருக்கும்

வழக்கமாக இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனக்கே ஒரு சட்டத்தை வைத்துக் கொண்டு தனது சொந்த ஆலோசனைக்கு மட்டுமே மதிப்புக் கொடுக்கிறான். கர்த்தரால் மகிமையோடு உருவாக்கப்பட்ட தனி மனிதன் இன்று ஒரு பயங்கரமான பூதத்தைப் போல மாறிவிட்டான்.

அதிகாரத்தை எதிர்க்கும் தனிமனிதனின் இத்தகைய அகங்காரப்போக்கு இன்று சபையையும் பாதித்துள்ளது. போதகன் தன்னுடைய சபை மக்களுடைய வாழ்க்கையில் எந்தவிதத்திலும் தலையிடக்கூடாது என்று இன்று தொடர்ந்து பேசி வருகிறார்கள். சபை மக்கள் எதைச் செய்யத் தீர்மானித் தாலும் அதற்கும் போதகர்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று கூறிவருகிறார்கள். சபையாரைப்பற்றி போதகர்களுக்கு அதிகம் தெரிந்திருக்கத் தேவையில்லை என்று பேசி வருகிறார் கள். போதகன் பிரசங்கம் செய்வதோடும், எல்லோருக்கும் பொதுவானவிதத்தில் அதன் பயன்களை எடுத்துச் சொல்வ தோடும், கூப்பிடுகிறபோது மட்டும் வந்து போவதோடும் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார்கள். இவற்றிற்கு மேலாக எதையும் ஒரு போதகன் செய்தால் அவன் தனி மனித சுதந்திரத்தில் தலையிடுகிறான் என்று கூச்சலிடுகிறார்கள்.

ஒரு மேய்ப்பன் தனது மந்தைகளை எவ்வாறு மேய்க்கிறான்? அவன் தன் ஆடுகளுக்கு அருகில் போய் அவற்றின் நிலையை ஆராய்கிறான். அவ்வாடுகளின் சரீரத்தில் ஏதாவது காயங்கள், வீக்கம் அல்லது நோய் இருக்கிறதா என்று கவனித்துப் பார்க்கிறான். தனது கரங்களை ஆட்டின் தோலில் வைத்துத் தடவிப்பார்த்து, அதன் தலையை நிமிர்த்தி அதன் கண்களுக் குள்ளாக ஊடுருவிப்பார்த்து அதற்கு ஏதாவது நோயோ அல்லது பலவீனமோ ஏற்பட்டிருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்கிறான். ஒவ்வொரு ஆட்டையும் தனித்தனியாக இவ்வாறாக அடிக்கடி ஆராய்ந்து பார்க்காமல் அவனால் தனது கடமையைச் செய்ய முடியாது. ஆடுகள் மேய்ப்பனின் இத்தகைய அக்கறையான போக்கை விரும்பாமல் அவன் கரத்திலிருந்து விடுபட்டு நழுவப்பார்க்கலாம். ஆனால், மேய்ப்பன் கொடூரமாக நடந்துகொள்ள முயலவில்லை. அவன் ஆட்டின் மேல் தனக்கிருக்கும் அன்பாலும், அக்கறையாலுமே இவ்வாறாக நடந்துகொள்கிறான். இவ்வாறாக மந்தைகளுக்கு

உதவி செய்தலும், கண்காணிப்பதும் அவனது பொறுப்புகளில் முக்கியமான பங்கை வகிக்கின்றன.

அதேபோல் தனது ஆத்துமாக்களின் மேல் அக்கறை செலுத்துவது ஒரு போதகனின் கடமை. அவனுடைய ஆத்துமாக்களின் வாழ்க்கையின் அநேக விஷயங்களில் அவனுக்கு எந்த சம்மந்தமும் இல்லாமலிருப்பதோடு அவ்விஷயங்களில் அவன் தலையிடவும் மாட்டான். ஆனால் தனது ஆத்துமாக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஏதாவது நோய் அல்லது வளர்ச்சியின்மைக்கான அறிகுறிகள் காணப்படு கின்றதா என்று அவன் நிச்சயம் கவனிப்பான். அவர்களிடம் ஏதாவது அலைந்து திரியும் மனப்போக்கு காணப்பட்டால் அவன் அதைக் கவனிக்காமல் விடமாட்டான். வீண் வம்பிழுக்கும் குணம் கொண்டவர்களையும் மற்றவர்களோடு சேராமல் தனிமையை நாடி நிற்கும் தனது ஆத்துமாக்களைக் குறித்து அவன் கவலைக்கொள்ளவான். அவசியமானபோது அவர்களைத் திருத்தத் தேவையான நடவடிக்கைகளை உறுதியுடன் எடுப்பான். இதையெல்லாம் செய்வதற்கு அவன் ஆத்துமாக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்க வேண்டும். போதகனின் இந்நடவடிக்கைகளை சிலவேளை களில் ஆத்துமாக்கள் விரும்பாமல் போகலாம். அவர்கள் போதகன் தங்களுடைய சொந்த வாழ்க்கையில் குறுக்கிடுவ தாகக்கூட நினைக்கலாம். ஆனால், காலம் செல்லும்போது தங்களைப் பாவத்தில் தொடர்ந்திருக்கும்படி விட்டுவிடாமல் தங்கள் மேல் அதிக அன்பு செலுத்தி திருத்தவும், தேவைகளை நிறைவேற்றவும் முனைந்த போதகனின் தைரியத்திற்காகவும் கருணைக்காகவும் அவர்கள் அவனுக்கு நன்றி செலுத்தாமல் போகமாட்டார்கள்.

மேய்த்தலோடும் கண்காணிப்போடும் தொடர்புடைய பொறுப்புக்கள் ஊழியத்தில் சமநிலையை ஏற்படுத்துகின்றன. தன்னுடைய மக்களுக்கு அன்போடு உணவிடாத ஒரு போதகன் அவர்களைக் கண்காணிக்கும் தகுதியை இழந்து விடுகிறான். அதேவேளை, தன்னுடைய மக்களுடைய வாழ்க்கையில் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி அவர்களைப் பற்றி அறிந்துகொண்டு கண்காணிக்க முயலாத போதகனால் அவர்களுடைய தேவைக்கேற்ற முறையில்

உணவிட முடியாது. அத்தகைய மனிதன் போதகன் என்ற பெயரைச் சூட்டிக்கொள்ளவே தகுதியில்லாதவன்.

## 4. கர்த்தர் தனது இறையாண்மையின் மூலம் போதகனுக்கு அவனுடைய பொறுப்புக்களை அளித்துள்ளார் - "உங்களுடைய கரத்திலே கொடுக்கப்பட்டவர்கள்"

கிரேக்க மூலத்திலிருந்து ஆங்கில வேதத்தில் "those *entrusted* to you" 1 Peter 5:2 (NKJV), "Those *allotted* to your charge" (NASV) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகள் தமிழ் மொழிபெயர்ப்பிலே காணப்படாத "கொடுக்கப்பட்டவர்கள்" என்பதாகும் (Literal translation of this word is "the losts"). இதே பதம் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் இஸ்ரவேலர்கள் மத்தியில் சீட்டுப் போட்டுத் தெரிந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு கோத்திரத் திற்கும் கொடுக்கப்பட்ட மக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆங்கில வார்த்தையான inheritance இதே வார்த்தைக் குழுவைச் சேர்ந்தது (எண். 26:55, 56).

ஒரு மேய்ப்பனுடைய நிலம் ஒரே விதத்தில் அமைந் திருக்காது. சில இடங்கள் வறண்டதாகவும் வேறு சில பகுதிகள் நல்ல நீருள்ள பசுந்தரையாகவும் காணப்படும். அவனுடைய ஆடுகளில் சில கொழுத்து நல்ல நிலையில் உள்ளவையாகவும், வேறு சில நோயுற்றவையாகவும் பலவீனமானதாகவும் காணப்படும்.

இஸ்ரவேலர்கள்கூட சில நேரங்களில் அடுத்த கோத்திரத்து மக்களின் நிலையைப்பார்த்து அவர்கள் தங்களுடைய கோத்திரத்தில் இல்லையே என்று எண்ணியதுண்டு. அவர்கள் நல்ல எண்ணங்களைக் கொண்டிருந்தபோது தங்களுக்குக் கொடுக்கப்பட்ட சொத்து கர்த்தருடைய இறை ஞானத்தின் மூலமாகவே கொடுக்கப்பட்டதென்பதைப் புரிந்து கொண் டிருந்தனர். வாக்குத்தத்தமாகக் கொடுக்கப்பட்ட கானான் தேசத்தில் வறுமையின் கோட்டில் இருந்த குடும்பமும்கூட அதிக ஆசீர்வாதமுள்ளது. அக்குடும்பத்தை அவர்கள் நன்றியோடு பெற்று கவனத்துடன் பார்த்துக்கொள்ள வேண்டும். அதுகுறித்து முறுமுறுப்பது பெருந்தீய செயலாகும்.

போதகர்கள் தங்களுடைய பொறுப்புக்களைக்குறித்து

நினைத்துப் பார்க்கும்போது நாம் மேலே பார்த்த உதாரணங்கள் நல்ல பயன்தரும். அவர்கள் ஊழியம் செய்யும்படி கர்த்தரால் கொடுக்கப்பட்டவர்கள். ஒரு முழு சபை மக்களாகவோ அல்லது ஒரு சபையின் ஒரு குறிப்பிட்ட பகுதியினராகவோ இருக்கலாம். தூரத்தில் இருக்கும் நிலங்கள் கண்ணுக்குப் பச்சையாகத் தெரிந்து, மற்றவர்களுக்குக் கிடைத்துள்ள நல்ல வாய்ப்புகளை எண்ணிப்பார்த்து இலகுவாக மனம் பாதிக்கப் பட்டு எரிச்சலடையலாம். இன்னொரு சகோதரருடைய பெரிய சபையையும், அவருக்குக் கிடைத்துள்ள அநேக ஊழியங்களையும், ஊழியக்காரர்களையும், அவர்கள் மத்தியில் காணப்படும் ஐக்கியத்தையும், ஜெப வாஞ்சையையும் பார்க்க நேரிடலாம். அதைப் பார்த்து தனது சிறிய சொந்த ஊழியத்தோடு அதை ஒப்பிட்டு வருத்தமடையலாம். ஒரு மூப்பர் தனது பிரசங்க வல்லமையால் பெருங் கூட்டத்தை அசைக்கும்போது இன்னொரு மூப்பர் சபையின் ஒரு பகுதியினருக்கு ஆலோசனை கூறும் ஓர் ஊழியத்தை மட்டுமே கொண்டிருக்கலாம். இந்நிலைமைகளால் எரிச்சல், பொறாமை, சுயவெறுப்பு, பேராசை என்பவை மிக எளிதாக மூப்பர்களை ஆண்டுவிடக்கூடிய ஆபத்து உண்டு.

ஆனால், கர்த்தர் நாம் எங்கு ஊழியம் செய்ய வேண்டுமோ அந்த இடத்திலேயே நம்மை நியமித்திருகிறார் என்ற உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர் நாம் செய்ய வேண்டிய ஊழியத்தை நமக்குத் தந்திருக்கிறார். அந்த ஊழியத்தை நாம் விசுவாசத்துடன் கொண்டு நடத்த வேண்டும். அவ்வூழியத்தில் கஷ்டமான சூழ்நிலைகள் ஏற்படும்போது நாம் மனந்தளர்ந்துவிடக்கூடாது. கர்த்தர் தனது தேர்ந்த திறமையான மனிதர்களையே ஆபத்து நிறைந்ததும், ஒன்றுமே நிகழாததுமான இடங்களுக்கு அனுப்புகிறார் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக நாம் நமது வாக்குத்தத்தத்தின் மூலம் பெற்றுக்கொண்ட நிலத்தில் இருக்கிறோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நாம் ஆசீர்வாதத்தை அடைந்திருக்கிறோம். அழியப்போகும் எகிப்தின் பசுமையான சமதரையில் இன்பம் காண்பதைவிட இஸ்ரவேலின் கல்லும் முள்ளும் நிறைந்த நிலத்தில் நாம் உழைப்பது எத்தனை மேன்மையானது! ஒவ்வொரு போதகனும் தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள மக்களைப் பார்த்து தாவீதுடன்

இணைந்து, “கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர்; என் சுதந்தரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர். நேர்த்தியான இடங்களில் எனக்கு பங்கு கிடைத்தது; ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்கு உண்டு” என்று கூற வேண்டும் *(சங். 16:5, 6).*

கொலம்பா என்ற அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர், ஆறாம் நூற்றாண்டில் மேற்கு ஸ்காட்லாந்திற்கு இயேசுவின் நற்செய்தியைக் கொண்டு போனார். அவருடைய ஜெபங்களில் ஒன்று அவர் பரலோகத்தை எதிர் நோக்கி இருந்த காட்சியை வர்ணிக்கின்றது. அவர் அநேகமாக சங்கீதம் 84:10 வசனத்தைத் தன் ஜெபத்தில் நினைவுகூர்ந்திருக்கலாம், “ஆகாமியக் கூடாரங் களில் வாசமாயிருப்பதைப் பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்து கொள்ளுவேன்.” கொலம்பாவின் ஜெப வர்ணணைகள், இவ்வுலகத்தில் தேவனுடைய சபை ஊழியத்தைக் கருத்தில் கொண்டிருக்கும் போதகனுக்குப் பொருத்தமானது.

கிறிஸ்து தன்னுடைய விலைமதிப்பற்ற மந்தைக்காக ஏற்படுத்தியிருக்கும் ஊழியத்தில் பங்கேற்பதும், அவருக்காக அவருடைய மந்தைக்கு ஊழியம் செய்வதுமே போதகனின் கடமையாகும். இது மகிமையுள்ளதும் அளப்பரியதுமான பொறுப்பாகும்.

# பிரசங்கத்தில் சில தவறுகள்!

பிரசங்கிகள் பிரசங்கத்தில், முக்கியமாக சுவிசேஷப் பிரசங்கத்தில், இன்று "இயேசு உன்னை நேசிக்கிறார்" என்றும், "தேவன் உங்களில் அன்பு செலுத்துகிறார்" என்றும் தேவனை அறியாத மக்களைப் பார்த்து கூறுவது வழக்கமாக இருக்கிறது. ஒருமுறை நான் தமிழகத்தில் ஊட்டியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தபோது ஒருமரம் தவறாமல் போகிற வழியெல்லாம், "இயேசு உன்னை நேசிக்கிறார்" என்று எழுதப்பட்டிருந்தது. இது கேட்பதற்கு நன்றாகவும், மனதிற்கு தெம்பளிப்பதாகவும் இருந்தபோதும் இதில் ஏதாவது உண்மையிருக்கிறதா என்று ஆராய வேண்டியது அவசியம். தேவனுடைய வார்த்தையை நாம் தவறாகப் பிரசங்கித்து விடுவதைப் போன்ற ஆபத்தான காரியம் வேறில்லை.

தேவனுடைய அன்பைப்பற்றிப் பேசுகிற ஒரு முக்கிய பகுதி யோவான் 3:16. இப்பகுதியில் தேவன் "இவ்வளவாய் உலகத்தில் அன்புக்கூர்ந்தார்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இதை வைத்து அநேகர், தேவன் உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதன் மீதும் அன்பு செலுத்துகிறார் என்று பிரசங்கிக்கிறார்கள். ஆனால், இப்பகுதி தேவன் உலகத்து மக்கள் ஒவ்வொருவர் மீதும் அன்புகூருவதாகப் போதிக்கவில்லை. இங்கே "உலகத்தில்" என்று மட்டுந்தான் எழுதப்பட்டுள்ளது. இதற்குப் பொருள் என்ன? இதற்கு விளக்கம் கொடுக்கும் பிரின்ஸ்டன் இறையியல் வல்லுனர் பீ.பீ. வார்பீல்ட் பின்வருமாறு கூறுகிறார், "இப்பகுதி தேவனுடைய அன்பின் ஆழத்தையும், ஆற்றலையும் பற்றி மட்டுமே பேசுகிறதே தவிர, அவ்வன்பு எத்தனைபேர் மேல் செலுத்தப்படுகிறதென்பதைப் பற்றியல்ல" என்று விளக்குகிறார். "அதாவது மிகப் பெரிய உலகத்தை நேசிக்க தேவன் அளப்பரிய அன்பு கொண்டிருந்தார் என்று இப்பகுதி போதிக்கவில்லை.

பாவத்தினால் கறைப்படிந்த இந்த உலகத்தை நேசித்து தனது குமாரனை அனுப்பிய தேவனின் அன்பு எத்தனை பெரிய அன்பு என்பதையே இப்பகுதி விளக்குகிறது" என்று அவர் கூறினார். ஆகவே, இப்பகுதியை வாசிக்கும்போது தேவனின் அன்பு, எவ்வளவு பெரிய அன்பு என்று அறிந்து அவரை நாம் துதிக்க வேண்டுமே தவிர, அவர் உலகத்து மக்கள் அனைவரையும் ஒரேவகையில் நேசிக்கிறார் என்று இதை வைத்துத் தீர்மானித்துப் பிரசங்கிப்பதும் போதிப்பதும் அறிவீனம்.

தேவன் உலகத்தின் மீது கொண்டுள்ள அன்பைக் குறித்துப்பேசுகிற வேதபகுதிகள் மத்தேயு *5:43-45; லூக்கா 6:36.* இப்பகுதிகள் தேவன், தனது நண்பர்களை மட்டுமல்லாது தனது எதிரிகளையும் நேசிக்கிறார் என்று போதிக்கின்றன. தீயவர்கள் மேலும், நல்லவர்கள் மேலும் அவர் சூரியனை உதிக்கச் செய்கிறார். மழை கிறிஸ்தவர்கள் இருக்கும் பகுதிகளில் மட்டும் பெய்யாமல் எல்லா இடங்களிலும் பெய்கிறது. ஆகவே இக்காரியங்களில் தேவன் பாரபட்சம் காட்டுவதில்லை. அவர் எல்லா மனிதர்கள் மேலும் இரக்கம் காட்டுகிறார். இல்லா விட்டால் பாவத்தில் ஊறித்திளைத்துக் கொண்டிருக்கும் இவ்வுலகத்தை அவர் எப்போதோ அழித்திருப்பார். இவ்வித மாகவே அவர் எல்லா மனிதரையும் நேசிக்கிறார். உலகத்தின் மீதுள்ள அவரது அன்பை நாம் இவ்விதமாகத்தான் புரிந்து கொள்ள வேண்டும். இதைத் தேவனின் "பொதுவான கிருபை" **(Common Grace)** என்று அழைப்பர். இந்தக் கிருபையும் அன்பும் அனைவருக்கும் சொந்தமானது. ஆனால், தேவன், தான் தெரிந்துகொண்ட மக்களில் காட்டும் விசேஷ அன்பு இதை விட வித்தியாசமானது. அவ்வன்பை "இரட்சிக்கும் அன்பு" என்றும், "தெரிந்துகொள்ளும் அன்பு" (Saving love or Electing love) என்றும் அழைப்பர். பழைய ஏற்பாட்டில் தேவன் இத்தகைய அன்பை இஸ்ரவேலர் மீது காட்டினார் என்று வேதம் போதிக்கிறது *(உபா. 7:6-8).*

வேதம் "முன்னறிவு" (Foreknow) "அறிவு" (know) என்ற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துகின்றது *(ரோ. 8:29).* இவ்வார்த்தை, தன்னுடைய மக்களில் தேவன் கொண்டுள்ள விசேஷமான அன்பைக் குறித்துப் பேசும் வார்த்தையாகும். இவ்வன்பு தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட குறிப்பிட்ட

மக்களுக்கு மட்டுமே உரித்தானது. இத்தகைய அன்பையே சங். 1:6; ஓசியா 11:1; மல்கியா 1:2; யோவான் 10:27; ரோமர் 9:11-13 ஆகிய பகுதிகளில் வாசிக்கிறோம். ஆகவே, தேவன் உலகத்து மக்கள் அனைவரையும் ஒரேவிதமாக நேசிப்பதில்லை.

"கிறிஸ்து உனக்காக மரித்தார்" என்று நாம் ஒரு பாவியாகிய மனிதனைப் பார்த்துக் கூறமுடியுமா? இதையும் இன்று அநேக பிரசங்கிகள் செய்து வருகின்றனர். கிறிஸ்து எல்லோருக்குமாக, ஒரே விதத்தில், அவர்கள் அனைவரையும் இரட்சிப்பதற்காக மரித்திருந்தால் இப்படிக் கூறுவதில் எந்தத் தவறுமில்லை. ஆனால், வேதம் கிறிஸ்து தனது மக்களுக்காக மட்டும், அவர்களை இரட்சிக்கும் நோக்கத்துடனேயே மரித்தார் என்று போதிக்கின்றது. என்னுடைய ஆடுகள் என் சத்தத்தைக்கேட்கும் என்று இயேசு கூறுகிறார் (யோ. 10:27). கிறிஸ்து தன்னுடைய ஆடுகளுக்காக (தனது மக்களுக்காக) சிலுவையில் மரித்தார். "நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்" (யோ. 10:15). "அந்த" ஆடுகளுக்காகவே அவர் தன்னுடைய ஜீவனையும் கொடுத்தார். இந்த ஆடுகளையே நான் அறிந்திருக்கிறேன் என்று அவர் யோவான் 10:27 வசனத்தில் கூறுகிறார். இங்கே "அறிந்திருக்கிறேன்" என்ற வார்த்தை கிறிஸ்து தனது மக்கள் மேல் கொண்டுள்ள விசேஷமான அன்பைக் குறித்துப் பேசுகிறது. இவ்வளவு தூரத்திற்கு வேதம் தேவன் தனது மக்கள்மேல் செலுத்தும் விசேஷ அன்பைக் குறித்துப் பேசுகிறபோது, அந்த அன்பு எல்லோருக்கும் சொந்தமானது என்று பிரசங்கிப்பது போலித் தனமான போதனையாகும். எல்லோரையும் கிறிஸ்துவிடம் வரும்படியாக அழைப்பதும், மனந்திரும்பும்படியாகவும் கிறிஸ்துவை விசுவாசிக்கும்படியாகவும் வலியுறுத்திப் போதிப்பதும் மட்டுமே நமது கடமை. கிறிஸ்து உனக்காக மரித்தார் என்றும், உன்னை நேசிக்கிறார் என்றும் பாவிகளைப் பார்த்து வேதத்தில் இல்லாத பொய்களை நாம் சொல்லக்கூடாது.

ஜோண் மரே இதைக்குறித்துப் பின்வருமாறு எழுதியுள்ளார்:

"கிறிஸ்துவின் மீட்பின் மூலம் தேவனால் தெரிந்துகொள்ளப்படாதவர்கள் அநேக பயன்களை அடைகிறார்கள். தேவன் தனது மீட்பின் காரியங்களை

இவ்வுலகத்தில் நிறைவேற்றி வருவதால் பாரபட்ச மில்லாமல் எல்லா மனிதர் மேலும் அநேக ஆசீர் வாதங்களைப் பொழிந்து வருகிறார். சுவிசேஷப் பிரசங்கத்தின் மூலமாக பல நன்மைகளைப் பலரும் பெற்று வருகின்றனர். கலாத்தியர் 6:10 வசனத்தில் எல்லா மனிதர்களுக்கும் நன்மை செய்யும்படியாக கிறிஸ்தவர்களுக்கு அறிவுரை கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் மீட்பின் பலனால் மட்டுமே ஒருவன் கிறிஸ்தவனாக முடியும். கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் பெறப்பட்ட மீட்பின் காரண மாகவே இன்று சுவிசேஷம் பாரபட்சமின்றி அனைவரின் மத்தியிலும் பிரசங்கிக்கப்படுகின்றது. அனைவரும் பயனடையும் இத்தகைய அளவற்ற கிருபை மழையை நாம் கிருபை இல்லை என்று சொல்லிவிடமுடிமா? அதுமட்டுமன்றி, இந்த உலகம் பெற்றுக்கொள்ளும் நன்மைகளனைத்தும் கிறிஸ்துவின் மத்தியஸ்தப் பணியின் காரணமாகவே பெறப்படு கின்றது. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் அனைத்திற்கும் தலைவராக இருக்கிறார். ஆகவே, அவரது ஆளுகையின் மகிமையால் இவ்வுலகம் அனுபவிக்கும் அனைத்து நன்மைகளும் அவரது சிலுவை மரணத்தோடு தொடர்புடையதாக இருக்கிறது. ஆகவே, கிறிஸ்துவின் மரணத்தின் காரணமாக இந்நன்மைகள் உலகத்திற்குக் கிடைக்க வேண்டு மென்பதே தேவனின் திட்டமாக இருந்திருக்கிறது. ஆனால், உலகத்தில் அனைவரும் அனுபவிக்கும் இத்தகைய நன்மைகளால் உலக மக்களுக்கு இரட்சிப்பை அளிக்க முடியாதிருப்பதாலும், இவற்றை அனுபவிப்பவர்களில் பலர் இரட்சிப்பை ஒருபோதுமே அடையாமல் இருப்பதாலும், கிறிஸ்துவின் மரணத்தின் பலனை பலரும் அனுபவித்தபோதும், அம்மரணம் வரையறுக்கப்பட்டதாக இருப்பதே தேவனின் திட்டமாக இருந்துள்ளது என்றே கூற வேண்டும். அதாவது, கிறிஸ்துவின் மரணத்தால் பெறப்படும் பலவிதமான நன்மைகளை தேவனால் தெரிந்து கொள்ளப்படாதவர்களும் அனுபவிப்பதே தேவனின்

நோக்கமாக இருந்துள்ளபோதும், கிறிஸ்துவின் மரணமளிக்கும் இரட்சிப்பு தெரிந்துகொள்ளப் பட்டவர்களுக்கு மட்டுமே உரித்தாக உள்ளது."

ஆகவே, கிறிஸ்து உன்னை நேசிக்கிறார் என்று கூறுவது எவ்வளவு தவறோ, அதேபோல் கிறிஸ்து உனக்காக மரித்தார் என்று தேவனை அறியாதவர்களைப் பார்த்துக் கூறுவதும் தவறு. எனவே, எல்லோரும் அனுபவிக்கக்கூடிய கிறிஸ்துவின் மீட்பளிக்கும் பொதுவான பலன்களையும், குறிப்பிட்டவர் களுக்கே சொந்தமான கிறிஸ்துவின் மீட்பளிக்கும் இரட்சிப்பையும் பற்றி நாம் குழப்பமில்லாமல் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, நற்செய்தியை அளிக்கும்போது அதனை வேதபூர்வமாக விளக்குவது அவசியம். எல்லா மனிதர்களையும் கிறிஸ்துவிடம் வருமாறு நாம் கட்டளையிட்டு அழைக்கலாம் (லூக்கா 14:23). தேவன் இரட்சிப்பை இலவசமாக அளிக்கிறார்; வந்து பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறலாம் (ஏசாயா 55:1; வெளி. 22:17). ஒவ்வொரு தனி மனிதனும் கிறிஸ்துவிடம் வர வேண்டும் என்று பிரசங்கத்தில் உளப்பூர்வமாகவும், ஆணித்தரமாகவும் வற்புறுத்தி அழைக்கலாம். கிறிஸ்து இரட்சிப்பை உனக்கு இலவசமாகத் தருகிறார், அவரை விசுவாசித்து அதைப் பெற்றுக்கொள் என்று அறை கூவலிடலாம். கிறிஸ்துவை விசுவாசித்தாயானால் அவரது அன்பை நீ அனுபவிக்கலாம் என்று உறுதியோடு கூறலாம். ஆனால், கிறிஸ்து உன்னை நேசிக்கிறார், உன்னில் அன்பு செலுத்துகிறார் என்று வேதம் போதிக்காத வார்த்தைகளை நாம் பாவிகளாகிய மனிதர்களைப் பார்த்துக் கூறுவது வேதம் போதிக்காத ஒரு போதனை.

# ஆவிக்குரிய சீர்திருத்தப் போதனைகளை அள்ளித் தரும் புத்தகங்கள்

| | | |
|---|---|---|
| 1. | குடும்ப ஆராதனை | ரூ. 10 |
| 2. | பிரசங்கிகளின் இளவரசன் சார்ள்ஸ் ஸ்பர்ஜன் | ரூ. 30 |
| 3. | கிறிஸ்தவன் யார்? (அல்பர்ட் என். மார்டின்) | ரூ. 10 |
| 4. | வில்லியம் கேரி (வாழ்க்கை சரித்திரம்) | ரூ. 24 |
| 5. | ஏன் பிரசங்கம் | ரூ. 12 |
| 6. | சீர்திருத்த விசுவாசம் | ரூ. 35 |
| 7. | இந்திய வேதங்களில் இயேசுவா? | ரூ. 24 |
| 8. | பத்துக் கட்டளைகள் | ரூ. 30 |
| 9. | வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கை (அல்பர்ட் என். மார்டின்) | ரூ. 24 |
| 10. | கர்த்தரின் வேதம் | ரூ. 34 |
| 11. | அங்கத்துவ அமைப்பில்லாத திருச்சபையா? | ரூ. 14 |
| 12. | சிறுவர் வேத உபதேசம் | ரூ. 14 |

பிரதிகளுக்குத் தொடர்புகொள்க:
6/87 காமராஜர் தெரு,
திருவள்ளுவர் நகர், அயனாவரம்,
சென்னை 600023, தமிழ்நாடு, இந்தியா.
தொலைப்பேசி: +91 9444347829

# போதகர் பாலாவின் பிரசங்கங்கள் அடங்கிய ஆடியோ சீ.டிக்கள்

| | | |
|---|---|---|
| 1. | சோதனைகள் தடைகள் அல்ல (யாக்கோபு பாகம் 4) | ரூ. 25 |
| 2. | திருச்சபை வரலாறு (பாகம் 3) | ரூ. 25 |
| 3. | கிறிஸ்து "இராஜாதி இராஜா" (கொலோசெயர் பாகம் 1) | ரூ. 25 |
| 4. | போதகர்கள் ஏன் தேவை? | ரூ. 25 |
| 5. | சோதனைகளின் மத்தியில் கர்த்தருக்காக சாதித்து வாழுவது எப்படி? | ரூ. 25 |
| 6. | கர்த்தருடைய இருதய தாகம்; கிருபையின் மகத்துவம் | ரூ. 25 |
| 7. | யாக்கோபுவின் நிருபத்திலிருந்து பிரசங்கங்கள் (பாகம் 1, 2 மற்றும் 3) | ரூ. 75 |
| 8. | பிரசங்கம் தயாரித்தல் (பாகம் 1 மற்றும் 2) | ரூ. 50 |
| 9. | திருச்சபை வரலாறு (பாகம் 1 மற்றும் 2) | ரூ. 50 |
| 10. | ஜோன் கல்வினை இன்று நினைவுகூருதல்! | ரூ. 25 |
| 11. | கர்த்தரின் வார்த்தையும் கிறிஸ்தவ குடும்பமும் | ரூ. 25 |
| 12. | கர்த்தரின் பார்வையில் திருச்சபை, தமிழநாட்டில் இன்று கிறிஸ்தவத்தின் நிலை | ரூ. 25 |
| 13. | கர்த்தரின் தண்டனை, வாலிபர்களே ஜாக்கிரதை | ரூ. 25 |

**கிடைக்குமிடம்:**

**6/87 காமராஜர் தெரு,**
**திருவள்ளுவர் நகர், அயனாவரம்,**
**சென்னை 600023, தமிழ்நாடு, இந்தியா.**
**தொலைப்பேசி: +91 9444347829**

# 1689 விசுவாச அறிக்கை








1689 விசுவாச அறிக்கையின் இந்தப் பதிப்பு அவசியமான திருத்தங்களோடு வெளியிடப்பட்டுள்ளது. தலையாய கிறிஸ்தவ சத்தியங்களை முப்பத்தி இரண்டு அதிகாரங்களில் நமது முன்னோர்கள் தொகுத்துத் தந்திருக்கிறார்கள். சத்தியத்தில் நீங்கள் உறுதி பெறவும் சபையாக அதில் வளரவும் இச்சிறு நூல் பேருதவி செய்யும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகள் தேவையானவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்புகொள்ளுங்கள்.

தபாலில் பெற விரும்புவோர், பிரதி ஒன்றிற்கு தபால் கட்டணமாக சென்னையிலுள்ளவர்கள் ரூ.10, தமிழ்நாட்டின் மற்றப் பகுதியிலுள்ளவர்கள் ரூ.25, இந்தியாவின் வேறு மாநிலங்களிலுள்ளவர்கள் ரூ.50 அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். ஒன்றிற்கு மேற்பட்ட பிரதிகள் வேண்டுவோர் கீழ்க்காணும் தொலைப்பேசியில் தொடர்புக்கொண்டு தபால் கட்டணத்தைத் அறிந்துகொள்ளலாம்.

**பிரதிகளுக்குத் தொடர்புகொள்க:**
**6/87 காமராஜர் தெரு,**
**திருவள்ளுவர் நகர், அயனாவரம்,**
**சென்னை 600023, தமிழ்நாடு, இந்தியா.**
**தொலைப்பேசி: +91 9444347829**

# ஆசிரியரைப் பற்றி . . .



ஆர். பாலா அவர்கள் முப்பது வருடங்களாக கிறிஸ்தவ ஊழியத்தில் இருந்து வருகிறார். கடந்த இருபத்தி நான்கு வருடங்களாக நியூசிலாந்தில் ஆக்லாந்து நகரிலுள்ள சவரின் கிரேஸ் சபையின் (ஆங்கிலம்) போதகராக பணிபுரிந்து வருகிறார். பல்கலைக்கழக படிப்பை முடித்த பிறகு தென் வேல்ஸ் வேதாகமக் கல்லூரியில் இறையியல் பயிற்சி பெற்றார் நூலாசிரியர். அவர் கடந்த பதினாறு வருடகாலமாக தமிழில் திருமறைத்தீபம் என்ற சீர்திருத்த காலாண்டு நூலின் ஆசிரியராக இருந்துவருவதோடு பல நூல்களை மொழிபெயர்த்தும் எழுதியும் வெளியிட்டிருக்கிறார். போதக, பிரசங்க ஊழியத்தில் அனுபவமும், கர்த்தரின் ஆசீர்வாதமும் பெற்றிருக்கும் அவருக்கு மனைவியும், இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

**சவரின் கிரேஸ் வெளியீடுகள்**
**நியூசிலாந்து**